of Books, Madras

பிசுமில்லா ஹிர்றகுமா னிர்றகீம்

குலேபகாவலி கிஸ்ஸா

என்றுவழங்குகிற

# புஸ்பலீலாவதி கதை.

இஃது

பேட்டை ஆமூர்

வாலே. பாவாசாகிபு அவர்களின்

குமாரராகிய

அப்துல்காதிர் சாயபு அவர்கள் இயற்றியது

OFFICE OF THE REGISTRAR
26 APR 1927
MADRAS

T. சாரதா புத்தகசாலை,

த. துரைசாமி முதலியாரால்,

சென்னை.

புவனேஸ்வரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1926

இதன் விலை] [அணா-12.

நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட்போஸ்டு, மதராஸ்.

புத்தகவிளம்பரங்கள்.

# இதுபோல் பெரிய எழுத்து

## இராகங்கள் படத்துடன்

—••✿••—

| | | | |
|---|---|---|---|
| பெரிய எழுத்து ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் படத்துடன் | 2 | 0 | 0 |
| விக்கிரமாதித்தன் கதை பெரியெழுத்து படம் | 2 | 0 | 0 |
| பெரிய புவநேந்திர அம்மானை திக்குபடம் | 0 | 8 | 0 |
| பெரிய தேசிங்கு ராஜன் கதை படத்துடன் | 0 | 5 | 0 |
| பெரியஎழுத்து நளன்கதை படத்துடன் | 0 | 5 | 0 |
| பெரியஎழுத்து ஏணியேத்தம் திக்கு படம் | 0 | 4 | 0 |
| பெரிய எழுத்து வனவாசம் திக்குபடத்துடன் | 0 | 10 | 0 |
| பெரியயெழுத்து குலேபகாவலி கதை | 0 | 12 | 0 |
| பெரியெழுத்து மதுரை வீரன் கதை | 0 | 4 | 0 |
| பெரிய எழுத்து மதனகாம ராஜன் கதை | 0 | 8 | 0 |
| பெரிய எழுத்து தருமர் அஸ்வமேத யாகம் | 0 | 8 | 0 |
| பெரியஎழுத்து விலாடபர்வம் | 0 | 12 | 0 |
| பெரிஎழுத்து ஆதிபாவம் ராயல்சயிஸ் | 2 | 0 | [illegible] |
| பெரிஎழுத்து கம்பர் இராமாயணம் | 5 | 0 | [illegible] |
| பெரிஎழுத்து ஆரவல்லி சூரவல்லி கதை | 0 | 4 | 0 |
| பெரிஎழுத்து கர்னன் சண்டை | 0 | 4 | 0 |
| பெரிஎழுத்து மயில்ராவணன் கதை | 0 | 4 | 0 |
| பெரிஎழுத்து துரோபதை குறம் | 0 | 4 | 0 |
| பெரிஎழுத்து காத்தவராயன் கதை | 0 | 8 | 0 |
| பெரிஎழுத்து சிறுதொண்டன் | 0 | 4 | 0 |
| பெரிய எழுத்து சுந்தரிமாலை திக்கு படம் | 0 | 8 | 0 |
| பெரிய எழுத்து வைகுந்த அம்மானை படம் | 0 | 10 | 0 |
| பெரிஎழுத்து அல்லியாசானிமாலை படம் | 0 | 8 | 0 |
| பெரியஎழுத்து கோவிலன் கதை படத்துடன் | 0 | 5 | 0 |
| பெரியஎழுத்து பவழக்கொடி படத்துடன் | 0 | 6 | 0 |
| பெரியஎழுத்து நல்லதங்காள்கதை படத்து | 0 | 4 | 0 |
| பெரிய எழுத்துசித்திராபுத்திரன் கதை படத் | 0 | 6 | 0 |

---

டி. சாரதா புத்தகசாலை,

23, பாளையப்பன்வீதி, மின்ட் போஸ்டு, சென்னை.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

## இந்தகிஸா செய்தவர் பெயர்

# சரித்திர வரலாறு:

---

அகவல்-இ-ம்-கண்டா.

காணுஆதியே கருத்தறிபவனே
தோணுமூவுலகைத் தோன்றச்செய்தவனே
மாபாரதனிலே மகிமைகள்படைத்த
திரைவாரணமொடு திங்களுமரியுடு
மகளையளித்த முதல்வனைப்போற்றி
கருதர்பார்தனிலே கர்த்தனை வணங்கிய
மாதவம்பொருந்திய முகம்மதுநபியின
அடியார்பதத்தை யகத்தினுட்கொண்டு
சிறியவர்பெரியவர் சரித்திரமறியே
தீவுபுரோப்பில் சைனுல்முலுக்கெனும்
இறைபிள்ளையினு விருகண்போனதும்
திரள்வலிதாசுல் முலுக்கெனுந்தீரன்
நொ[illegible]க்கண்விளங்க நெடுந்துலைபோனதும்
மதி அழகான மங்கைபகாவலி
உவப்புளமல்லர் யூர்கொடுவந்ததும்
முத்துபோல்கண்ணொளி முன்போலானதும்
பொழிக்குள்பகாவலி புலம்பியழுததும்
நீதகாலனை நொடியிற்பிடித்ததும்
அத்தலைவனைப்பின் னவள்மணம்புரிந்ததும்
புதர்பலவனத்திற் புலம்பித்திரிந்ததும்
ஈபசாபத்தால் இவன்சிலையானதும்
மாமயலாகி மன்னறிந்ததும்
காணுப்புலம்பியே கதறியழுததும்
ஓடியலைந்து உவர்க்கரைசேர்ந்ததும்
திருவடிவாளையோர் சிலையாகக்கண்டதும்
நகர்க்குளடைந்தபின் நாட்களைக்கழிந்ததும்
மதகளிர்மன்னன் ன் மணமொன்றுசெய்ததும்
அவள்மனங்களிக்க அவளைப்புணர்ந்ததும்
மதியழகுடைய மங்கைபகாவலி
மாதொருசொக்கான் மகளாய்ப்பிறந்ததும்
பேரொளியாளொடு பின்பவன்சேர்ந்ததும்
பெரியதன்னகர்போய்ப் பூமியையாண்டதும்
ஆமிதுவெல்லா மருளியகதையே

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

## கடவுள் வணக்கம்.

ஜம்பை-இ ம்-தோடி.

வானும்புவிபல் லுயிரும் வரிசையுடனேபடைத்துத்
தானேதானாகவனே தனியனேயகத்தில்
தரித்துப்புவிதனில் விளங்கச் சகலருமேமகிழ
விரித்துரைக்கவெந்நாவில் விளங்கவினியருள்வாழ்
அன்னைதந்தையில்லாத ஆதியேநீயென்னாவில்
பின்னமொன்றும் வராமற் பெரியவனேகாப்பாய்
மக்கநகர்தனிற் பிறந்து மதீனமாசாகிவெகு
சக்குகளைப்பறித்து ஷழகற்றனிலாக்கி
தீனதனிலாக்கிவைத்த திருநபியின்பொற்பதத்தைத்
தேனருந்துமாறதுபோல் சிந்தைதனில்வைத்தேன்
லக்ஷத்திருபத்து நாலாயிரவரைப்போற்றி
பக்ஷமறவாமல் வார்த்தலரையிருத்தி
சிறந்ததிருநாடியர்கள் சேவடியையென்னகத்தில்
மறந்தில்லாமேன்மேலே மகிழ்வுடனேபோற்றி
அசனுசைனுடசுஹறா மார்களின் பதமலரைப்
பிசகாமல்மனதினுள்ளே பிரியமுடனிருத்தி
நல்லஒளிமார்பாதம் நாளுமறவாமலேதான்
இல்லகத்திருத்திதினம் இன்பமுடன்பணிவேன்
பெரியோர்கள்பாதமதைப் பிரியமுடனேயகத்தில்
வரிசையுடனேயிருத்தி வண்மையுடன்பணிவேன்

## பாயிரம்.

இந்நூலானது அதிகருசியும் இன்பமுமுள்ளவையாக முன்னோர்கள் சிற்றின்பத்தை நீக்கிப்பேரின்பத்தைக் கருந்தொடார்ந்து மகிழ்வுகொண்டதை ஒருகதைபாவலையாகச் செய்திருக்கின்றார்கள் அது அறபி பார்ஸீஹிந்தியிலிருக்கப்படியால் அதனை எளிதில் யாவருமகிழ்ந்து மகிழ்வுகொள்ளும்பொருட்டு வெள்ளைத் தமிழுரையாகச் செய்துவிட்டது இதனைநோக்கி அறிவுள்ளோர்கள்சொல்லுக்குச் சொல்பொருள் வேறாகச்செய்து அதன்பலனை அநுபவிப்பார்கள் அறியாதவர்கள் கதையென்றெண்ணி நன்றாகயிருக்கிறதென்று அகமகிழ்வை யடைவார்கள் ஆகையாலிதை இருவகுப்பார்களுக்கும் பொதுவாகச் சொல்லி முடித்துவிட்டது.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

# குலேபகாவலி கிஸ்ஸா என்னும்

# புஷ்பலீலாவதி கதை.

---

முதலாவது இராஜன் படமும் பிள்ளைகளின் படமும்

மஷ்ரீக்கென்று வழங்கா நின்ற கிழக்கு தேயங்களில் சூரியகாந்தி பூரேப்பென்றொரு பட்டணமிருந்தது அப்பட்டணத்தை சைனுல்மூலுக்கென்றொருவர் பூரணச்சந்திரனைப்போன்ற முகமும் அரசுநீதியும், நீங்காத் தருமமும், குன்றாதவாழ்வும், குறையாதசெல்வமும், மாறாதவாக்குந் தளகரமுங் கீழுரைந்தோரை யாதரிக்கின்ற கிருபையாகிய நற்குணமும், எதிர்த்தோரை வெல்லவேண்டுமென்கிற ஆங்காரமும், பொருந்திய வல்லமையுங் குடிகளுக்கு யாதொரு வருத்தமுங்குறைவும் காக்கின்றபொறுமையும், இருபுறமும் பெண்கள் வெண்சாமரைவீசவும் [illegible] நின்றுபேசக்கூசவுங், கவிவாணர்கள் பாடவும், பெண்களெதிர் நின்று ஆடவும், யானைத்தலைவர் படைத்தலைவர், குதிரைத்தலைவர், காலாள்தலைவர் இவர்களெல்லாம் எதிரில் நின்று புகழவுஞ் சகலபடைகளுஞ் ஜேஜேயென்று நெருங்கவுந் தனக்குச் சரியொத்த இராசர்களுலகினி வில்லையென்று மாணிக்கம், முத்துகள், கோமேதகங்கள், புஷ்பராகங்கள், பொன், வெள்ளி முதலிய நவரத்தினத்தின்மேலிருந்து சகலதேயங்களுந் தன்கைக்கிழாகும்படி அரசாட்சி செய்துக்கொண்டிருந்தான்.

அவ்வரசனுக்கு நாலு குமாரர்களிருந்தார்கள், தக்குமாரர்களுக்குக் குதிரையேற்றம் ஆனையேற்றம் [illegible]த்தம் வில்பயிற்சி கத்திவெட்டு, குத்துதட்டு, இ[illegible] ஜால முதலியசகல வித்தைகளையுங் கற்பித்துவைத்[illegible] அப்பிள்ளைகளொன்றுக் கொன்று வல்லமையில்[illegible] களாயவர்களுடனெதிர்க்க உலகிலெதிரிகள் ஒ[illegible] நிகரில்லாத மகாவீரியமுள்ளவர்களாக விருந்த[illegible] இப்படியிருக்கையிலோரிரவு வெப்பகாலமா யி[illegible] யினாலே உடலிற்கு தேகசவுக்கிய மில்லாததால்

ரவுசையினால் முழுக்கெனுமரசன் முத்துமாணிக்கப்பதித்த நாற்காலியை தன்னுடைய சிங்காரமாடத்தின்மேல் போடச்சொல்லி பின்புதான் அந்த நாற்காலியின்மேலுட்கார்ந்து சுகங்கொள்ளும்வேளையில் அன்றிரவு பதினாலாம் பக்கத்து நிலவினிரவாயிருந்தது அப்போது அரசன் தன் குமாரர்களாகிய நால்வரையுந் தன்னிடத்திற்கு வரவழைத்து நாலுகுமாரர்களுக்கும் பச்சைமரகத நாற்காலிகள் கொண்டுவந்து போடச்சொல்லி அவர்களை எதிரிலுட்காரவைத்து ஓ என் குமாரர்களே உங்களுக்கு நான் சகலவித்தைகளையுங் கற்பித்து வந்தேன் நீங்கள் மிகுந்த நீதிநெறியோடு இராச்சியபரிபாலனம் செய்யுங்களென்றுசொல்லி பின்பு நானுங்களுக்கொருபுத்திசொல்லுகிறேன் அதையின்புற்று காதுகொடுத்துக்கேளுங்கள்.

அதென்னவெனில், ஆருஸ்தாபுரியென்றொருபட்டணமுண்டு அப்பட்டணத்தைஷாகைஹைறதானிஷென்கிற பாட்சா அரசாண்டு வருகையில் 60-வருடம் வரைக்கும் பட்டமாளப் பிள்ளையில்லாதிருந்தது ஆதலால் அவ்வரசன் அதிக மனவருத்தமடைந்து அதிகதானதருமங்களைச்செய்து அத்தனைநோக்கி வரங்கேட்டுவருகையிலவருக்கொரு புத்திரனுண்டாக்கினான் அப்போது பாட்சா அதிகமகிழ்வையடைந்துசர்க்கரை வழங்கிஅப்பிள்ளைக்கு (ஆகிலெபஹுர்) என்றுபெயர்வைத்துபாலன்னங்கனிகளையூட்டிவளர்த்து நானவித கல்விகளைக் கற்பித்துவைத்து வளர்த்தனர் அப்பொழுது அப்பிள்ளைக்கு வயது 20-ஆயினது அதுகண்டு அவ்வரசன்பிள்ளையையெதிரில்உட்காரவைத்து என்கண்மணியானகுமாரனே, நீபெண்ணுக்குள்ள தந்திரமும் எறும்புக்குள்ள வன்மையும் ஈக்குள்ள சுத்தமுந்தெளிந்த அறிவும்சம்பாதித்துக்கொள்ளென்று ட்டளையிட்டு வளர்த்துவந்தார். அப்படி நடந்துவரும் ளையிலொருநாள் (ஆகலெபஹுர்) என்னும் ராசன் மாரன் தன்தகப்பன் மந்திரிகுமாரனாகிய பஹீருவென் மந்திரியை யழைத்து நாமிருவரும் சிலநாள் தேசாந் போக வேணுமென்று சொல்ல அதற்கு மந்திரி ரனும் சம்மதித்து அப்படியே யாகட்டுமென்று ர நாளென்று நியமித்துக்கொண்டார்கள்.

பாதுஷா-சொல்-விருத்தம்-இ-ம்-தோடி

படியினையாள் வதற்கு பாலனுமில்லையென்று
நெடியவன் றன்னளவில் நீண்டபாவரங்கள்கேட்க
வடிவுளபாலனும்மை வல்லவனெமக்குவீந்தான்
குடிபெயர்விளங்கமைந்தா குவலய மாள்வாயென்றார்

வசனம்.

இச்செய்தியை தாயுந்தந்தையுங்கேட்டு மகனைப்பார்த்து அதிகவிசனத்தோடு என் கண்மணியான மகனே, நீதேசசஞ்சாரஞ் செய்ய வேண்டாமென்று துக்கித்தழுவது எம்படியென்றால.

தரு-இ-ம்-சங்கராபரணம்.

போகவேண்டாம்மகனே எங்களைவி[illegible]
போகவேண்டாம்மகனே

உன்னையீணத்தவ முடையவன்றபுமம்
அன்னைதந்தையுங்கேட்ட தளவிடப்போகாதுபோக
எங்களுயிரைப்போல இரவு பகலுமுன்னை
செங்கையிலேந்திநாம சீராய்தினம்வளர்த்தோம்போக
படியினையாண்டிட பாலனில்லாததாலே
வடிவுளமைந்தனே வயிருநெருப்பெரிய போக
உனக்குபின்வாழ்வுக ளென்னவுண்டெமக்கு
மனைக்குதீபம்போலும் வளர்த்தகண்மணியமைந்தாயே.

வசனம்.

இவ்விதமாக போகவேண்டாமென்று புலம்பி புலம்பிச் சொல்லித்தடுக்க அவர்களுக்கு மனம்பூரிக்க ஒப்பான வசனங்களோதிவிடைபெற்றுக்கொண்டுமந்திரியின் குமாரனுந்தானுமாக பொன்மணிகள் சிலவற்றை எடுத்துக்கொண்டு நகரைவிட்டு வெளிப்பட்டு சிலநாளிருவருமினை பிரியாமல் நகர்களை சோதித்துவருகையில் ஒருநாள் (ஆகிலெபஹர்) என்னுமரசன் குமாரனும் மந்திரிகுமாரனுகிய (பஹீருவைப்பார்த்து, நாமிருவரும் ஒன்றாகச்சேர்ந்து போவதில் பலனொன்றுமில்லை ஆகையால் நானொருபுறமாகவும் நீயொரு புறமாகவுஞ்சென்று பெரியபட்டணங்

களைக் கண்டு அங்கு நடக்குமான நீதிநெறிகளும் அதிசயங்களையுங் கண்டுதெளிந்து (கறுனைஸ்) என்னும் பட்டணம் நீமுன்னமாகவந்து சேர்ந்தால் நான்வருமளவும் அங்கேயிருக்கவும் அல்லது நான்முன்னம் வந்தால் நீ வருமளவும் அங்கேயிருக்கவும் அல்லது நான்முன்னம் வந்தால் நீவருமளவுமிருப்பேனென்று சொல்ல அது கேட்டு (பஹீரு) ஆகிலெபஹறரைநோக்கி நீவழியில் காணும்சங்கதிகளை நான்வருந்தினிலு மொருவருடனுஞ் சொல்லவேண்டாமென்று கட்டளையிட்டு அன்று இருவரும் வேறாகப் பிரிந்துபோயினர்.

அப்போது இராசன் வெகுதொலை நடந்து ஒருகாட்டில் பெரியமலையுமிருண்டசோலையும் நல்லகுளிர்ந்தசலமுமோடுகிற ஓடையொன்றெதிர்ப்பட்டது அதுகண்டுஇதுநல்லவிடமாயிருக்குதென்று அங்கேயிருந்துகன்பசியையாற்றிகளையையாற்றிப்போவோமென்றெண்ணி கட்டுசாதத்தை யவிழ்த்து கைகாலலம்பிசாப்பிட உட்கார்ந்து அவிழ்க்க அப்போது அங்கு சாணத்திலுட் கார்ந்திருந்தசக்கள் குபீலென்று கிளம்பி இக்கட்டுசாதத்தின்மேல் வந்துட்கார அரசன்மகன் கண்டு இதுதான் நம்பத்தகப்பன் சொல்லிய சுத்தமென்றெண்ணி கட்டுசாதத்தை சாப்பிட்டு இளைப்பாறுகையில் அங்கோர் யானை தண்ணீர் குடிக்கும்போது அந்தஓடையிலிருந்த அசரைமீன் அவ்வானையைப்பிடித்து விழுங்கிவிட்டது அதுகண்டு அரசன்மகன் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு அன்ன பறுக்கையை ஒருசிற்றெறும்புஇழுத்துக்கொண்டு போகக்கண்டு இதுவு நம்பள் தகப்பன்சொல்லிய காரணமென்றெண்ணி அவ்விடம்விட்டெழுந்து அடவிகளை தாண்டி சிலநாள்மட்டும் அனேக பட்டணங்களைக்கண்டு அவ்வியமுள்ள நீதிநெறி முதலியாசாரணங்களை நோக்கியின்புற்று கடைசியில் கறுனைஸ்என்னும் நகரம் வந்துசேர்ந்து மந்திரியின் வரவைதேடி நோகக இன்னம் வாவில்லையென்று நிச்சயித்து அங்கிருக்கையில் ஒருநாள் ஒருவீதியாகநடந்து பார்த்துவருகையில் ஒருமாளிகைமலை போலுயரமாககட்டி முத்துவெள்ளி பொன்னினால் சிங்காரித்துக்கண் அதுயார் வீடென்று எண்ணி இராசன்

குமாரன் அவளைக் காணவேணு மென்று இன்புற்று அவள் வீட்டின் வாசற்படியில் கட்டியிருக்கு மணியை யடித்தான் சேவகர்கள் போய்தாதிமாருக்குச் சொல்லவும் அதுகேட்டு அதில்பெரிய கிழவி யோடிவந்து மிகுந்த வணக்கத்துடனே உள்ளேயழைத்துப் போய் பொன் வெள்ளியாற்செய்த நாற்காலியின் மேலுட்காரவைத்து பின்பு தாம்பூல முதலியவைகளை முன்பில்வைத்து பேசிக் கொண்டிருக்கையில் அவ்வேசியாகிய தில்பரிஜோஷ்என் னும்வேசி தன்னை சிங்காரித்துக்கொண்டு ஒரு நார்க்காலி யின்மேல் அவளும்வந்து உட்கார்ந்து இருவருமனேக மொழிகள் பேசி நீயென்ன அதிசயங்கள் கண்டதுண் டோ வென்றுகேட்க அதற்கரசன் குமாரன் நான் வருவழி யில் ஓரிடத்தில் ஓடையில் அசரைமீன் யானையைப்பிடித் து விழுங்கக் கண்டேனென்று மந்திரி சொன்னதை சொல்ல அதுகேட்டுவேசியாகிய (தில்பருஜோஷ்) ஆ ஆ இப்பொய்யைப்போல இதுவரையிலும் நான் கேட்ட தில்லையென்றுசொல்லி அப்பட்டணத்தையாளும் (நூப லென்னும்) அரசனிடத்தில் நாமிருவரும்போய்சசொல் வோம் நீசொன்னது மெய்யாகில் நானுனக்கு என்பொ ருள் வீடோடு அடிமை அல்லது உன்சொல்பொய்யாகில் நீஎனக்கு அடிமையென்று இருவரு முறிபெழுதிக் கொண்டு (நூபலென்னும்)அரசனிடத்திற்போய்ச்சொல் லி அரசன் அம்மொழியைகேட்டு யானையை அசரைமீன் விழுங்குமா இதுபொய்யென அப்போது அரசன் மகன் அவளுக்கு அடிமையாய்விட்டான்.

இராசகுமாரன்சொல்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

மதிமொழியுரைத்தநம்ப மந்திரிமொழியைத்தட்டி
சதிவினைவிளைக்குமாது சாற்றினையறியா நாமும்
நதியினில்கண்டசேதி நவின்றிட நமக்கமைத்த
விதிப்படியாயிற்றென்று விள்ளொணாதுள்ளமானான்.

அகவல்-இ-ம்-கல்யாணி.

விதியிலமைத்தகதை விலக்கிடவுலகில்
மதியினலாமோ மானிடர்தமக்கு
கட்டளைப்படியே கடவுணமக்கு

விட்டவையனைத்தும் விருப்பமாயகத்தில்
கொள்வதில்பயனென் குறைவிலையென்று
கள்ளயின்கரத்தில் கலங்கிடலானேனும்
ஆதியேயென்றனை அனுதினங்காத்து
வேதனை நீக்கிடு வெற்றி நீயருளென
வரங்களைகேட்டு வேசியினகத்தில்
தரங்குலைத்திடவே தயங்கியேயிருந்தான்.

வசனம்.

இப்படி நிகழுங்காலத்தில் முன்பிரிந்த மந்திரிமகனும் தேசங்கள் திரிந்து அதிசயங்களைப் பார்த்து கடைசியில் அப்பட்டணம் வந்து சேர்ந்து விசாரிக்குமளவில் தன் அரசன்மகன் வேசியினிடத்தில் சிக்கியசங்கதிகளடங்கலையும் ஆதியந்தமாகக்கேட்டு அவளுடைய சூதுகளையு மறிந்துகொண்டு அவ்வூரைவிட்டு வெளிப்பட்டு ஒருகாட்டிடம் அங்கோர் 100-குரங்கும் நாயும் ஆளுமாக வைக்க சேகரஞ்செய்து அவ்வட்டில்வைத்து குரங்குகளை நாய்களின்பேரில் ஏறி சேவகஞ்செய்யும்படியாக கபாத்துகள் கற்பித்து குரங்குகளுக்கு கத்திகளும அம்புகளுடன் கேடயங்களும் சட்டைகளும்போட்டு நாய்களுக்கு சேணங்களும் கடிவாளங்கள்போட்டு மனிதர்கள்போலகபாத்துகள் கற்பித்து வைத்துவிட்டு அந்த வேசியிருக்கிற வூரில் வந்து அவள் வாசற்படியில் கட்டியிருக்கிற மணியை மந்திரிகுமாரனாகிய பஹீரு அடிக்கவும் முன்முறைபோல் சேவகர்கள்சொல்ல அதுகேட்டு கிழவி யெதிர்வந்தழைத்து முத்துமணியாற்செய்த நாற்காலியின்மேலுட்காரவைத்து தாம்பூலமளிக்க பின்பு தில்ஜோஷ்என்னும் வேசி சிங்காரித்துக்கொண்டு பச்சை மரகத நாற்காலியின்மேல் வந்து உட்கார்ந்து பலபல மதுரமானமொழிகளபேசி தாங்கள்தேசாந்திரந்திரித்தீரே அங்கங்கு என்ன அதிசயங் கண்டாயென்று கேழ்க்க அதற்கு மந்திரிகுமாரன் நானொருவிடத்தில் நாய்கள் மேல்குரங்குகள் மனிதர்களைப்போல் ஆயுதங்களணிந்து சேவகஞ் செய்யக்கண்டேனென்றுசொல்ல அதுகேட்டு வேசி (ஆஹா!) முன்னால் ஒருவன் அசரை மீன் மானையைப்பிடித்து விழுங்கிவிட்டதென்றுசொல்லி சிறையிலிருக்க நீ அவ

னிலுமெத்த பொய்யான வார்த்தையைச்சொன்னுய்அப் படியே யுன்மொழி மெய்யாகில் நானும் என்பொருளடங் கலும் உனதே என்று எழுதிதருகிறேன் பொய்யாகிப் போமானல் நீ எனக்கு அடிமையென்று எழுதித்தா வேணுமென்று கேட்க அதற்கு மந்திரி குமாரன் அப் படியே ஆகட்டுமென்று சம்மதிக்க அதற்கு வேசியாகிய தில்ஜோஷ் என்பவளிப்பட்டணத்தை யாளும் (நாபல்) அரசனிடத்திற்போய்ச் சொல்வோம் அவன்கேட்டுஉன் மொழி மெய்யெனிலும் அல்லது பொய்யெனிலு மவன் முன்னமேமூறியெழுதுவதென்றுபந்தயமொழிகள்பேசிக் கொண்டு அரசன் சிம்மாசனத்திற்கு முன்னம்போய் நின்று தங்கள் வாவினைச் சொல்லிக்கொண்டான்.

அப்போது நாபல்) அரசன்மந்திரிகுமாரன்சொன் னதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு குரங்கும் நாயுமிப்படி யெங்கேயாவது மனிதர்செய்வதுபோல் நடப்பதுண்டோ நானெப்பொழுதும் இப்படிப்பட்ட பொய்யான கட்டு வாக்கியத்தை கேட்டதே இல்லையென்று சொல்லி மந் திரிகுமாரன் மொழியைப் பொய்யாக்கினுன் அப்போது மந்திரி குமாரனுகிய பஹீரூ இராஜனுக்குச்சொல்லியது.

விருத்தம்-இ-ம்-தோடி.

பொய்யினைபுகலுவாரும் புறமொழிபுகலுவாரும்
மெய்யினைப்பொய்யென்பாரும் வேதத்தைவிரும்பாதாரும்
தையலைநம்புவாரும் தரணியைநம்புவாரும்
கைப்பொருளிழக்கும்வாருங் கசடென்றுரைக்கலாகும்.

வசனம்.

கேளுமிராஜனே உலகில்பொய்மெய்யென்றுசொல்ல அறிவில்லாற்கு விதி நல்லோர்களுக்கு எப்பொழுதும் விதியல்ல ஆயிலும் முன்னல் மெய்பொய்யான கதை யொன்றுண்டு அதெப்படியெனில் அபபர்புரியென்னும் பட்டணத்தில் அம்பரே அழற்பாவென்னு மரசனுக்கு இரண்டுமனைவிகளுண்டு அதில் இளையமனைவியானவள் கள்ளபுருஷனைவைத்திருந்தாள் அது ராஜனுக்குதெரி யாது இராசனுக்குமன்னபெண்சாதியின்மேலதிகபக்ஷம் பிரியமுண்டு பெரியமனைவியின்மேல்அதிகவிருப்பமில்லை

அப்படியிருக்க, ஒருநாள் இரண்டு மனைவியரும் ஆற்றிற் குப் போனார்கள் அன்று ஆற்றில் பெரியவெள்ளம்வந் திருக்கக்கண்டு சின்னவள் பெரியவளைப்பார்த்து அக்கா நானோர் நாள் இவ்வாற்றில் வெள்ளம்வந்திருந்து இவ் வெள்ளத்தைக்கடந்துபோய்சோரபுருஷனுடன் சேர்ந்து வந்தேனென்று தனவல்லமையைச் சொல்லினள் அதற்கு பெரியவளொன்றுஞ் சொல்லாமல் அரண்மனைவந்து சேர்ந்து தன்புருஷனாகிய இராஜனைப்பார்த்து நீர் இளை யபெண்சாதியைப் பதிவிரதையென்றெண்ணி அதிக பிரி யமாய்வைத்திருக்கிறாயே அவளிப்படி ஆற்றைகடந்து சோர புருஷனுடன் சேர்ந்துவந்தேனென்று என்னுடன் சொன்னாளென்றுசொல்ல அதுகேட்டு இராசன் ஓ நாய கியே நீ யவள்பேரி லிப்படிப்பட்ட அவதூரான மொழி களைப்பேசாதே அவளப்படிப்பட்டவளல்ல அவளுடைய மருமமெனக்கு நன்றாகத்தெரியும் நீ சக்களத்திப் பகை யாய் சொல்லாதேயென்று சொல்ல அதுகேட்டு பெரிய மனைவி ஓய் ராஜனே! என்னை நீ கெட்டவளென்றும் அவள் நல்லவளென்றுஞ்சொல்லுகிறீரே ஆயினும் நா னுனக்குத் தெரியும்படி அவள்வாய்க்கொண்டேசொல்ல விக்கிறேன் நீரேகேட்டுப் பொய்மெய் அறிந்துக்கொள்வீ ரென்றுசொல்லி மாத்திரமொருஆள்படுக்கும்படி பெட்டி யொன்று செய்வித்துக் கொடுக்கும் படி சொல்லினாள் அது கெட்டு அப்பவே அஷிறபு வென்னும் இரா ஜன் பெரிய மனைவியர் சொல்லியபடி பெட்டகம்வொன் று செய்வித்துகொடுத்தான்.

அப்போது அப்பெரியமனைவி இராசனை பெட்டி யினுள் படுக்கவைத்து தானும் இளையபெண்சாதியுமாக அப்பெட்டியின்மேல் சாய்ந்துக்கொண்டு தங்கச்சி நீ அன்று என்னுடன் சொல்லிய சோரபுருஷனுடன்சேர வல்லமையைச்செய்து சென்றாயே அந்தசங்கதிகள்மற ந்து விட்டது அதை ஆதியந்தமாகச் சொல்லென்று கேட்க அவள்சூதறியாமல் தன் வல்லமையை ஆதியந் தமாகச்சொல்லினள் அப்போது பெரியமனைவியர் பெட் டியே நீயும் நன்றாகக்கேளென்றுசொல்ல அதுசைகை யை இளையவளறிந்து ஓஹோ இதிலென்னமோ சூது

விளைவதாக விருக்குதென்றெண்ணி அக்கா நானிது
வரைக்குங் கனவுகண்டேன் அதற்குள்ளே முழித்துக்
கொண்டேனென்றுசொல்லி யெழுந்துபோயினள்பின்பு
பெரியமனைவியானவள் பெட்டியைத்திறந்து இராசனை
வெளியில் வரச்சொல்லி நீரென்மொழியை பகையினால்
சொல்லுகிறேனென்று வெறுத்தீரே இப்பொழுது அவள்
வாய்க்கொண்டே கேட்டீரோவென அதற்கு இராசன் ஓ
பெண்ணே நீவைத்தியக்காரி அவள்கடைசியில் நானிவ்
வளவுவரைக்குங் கனவுகண்டேன் அதற்குள் முழித்துக்
கொண்டேனென்றுதான்கண்டகனவையுன்னுடன்சொன்
னாளேயன்றி மற்றப்படி வேறில்லையென்று சொல்லிப்
போயினள் ஆகையால் இராசனே யிப்படிமெய்யும்பொய்
யாவதுண்டு அப்படி மொழியொருபோதும் பொய்யா
காது நான் ஒருவாரத்திற்குள்ளாக நிஜப்படுத்துகிறேன்
இவளெனக்கடிமையா இவளுடைய பொருளடங்கலு
மென்னுதென்று தங்கள் முன்னில் முறியெழுதவேணு
மென அதற்கு இராசன் சம்மதித்து அப்படியே இருவரி
டத்திலுமுறியொன்றெழுதி தன்னிடமாக வைத்திட
இவர்களிருவருமெழுந்துதங்களிருப்பிடஞ்சென்றார்கள்.

பின்பு மந்திரிகுமாரனாகிய (பஹீரு) வேசியாகிய
ஜோஷ் என்பவளுக்குத்தெரியாமல் முன்னால் தன்கூட
அழைத்துவந்த ஸ்ரீதனைய பூத்து நீசீக்கிரமாக அவ்வனத்
திற்சென்று அங்குள்ள ஆள்களையுங்குரங்குகளையும் நாய்
களையும் அழைத்துக்கொண்டு இப்பட்டணத்திற்கருகில்
வந்தவுடனே நாய்களுக்குச் சேணங்கள்கட்டி கடிவாளங்
கள் போட்டு குரங்குகளுக்கு சட்டைகளிட்டு கைகளில
கத்திகளைக் கொடுத்தபின்பு தோளில் அம்புக்கூடுகேடயங்
களும் போட்டு இவ்வீதியின் வழியாகவந்து இம்மாடத்
தின்முன்னின்று அதுகளின் வேடிக்கையெல்லாம் இவ்
வேசி கண்ணுற் பார்க்கும்படி சாயங்காலவேளையில் காண்
பித்து பின்பு இவ்வூருக்கு வெளியேபோய் கூடாரங்களடி
த்து நான்வருந்தினிலு மிறங்கியிருங்கள் உங்களை யாரா
வது நீங்கள் எவ்வூரெனில் மருமங்கள் சொல்லாமல்
ஏதாவதொரு தேசப்பெயரைச்சொல்லுங்களென்றுநானு
விச கட்டளைக விட்டனுப்பிட அத்தூதன்வில்விசையாய்
அவ்வனமடைந்து அங்குள்ளவர்களுக்குச் செய்திக

ளெல்லாம் ஓதி பின்பு மந்திரிகுமாரன்சொல்லிய முறைப் படியே அவ்விடம் விட்டெழுந்து பட்டணத்திற் கருகில் வந்து நாய் குரங்குகளை சிங்காரித்து ஆயுதங்க ளணிந்து வருவதை அவ்வூரிலுள்ள ஜனங்கள் கண்டு ஆச்சரியப் பட்டு இதென்ன புதுமையாய் நாய்களின்மேல் குரங்கு சவாரியாக ஏறிவருகிறதே யென்று புதுமைபட்டு எண் ணிக்கை யில்லாத ஜனங்கல் அள்ளியெறிந்தமண் கீழ் விழாதபடி ஜேஜேயென்று சூழ்ந்துவர அந்நேரவேளை யில் மந்திரிகுமாரனும் வேசியுமாக மாடத்தின்மேல் மெத்தையில் நாற்காலிபோட்டு உட்கார்ந்துபேசிக்கொண் டிருந்தார்கள். அந்தச்சமயத்திலே அளவற்றஜனங்கள் சூழ்ந்துவருவதை வேசிகண்டுமந்திரிகுமாரனைப்பார்த்து இதென்ன ஜனப்பிரளயமாக வருகிறதே யென்ன அதற் கவன் என்னமோ அறியேன்கிட்டேவருகில் தெரியுமென பேசிக்கொண்டிருக்கும்போது நாய்களின்பேரில் குரங்கு கள் ஆயுத புஸ்திப்போடுவருவதை வேசிகண்டு திகி லடைந்து விசனமாகினள். அப்போது அவ்வேசியின் மாடத்துக்குச் சரியாக வந்துநின்று அதுகளுக்கு கற்பித் துக்கொடுத்த வேடிக்கையெல்லாங் காண்பித்துவிட்டு அவ்விடம்விட்டு முன்னுக்கு நடந்தார்கள்.

தில்ஜோஷ்புலம்பல்-விருத்தம்-இ-ம்-சுபகல்யாணி.

இத்தனை நர்ள்வரைக்கு மிப்பதிதனிலிருந்து
எத்தனைபெயரைநம்ப வில்லிடத்தடைத்தே நின்று
பத்தனைக்கண்டதாலே பேச்சினல்நானேசிக்கி
வித்தெனையோட்டேனென் றுவிசனமாய்ப்புலம்புவாளே.

புலம்பல்-தரு-இ-ம்-சுருட்டை.

| | |
|---|---|
| விதியெழுத்தொருநாளுந் | தப்பாதுசெய்த |
| வினைகளெத்துச்சொன்ன | லொப்பாது |
| மதியென்செய்யுமினி | வெல்லாதுவிதி |
| வத்தாமதிவிலகச் | சொல்லாது |
| அடியாளென்றுசொல்ல | நமக்காச்சேதான் |
| அடித்த ஆங்காரவெல்லா | மிளப்போச்சே |
| விடியாபொழுதிரவிக் | குள்ளானேன்-கெட்ட |
| வேலைக்கடியாளாகி | யுள்ளானேன் |

வசனம்.

இப்படி தனக்குள்ளேதானே புலம்பிக்கொண்டிருந்
தால் அப்போது இராசனுக்கு இச்செய்தி தெரியாமல்
உடனே யானையின்மேல் அம்பாரிபோட்டு மந்திரியுந்
தானுமாக வெளியேவந்து பார்க்கையில் நாய்களின்மேல்
குரங்குகள் ஆயுத முஸ்தீப்போ டிருக்கக்கண்டு பிர்மி
த்து அதன் வேடிக்கைகளைப்பார்த்து மிகுந்தசந்தோஷ
த்தோடு அரன்மனைபோய்ச் சேர்ந்தார்கள். பின்பு இவர்
கள் நகர்புரமாகி ஓரிடத்தில்விடுதியாக கூடாரங்களடித்து
தாங்களுங் குரங்குகளுமாக இறங்கியிருந்தார்கள் பின்பு
மந்திரிகுமாரனாகிய பஹீர் அம்பர் அஷறவென்னு
மரசனிடத்திற்குவந்து பாதம்பணிந்து தான் முன்னே
திய மொழியை மெய்யாகக் காட்டினதைக் குறித்து ஓ
மகாராஜனே இந்தஅடியேன் தங்களுக்குறைத்த செய்
தியே யின்று தாங்கள் கண்ணுற்கண்டீரே இப்போது
முறியெழுதிக் கொடுத்தபடி நடப்பிக்க வேணுமென்று
கேட்க அதுகேட்டரசன மிகவும் பகீருவைப் புகழ்ந்து
உன்மொழியே மெய்யாயினதென்று அவ்வேசியை யழை
த்து முறியெழுதியபடியே ஒப்புவித்திட அவனு மிவனு
மாக அரசன்பாதம் பணிந்தெழுந்து விடைபெற்று தங்
கள் வீடுபோய்ச்சேர உடனே மந்திரிகுமாரன் முன்னு
லிவள் சிறையிலடைத்து வைத்திருந்தவர்களை யெல்லாம்
வெளியாக்கி அவரவர்களுக்கு ஆடை யாபரணங்களைக்
கொடுத்து வருசிலவிற்கும் பணங்காசுகளைக் கொடுத்து
அவரவர் தேசம் போய்ச்சேர விடைகொடுக்க சகல பே
ரும் மந்திரிகுமாரனைப் புகழ்ந்து பாதம் பணிந்து வாழ்
த்து அவரவர் தேசம்போயினார்கள் பின்பு மந்திரிகுமா
ரன் தன் அரசன் குமாரனாகிய (ஆதிலெபஹர்) என்பவ
னுக்கு தலைமுழுக்காட்டி நல்ல விலையுயர்ந்த ஆடைகளை
யணிந்து தன்னருகில் உட்காரவைத்து பின்பு அவ்வேசி
யினுடைய மாடகூட முதலியவைகளையெல்லாம் விற்று
பணமாக்கி அவளுடைய முத்துமணி வெள்ளிபொன்
தங்கமுதலியவைகளை மொட்டையின்பேரிலும் குதிரை
களின்பேரிலுமேற்றி அவ்வூரைவிட்டு தங்கள்பட்டணம்
வந்து அவ்வேசியினோடுபோய்ச்சேர தாய்தகப்பன் முத

லிய சகல சனங்களுக்கு மிவர்கள் வரவைக்கண்டு சந்தோஷமானுர்கள். அப்படியே நீங்களுமிருப்பீர்களென்று சொல்ல சூரியனுதயமானன் பின்பு சையினல் முலுக்கு முகங் கைகால்களை சுத்திசெய்து கிரீடமுடி தரிசது முத்து மணிகள் பதித்த சிம்மாதனமேறி நீதிநெறிசெலுத்தி இப்படி யரசாண்டு நிகழுங்காலத்தில் அவ்வரசனுக்கு ஐந்தாவது ஒருபிள்ளைபிறந்தது.

விருத்தம்-இ-ம்-தோடி.

பாலகன் பிறந்தானென்று பார்த்திபன் தனக்குச்சொல்ல
வேலினைப்பழித்தமாதா வேந்தன்முன்னோடிச்சென்று
சாலவும்நீங்கள்செய்த தருமநீதியினுலிப்போ
ஆலங்கள் புகழப்பால னவதரித்தனரென்றாரே.

தரு-இ-ம்-தோடி.

பூதலத்தையாளுமரசன் பூவையரோடிவந்து
பாதந்தந்தனைவணங்கித்தாதிமார்கள் பாலன்பிறந்தானென்றார், தங்கசிம்மாதனத்திலிருந்த தருமநீதியுள்ளோரே உங்கள்பெயர்விளங்கஇப்போதொரு பாலன் பிறந்தானென்றார், சந்திரன்போல முகமும்பாலனுக்கு தனுபோலவனைப்பருவம், இந்திரன்போலழகுஅங்கமெல்லா மிலங்குதுஎன்றுசொன்னார், பத்தரைமாற்றுத்தங்கத்தைஉலகத்தில் பழுதென்றுசொல்லிடுவார் இத்தரைமீதிலிந்தப்பாலனுக்கு இணையில்லையெவருமென்றார் காந்தியொளியாலே
நகமுகங் கதிர்போல்வீசுதையா சேர்ந்தபுதுமைகளைஉந்
தன்முன்னே செப்பிடலாகாதென்றார்
தெய்வலோகக்கிளியோ அல்லது தெய்வரம்பைக்குயிலோ
ஐயமில்லாமயிலோபாலனை யாதென்றறிவதென்றார்

வசனம்.

இவ்விதமாகத் தாதிமார்கள் ஒடோடியும்வந்து அப்பிள்ளையின்சரித்திர வரலாற்றை எல்லாஞ்சொல்ல அரசன்கேட்டு மிகுந்த சந்தோஷமாகிஆனந்தக்கடலில்மூழ்கி வெகுநேரம்வரைக்கும் விள்ளொணுத மூர்ச்சையாய்த் தெளிந்தெழுந்துசகலசெனங்களையும் அழைப்பித்து அப்பாலன்பிறந்த மகிழ்ச்சியினல் சர்க்கரை வழங்கித் தாம்

புலங்கொடுத்து அப்பிள்ளையின் விகிரையையும் மகிமையும்
அமுதம்போன்ற குணத்தையும் மனத்தையும் அறிய
வேண்டுமென்று உடனே சாஸ்திரவாதிகளை அழைப்
பித்து அப்பிள்ளையின் குறைகுணங்களையும் அதிஷ்ட பா
க்கியத்தையும் வயதினளவையும் அதனால் யெனக்குநேரி
டும் பாக்கியங்களையுமறிந்து சொல்லுங்களென்று கேட்
டான். அதைக்கேட்டவுடனே யந்த சாஸ்திரவாதிகள்
கோடுகீறி சாஸ்திரங்களைம் பொபர்தரித்துப் பின்பு தங்
கடங்கள் கை விரல்களைக்கொண்டு கணக்கிட்டு இப்பிள்
ளைக்கு இவ்வுலகிலுண்டாகும் வாழ்வையும் வல்லமையும்
செயத்தையும் இவ்வளவென்றும் கணக்கிட்டுச் சொல்ல
முடியாதென்று றுரைத்தவர்கள் இன்னமிப்பிள்ளைக்கு
சகல தேசங்களிலுள்ள அரசர்கள் பூதங்கள் பிசாசுகள
ஜின் பரீதேவுகள் முதலானதுகளு மஞ்சிப்பயந்துபடி
பணிந்து எவற் பணிவிடைவேலைகள் முழுதுஞ் செய்
வார்கள் ஆனு லிப்பிள்ளையினால் ஒரு கெடுதலையுண்டு அ
தாவதென்னவெனில் அப்பிள்ளையைத் தாங்கள் தங்க
ளுடைய இரண்டு நேத்திரங்களால் பார்ப்பீர்களாகில்தங்
களுடைய கண்ணொளிமாறி கண் குருடாய்ப்போகும்
ஆயினு மிப்படிப்பட்ட சுத்த வீரசயமுள்ள பிள்ளை யினி
மேல் பிறக்கமாட்டாது பிறக்சப் பார்க்கவுமாட்டீர்களென்
றுசொல்லி அனைவரு மரசனிடத்தில் விடைபெற்றுக்
கொண்டு தங்கள் தங்கள் மனைக்குப் போய்விட்டனர்கள்.

பின்பு அரசனானவன் அச்சேதிகள் முழுதுங் கேட்
டுச் சிலநேரம் துக்கமுஞ் சிலநேரஞ் சந்தோஷமாகமறிவு
முன்னும் பின்னுமாக ஆலோசனைக் கடலில்மூழ்கி அப்
பிள்ளையினால் சமது சந்தோஷமும் துக்கமும்வந்துநேரி
ட்டதே என்று கலங்கி மலங்கி உடனே தன் மந்திரியை
யழைத்து ஓ மந்திரி எனக்கு எப்படிப்பட்ட வேலைகள்
வந்துநேரிட்டபோதிலும் நான் அவ்விடம்எப்போதும்
போகக்கூடாதஇடமாயிருக்கவேண்டு மவ்விடம்பார்த்து
அவ்விடத்தில் ஒரு மாளிகையினுள் அப்பிள்ளையை
வைத்துவிடுமென்று உத்தரவுகொடுத்தார் உடனே மந்
திரியானவன் பாதுஷாவின் கட்டளைப்படிக்கு யாவரும்

போகாதவிடமா யிருக்குமிடத்தில் வீடுகட்டி அப்பிள்ளை
யின் தாயையும் வைத்துவிட்டனர். அதன்பின்பு அப்பிள்
ளை சர்வ வல்லமையுள்ள கடவுளின் கிருபையினலே
நாலுவிதமாகிய சகல வித்தைகளும் யானையேற்றங்குதிரை
யேற்றம் விற்பயிற்சி சகல தந்திர மந்திர விநோதமுதலிய
சகல காரியங்களிலுந்தேர்ந்த வல்லமையுடையவனாய்ப்
பிறைவளர்வதுபோல நாளுக்குநாள் வயதும் வளர்ந்துக்
கொண்டே வந்தது அப்படிவரும்நாளையில் ஒருநாள்
அந்தப்பிள்ளை ஆனைமுகதிசையாம் நான்காணகத்திற்சென்று
மான் முதலியவையின் வேட்டைகளை வேண்டுமென்று
மனதிலெண்ணமிருந்தசந்தோஷத்துடனே தன்வீட்டை
விட்டு குதிரையைச்சிங்காரித்து அதற்குத்தகுந்த ஆடை
யாபரணங்களுமிட்டுத் தானும் தனக்குவேட்டைக்குத்
தகுந்த பல வாயுதங்களை யெடுத்துத் தரித்துக்கொண்டு
ஒரு சிங்கத்தைப்போல வேட்டையாடவெளிப்பட்டு
காட்டினிடமாகப்போகையில் அங்கோர்மானானது அப்
பிள்ளையின் கண்முன்னெதிர்பட்டது அம்மானைக்கண்டு
பின்றொடர்ந்து அதைக்கொல்லவேண்டுமென்று தன்
குதிரையை விசையுள்ளகாற்றைப்போல அம்மான்பேரில்
விட்டான்.

கவி.

விதியினைவெல்லா மதியினிலாகா
தெதுவிதமென்னில் இதுவென வுணர்வீர்.

வசனம்.

அப்பிள்ளை வேட்டையாடுந் தருணத்தி லப்பிள்ளை
யினுடைய தகப்பனுகிய சைமினுல்முலுக்கென்னும்பாது
ஷாவு மன்றையதினமே தானுங்காட்டிற்சென்று வேட்
டையாடவேணுமென்று வில்லாளர் வேடர் சட்டிகுத்துக்
காரர்கள் வலைக்காரர் வேட்டைநாய்க்காரர் மற்றுமுள்ள
வீரர்களையெல்லாம் உடனேயழையென்று மந்திரிக்குச்
சொல்லவும் அப்போதுடனே பாதுஷாவின் சொற்படி
க்கு வேட்டைக்காரர்களை யெல்லா மழைத்து அச்செய்
தியை பாதுஷாவுக்கு தெரியப்படுத்தினன்.

அச்செய்தியைக்கேட்டு அப்பாதுஷாவுந்தானும் வேட்டைக்குரிய ஆயுதங்களையெல்லாம் எடுத்துப் பூட்டிக் கொண்டுமேகவாகனமென்னுங்குதிரையைச் சிங்காரித்து அதன்மேல் பெரும்புலிபோ லேறிக்கொண்டு சுற்றிலும் ரதகஜ துரகபதாதிகள் நெருங்கிவர காட்டிற்கு வேட்டை யாடப்போயினர் அத்தருணத்தில் பாதுஷாவினுடைய கண்ணில் ஒருமானானது அகப்பட்டது அதைக்கண்ட வுடனே பாதுஷா அம்மானைத் துரத்திக்கொண்டு போ கையில் எதிராகத் தன்பிள்ளையாகிய தாசுல்மூலுக்கைக் கண்ணில் கண்டனர் கண்டவுடனே பாதுஷாவினுடைய இரண்டுகண்ணின் ஒளிவுமாறி கண் குருடாய்விட்டனர். அப்போது சுற்றிலுமிருந்தவர்கள் இதென்ன ஆச்சரிய மாயிருக்கின்றது இப்போது குதிரையின்மே லேறிவரும் போது கண்ணிருந்ததே இதற்குள் கண் குருடாய்ப்போன விதமென்னமோ இதை அறியவேண்டுமென்று மிகுந்த தாகவிமையுடன் பாதுஷாவைக் கேட்டார்கள் அதற்குப் பாதுஷா சொல்லத்தொடங்கினர்.

---

தரு-இ-ம்-பந்துவராளி

சொல்லுகிறேன்கேளும் மந்திரிமாரே
சொல்லுகிறேன்கேளும்

பிள்ளைபிறந்தாக்கால் பெயரல்லோவிளங்கிடும்
வள்ளலாலேஎன்கண் வழங்காமற்போயிற்று சொ

பாலன்பிறந்தாக்கால் பாக்கியமுண்டாகும்
சீலன்பிறக்கக்கண்கள் தெரியாமற்போயிற்று சொ

பட்டமாளப்பாலன் பிறக்கவல்லவேணும்
துட்டனாலேயிப்போ தோற்றுவிட்டேன்கண்ணை சொ

பதியிலிந்தப்படி விதித்தனன்வல்லவன்
மதியினாலேஇவை மாற்றமுடியுமோ சொ

வசனம்.

கேளும் என்னருமை மந்திரிமார்களே என் விதி யினாலாயதை மதியினால் விலக்கக்கூடாதென்ற பழ

மொழிபோல என்பிள்ளையினாலே கண்களையிழந்து விட்
டேன் ஆனபடியால் இன்றுமுதலாக அப்பிள்ளையைஎன்
னுடையவெல்லை எவ்வளவுண்டோ அதற்குள் அப்பி
ள்ளையைவைக்காமல் ஊரைவிட்டோட்டிவிட பிள்ளையைப்
பெற்ற தாயைவாசல்வழிகள் பெருக்கவையுமென்று
உத்தரவு கொடுத்துவிட்டு தன் சிம்மாதனத்தில்வந்து
உட்கார்ந்து தன்கண்ணின் ஒளிவு விளங்குவதற்கு அதற்
காக நல்லநல்ல கெட்டிக்காரர்களாகிய வயித்தியங்களை
யழைத்து என்னுடையகண் விளங்கும்படியானவிதங்கள
செய்யுமென்றுசொல்லஅதற்கந்தவயித்தியர்களெல்லாம்
அக்கண்ணைப்பார்த்து எங்களுக்கெல்லாம் பாதுஷாவா
கிய ஆண்சிங்கமே தாங்கள் சொல்லுவதை தங்களகாது
கொடுத்துக் கேட்கவேண்டுமென்று மிருந்து அன்புடனே
தங்கள் கண்ணில் ஒளி விளங்குவதற்கு இம்மருந்துகளி
லாகிறதில்லை அதற்கு குலேபகாவலியென்கிற புஷ்
பந்தவிர மற்றமருந்துகளால் முடியாது அப்புஷ்பம் எப்
படிப்பட்டதெனில் பிறவிக் குருடனாயிருந்தபோதிலும்
அப்புஷ்பத்தின் மருந்தினாலாவது அப்புஷ்பங்கொண்டு
வந்தாலொழியத் தங்கள் கண் விளங்காதென்று சொன்
னார்கள் அதைப் பாதுஷா கேட்டு உடனே தன்னுடைய
பட்டணங்கள் முழுதிலும் யாராவது குலேபகாவலியின்
புஷ்பமாவது அல்லது அதன் தக்கிர[illegible]த்தையாவது
கண்டறிந்துவந்துசொன்னால் அவர்களுக்கு அளவில்
லாத-இனும் கொடுக்கிறேனென்று ஒருவாரம வரைக்கும்
பறை றைவித்தனர் அதை கஸபட்டணத்திலுள்ள சக
லருங்கேட்டு அப்பூ இவ்விடமிருக்கிறதென்று அறிந்து
சொல்முடியாமல் போய்விட்டது அதனாலே மையினால்
மூழ்க்கிய பாதுஷா யூசுபு அலைஹிஸ்ஸலாத்தை யிழ
ந்துவிட்டு யாகூபு அலைஹிஸ்ஸலாம் தேடித்தேடித் தன்
வயதெல்லாம் அழுதழுது அவர் கண்கள் எப்படி வெண்
மையாய் விட்டதோ அப்படிபோல இருவரும் அழு
தழுது கண்ணும் வெள்ளை நிறமாய்விட்டது.

இன்னும் ஐயூபு அலைஹிஸ்ஸலாத்தைப்போல தன
க்குத் தானே அவ்வியாதியின் சபூர்செய்தாற்போல சபூர்
செய்து அந்த துக்கத்தினால் தன் சரீரமெல்லாங் குன்றத்

தக்கதாக விளைப்பட்டிருக்கும் நாளையில் ஒரு நாள் தன் பிள்ளைகள் நான்குபேரு மிகுந்த அன்புடனே கைகட்டி பாதுஷாவினெதிரில் வந்துநின்று மிகுந்தசாட்சியுடன் எங்களை வளர்த்த தகப்பனே நாங்கள் ஒருமனுச்செய்து கொள்ள வந்தோம் அதைத் தாங்கள் காதினாற்கேட்டு எங்கள்மனம் சந்தோஷமாகும்படி விடை கொடுத்தருள வேண்டுமென்று சொல்லத்தொடங்கினார்கள்.

விருத்தம்-இ-ம்-கல்யாணி.

கருமங்கள்தந்தைதாய்க்குக் கடவுள்தான்விடுவானு
இல், வருமமென்றெண்ணுப்பாலர் வருத்தமேதிலேமேற்
கொண்டால், தருமமின்மனேகத்தாவில் சாஸ்திரமுறை
யாலுண்டு, பெரும்பவமெம்மதற்குப்போகும் பெறறவர்
கேளுமென்றார்.

---

வசனம்.

பூலோகத்தில் தாய்தகப்பனுக்கும் ஏதாவதொருமன வருத்தம் வந்து நேரிட்டால் அவ்வருத்தத்தை அவர்கள் தங்கள்வருத்தமாகயெண்ணித் தலையேந்திக்கொண்டு அவர்கள் சந்தோஷமாகும்படியாகச் செய்தால் அவர்கள் இரண்டுலகத்திலும் பேரும் புகழ்ச்சியும் பெறுவார்கள் இல்லாவிடில் நரகவாதி யாவார்களென்று வேதங்களில் சொல்லவந்திருக்கிறபடியினாலே நாங்கள் தங்களுடைய மனவருத்தம நீங்கும்படியாக குலேபகாவலியின் பூக்கொண்டுவருகிறோமென்று சொன்னார்கள். அச்செய்தியைபாதுஷாகேட்டு என் கண்மணியான மக்களா நான் கண்ணொளியையிழந்து நெடுநாளாய் துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறேனே அது போதாமல் இப்போது மறுபுண்ணாக நீங்களும் அப்புண்ணுமுன்னமாகப் போகிறோமென்று சொல்லுகிறீர்களே நான் எவ்விதமாக உங்களை அனுப்பிவிட்டு மனம்பொருத்திருப்பேன் போக வேண்டாமென்றனர்.

அதற்கு அப்பிள்ளைகள் எவ்விதமாவது நாங்கள் போய் அப்புஷ்பத்தைத் தேடிக்கொண்டு வராமலிருக்க மாட்டோமென்று சொல்ல அதைப் பாதுஷாகேட்டு மிகுந்த கைசேதப்பட்டவராய் தன் அகத்தியத்திற்காக வேண்டி மந்திரிமார்களை யழைத்து இப்பிள்ளைகளுக்காக எதிர்போகவேண்டிய பாணமும் வழிக்குத் துணையாகச் சேனையும் வழிச் செலவிற்குப்பணமும் இன்னம் வேண்டுமான பொன்வெள்ளி முதலிய ஆடையாபரணமுங்கொடுத்து அனுப்பிவையுமென்று உத்திரவுகொடுத்தார் அதுபோலவேமந்திரிமார்கள் அப்பிள்ளைகளுக்கு வேண்டுமானவைகளெல்லாங் கொடுக்கவும் அதுகளைப் பெற்றுக்கொண்டு தன் தகப்பனிடத்திலும் உலகவுத்திரமெல்லாம் விடுதிவிடுநயாக விறங்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்படி நடக்கையில் தகப்பன் ஊரை விட்டு ஓட்டி விட்ட தாசுல்முலுக்கு மிகுந்தவருத்தத்தோடு மலைவனங்களையெல்லாங் கடந்து தன கால்களிரண்டும் புண்ணாக மெலிந்து குன்றிவருகையில் இக்கூட்டத்தைக்கண்டு அதில் ஒருவனை நீங்கள் எவ்விடமிருந்து வருகிறீர்கள் எவ்விடத்திற்கு என்னவேலையாய்ப் போகிறீர்கள் சொல்லுங்களென்று கேட்கவும் அதற்கு அவன் சையினுல் மூலுக்கென்னும் பாதுஷாவினுடைய கண் குருடாய் விட்டது அக்கண் விளங்குவதற்காகவேண்டு அந்தகுலேபகாவலியின் புஷ்பத்தை தேடிக்கொண்டு வரப்போகிறோமென்றுதாசுல்முலுக்குடன் ஆதியோடந்தமாகக் கேட்டு ஆனல் முன்ஞல் சாஸ்திரவாதிகள் சொல்லியபடி நமது விதியின் அதிஷ்டத்தை இப்போதறிய வேண்டுமென்றுதனக்குள் தானே யெண்ணி நாமும் நமது அண்ணமார்களுடன் கூடி குலேபகாவலியின் புஷ்பத்தைத்தேடுவோம் அவ்விடத்தில் நம்முடைய அதிஷ்டமெப்படிமுடியுமோ அதை முழுதுங் கண்டறிவோம் அப்படியே நமக்கு அப்புஷ்பங்கிடைக்குமாகில் அதை நம்முடைய தகப்பனிடத்திற் கொணர்ந்து கொடுப்போம் இல்லாவிடில் இதேவழியாக மறுபடியும் இத்தேசங்களின் வழி திரும்பாமற் போய்விடலாமென்று பலபலவிதமாகத் தன்மனதினுள்

எண்ணி அக்கூட்டத்தினில் ஒருதலைவன் சஹீதென்றிருந்தான் அவன் முன்றசென்று சலாம்செய்யவும் அப்போது அந்த சஹீதினுடைய பார்வை இப் பிள்ளையின் மேல் விழுந்தது.

எப்படியெனில் அப்பிள்ளையின் முகத்தினழகும் வடிவும்தோள்களினிறமும் புருவத்தின்வளையும் கண்ணின் வடிவும் கால்களினழகையுங்கண்டு மிகவும் புதுமைப்பட்டு சித்திரத்தைப் பழிக்கின்ற அங்கவடிவுள்ள இப்பிள்ளையாரோ அறிய வேண்டுமென்று அப்பிள்ளையைப்பார்த்து நீயார் எங்கிருந் தெங்கேபோகவந்தாய் சொல்லென்று கேட்கவும் அதற்குத் தாசுல்மூல்க் நான் அன்னிய தேசத்தான் நான் உலகில் ஒருவர்வுதவி ஒத்தாசையுமற்றவன் மிஸ்கினவன் என் துக்கந் துயரத்தை ஆற்றுகிற மனிதர்களை அற்றவன் மிகவும் நொந்தவன் பரதேசியாகி யாத்திரை செய்யப்பட்டவனென்று சொல்வதை சகீதுகேட்டு மனமிரங்கி மிகுந்த அதரவான மொழிகள் கொடுத்துதன்னிடத்தில் வைத்துக்கொண்டு நாளுக்குநாள் அப்பிள்ளையைத் தன்னுயிரைப் போல் உண்ண உடுப்பதற்கு யாதொரு குறைவுமில்லாமற் பாதுகாத்து வைத்திருந்தனன்.

அப்படியெல்லா மொன்றாகச்சேர்த்து வழிகளைத் தொலைத்து ஒருவாரம்வரைக்கும் நடந்துபோகையில்கடற் கரைபோக ஒரு பட்டணத்தின்பேர் பிரகவென்றும்அந் நகரத்தரசன் பேர் ஷாஹேரிசவான் என்றும் தங்கசிம்மாதனத்திலுட்கார்ந்து அதிக நீதியாய் அரசாண்டு கொண்டிருந்தான் அந்த நகரத்தைக்கண்டவுடனே பொழுது அஸ்தமிக்கிற நேரமாய்விட்டது இந்நகரமும் மெத்த அழகுள்ளதாக விருக்கின்றது இதில் சிலநாள்வரைக்கு மிருக்கவேண்டுமென்கிற கருத்தாக அவ்வாலவாள் கூடாரங்களடித்து விடுதியாக விறங்கினர்கள் அவ்வேளைசூரியனானவன் தன்னுடைய அதிகாரங்களைச் செலுத்திவிட்டு வெகுகோபத்துடனே மேற்கே வானம் சிவப்பப்போய் மறைந்தனன் பின்பு சகல ஜனங்களுடைய மனமும் சந்தோஷமாகவும் தன்பதினாறு பூரணகலைகளையும் பரப்பக்

கொண்டு சந்திரனானவன் தன் அதிகாரத்தை உலகத்தில் செலுத்த வெளியிற் புறப்பட்டான் அப்போது அந்த பாதுஷாவினுடைய பிள்ளைகள் இது நல்ல குளிர்ந்த வேளையாயிருக்கின்றது இப்போது இந்நகரத்துட் சென்று பார்ப்போமென்று தங்கள் குதிரைகள்மேல் யேறி அந்நகர்க்குட்புகுந்து வீதிவீதிகள் தோறும் நார்சோதனையாகச் சுற்றிப்பார்த்துவருகையில் பளிரென்று ஒரு மின்னலைப் போல முத்துமாணிக்கங்களாலிழைத்துப் பொன் வெள்ளியினால் குச்சுகள் தொங்கவிட்டு மிகுந்த விநோதமாகிய வேலைகள் செய்கிற மெத்தை ஒன்று தெரியலாயிற்று. அதைக்கண்டுபிரமித்து அவ்விடத்தில் நிற்கையில் அவ்வேளையில் அவ்வூரான் ஒருவன் வந்தான் அவனைப்பார்த்து இந்தமாளிகை (தில்பாறக்கா என்றொரு பெண்ணிருக்கிறாள் அவளுடைய மாளிகையென்று சொன்னான் அதை இவர்கள் கேட்டு இப்படிப்பட்டமாளிகை இவ்வுலகமெல்லாம ஒருகுடையிலாளும் பாதுஷாக்களுக்குங் கிடைப்பது அரிது இது இவளுக்கு எவ்விதமாகக் கிடைத்ததோவென்று அதிசயத்தோடு அவன்பின்னும் இவள் முகத்தைப்பார்த்து இவள் தனியாயிருக்கிறாள் இன்னம் தன்னைக்காணவந்தவர்கள் மறுபடியும் பிரிந்துபோக மனம்வாராத இஷ்டத்தைக்கொடுப்பவள் சகலபேரிடத்திலும் தன்காரியத்தில்மிகுந்த எச்சரிக்கையாக விருக்கப்பட்டவள் ஆனல் உலகில் இவளைப்போல அழகினையுடைய பெண்கள் ஒருவருமில்லை இன்னம் இவளுடைய முகத்தினழகுப்பதினாலாம்பக்கத்து சந்திரனும் உடற்குழைக்கு முருக்கம்பூவும் கண்ணினழகிற்கு எள்ளின்பூவும் கன்னத்தினழகிற்கு கண்ணாடியும் புருவத்தினழகிற்கு அன்றுதித்தபிறையும் சொல்லோசைக்குக்கிளியும் இராகத்திற்குகுயிலும் சாயலுக்குமயிலும் நடைக்கு அன்னமும் நாணத்தக்கவள் மேலும் தன்னைப்புணரும் வல்லார்க்கு ரதிபோல இன்பத்தைத்தருகிற அல்குலின் புணர்ச்சியின் விருப்பத்தையுந் தருகின்றவள் இவளையாராகிலும் கண்ணில் காண்பார்களாகில் அவளழகைக்கண்டு விளக்கில் அந்தப்பூச்சியெப்படி விழுந்து தன்னுயிரை சாய்த்துவிடுகின்றதோ அப்படி மாய்த்துக்கொள்ளுந் தன்மையுள்ளவளென்று சொல்ல

... of Books, Madras



இராசகுமாரர்களிதைக்கண்டு நிற்கையில் பின்னுஞ் சில
சேதிகளிருக்கிறது சொல்லுகிறேனதையுங் கேட்டுக்கொ
ள்ளுங்கள் அவள் தன்னுடைய வீட்டின் வாசற்படியில்
ஒருபேரிகையும் ஒருகோலும் வைத்திருக்கிறாள் யாராவது
அவள் வீட்டிற்குள்போக நாடுகிறார்களோ அவர்கள் அப்
பேரிகையை அடிக்கிறது அப்போதவளவர்களை வீட்டிற்
குள்ளழைத்து அவர்களிடத்தில் ஒருலக்ஷம் ரூபாய் வாங்
கிக்கொண்டு அவர்களுடன் சேருவாளென்று அவன் ஆதி
யோடந்தமாகச் சொல்லக்கேட்டு பாதுஷாவின் பிள்ளைகள்
அவள் எப்படிப்பட்ட சவுந்தரியமுள்ளவளோ அவளைக்
காணவேண்டுமென்று மிகுந்த ஆசையினாலும் தங்களி
டம் இருக்கிற திரவியத்தின் மகிழ்ச்சியினாலும் யாதொன்
றும் அவ்வேளையில் தோன்றாமல் காமவிரகத்தினால் அவ்
வீட்டின் வாசற்படியிலுள்ள பேரிகையை அடித்தார்கள்
அப்பேரிகையின் ஒலி கோடையிடிபோல் முழங்கின சத்
தம் அவள் காதில் விழுந்தவுடன் (அல்கம்துலில்லா!
வெகுநாளாய் யாவரும் என் வீட்டிற்கு வந்ததில்லையே இப்
போது என்ன நற்பலனோ யாதோ தெரியவில்லையே என்
னைத்தேடி வந்த யாவரோ அறிவோமென்று தன்
வீட்டைச் சிங்காரித்துச் சுற்றிலும் தீபமுதலிய வெளிச்
சங்கள் செய்யுங்களென்று கட்டளையிட்டு நம்முடையமாய
வலையினால் கொழுத்த வேட்டைகள் அகப்படவில்லையே
யென்று எண்ணங்கொண்டவளாயிருந்தாளவளுக்குமீன்
கழுவிப் பூனையைக் காவல்வைத்தாற்போல் அந்தப் பாது
ஷாவின் குமாரர்கள் கேட்டுங் கேளாதவர்போல தீபத்
தை கையிற் பிடித்துக்கொண்டு கிணற்றில்விழுந்த கதை
போல இவர்கள் உள்ளே வருவதைக்கண்டு அந்த அறி
வினையுடைய குருடர்முன் போகவேண்டுமென்று ஆடை
யாபரணமுதலியவைகளை தரித்துப் பரிமளமுதலிய வாச
னைகளை யணிந்து கையில் வளையல்கள் கலகலெனவும்
மேனியில் நகைகள் மினுமினெனவும் மயில் சாயல்போ
லவும் குயிலோசை போலவும் கிளிமொழிபோலவும் அன்
னநடைபோலப் பின்னிய நடையுமாய் மிகுந்த வெட்க
மாரியைப்போல் ஒளித்து ஒளித்து உடம்பைச் சுளித்துச்
சுளித்து கண்ணையுருட்டி மிரட்டி யெதிராகவந்து இந்த

ல்லரையும் அழைத்துக்கொண்டுபோய்ப் பொன் வெள்ளி
யிலிழைத்த நாற்காலிகளில் உட்காரவைத்து விருந்து
அன்புடனே தானுந்நகையாகப் பரிகாசம் முதலிய
வைகளைச் சிலநேரம் வரைக்கும் பேசிக்கொண்டிருந்
தாள்.

அத்தருணத்தில் அவள் சொற்படியே ஏவலாளிகள்
பொன் வெள்ளியினாற்செய்து முத்துக்கள் பதித்திருக்கிற
கட்டேருவும் சீசாவில சாராயமும் கொண்டுவந்துகொடுத்
தனர். அதை ஒவ்வொருவராக மாற்றிமாற்றிச் சுற்றிவரக்
குடித்தார்கள் இந்தவிநோதங்களா லமையினால்பாதியிரவு
போய்விட்டது அப்போது அவள் இவர்கள் முகத்தைப்
பார்த்துத் தங்கள் உத்தரவாகுமேயானால் பகடசாலேகொ
ண்டுவரச் சொல்லுகிறேன் அந்த ஆட்டத்தினால் மற்றப்
பாதி யிரவையும்போக்கிடலாமென்று சொல்லினள் அதை
க்கேட்டு இந்நால்வரும் அப்படியே செய்வோம் கொண
டுவாவென் றுரைத்தார்கள் அவள் பகட சாலேயைக்கொ
ண்டுவரச்சொல்லி அதைவிரித்து பூமியின் தலைமேல்
விளக்கைவைத்து ஒரு ஆட்டத்திற்கு இலக்ஷம்ரூபாய்
பந்தயமென்று வைத்து விளையாட ஆரம்பித்தாள்.

விருத்தம்-இ-ம்-கல்யாணி.

மதிவழி வள்ளமன்னன் மக்கள் நால்வருமொன்றாகி
சதிவினைசெய்புங்கவளி தன்பவிப்பதனுள்சிக்கி
பதவிகள்முழுதுந்தோற்றுப் பாதகிக்கடிமையாகி
விதிப்படி மகிழ்வாயன்று விளையாடத்தொடங்கினாரே.

தரு-இ-ம்-கலியாணி.

ஆடத்தொடுத்தார் பந்தயக்காய்கள் போடவெடுத்தார்
ஆடவெடுத்தார்கள் அரசன்மகனுமவளும்
போடக்காய்கள்தன்னைப் பிடித்தகமகிழ்ந்துகூட ஆட
பச்சைசிவப்புமஞ்சள் பாங்காககாய்களை
இச்சையுடனெடுத்து இருவருங்கெலித்திட ஆட
பார்ப்போம்வலியென்று பாசைப்பந்தயங்கூறி
தோர்ப்புகெலிப்புக்கின்று ஆங்காரத்திரமாக ஆட
என்றன்செலிப்பினாலே லெல்லைநீர்தோற்றிட
உன்றன்பணமுங்காயும் ஒன்றில்லாமற்போக ஆட

விழுந்ததுபாரிதோ வெற்றிபத்தமமென்று
எழுந்துவீறுபேசி யிரவெல்லாந்தொலைத்திட ஆட

வசனம்.

இப்படிவிளையாடிக்கொண்டு வருகையில் பாதுஷாவின் குமாரர்கள் பாதியிரவுக்குள் ௫ லக்ஷம் ரூபாயையும் அவளுக்குத் தோற்றுவிட்டார்களப்போது சூரியனானவன் சகல விருக்ஷகளு மிரண்டோடிப் போகும் படியாய்த் தன்னுடைய சிவந்தருபத்தை முதல்காண்பித்துக்கொண்டு வெளியே புறப்படவும் சந்திரனானவன் புருஷன் அதிக ஆங்காரங்கொண்டு வருவானாகில் பெண் அவன் முன் நிற்கப்பயந்து எப்படி வீட்டினுள் நுழைந்துகொள்வாளோ அப்படிபோல உலகமெல்லாமதனரசாட்சியைச் செலுத்திக்கொண்டு மேற்கடலினுள் போயொளித்துக்கொண்டான் அப்போதவளுமந்த ஆடுகிற பகடசாலையைச் சுருட்டிவிட்டாள் அப்போதந்த நால்வரும் தங்களிருப்பிடத்திற்கு வந்துவிட்டார்கள் மற்றுநாள் சூரியனானவன் உலகத்தில் தன்னரசாக்ஷியைச் செலுத்திக்கொண்டு நடையில் ...ந்த அலுப்புள்ளவனைப்போல மேற்கடலிற்போய்ப் புகவு மாலைநேரமாயிற்று அப்போது புருஷனைக்காணவேணுமென்கிற பெண்ணானவ ளெப்படி தன்னைச் சிங்காரித்து முகமிலங்க வெளியே புறப்படுவாளோ அப்படிபோல சந்திரனானவன் தன்பதினாறு பூரணக்கலைகளும் துலங்க அழ லங்கத் தன் முத்துச்சிம்மாதனத்தின் பேரில் உட்கார்ந்து உலக அரசாக்ஷி செய்யப் புறப்பட்டான் அப்போது இந்நால்வரும் தங்கடங்கள் குதிரைகளின்மேலேறி விசைக்காற்றைப்போல் குதிரைகளை ஓடவிட்டு அவள் வீட்டிற்குள் வரவுமவளுடனே யிவர்களுக்கு நவரத்தின மிழைத்த நாற்காலிகள் தாதிப்பெண்கள்கொண்டு வந்துபோடவும் அதன்மேல் இந்த நால்வரும் உட்கார்ந்தார்கள் தலையைத்தடவி மூளையை யுரியுங் கதைபோல் தாதிப் பெண்கள் மிகுந்த பணிவிடையாக வேலைகளை இவர்களுக்குச் செய்தார்கள் பின்பு அநேகவிதவிதமாய சோறுகறிகளாக்கிப் பொன்வெள்ளியினாற்செய்த வட்டிலுள் நிரப்பி கமகமவென்று கமழும் வாசனையுள்ள தண்ணீரை முத்தினா லிழைத்த செம்பில் வார்த்து மரகதத்தி

றுச் செய்தவஸ்தத்தை கைகபூலக்கொண்டு வந்துவைத்து விருந்தளித்து மிகுந்த ஆனந்தத்தோடு தாம்பூல மருந்திப் பின்பு நேற்றைய விரவைப்போல் விளையாட வேண்டுமென்று பகடசாலையைக்கொண்டு வரச்சொல்லி ஒரு ஆட்டத்திற்குப் பத்துலக்ஷம் ரூபாய் பந்தயஞ் செய்து விளையாட ஆரம்பித்தார்கள் அப்படி விளையாடிக்கொண்டு வருகையி லந்நிரவி னுள்ளவர்களுடைய பணமுழுதும் நகைகள் முழுதும் ஆடைகள் முழுதும் மற்றுமுண்டான சில்லரை வஸ்து வகையறுக்கள் அடங்கலையும் ஒன்றில்லாமல் அவனுக்குத் தோற்று விட்டார்கள்.

அப்போது மகாவல்லியினால் வகப்படுத்தி மயக்குகின்றதில் பாலகாவென்பவனுக்கு இப்போது இவர்களிடத்தில் யாதொரு வஸ்துவுமில்லாமல் சகலமும் நமக்குத் தோற்றுப் போட்டார்களென்று நன்றாயறிந்தவளாகி யிந்நால்வரின் முகத்தைப் பார்த்து ஓ வாலிபக் காரர்களே உங்களுடைய சொத்துமுழுது முடிவாய் விட்டது இப்போது இப்பகடசாலையைச் சுற்றி விடவாவென்று கேட்டாளதற்கு இந்நால்வரும் வெகுநேரம் வரைக்கும் யோசித்துச் சொல்லத் தொடங்கினார்கள் ஆமம்மெங்கள் தலைவிதியினுடைய அதிஷ்ட மெப்படி யிருக்கின்றதோ அதையுமுழுது மறியவேண்டுமென்றுசொல்லி எங்கள் திஷ்பராக்கியமென்னுந் தராசை தூக்கி நிறுக்கின்றோமானுலெங்கள் அதிஷ்டந் தட்டுக்கனக்குமாகில் இப்போது உன்னிடத்தி லிருக்கின்ற சொத்துமுழுமையும் நீயுமெங்கள் கைவசமாகி விடவேண்டும் அல்லது உன் அதிஷ்டந் தட்டு கனக்குமாயின் நாங்கள் நால்வரும் உன்னுடைய ஏவற் பணிவிடைகளைச் செய்யும்படியான உத்திரவின்படி அடிமையாய் விடுகிறோமென்று பந்தயஞ் செய்துக்கொண்டு கடைசி யாட்ட மாடினார்கள் அப்போது மவளே செலித்துக்கொண்டாள், பின்பு இவர்களுடைய சேனைகளடங்கலும் பணம் பண்டம் வஸ்திர முதலியவைகளெல்லாம் இதற்குமுன்னால் அவர்களுடனும் விளையாடி அவர்கள் பணமுழுதும் செலித்துக்கொண்டு அவர்களைச் சிறைச்சாலையிலடைத்து வைத்திருந்தாளே அவ்விடத்தில் இந்நால்வரையுங் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டாள்.

இச்செய்திகளை யெல்லாம் தாசல்முலுக்கு கேட்டு இனி நாமென்னசெய்வோ மென்றெண்ணி தனக்குள்ளே தானே யோசித்து நாமுமிப்படி செய்வோ மாகில் நாமும் அவர்களுக்கு மீளுவோம் இல்லாவிடில் யாதொன்று முடியாதென்று பலபலவிதமாக ஆலோசனைசெய்து கடைசியில் ஒரு ஆலோசனை யானது தனக்குத்தானே முடிவானது அதன்படியே முடிக்க வேண்டுமென்று நாடி அப்படியே பட்டணத்தி னுட்சென்று அவ்விடம் ஒரு அமீரினுடைய வீட்டின் வாசற்படியிற்போய் நிற்கையில் அவ்வாசற்படியில் பாரு ஒருவன் கொடுத்து நின்றுக்கொண்டிருந்தான் அவனைப் பார்த்து நான் முசாபருக விருக்கிறேன் நான் மனிதருடைய அருமையும் பெருமையும் அறியப் பட்டவர்களாகத் தேடினேன் அப்படி தேடுகையில் உன்னுடைய எஜமானொருவனொழிய யாருமில்லை அவனுடைய பெயரோ மனிதர்களின் குணத்தை அறியப்பட்டவனென்று எங்கும் பெயராயிருக்கிறது அதை நான் கேட்டு இவர் மனிதருடைய அறிவரென்று வந்தேனென்று சொல்லவும் அதை அந்த சேவகன்கேட்டு ஓடோடியும் வந்து தன்னுடைய ஊருக்குப்போகச் சொல்லினான். அதை அமீர்கேட்டு அவனை அழையுமென்று சொல்லவும் உடனே அழைத்துக்கொண்டுபோய் அமீர் முன்பில் விட்டார்கள் அப்போது அந்த அமீரானவர் இவன் முகத்தைப்பார்த்து லாஇலாஹி நாலாம் வானத்திலிருக்கிற சூரியன் மனிதருடைய நெற்றியில்வந்து இறங்கிவிட்டதோ அல்லது சுவர்க்கத்தி லுள்ள கூறுலீன்களில் ஒரு பெண்வந்துவிட்டதோ என்னமோவென்று வெகு நேர மயங்கிப்போயினர். பின்பு அப்பிள்ளையின் வடிவும் அழகும் குணமும் அன்பும் தன்மையுள்ளதா யிருக்கிறதென்று மிகவும் சந்தோஷமாய்த் தன்னிடத்தில் அப்பிள்ளையை வைத்துக்கொண்டு நாளுக்குநாள் அருமையுறும்படி யாதொரு சிந்தனையுங்குறையும் வாராமற்படிக்குத் தனிவிடைவேலை சேவகத்தில் வைத்துக்கொண்டனர்.

## இரண்டாவது கதை.

## தாசுல்முலுக்கு தில்பரியுடன்

### சூதுவிளையாடித்தெளிந்த விபரம்.

---

௨-வது தில்பரிலக்காவுடன் தாசல்முலுக்கு விளையாடும் படம்.

இவ்விதமாகத் தாசுல்முலுக்கு அந்த அமீரிடத்தில் சம்பளம் இவ்வளவென்று நியமித்துச் சிலமாதம்வரைக் குமிருந்து கொஞ்சம் பணத்தைச் சம்பாதித்தான் இப்படி நிகழுங்காலத்தில் ஒருநாள் தன் எசமானிடத்தின் முன்னின்றிருந்த அன்புடனே வணக்கம் என்மனதிலொரு ஆசையிருக்கின்றது அதென்னவென்னில் அந்த நகரத்தில் எனக்கொரு இஷ்டனிருக்கிறான் அவனிடத்திற்குப்போய் நாலுநாழிகை விடைகொடுக்க வேணுமென்று கேட்டனன் அதை அந்த அமீர்கேட்டு நல்லது அப்படியே போய்வாருமென்று விடைகொடுத்தனர் அன்றுமுதலாகத் தாசுல்முலுக்கு பசடசாலை விளையாடுமிடத்திற்குப் போகத் தலைப்பட்டனன். இப்படி சிலநாளைக்குள்ளே அந்த விளையாட்டுக்காருடன் அதிகசினேகிதனாய் அவர்களிடத்தில் அவ்வாட்டத்தையுங் கற்றுக்கொண்டு அதன் சூதுமுதலியனவைகளெல்லாம் அவர்களாலேவிளையாடப் பூரணமாய்த் தெளிந்து அவ்விளையாட்டில் வல்லவனாய இவனுடன் ஒருவரும் விளையாடமுடியாத தீர்க்கவல்லவனாய்ச் சிறந்தனன். அப்போதுதாசுல்முலுக்கு அந்த தில்பரிலக்காவுடன் நாம்சொக்கட்டான் விளையாடவேணுமென்று கருத்தினனாவது ஆனால் அதனால் அல்லாகுத்த ஆலாவினுடைய குதரத்துகளும் என்னமாய்முடியுமோ அதையும் அறியவேண்டுமென்று மனதில் எண்ணி ஒருநாள் அந்த வேசிவீதியின் பக்கமாகப்போயினன். அப்படி அவ்வீட்டின்வாசற்படிக்கருகிற் சென்றவுடன் அவ்வேளையில் அவ்வீட்டினுள்ளிருந்து ஒருகிழவி வெளியே வந்தனள். அதைக்கண்டு அந்தவாரிலுள்ள ஒருவனைப்பார்த்து இக்கிழவி யாரென்று வினவினன் அதற்கு அவன் இக்கிழவிவீட்டில் தலைமையான

அதிகாரி இவளில்லாவிடில் ஒரு வினையுமுடியாது இவளுத்தரவின்றி ஒன்றுமவள் மீறி நடக்கிறதில்லை சகலகாரியங்களு மிவளாலேயே யிருக்கிறது இவள்பேர் பதாருலை மஹாம் என்று சகல தர்பங்களையுஞ் சொல்லினான் அதை தாசுல்முலுக்கு கேட்டு.

---

விருத்தம்.

விதியினை நினைத்துமன்னன் வேண்டியமுயற்சிசெய்து
மதியினாலாவதில்லை மற்றொன்றாலாவதில்லை
புதியவனெழுத்தின் வண்ணம்பரவியினால் நடக்குமென்று
அதிகமா ஆசைகொண்டு ஆடினன்பாடினனே.

தரு-இ-ம்- ஆனந்தபைரவி.

ஆனந்தமாகினனே-தாசுல்முலுக் கானந்தமாகினனே

ஆனந்தமாகினன்    அவளைக்கண்டவுடனே
எளித்தவேளையில்    எதிரில்வந்தானென்று    ஆ

நாட்டமிவளாலே    நடந்துமுடியுமாகில்
போட்டபோட்டப்பது பொருள்கையில்வருமென்று    ஆ

கெலிப்போமவனைநாம்    கிழவியின்சொற்படி
பலுக்கும்படியாயந்தப்    பாக்கியம்வருமென்று    ஆ

ஆதுமோமெல்லாம்    சுருக்கிலறிவோமென்று
மாதுகிழவியினால்    வந்ததிஷ்டமென்று    ஆ

கள்ளிக்குணங்களை    கிழவியாலறிகுவோம்
துள்ளித்துள்ளிக்கூத்து    தொடுத்தான்மகிழ்ச்சியாய்    ஆ

வசனம்.

தாசுல்முலுக்கு இவ்வித சந்தோஷத்தோடு தன்மனதினுள் ஒரு ஆலோசனை எண்ணி நாம் அவளுக்குமுகப்பத்தென்று சொல்லுங்கயிற்றை அவன் கழுத்திற்போட்டு அவனை நமதுவசந்திருப்பிக்கொள்வோமாகில்நாம் நினைத்தவைவெல்லாமுடியுமென்றுகருதி அன்றைய தினம் வந்துவிட்டான் பின்னுமொருநாள் அதுபோலவே அவ்வீதியின் புறமாகப் போகையில் அன்றையதினமும் அக்

கிழவி அவ்வீட்டினுள்ளிருந்து வெளியேவந்தாள் அவளைக் கண்டவுடனே யெதிரிற் சென்று சலாஞ்சொல்லி அவள் காலமேலைறந்து வீழ்ந்து கோவென்று மிகுந்த துக்கவாளியைப்போல் அழுகையில் அப்போது அக்கிழவி திடுக்கிட்டு இவனைப்பார்த்து நீயார் எங்கிருந்துவருகிறாய் நீ பயித்தியக்காரனா அல்லது வருத்தத்தில் அகப்பட்டவனா சொல்லெனக் கேட்டாள் அப்போதவன் மிகுந்த துக்கவாளியைப்போல அவள் முன் தேம்பித்தேம்பி அழத்தொடுத்தான், பின்னும் அவள் கேட்கையில் அப்போது சொல்லத்தொடங்கினான்.

---

விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

சொல்லெனவென்னைக்கேட்டாய் சேதிகள்முழுதுமின்று
நல்லதோர்விபரமாக நானுனக்குரைக்கக்கேளாய்
அல்லலிலழுந்திப்பாவி ஆதரிப்போர்களற்று
வல்லமையிழந்துநம்மேல் வருத்தமேதரித்தபாரி.

தரு-இ-ம்-சங்கராபரணம்.

சொல்லெனவென்னைக்கேட்டாய்சேதிகள் முழுதுஞ்சொல்
வேன்-அல்லலேயெடுத்தபாவி யாருமற்றபரதேசி
பெற்றதாய்தந்தையில்லாமற் பெரும்பாவிபோலானேனம்
மா-மற்றொருவுதவிசொல்ல வையகத்திலில்லையம்மா
பிச்சைவாங்கித்தின்றபானும்பிழைக்கலானேன்பூமியிலே
பட்சமதிசெய்தாலேபோதும் பாக்கியமுண்டாமெனக்கு
அதிகபலனுண்டாகும் ஆதரித்தாலென்னையம்மா
மதியில்லத்தபாவிதன்னை மனதுவைத்துக்கொள்ளுமம்மா

---

வசனம்.

ஓபாட்டி நான் முசாபராயிருக்கிறேன் இவ்வுலகில் எனக்கு உதவி ஒத்தாசைசெய்பவர்கள் யாருமில்லை எனக்கு சினேகித மொருவருமில்லை அல்லாஹுத்தஆலா ஒருவனைத் தவிர மற்ற யாதொரு துணையும் அற்றவன் நான் கிழக்குத்தேசத்திற்பிறந்தவ னவ்வூரி லிருக்கப்பட்டவன் எனக்கு ஒரு பாட்டியார் இருந்தா ளவளும் அல்லாஹுத்

தஆலாவினுடைய கசாக்கட்டளையின்படி என்தாயார்மற்ற பரதேசிபோல இவ்வுலகினில் விட்டுவிட்டு இந்த அவதிகளையெல்லாந் தன்கண்ணால் பார்க்காமற் கட்டளையின்படி இறந்துபோயினள். அன்று முதலாக எனக்கு இப்படிப் பட்ட அவதி வினைகளெல்லாம் வந்து முடிந்தது உன்னைப் பார்த்தால் என் பாட்டியினுடைய உடலின் அடையாளங்களில் ஒன்றும் தவறாமல் உயரமும் அழகும் வயதும் சகலமுஞ் சரியாயிருக்கிறதைக் கண்டு எனக்குப் பொறுக்கமுடியாத துக்கம்வந்து உன்காலில் விழுந்து அழுதேனேயொழிய மற்றவைக்கல்ல நீ என்னுடைய வருத்தங்களையெல்லாம் முன் கண்ணினாற் கண்டு உன் கிருபையான கண்ணினாலே ஆதரவும் செய்யவேண்டும் அப்படி என்னைக் கைவிடாமல் அரவணைத்துக் கொண்டால் நான் உன் இஷ்டப்படி நடப்பவனாயிருப்பேன் இன்னம் உன் பேரால் என்னுயிரைச் சத்தஞ்செய்து விடுவேனென்று மிகவும் வணக்கமுடன் சொன்னான் அக்கிழவி இவன் சொல்லுகிற பேச்சுகள் முழுதுங்கேட்டு அனலைக்கண்டு மெழுகுபோல் மனமுருகி அப்போதத்தக்கிழவி ஓ வாலிபனாகிய தோழனே எனக்கும் இவ்வுலகில் ஒருவருமில்லை இன்றோடே நான் உனக்குப்பாட்டியாகவும் எனக்குநீ பேரனாகவும் பாவித்துக் கொண்டேன் நீ ஒன்றும் அஞ்ச வேண்டாம் உன் துக்கத்தையும் இன்றோடே மனதை விட்டு எடுத்தெறிந்து விடென்று சொன்னாள் அதைக்கேட்டு தாசுல்மூலுக்கு ஒபாட்டி நான் என்வயிற்றின்கொடுமைக்காக ஒருவரிடத்தில் சேவகத்திலிருக்கிறேன் அவர்களுடைய ஏவற்பணிவிடையின் வேலைகள் எந்தெந்த நேரத்தில் எப்படி எப்படி நேரிடுமோ அவைகளையெல்லாங் காத்துக்கொண்டிருந்து செய்ய என்பேரில் கடமையான படியினாலே நான் தினந்தோறும் தங்களுடையபாதம் பணியவா முடியாது எனக்கு வேலை தீருமாயின் எப்போதெப்போதோ ஒருதரம் வந்துன்னைக் காணுவேனென்று சொல்ல அதை யவள்கேட்டு இதற்கென்ன அப்படியேயாகட்டும் பாவாயில்லை போய்வாவென்று விடைகொடுத்தாள்.

அதன்பிறகு தாசுல் மூலுக்கு அவளிடத்திற்கு அந்தவிசனத்துடைய கடலில் மூழ்கி தில்பாவையை வெல்லவேண்டுமென்கிற கவுத்தின் எண்ணங் கொண்ட வருகவே போக்குவரத்தாக சில நாள் கழித்தனன் அதன் பின்பு இருக்கவிருக்க இருவருக்கு உயிரும் உடம்பும்போலும் சினேகிதமாய் விட்டது இப்படி நிகழுங்காலத்தில் ஒருநாள் தாசுல் மூலுக்கு சில ரூபாய்களை யெடுத்துக்கொண்டு அக்கிழவியினிடத்திற்குக் கொண்டுபோய் என்பாட்டியே இந்த ரூபாய்களை உன்னிடத்தில் வைத்துவை உனக்கு யாதொருவேலை வருமாயின் அப்போது இந்தப்பணத்தை உன் மனம் போற் செலவுசெய்துக் கொள்ளென்று சொல்ல அதைக் கேட்டு கிழவி என்னருமையாகிய பேரனே நான் இந்தப் பணத்தை வாங்கிவைத்து என்னசெய்வேன் அல்லாகுத்தஆலா எனக்கு என்வீட்டில் இன்னவை யில்லையென்கிறதாக வைக்காமல் அதிகபணத்தைக் கொடுத்திருக்கிறான் எனக்கு எதாவதொரு வேலைவந்து நேரிடுமாகில் அப்பணமுழுதும் உன்னுடைய சொத்தாகப் பாவித்து சந்தேகமில்லாமல் வேண்டுமட்டுமெடுத்துச் செலவுசெய்துக் கொள்ளென்றாள் அதைகேட்டுத் தாசுல் மூலுக்கு இவள் நமதுபேரில் நிறைந்த பூரணமான பக்ஷமுள்ளவளாயிருக்கிறாளென்று தெரிந்துக் கொண்டு வந்துவிட்டான் பின்னுமொரு நாட்சென்று அக்கிழவியுடன் அந்தந்த தேசங்களினுடைய சங்கதிகளைப் பேசிக்கொண்டேயிருவருஞ் சந்தோஷமாயிருக்குந்தருணத்தில் இதுதான் நல்லவேளையென்றெண்ணி அந்தப்பேச்சுடனே கலந்தாற்போலவே என்னுடைய பாட்டியே இந்நகரத்தில் இவ்வேசியுடன் பகடசாலை விளையாட ஒருவராலுமுடியாமல் போகின்றது என்னவிதமோ அதனுடைய சூக்ஷமேதாவது உனக்கு தெரியுமாவென்றுகேட்க அதற்குக்கிழவி என்பேரனே அந்தச்சேதியிருக்கிற நுட்பமுள்ளது பத்திரம் ஒருவருடனும் நீ இப்பேச்சைசொல்ல வேண்டாம் இப்பேச்சுஎங்கேயாவது வெளிப்படுமாகில் என்னை அவள் உயிரோடே வைக்காள் என்வீட்டினுள் வைக்காமலும் துரத்திப்போடுவாள் இதை ஒருவருடனும் மூச்சுவிடாதேயென்று கட்டுதிட்டஞ்செய்து பத்திரப் படுத்துவதைக் கேட்டு தாசுல்

மூலுக்கு அவ்தகரருல்லா இதென்ன பேச்சு நான் ஒரு
வருடனுஞ் சொல்லேனென்று சொல்ல அப்போது கிழவி
சொல்லத் தொடங்கினுள் என்பேரனே அவளொரு பூனை
யும் எலியும் வளர்த்து அதுக ளிரண்டிற்கும் பூனையின்
தலைமேல் விளக்கேற்றி வைக்கில் அதைக் கீழே விழவொ
ட்டாமல் வைத்திருக்கும் படியாகவும் எலியானது அவ்வி
ளக்கின் நிழலில் மறைவில் பதுங்கி உட்கார்ந் திருக்கும் படி
யும் அவள் மனத்தின்படி காய்கள் விழாவிடில் பூனையா
னது தலையை அசைக்கின்றது அப்போது அந்த நிழலி
ன் மறைவில் எலியானது அக்காய்களைச் சரியாமல் பவள்
கெலிக்கும் படியாகப் புட்டிவைக்கிறது இவ்விதமாக
அவளுக்குக் கற்பித்துவைத்துப் பகடசாலை விளையாடுகி
ருள் அதனுல் அவள் யாரிடத்திலும் தோற்காமல் அனே
கநாளாகத்தானே கெலித்துக்கொண்டுவருகிருள் அதனுல்
விளையாடப்பட்டவர்கள் தோற்றுப்போகின்றுர்களென்று
அவ்விதங்களிலொன்றுமறைக்காமற் சொல்லினுள் இவை
களையெல்லாம் தாசுல் மூலுக்கு காதுகொடுத்து அதே
கவனமாய்க்கேட்டு அவளிடத்தில் விடைபெற்றுக்கொண்
டு நேராகக் கடைவீதியினுவளா வந்து ஒருகிரிப்பிள்ளையி
னுடைய குட்டியை விலைக்குவாங்கி அதைத் தன்னிடத்
திற்குக் கொண்டுபோய் தன்னுடைய சொக்காயினுள்ளை
க்கப் பின்விரலைநொடித்தால் அதனுள்ளிருந்து குதித்து
வெளியேவருகிறது பின்னுங் கையை நொடித்தால் அக்
கையினுள்ளே நுழைந்துக்கொள்ளுகிறது இப்படி அத
ற்குச்சில நாளையில் பழக்கிவைத்தவன் பின்பு ஒரு நாள்
தாசுல் மூலுக்கு அக்கிழவியிடத்திற்குப் போய் என்
பாட்டியே நானிதுவரைக்குஞ் செய்த கூலிச்சேவகத்தை
விட்டுவிடுகிறேன் எனக்கு நீ ஆயிரரூபாய் கொடுத்தால்
அதை வைத்துக்கொண்டு நானொரு வியாபாரஞ்செய்ய
நாடுகிறேனென்று சொல்ல அதை கிழவிகேட்டு தன்னு
டைய வீட்டினுள் அழைத்துக்கொண்டுபோய் தன்வீட்
டைத் திறந்துவிட்டு இதனுள் புகுந்து உனக்குத் தேவை
யான மட்டும் பணத்தை யெடுத்துக் கொள்ளென்று உத்
திரவு கொடுத்தா ளப்போது தாசுல்மூலுக்கு ஆயிரரூபாய்
யெடுத்துக்கொண்டு வெளியேவந்து தன் அமீரிடத்திற்

குப் போய் மிகுந்த அன்புடனே கைகட்டி நின்று என்னுடைய இஷ்டனுக்கு மூன்றாமதினம் கலியாணமாகின்றது தானவ்விடம் போகவேண்டுமாயிருக்கின்றது அதற்காக தாங்கள் உடுமானந்தர வேண்டுமென்று கேட்டவுடனே அந்த அமீரானவர் தான் உடுத்திக்கொள்ளும் உடுமானங்களைக் கொடுத்து உனக்குவேண்டுமான குதிரையில் ஒரு குதிரையும் பிடித்துக்கொண்டு போவென்று உத்திரவு கொடுத்தனர்.

அப்போது தாசுல்முலுக்கு அதிக ஆபரணத்துடனே அதிகவேகமாகக்குதிரைமேலேறி அந்த தில்பரியின் வீட்டின் வாசற்படியினருகிற்போய் யாதொரு தடங்கலுமில்லாமல் உள்ளே நுழைந்துவருகிற ஆரவாரத்தைக் கண்டு அவள் முகம் வேறு நிறமாய் விட்டது. அப்போது அவள் எதிரோடிவந்தாள் அவளை பாதுஷாவின்மகன் கண்டு சொல்லத் தொடங்கினன் ஓ பெண்ணே நீ வெகுகாலமாயின் நகரத்திற்குவரும் முசாபர்களுடன் அதிக இஷ்டமுள்ளவளாயிருக்கிறாய் நானிப்பட்டணத்திலுள்ளவரில் நின்றவனாயிருக்க எப்போதும் என்னுடனீயேன் இஷ்டப்படவைக்கிறதில்லை இப்போது உன்னிடத்தில் ஏதாவதிருந்தால் உன்னுடைய இஷ்டன்முன்கொண்டுவாவென்று சொன்னதை அவள்கேட்டு உயர்ந்தமாணிக்கங்கள் பதித்த நாற்காலியொன்று கொண்டு வந்து போடச்சொல்லி அதன்மேல் உட்காரும்படி உத்திரவு கொடுக்கவும் தாசுல்முலுக்கு அந்த நாற்காலியின் பேரில் உட்காரவும் அவளும் ஒரு பக்கமாகக் கீழே உட்கார்ந்தாள் அந்நேரம் சூரியன் தன்னதிகாரத்தைச் செலுத்திவிட்டு மேற்குக் கடலில் குதித்து விட்டான் பின்பு சந்திரனும் வெளியே புறப்பட்டான் அப்போது தாசுல்முலுக்கு அவள் முகத்தைப்பார்த்து நீ பகடசாலே விளையாடுவதில் அதிக இச்சையையுள்ளவளென்கிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன் ஆகையால் நாமிருவரும் ஓராட்டமாடுவோமென்று சொன்னதைக்கேட்டு அவள் இவனுடனே விளையாட மனமில்லாதவளாயிருந்தாள் அப்போது தாசுல்முலுக்கு அவளைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினன்.

கொச்சகம்-இராகம்-தோடி.

கண்ணே மணியேயென் காயவிளக்குயிலே
பெண்ணே நவமணியே பேதலிக்கவேண்டாம்
எண்ணிலடங்காத ஏந்திழையேசிக்கிரமாய்
பண்ணிடத்தில்சூதாட மயங்காமற்கொண்டுவாராய்.

மயங்காதடிமானே விளையாடத் தியங்காதடி தேனே
மயங்கினாலும் விடேன் மயங்காவிடினும்விடேன்
தியங்கினாலும்விடேன் திறமாகவிளையாட மய
தேசத்தோர்களுடன் திறமாகவிளையாடும்
மோசத்தொழில்கள்தன்னை முழுதும் நானறிகுவேன் மய
இச்சையாயென்னுட னெதிர்முகமாகநீ
பட்சமுடனேபாசைப் பாங்குடனெடுத்துவா மய
தோப்புசெலிப்பையின்றி சொகுசாயறிந்துநாம்
பார்ப்போமிவ்வமயிலே பதருமலெடுத்துவா மய

வசனம்.

இவ்விதமாக இவன் சொன்னவைகளெல்லா மவள் கேட்டு நாம் உலகமெல்லாம் சொக்கட்டான் விளையாடுவதில் வல்லமையுள்ளவளென்று பெயர்பெற்று இப்போது விளையாடாமற்போவது மானக்கேடென்றெண்ணி உடனே அந்தப் பகடைக்காலையக்கொண்டுவரச்சொல்லிவிரித்துப் பூனையின்தலைமேல் தீபம்வைத்து ஒருலக்ஷம்ரூபாய் பந்தயம்வைத்துக்காயை உருட்டினார்கள் அப்போது தாசுல் மூலுக்குதெரிந்திருந்தேமுதலாட்டம்தோற்றுப்போனான் அவள் பூனை எலியினுடைய வல்லமையில் ஜெயித்துக் கொண்டனள் பின்னு மிரண்டாவதுதிரமும் பந்தயம் வைத்து ஆட்டமாடிக்கொண்டு வருகிற தருணத்தில் காய்கள் இவள் தோற்கும்படியாக விழுந்தது அப்போது அந்தப் பூனையானதுகண்டு தலையாட்டைக்கத்தொடங்கினது எலியானது அந்தக் காயை புரட்டினது எலியானது அந்தக்காயைப் புரட்டிவைக்கத் தயாராகயிருந்தது. அப்போதுதாசுல் மூலுக்கினுடைய கண்பார்வையெல்லாம் பூனையின்மேலும் அந்த விளக்கின் நிழலில் அந்தக்காய்களை எலி காயைப்புரட்ட எழுந்தது அதுகண்டு தாசுல்மூலுக்குதன்கைவிரல்களைத்தொடுக்கவும் அவ்தணிக்குள்ளிருந்த

கிரிப்பிள்ளை திடீலென்று மூன்கொட்டினாற்போல்குதித்து வெளியேவந்தது அதைக் கண்டவுடனே எலிபயந்தோடிப்போய்விட்டது பூனையுங் காபராப்பட்டுத் தலையிலிருந்த தீபத்தைக் கீழேதள்ளிவிட்டுக்காற்றுமறைந்து விட்டது அப்போது தாசுல்முலுக்கு அவன் முகத்தைப்பார்த்து உன்னிடத்தில் அளவற்றத் திரவியங்களிருந்தும் ஒரு குத்து விளக்குச்செய்துவைக்க முடியாமற் போய்விட்டதல்லவா வென்றுசொல்ல அதைக்கேட்டு அவள்வுடம்பு வேர்த்து வேர்த்து சலசலிவாய்விட்டது பின்பு அவளை ஒருகுத்துவிளக்குக்கொண்டுவந்து வைக்கச்சொல்லி பின்னுமாட்டம் ஆரம்பித்தார்கள் அவள் வாட்டத்தினால்சொல்லப்பட்டவர்கள் சொல்லுகிறார்கள் தாசுல்முலுக்குஅன்றைய இரவில் ஏழுகோடி ருபாய்ஜெயித்தனன் அதற்குள் பொழுது விடியுங்காலமாயிற்று அப்போது தாசுல்முலுக்கு சொன்னான் என்னுடைய எசமானன் சிற்றுண்டி உண்ணுக வேளையாய்விட்டது நான் இவ்வேளை போகாவிடில் மோசம்வந்து நேரிடுமென்றுசொல்லி எழுந்து நின்று இந்தப் பணங்களை எல்லாம் இன்றைய பொழுது வரைக்கும் உன்னிடத்தில்வைத்துவையென்று வாய்ச்சொல்லி அவள்வசம் விட்டுவிட்டு தன்னுடைய அமீரிடத்தில் ஆஜராயினான்.

விருத்தம்-இ-ம்-காம்போதி.

பணிவிடைவேலைசெய்யப் பார்த்திபனிடத்திலாகித்
துணிவுடன்வேலையெல்லாந்தோகைமேல்நினைவாயன்று
மணிகதிரொடுக்கிவெய்யோன் மேற்றிசைகடலுட்புக்க
அணிபரிமேலிவீரன் ஆக்கிரமாய்வருகின்றானே.

---

தரு-இ-ம்-மோகனம்.

முத்துஞமாய்ச்சொருகி மோகனமாலையிட்டு
கத்திகைவிற்பிடித்துக் கடுகவேவந்தான்
பட்டுகுல்லாயணிந்துப் பாங்காசருவந்துகட்டி
அஷ்டதிசையோர்கள்மெய்க்க அதட்டியேவந்தான்

மீசைமுறிக்கிக்கொண்டு விருதுமென்மேலாகக்கூறி
ஆசையுடன்விளையாட அன்புடன்வந்தான்

---

வசனம்.

இப்படி பொழுது மறையும்வரையிலும் அதேநினைவாகவிருந்து பொழுது அஸ்தமித்தவுடனே சீக்கிரமாகத் தன் குதிரையின்மேலேறிப் பெருங்காற்றின்விசையாக ஓட்டத்துடன் அவள் வீடுவந்துசேர்ந்தானப்போது அவள் அவன் வருவதைக்கண்டு கொஞ்சதூரமெதிர் சென்றழைத்துவந்து பொன்னினாற்செய்த நாற்காலியின் மேலுட்காரவைத்து உண்பன முதலியவைகளானதின் பின்பு ஒருகோடி ரூபாய் பந்தயஞ்செய்து விளையாடத் தொடங்கினார்கள் அப்போது சுமார் அவளுடைய கஜானாவில் ஆயிரங்கோடி ரூபாயிருந்தது அவ்வளவும் பாதியிரவிற்குள்ளே இருவரும் ஒன்றுக்கொன்று பகடைபந்தயத்தினால் அவள்பணமுழுதும் தோற்றுவிட்டாள். அப்போது தாசுல்மூலுக்கு அவள்முகத்தைப்பார்த்து என்சும்மாயிருக்கிறாயென அப்போது பின்னுமவள் தன் வீட்டிலுள்ள தட்டுமுட்டு முதலியவை யாதொன்றும் பாக்கியில்லாமல் பந்தயம்வைத்து விளையாடினார்கள் அதையும் தாசுல்மூலுக்கு கெலித்துக்கொண்டான். பின்னும் தாசுல்மூலுக்கு அவள் முகத்தைப்பார்த்து இனி உன்னிடத்திலுள்ளவை யாதொன்றுமிராமல் தோற்றுவிட்டாயே இனி மற்றயிரவை எவ்விதத்தினால்கெலிப்பிக்கிறாயென்று கேட்க அதற்கு யாதொன்றுமவள் சொல்லவில்லை அப்போது தாசுல்மூலுக்கு ஆனால் நல்லது இப்போது நீ ஒருகாரியம் செய்யறென்னவெனில் கிழக்குதேசத்தையாளும் பாதுஷாவினுடைய பிள்ளைகள் நாலுபேரையு மோசவிளையாட்டை விளையாடி அவர்களைக் கிடங்கிலடைத்திருக்கிறாயே அவர்கள்பேரில் ஒரு பந்தயம்போடுவோம் உன் பந்தயங்கெலிக்குமாகில் ஆயிரம் ரூபா யுனக்குத் தந்துவிடுகிறேன் அல்லது நான் கெலிப்பேனாகில் அந்நாள்வரையும்நான் ஆளாக்கிக் கொள்வேனென்று சொல்லி பந்தயஞ்செய்து பின்னும் விளையாடினார்கள். அவ்வாட்டத்தையும் தாசுல்மூலு

க்கே கெலித்துக்கொண்டான் அப்போது தில்பர்லக்தாசுல் மூலுக்கின் முகத்தைப்பார்த்து ஓ அழகுள்ள வாலிபனே இப்போதென்னிடத்தி லுள்ளவையெல்லாந் தோற்றுவிட்டேன் இனியிருப்பது என்னுடைய அதஷ்டமென்னும் விதியொன்றிருக்கிறது அதைக்குறித்து நாமிருவரும்விளையாடுவோம் இந்த ஆட்டத்தில் நீதோற்று விடுவாயாகில் நீ இப்போது எவ்வளவு கெலித்திருக்கிறாயோ அவ்வளவு மெனக்கு விட்டுவிடுகிறது அல்லது இப்பவும் நீயேகெலிப்பாயானால் நானுன்னுடைய தேவடியாளாகிவிடுகிறதென்று பந்தயம் வைத்து விளையாடுகையில் இவனுடைய நக்ஷத்திரம் அதஷ்டமான தால் அவ்வாட்டத்தையும் பேச்சுப் பேச்சுக்குள்ளவே கெலித்துக்கொண்டேன் அப்போதவள் சடாலென்றெழுந்து கைகட்டி யிருந்த அன்புடன் சொல்லுகின்றாள் என் பிராணசிநேகிதனாகியதல்ல அதிஷ்ட பாக்கியமுள்ள வாலிபனே அல்லாகுத்த ஆலாவினுடைய உதவியினாலேயும் என்னைக்கெலித்து உன்னுடையபாத்திகளிலொரு பாத்தியாக்கிக் கொண்டாய் ஆயினும் தங்கள் உலகத்தின் வேடிக்கைக்காகத் தம் அரசாக்ஷியைவிட்டு நகரந்தோறும் திரிந்துவப்பதை வீணாகக்கழிப்பதில் யாதொரு பிரயோசனமுமில்லை இன்னம் நீடூழி காலம் உயிரோடிருப்போமென்கிற எண்ணங்கொள்ள விடவுமில்லை ஆகையால் என்னைத் தாங்கள் மணம்புரிந்துக்கொள்ளவேண்டும் இன்னம்மற்றவையனைத்தச்சந்தோஷத்தில் நான் கழிக்கவேண்டுமென்றுசொல்ல அதைத்தாசுல் மூலுக்குகேட்டுச் சொல்லத்தொடங்கினான்.

---

கொச்சகம்-தரு-இ-ம்-புன்னாகவராளி.

கன்னல்மொழிமாதேயென் கண்மணியேபெண்மயிலே
மின்னுகலைதானணிந்த மோகினியேசொல்கிறேன்கேள்
இன்னமிதுவரைக்கும் என்னாலிவ்வேலையெல்லாம்
சொன்னபடியானதில்லை சொற்கிளியேயென்றானே.

---

மோகக்கடலில்மூழ்கினாலென்ன    பெண்ணேமயிலே
மூவர்களல்லோமுடிக்கவேண்டுமாம்    பெண்ணேமயிலே

போகநீக்கல்பெரியோர் நடத்தையாம் பெண்ணேமயிலே
பூரிப்பொருநாளும்நிலைக்காது பெண்ணேமயிலே
நினைத்தவேலையைமுடித்தாற்பலனுண்டு பெண்ணேமயி
நிலத்தின்வாழ்க்கைசதமல்லநமக்குப் பெண்ணேமயிலே
தனத்தைவிரும்பியினத்தைவிடலாமோ பெண்ணேமயி

---

வசனம்.

அடிபெண்ணே இவ்வேலை யிப்போ தென்னால்முடியாது அது ஏனெனில் எனக்கு ஒரு காரிய மலைபோல் வந்துநேரிட்டிருக்கிறது அது அல்லா சுபுகானகுவந்த ஆலாவினுடைய கிருபையின் உதவியைக்கொண்டு அவ்வேலைமுடியுமாகின் அகத்தியம் அப்போது நீ என்னுடைய பிராணசிநேகிதையாகுவாய் ஆனதால நீ இவ்வேளை உன்பேரில் தருமமாயிருக்கின்றது என்னெனில் பனிரண்டு வருஷம் வரைக்கும் என்னுடைய எதிர்வரவு பார்த்துக்கொண்டு நல்லநடப்பின் உடுமானமென்னும் வெட்கத்துடன் அல்லாசுபுகானுத்த ஆலாவினுடைய வணக்கத்திலிருக்கவேண்டும் இன்னம்உன்னுடைய இந்தகெட்டதொழிலை விட்டு கையைக்கழுவி துப்பரவாயிருக்க வேண்டுமென்று சொல்ல இவை யாவற்றையும் தில்பரிலக்கா கேட்டு என்னுடைய ஆசைக்கடலாகியதோப்பே உன்னுடைய வயதாகிய ஆசையென்னும் அரும்பு மலரவேயில்லை இன்னம் பெண்களுடைய வாடையென்னுங்காற்றும் உன்பேரில் இன்னம் விழவேயில்லை அப்படியிருக்க இவ்வயதுக்குள்ளே சகல இன்பமோகமாகிய கடலில் மூழ்கி கட்டிவிளையாடி இன்பிக்கும வயதை வீணாகத் தேசாந்தரத்தில்திரிந்து போக்கடித்து மனதைநெருப்பில் லெரிப்பதுபோல எரித்து என்னைவிட்டு நீ அகத்தியம் போகவேண்டிய காரியமென்ன அதை எனக்குத் தெரிவித்தால் உன்னுடன் நானும் கூடவே வருவேன் இல்லாவிடில் என்னுயிரும் உடலில் நில்லாது என்னுடைய பொழுதும் போகாது உனக்குப்பின் இவ்வீடும் எனக்குப் பந்தேகானவாயிருக்கும் அன்னமுதலிய பதார்த்தமும் சிங்காரிப்பு யாதொன்று மிராதென்று கட்டித்

திட்டமில்லாத சொற்களையெல்லாஞ் சொல்லக்கேட்டு தா
சுல்மூலுக்கு ஓ பெண்ணே இப்போது என்னுடைய
வரலாற்றைச் சொல்லுகிறேன் அதை நீ நன்றாகக் காது
கொடுத்துக் கேளென்று சொல்லத் தொடங்கினன் சேரு
ம்பெண்ணே கிழக்குத் தேசத்தில் சூரியகாந்தி யென்றொரு
பட்டணமுண்டு அப்பட்டணத்தை யாளும் சையினுல்
மூலுக்கென்றொரு பாதுஷாவுண்டு அவருடைய பிள்ளை
நான் என்பெயர் தாசுல்மூலுக்கு என்னுடைய தகப்பனு
க்கு இரண்டு கண்ணும் தெரியாமற் போயிற்று அதற்கு
வயித்தியர்கள் குலேபகாவலியின் புஷ்பத்தைக் கொண்டு
வந்தால் இக்கண்ணிற்கு மருந்துசெய்வோம் அக்கண்
ணும் விளங்கும் இல்லாவிடில் முடியாதென்று சொல்லி
ஞர்கள் அதற்காக என்னண்ணமார்கள் அப்புஷ்பங்கொ
ண்டுவருகிறதற்காக வெளிப்பட்டுவருகையில் அவர்கள்
உன்னுடைய தந்திர ஆட்டத்தில் அகப்பட்டுக்கொண்டா
ர்கள் நான் அவர்க்கூடவே அந்தபுஷ்பங் கொண்டுவரு
கிறதற்காக வெளிப்பட்டுவந்தே னவர்கள் உன்னிடத்தில்
சிக்கிக்கொண்டதை நானறிந்து உன்னுடைய மோசவித்
தைகளெல்லாந் தெரிந்துக்கொண்டு உன்னுடன் விளை
யாடி உன்னையுமவர்களையுங் கெலித்தேன் இப்போது
இனிமேல் நாம இவ்விடத்தில் இருக்கக்கூடாது நானந்
தப் புஷ்பம் மெவ்விடத்தி லிருக்கின்றதோ அதைக்கண்டு
தேடிக்கொண்டு வரப்போகிறே னந்தப்புஷ்பம் என்கை
யிலகப்படுமாகில் திரும்பிவருவேன் இல்லாவிடில் அது
அகப்பட எத்தனைவருஷஞ் சென்றபோதிலும் அதெவ்
விடத்தி லிருக்கின்றதோ அதுவரைக்கும் போவே னப்
படி அந்தப்புஷ்ப மிருக்கிறவிடந் தெரிந்து அது என்
கையி லகப்படாவிடில் மறுபடியும் இவ்வழியே திரும்
பேன் பின்பு அதை நீயே யறிந்துக்கொள்ளவேண்டும்
நான் பிழைத்திருந்தால் வருவேனென் றுசொல்ல இவை
களையெல்லாம் இவ்பரி கேட்டுச் சொல்லுகின்றாள்.

அகவல்-இ-ம்-சண்டா.

சந்திரன்போலத் தானுருக்கொண்ட
சுந்தரமிகுந்த சூ[illegible]சேகரியே
இப்புவிதன்னி லுந்த னுக்கிணையா
யொப்புகள்சொல்ல ஒருவருமில்லை
வலியில்வினையில் விளையாட்டதனில்
புலிபோலொத்தப் புண்ணியவாளா
என்முறைப்போ லிசைந்தது கேட்டாய்
நன்மொழியதற்கு நவில்குவேன்கேளும்.

வசனம்.

ஓ பாதுஷா இதென்ன முடியாதகாரியமாகிய நினை
வை மனதினுள் கொண்டாள் இன்னம் சந்தேகங்கொள்
ளப்பட்ட வார்த்தைகளையும் தங்கள்வாயினா லெடுத்துரை
த்தாய் கொஞ்சம் வேலைக்காக மலையைக்கெல்லி எலிபிடிப்
பதுபோல் வானத்திற் சந்திரனிடத்திலிருக்கும் மானைப
பூமியிலுள்ள புலிமிரட்டுவதுபோல நினைத்தாய் அவ்வி
டத்திற்குப்போக பறக்கிறபருந்திற்கு முடியாதே அது
தங்களால் எப்படிமுடியும் அந்த பகாவலிமரியினுடைய
பாதுஷாவின் மகளொருத்தியிருக்கிறாள். அவளுடைய
தோட்டத்தினுள் அந்தப் புஷ்பமுண்டாகிறது அந்தத்
தோட்டத்திற்கு நாலுபுறமும் சுவரிருக்கின்றது அந்தச்
சுவற்றின் உயரமானது சூரியனுடைய காந்தியானது
வெய்யல் காந்தியானது வெய்யலே விழுகிறதில்லை அந்
தப் புஷ்பத்திற்கு காவலாக ஆயிரம் தேவுகள் சுற்றிலும்
காவலாயிருக்கின்றதுகள் அதனுள் காற்றுப்புகுதவும்
இடமில்லை அக்குளத்தை சுற்றிலும் பரிகளுடைய காவல்
களாயிருக்கின்றது அத்தோட்டத்தின்மேல் பருந்துமுத
லிய பறவைகளும் பறக்கிறதில்லை இதுவுந்தவிர அந்தப்
பூமியின்மேல் பாம்புகளும் தேள்களும் இடமில்லாமல்
நெருங்கியிருக்கின்றது அவைகளும் அப்புஷ்பத்திற்குக்
காவலாயிருக்கின்றது அந்த வழியாகப்போய் அதனரு
கிற்சேரவும் ஒருவராலுமுடியாது இன்னம் பூமியினுள்
எத்தனையோ ஆயிரம் எலிகளுடன் எலி அரசனும் வெகு
பத்திரமாக இரவும் பகலும் காவலாயிருக்கின்றது அல்

லது பூமியினுள் சுரங்கம் வைத்துப் போவதற்குங்கூடா து அவ்விடத்திற்கு எறும்பு போகக்கூடாமையான இட மென்று அறிந்துகொள்ளும் அப்படிப்பட்ட விடத்திற் குப்போக ஒருவராலும் புதவா ஒரு துவஷாவே என்னை வேதனையினுள் போட்டுவிட வேண்டும் குருஆனில் அல்லாகுத்தஆலா திருவுளமானது உள்ளங்கையைப் போடவேண்டாம் ஹல்லாக்கின்பறமென்றும் இன்னம் வலாதி அவர்களும் சொல்லியிருக்கிறார்கள் அவனுடைய விதிமுடியாமல் ஒருவரும் மவுத்தாகிறதில்லை. ஆனல் தெரிந்திரும் பாம்பின்வாயினுள் போகலாமாவென்ற னள் அதற்குத் தாசுல்முலுக்கு ஓபெண்ணே அல்லா குத்தஆலா இபுருஹீம கலீலுல்லாவை நமூறாதுபோ ட்டயிடங் கண்ணினெறுப்பை பூந்தோட்ட மாக்கிவிட வில்லையா நானே ஆசையினல் உறுதிப்பாடுள்ளவனுகை வும் என்னுடைய நாட்டமும் சரியுள்ளவையிருந்தால் அகத்தியமாக என்னுடைய நாட்டத்தின் கோரிக்கைப் படி முடியும் தோஸ்தியே கிருபையுள்ளவனும்விட்டால் பகைவனுவென்னமுடியும் அப்படி நான் குள்ளயாயிருக் கிலேனென்று நீ எண்ணங்கொள்ளாதே மனிதரின் குல ம் உருவினுல் சிறியவர்களா யிருந்தும் அறிவு யோசனை களில் வெகு ஜாக்கிரதையுள்ளவர்களா யிருப்பார்கள் தேவு பரிகள் பெரும்படைப்பா யிருந்தும் இவர்களுடைய மாயவலையில் அகப்பட்டுக் கொல்லுகிருர்கள். அதெப் படியெனில் அல்லாகுத்தஆலா குருஆனில் அகத்திமாக ஆதமுடைய மக்களுக்கு நான் அதிக பெருமையைக் கொடுத்திருக்கிறேன் மென்று திருவுளமானபடி ஒருகதை யை அவளுக்குச் சொல்லத் தொடங்கினர்.

---

மூன்றாவதுகதை,

பிராமணனுக்கும் புலிக்கும் நடந்த விபரம்.

வசனம்.

கேளும் பெண்ணே ஒருநாள் ஒருபிராமணனான வன் காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருந்தான் அவ் வழியில் ஒருகூட்டில் ஒரு பெரும்புலியை வலியகயிற்றி னல் பிணித்து அடைத்துவைத்திருந்தது அப்புலியான

து அவ்வழியாகப்போகிற பிராமணனைக் கண்டு அதிக ஆங்காரத்துடனே கூப்பிட்டு அவனுடன் மிருந்த அன்பினோடு அவன்மன மிரங்கும்படியான வார்த்தைகளெல்லாஞ்சொல்லிக் கெஞ்சிக்கெஞ்சி அழுவதைப்பார்த்து அப்பிராமணன் இது சிவவதைசெய்துசெய்யும்படியான சிவனுச்சுதே யென் றெண்ணுபல் தன்னறிவு மயங்கிப் புத்திபைப்போக்கடித்து அதனுடைய கெஞ்சு தலையினுல் அக்கூட்டைத்திறந்து அக்கட்டுகளையும் அவிழ்த்து விட்டான் உடனே அப்புலியானது அவன் தொண்டையைக் கடித்துத் தூக்கித் தன்முதுகின்மேல் போட்டுக்கொண்டு அக்கூட்டைவிட்டு வெளியிற்புறப்பட்டது நன்மை செய்ய தீமைவிழைத்ததென்ற பழமொழியை அன்றைய தினம் பிராமணன் அப்புலியினிடத்திற் கண்டு ஒபுலிராஜனே நான் உன்னுடைய வருத்தத்தைக் கண்டு உனக்கு நன்றி செய்ததற்கு நீ யென்னைத் தீமைசெய்வது தகுதியல்லவேயென்றுசொல்ல அதற்கு அப்புலியானது எங்கள் சாதியின்குணம் நன்மைசெய்தவர்களுக்குத் தீமையைச்செய்வது தகுதியான படியினுலே எனக்கு உன்னை வதைசெய்வது தகுதியானதா யிருக்கிறதென்று சொல்லியது அதற்கு அவன் இது ஞாயமல்லவேயென்று சொல்லப் பின்பு அப்புலியானது இன்னம் இந்த ஞாயத்தை வேற்று மனிதர்களைக் கேட்போம் வாவென்று அவனை விடாமல் தோளின்மேல் போட்டுக்கொண்டு போகையில் ஒரு ஆலமர மெதிரில் எதிர்க்கப்பட்டது இம்மரத்திற்குப் போய்ச்சொல்வோம் அம்மரம் நமக்கு எப்படித் தீர்மானங் கொடுக்கின்றதோ அப்படிக் கேட்டுக்கொள்வோமென்று அம்மரத்திற்குச்சொன்னது அதை அம்மரமானது கேட்டு மெய்தான் இம்மனிதர் கூட்டத்திற்கு ஒரு நன்மையுமில்லை எப்படி எனில் கால்கள் கொப்பளிக்க மேலில் வெய்யலினுல் வேர்வைகள் கொப்பளிக்க ஹாஹாவென்று சொல்லி ஓடோடியும் என்னிழலில் உட்காருகிருர்கள் நான் அவர்களுக்கு நிழலைத் தருகிறேன் அதன் பின்பு எழுந்து போகையில் என்னில் நின்றும் ஒருகிளையை பெடுத்து வெய்யலுக்கு மறைத்துக் கொள்ளுகிருர்கள் சிலர் என்னைப் பல வேலைகளுஞ் செய்கிருர்கள் அவ

ர்கள் நமக்கு நிழலைக் கொடுக்கிற மரமாச்சுதே என்றெண்ணாமல் தன்மைசெய்ததற்கு தீமை செய்கிறார்களோ அதுபோலத்தான் தின்றுவிடுமென்று சொன்னது அப்போது அப்புலியானது பிராமணனைப்பார்த்து இப்போது நீ என்ன சொல்லுகிறாய் சொல் லென்று கேட்க அதற்குப் பிராமணன் இன்னம் விசாரிக்கவேண்டு மென்றனன் புலி அப்படியே யாகட்டுமென்று இருவரும் அம்மரத்தைவிட்டுக் கொடிவழியாகப் புறப்பட்டு இராஜபாட்டையில் வந்து சேர்ந்தார்கள் அப்போது அப்புலியானது அந்த ராஜபாட்டைப்பார்த்துத் தன் சங்கதிமுழுதுஞ் சொல்லினது அதை அவ்வழியானதுகேட்டு நல்லது நானென்றுசொல்லுகிறேன் அதை நீங்களிருவருங் கேளுங்கள் அதன் பின்பு தீர்ப்புக் கொடுக்கிறேனென்று சொல்லி ஓ புலியே மனிதர்கள் வழிதடுமாறி சிறுவழியி லகப்பட்டுத் தட்டுக்கெட்டுத் தடுமாறி மயங்குஞ் சமயத்துத் தாங்கள் நாடி வந்த விடத்திற்கு யாதொரு வருத்தமுமின்றி போய்ச் சேருகிறார்கள் அப்படியிருக்க இவ்வழி நம்மை சுகம் பெறவைத்ததென் றெண்ணாமல் என்மார்பேலாக மலசலஞ்செய்துவிடுகிற நன்றியற்ற மனிதர்களுக்கு ஒருஉதவியுமிடா உன்னிஷ்டத்தின்படியே முடித்துக்கொள்ளென்று சொல்லினது அதைப்புலிகேட்டு ஓபிராமணா இப்போதென்ன சொல்லுகிறாய் சொல்லென்றுகேட்க அதற்குப் பிராமணன் முக்காலுங்கேட்டு உன்னுடைய இஷ்டத்தின்படியேசெய்துவிடென்று சொல்ல அதற்கும் புலி சம்மதித்து அப்படியே ஆகட்டுமென்று அவ்விடம்விட்டு இருவரும் போகையில் பிராமணன் தனக்குள்தானே புலம்பலாயினன் எப்படி எனில்.

விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அலைகடலுதித்திட்டாலும் அப்புவியாண்டிட்டாலும்
மலையினிற்பிறந்திட்டாலும் மண்ணினிலுதித்திட்டாலும்
நிலையில்லாவுலகின்வாழ்வு நிமிஷத்திலற்றுப்போகும்
தலைவிதிதப்பாது சகத்தினிற்பிறந்தபேர்க்கே.

தரு-இ-ம்-கண்டா.

தலையினெழுத்தொரு நாளுந்தப்பாதையோவிதியேஇப்
போ, புலிவாயின்சிக்கினேன் புலம்பியழலானேன்விதியே

பெண்டுபிள்ளையெல்லாம் நின்றுதவிப்பாரேவிதியேஎன்னைத், துண்டுதுண்டாய்ப்புலியென்றுவிழுங்குமேவிதியே மக்கள்மனைவியாள் அக்கம்பக்கமுள்ளோர்விதியேஎன்னால் துக்கப்பட்டமூவாகளிக்கட்டுக் கென்செய்வேன்விதியே வழியாய்ப்போனயான் பழியைச்சுமந்தேனேவிதியே இந்த, மொழியையாருடன்சொல்லி முறையிட்டுக்கொள்ளுவேன்விதியே,

வசனம்.

இந்தபடி புலம்பிக்கொண்டு போகையில் அங்கோரிடத்தில் ஒரு மேட்டின்மேல் நரியொன்று உட்கார்ந்துக்கொண்டிருக்கக்கண்டு அந்த நரியின் அருகிற்போய் புலியானது ஓ நரியே, என் னுடைய மனுவைக் கேட்டுத் தீர்ப்புக் கொடுவென்றுசொல்லவும் அதற்கு நரியானது ஓ புலிராசனே உன்னைப் பார்க்கச்சே என்னுடைய தேற்பமெல்லாங் கிடுகிடென்று அதறுகின்றதே நான் எப்படி கேட்பேன் ஆனால் நீ தூரமாகவே யிருந்துசொல்லினால் கேட்க என்னாலாகுமென்று சொல்ல அதற்குப் புலியானது தூரமேநின்று ஓநரியே இந்தப் பிராமணன் எனக்கு நன்மைசெய்தான் அதற்குப் பதிலாக நான் தீமைசெய்ய நாடினேன் அப்படிச்செய்வது தகுமோ தகாதா தீர்மானம் கொடுக்க வேண்டுமென்று சொல்ல அதை நரியானது கேட்டு ஓ புலிராசனே நீசொல்வது என்னுடைய மனதினுள் பொருந்தவேயில்லை ஏனெனில் தாங்கள் சகலநாற்கால் சீவன்களுக்கெல்லாம் அரசன் வல்லமையிலும் மிகுந்தவன் உன்னுடனெதிர்க்க ஒருவராலும் முடியாத பலமுள்ளவன் இன்னம் உன்னை யாராகிலும் கண்ணிற் காண்பார்களாகில் மேலெல்லாம் கிடுகிடென்றதிரவும் வேர்வைகள் சிக்கவும் செய்யப்பட்ட குரூரமுள்ளவனுனபடியினாலே இந்த எளிய வல்லமையில்லாதவன் தங்களை விடுவித்தானென்று சொலவது என்மனதிற்கு நிசப்படவில்லை ஆனால் நான் என்னுடைய கண்ணினாலே காணபேனாகில் அப்போது நீசங்கொள்வேனே யொழிய இப்போது நான் உன் பேச்சைக்கேட்டு தீர்மானங் கொடுக்கமாட்டேனென்றுசொல்ல அதைப்புலியானது கேட்டுநல்லது நீ சொன்னபடியே உன்கண்ணில் காண்பிக்கிறேன் வா

வென்றுசொல்லிப் புலியும் பிராமணனும் நரிபின்னுமாக அவ்விடம் போய்ச் சேர்ந்தார்கள் அப்போது புலியானது நரியைப்பார்த்து நானிந்தக் கூட்டாளிகள்கூட அடைப்பட்டிருந்தேன் என்னை இவன்வந்து அவிழ்த்துவிட்டானென்று சொல்ல அதை நரிகேட்டு ஆஆ இதென்ன புதுமை தாங்கள் சரீரம் பெரிதாகவிருக்கின்றது இதற்குள்ளே தாங்கள் எப்படியிருந்தீர்கள் அதைக் காண்பியுமென்று சொல்ல அப்போது புலியானது அக்கூட்டினுள்போய் நுழைந்துக்கொண்டது பின்னும் நரியானது எப்படி கட்டுப்பட்டிருந்தாயோ அதையும் நான் பார்த்துத்தீர்ப்புச்சொல்வேனென்றுசொல்லி ஓ பிராமணா முன்னால் அதை எப்படி கட்டியிருந்ததோ அப்படியே கட்டு பார்க்கிறேனென்று சொல்லப் பிராமணன் அக்கூட்டினுள் நுழைந்து முன்னால் எப்படியிருந்ததோ அப்படி அந்தந்த இடங்களிலெல்லாம் கட்டிக்கொண்டிருக்கையில் நரியானது ஓ பிராமணா நீ அப்புலியை முன்னால் எப்படி கட்டியிருந்ததோ அப்படி நீ கட்டாமல் உரசமாகவும் தளர்ச்சலாகவும் கட்டுவையேயானால் நானிஜங்கொள்ளமாட்டேனென்று சொல்ல அதை புலிகேட்டு ஆஆ இப்படிப்பட்ட ஞாயமுள்ளவர்கள் யாருமில்லையென்று எண்ணங்கொண்டிருந்தது அப்போது அந்தப் பிராமணன் புலியைக்கட்டி உள்ளடைத்துவிட்டு வெளியே வந்துவிட்டானப்போது நரி பிராமணனைப்பார்த்து அடா அறிவுகெட்ட பிராமணா அடா நீயே உன் தலையில் கல்லைப் போட்டுக்கொள்ளச் சம்மதித்தாயே அடா பயித்தியக்காரா இதுவே பலவுயிரையும் வதைசெய்கின்றபுலி அதற்கு நன்றியுமுண்டா அல்லது இன்னார் நமக்கு நன்றி செய்தவர்களாச்சுதே யென்று எண்ணமுண்டா மிவைகளிடத்திலுண்டா அப்படியிருக்க நீ யெவ்விதத்தினால் அதனுடைய கால்கட்டை யவிழ்த்து அதைவெளிப்படுத்தினாய் சீசீ புத்திகெட்டவனே நீவந்தவழியே பிடித்துக்கொண்டோடிவாய் பிழைபடாவென்று சொல்லிவிட்டுப் போய்விட்டது அப்பிராமணனும் நரியால் பிழைத்தேனென்று சந்தோஷமாகப் போய்விட்டான் புலியும் அக்கூட்டிலடைபட்டுவிட்டது.

அப்படிப்போலே என் உடப்பிறப் பானோர்களே இவ்வுடலென்னும் கூட்டில் உயிரென்னும்புலி சபா தவக்கலென்னுங் கயிற்றினால் கட்டியிருப்பதால் அதை நீ அவிழ்த்துவிட்டால் நேர்வழி காட்டும் ஹிலுறுநபியினால் மீந்தால்மீனுவா யில்லாவிடிலுன்னை ஒரேவாயில் போட்டுக்கொள்ளும் ஓபெண்களே உடலினுடைய வல்லமையிலும் உயிரினுடைய வல்லமை பெரிதென்றும் அறிந்துக்கொள்வதற்காக இக்கதையை உனக்குச்சொன்னேன் ஆனால் நீஇப்படிச்செய்யவேணும் அது என்னவெனில் கிழக்குதேசத்தி லிருந்துவந்து நான்கு பெயர் உன்னுடன் விளையாடினார்களே அவர்களை உன்னுடைய மோசமாகிய ஆட்டங்களை அவர்களுடன்விளையாடி அவர்களையும் சேனைகளையும் அவர்கள பணங்களையும் கெலித்துக்கொண்டு அவர்கள் நான்கு பெயரையும் சிறைச்சாலையில் அடைத்துவைத் திருக்கிறேயே அவர்கள் நான்கு பெயர்களைமாத்திரம் நீ விடுதலைச் செய்துவிடு உன்னை அல்லாகுத் தஆலா நரகத்தின் வேதனைகளைக் கொண்டு விலைதலைக் செய்வானென்று சொல்லினான். என்னை அல்லா சுபுகானுகுவத்தஆலா அவ்வளவுதூரம் வரைக்குங் கொண்டுபோய் என்னுட்டத்தையும் நிறைவேற்றி அப்பூவுங்கிடைத்து மறுபடியும் திரும்பி நான் உன்னிடத்திற்கு வருந்தனிலும் அவர்களைவிடாமல் அவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுத்து வெகு பத்திரமாக வைத்திருவென்று சொல்லக்கேட்டு கண்ணில் கண்ணீரைவிட்டுச் சொல்லத்தொடங்கினாள்.

விருத்தம்-இ-ம்-லேம்புரி.

மண்ணின்மேலென்னைவிட்டு மறுதேசம்போகநெஞ்சில்
எண்ணி நீர்முன்னான்செய்த எழுத்திலின் வினைபோயாது
புண்ணின்மேல்மருந்திட்டாப்போல்பூவைபர்க்குரைத்தா
யிந்தப், பெண்ணின்போல்பிறக்கலாகா புண்ணென்றாள்
கண்ணென்றாளே.

தரு-இ-ம்-லோம்புரி.

என்னைவிட்டுநீபிரிய என்னமாமனந்கொண்டின்றோ
உன்னைவிட்டுநான்பிரிந்து உயிரைவைத்திருப்பனோதான்

மன்னவா மனந்துணிந்து மருதேசம் நீபோகலாமோ
மின்னியாள் பலங்களங்க காட்டினில் நடக்கலாமோ

தியிலிட்டாப்போலென்னைத் தியங்கவைத்தல் தருமமோதான்-நாயினுங்கடைக்கேடானேன் நாயகானென்னசெய்வேன்-கண்மணியுன்னைக் காணாமல்நான் காசினியிலிருப்பதில்லை-பெண்ணிலென்னைப்போலபாவிபிறக்கலாகாதிவ்வுலகில் ஆணாய்ப்பிறந்தபேர்க்கு ஆத்திரப்படுகலாமா. வாணாவாணாய்ப்போகவேண்டா மன்னவனேயென்றுசொன்னாள்

---

நாலாவதுகதை,

தாசுல்முலுக்கு குலேபகாவலியினுடைய

எல்லைப்பூமியினுள்

ஒரு தேவியினிடத்தில் அகப்பட்டுக்கொண்ட விபரம்.

வசனம்.

ஓ மனிதர்களே இக்கதையானது மிகுந்த யின்பமும் ருசிகரமு முள்ளவையா யிருப்பதைச் சொல்லத் துவக்கிய விபரமாவது தாசுல்முலுக்கு தன்னுடைய சுயரூபத்தை மாற்றி வேற்றுருவாகச் சந்நியாசியைப்போல மாற்றுருவெடுத்து அல்லா சுபுகான குவத்தஆலாவை நினைத்து அவன் புகழைச் சொல்லிக்கொண்டு வெகுதிடச்சித்தனாக வெளிப்பட்டுப்போகையில்வனமும் வனந்திரங்களுமனேகமெதிர்ப்பட்டது தாசுல்முலுக்கு அவைகளையெல்லாந் தாண்டி நடந்துபோகையில ஒரு இருண்டகாடானது மரங்கள் நெருங்கி யிலைகள் தழைத்துச் செழித்தவனமாஎதிரானது அதனுட்சென்றுநடக்கையில் அந்தச்சோலையின் நெருங்கிய இலைகளினிருட்டில் வானத்தின் நட்சத்திரவொளியேயொழிய மற்ற யாதொரு வெளிச்சங்களுங்கிடையாது அப்படிப்பட்ட காட்டில் அவ்வெளிச்சத்தினுதாவினாலே அனேகதூரம் நடந்து அவ்விருளின் வெளிச்சத்திற போய்க்கொண்டு தன்மனதிற்குத் தானே அனேகவித தைரியங்களாகிய செய்கைகளைத் தன்னுற்றுனே சொல்லுவான் எப்படியெனில் ஓமனமே நீ துக்கவருத்தமாகிய சமுத்திரத்தில் மூழ்கிவிட்டாய உனக்கு எந்தப் புறமும்

சமூத்திரமாகவேயிருக்கின்றது இப்போது விழுந்தவருந் தம் சமுத்திரத்தில் இனிமேல்விழமாட்டாய் ஆனால் இது சமயத்தில் நீ தைரியத்தைவிட வேண்டாம் இவ்வேளை தைரியமுள்ளவனேத்தான் மனந்துணிந்தவனுக்குச்சமுத்திர முழங்காலளவென்று சொல்லும் பழமொழிபோல் நீ இவ்வேளை நீ தைரியத்துடன் நடந்துபோ அல்லாகுத்த ஆலா என்னென்னமாய் விடுகிறுனே அவைகளைத் தன் மனதிற்குச்சொல்லிப் பின்னும் சமுத்திரத்திலிருக்கின்ற சிப்பிமுத்தை யெடுக்கிறதற்குச் சமுத்திரத்தினுள் முழுகுவது எப்படியென்று பயப்படுவானேயானால் அவனுக்கு அம்முத்து கிடைக்கமாட்டாது அப்படி நீயும் வருத்தத்தில் மூழ்காவிட்டால் உனக்கு நீ நினைத்துவந்தவை முடியாது அதுவும் உன் கைவசமாகாதென்றுசொல்லி புலம்பிக்கொண்டே அவ்விருண்ட ஓரிடத்தில் உட்கார்ந்துவிட்டான்.

விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

மெலிவுடநடந்துகுன்றிமேனியில்வேர்வைசிந்தப்
பலபலவிசனமுற்றுப் படைத்தவன்றன்னைநாடி
நிலமிசைபெருமூச்சிட்டு நெட்டுயிர்பொங்கிநின்று
புவி லங்குறைந்துமன்னன் புலம்பியேகலங்கினனே.

தரு-இ-ம்-ஆகிரி.

ஆலமெல்லாந்தானமைத்து ஆளுகின்றவல்லவனே
காலமெல்லாங்காக்கவேணும் கடவுளேசோதிதேவா
அன்னைதந்தையில்லானே நீ ஆதியோயளவில்லானே
உன்னையன்றியாருமில்லை உதவிசெய்யஎந்நாளும்
அடியாருன்னைக்கேட்பதெல்லாம் அளிக்குகின்றவல்லவனே-மிடியில்நொந்துவருத்தமாகி வேதனைக்குள்சிக்கினேனே-தீக்கிடு தீவினைகளெல்லாம் தெடியவனேகிருபைசெய்வாய் வாக்கொடுமனமொன்றாக வல்லவனேயென்றுசொல்லி-துக்கமிகவாகியன்று து ஆவேகேட்டானிறையிடத்தில் அக்கணுடஉதவிதன்னால் அபத்தைக்கார்த்திட்டானல்லா

வசனம்.

பின்பு அவிடம்விட்டெ ழுந்துபோகையில் முன்னும்
பின்னுமாக அடிவையெடுத்து வைப்பானாகில் ஒவ்வோரடி
க்குக் காலில் கொத்துக்கொத்தாக முள்ளுதைக்கும் அத
னால் அடிக்கடி ஆஆ வென்று பெருமூச்சுவிட்டுக்கொண்
டு அப்புறம்போகையில் அங்கே காவனமெதிர்ப்பட்டது
அதனுள் உயிர்வதை செய்கின்ற சடி புலிகளும்ஓநாய
செந்நாய்களுமான கொடூர வருத்தத்தைத் தருகின்றவன
த்தையுங் கண்டுநடந்து அப்புறம்போகையில் ஒருஅதிக
விருளாகிய வனமொன்று எதிர்ப்பட்டது அவ்வனத்தினி
ருட்டில் சூரியனுடைய ஒளிவுமழுங்கிப்போகும் அப்படிப்
பட்ட வனத்தையுங் கண்டு அப்புறம் போகையில் அங்
கோர்வனமெதிர்ப்பட்டது அதனுள் பெரிய வீட்டில்குடி
யில்லாமல் ஓடிப்போன வீட்டின் வாசற்படி எப்படிதிறந்
திருக்குமோ அப்படிபோல உயர்ந்த பெருமலைப்போலப்
பாம்புகள் வாயைத்திறந்துக் கொண்டிருந்ததுகள் இன்ன
ம் நகரத்தினுடைய வேதனை தவிர வேறே யொருவருத்த
மும் அப்பாம்பின் விஷத்திற்குச் சரியான சூடு யாதொன்
றுமில்லை அப்படிப்பட்ட சூடாகிய வனமாயிருந்தது
இன்னம் இவ்வனத்தின் பாம்பின் விஷந்தவிரகுடிக்கஒரு
துளி நீருங் கிடையாது இப்படிப்பட்ட கொடூர வனங்க
ளெல்லாம் ஒருவாரம் வரைக்குஞ் சுற்றிச்சுற்றி நடந்துவந்
ததினால் எப்போதும் பூமியின்மேலே நடவாத பாதுஷா
வினுடைய பிள்ளையானபடியினாலே இந்த தாசுல் மூலுக்
கினுடைய யிரண்டுகால்களுங் கொப்பளித்து அடியெடுத்
துவைக்க முடியாமல் சரீரமெல்லா மிளைத்துத் தளர்ந்து
மெலிந்து குன்றி உருக்கள்தோறும் உதிரங் கொப்பளிக்கு
ம்படியாகப் பூப்போன்றமேனியானது வாடவும் மனந்
தண்ணீரைத்தேடவும் இப்படிப்பட்ட வருத்தங்களையெ
ல்லாம் தலையேறிக்கொண்டு அக்காடுவழியெல்லாந் தொ
லைத்து அல்லாருத்த ஆலாவின்பேரில் சுக்கூருஞ்செய்து
சிசுதாவும்செய்து பலவித மன்னிப்புஞ்செய்து அவ்விட
ம்விட்டு முன்னேக்கிநடக்கையில் அவ்விடத்தில ஒரு பெ

ரிய மலைப்போல் தேவானது எதிரில் உட்கார்ந்துக்கொண்டிருக்க கண்ணிற் றெரியலாயிற்று.

---

விருத்தம்—இ-ம்-கலியாணி.

கருமலைப்போலகண்ணில் காணவுமரசன்மைந்தன்
பெருமலையிதுவென்றெண்ணிப் பெருமுடன்முன்னமாக
ஒருமலையிதறகொவ்வாது உலகினிலில்லையென்று
திருமலையென்னக்கிட்டே சென்றனனன்றியோனே.

---

தரு-இ-ம்-சங்கராபரணம்.

தனனதனதனன

பெருத்தமலையைப்போல தேவது
பேசாமல்வாய்திறந்துகூசாமலே
ஒருத்தரைமதியாமல் வீரியமாய்
ஓங்காரங்கொண்டுவெகுஆங்காரமாய்
இருவிழிநெருப்பெரிய மிரட்டிட
உருக்கிக்கொண்டுகொம்புகள் முறுக்கிக்கொண்டு
பெருவால்தனைத்திறந்து பற்களெல்லாம்
பொருந்தவாச்சியைப்போலவுறுத்தெரிய
மலைபோற்றலைதெரிய மனிதர்கள்
மயங்கிப்பார்த்தவுடன் தியங்கிடவே
நிலையாமுதற்காவல் ஆகிடவே
நின்றதன்று பூத லொன்றுங்காவலாய்

வசனம்.

அப்போது தாசுல்முலுக்கு இது ஒரு மலையென்றதாக எண்ணிக்கிட்ட நெருங்கையில் அவனைக்கண்டு அந்த தேவானது ஒரு பெரியமலை யெழுந்தாப்போல் எழுந்து நின்று கோபத்துடனே ஒரு கோடையிடியிடித்தாற்போல் ஒருசத்தமிட்டு என்னைப்படைத்த நாயகனே, இத்தனளியவனுக்கா இப்படிப்பட்ட அழகாகிய நியாயத்தை நானி

ருந்தவிடத்திற்கே கொண்டுவந்து கொடுத்தாயேயென்று அதன் மனதில் அதிக சந்தோஷமாகி மிகுந்த பூரிப்புடனே அல்லாருத்த ஆலாவைப் புகழ்ந்து அந்தத் தாசுல்முலுக்கின் எதிரில்வந்து நின்று இடிப்போல ஒருசத்தமிட்டு ஓமனிதனே நீ உன்னுடைய தேசத்தில் உயிரோடு வாழ்ந்திருக்காமல் இப்போது எனக்கிரையாக இவ்வழியில் நீ கால்நடையாக உன்னுடைய மவுத்தானது இழுத்துக்கொண்டு வந்தது அதற்காக நீவந்தாயென்றுசொன்னது அச்சொல்லை தாசுல்முலுக்கு கேட்டவுடனே சரீரமுதலிய கை கால்களெல்லாம் கிடுகிடென்று அதிர்தலாய் முகத்தினுடைய நிறமுங்கொலைந்து வேறு நிறமாய்விட்டது அப்போது அந்தத்தேவானது தாசுல் முலுக்கினுடைய முகத்தின்வடிவு கொலைந்து வேறு நிறமானதையுங் கண்டு உன்னுடையசங்கதி யென்னவென்று கேட்டது அதற்குத் தாசுல்முலுக்கு ஓதேவே நீஎன்னசங்கதியெனக்கேட்கிறாயே அது எதுவெனில் எனக்குஇவ்வுலகத்தின் மகிழ்ச்சியின்பேரில் மனமிருக்குமாயின் என்னுயிரைநான் காப்பாற்றிக் கொள்வேன் அப்படியில்லாமல் இவ்வுலகின்வாழ்வும் உடலும் எப்போதும் அழிந்து போகின்ற வஸ்துக்களானபடியினாலே இதையறிந்து நான் இப்போது உலகிலுயிரோடிருக்கும்வரையினாலும் வருத்தமும்துக்கமுந் துயரமும்நேரிட்டு நாளுக்குநாள் அதிகமாகி வருத்தப்படுவதைப் பார்க்கிலும் உன்னுடைய வாயிலகப்பட்டு என்னுயிரை மாய்த்துக் கொள்ளுவதே நன்றாகவிருக்கிறதென்றெண்ணி நீயிருக்கிற விடத்தைத்தேடி நான்வந்தேன் இப்போது என்னை நீயோசித்துவிடு நான் அப்படி இவ்வுலகிலிருக்க நாட்டமுள்ளவனாகில் நானாகவேவந்து உன்கையில் என்னுயிரைக் கொடுப்பேனோ என்னுடம்பையும் இப்படிப்பட்ட வருத்தங்களினால் அகப்படவைப்பேனோ இப்போது என்னுடைய வருத்தத்தினால் நாட்பொழுது போகின்றது எனக்கு ஒரு நாளொருவருஷமாயிருக்கின்றது ஆகையால் என்னை நீ நாடியபடியே முடித்துக்கொள்ளென்று சொல்ல அதையெல்லாம் அந்தத்தேவனது அவன்சொன்ன துக்கமும் வருத்தமுமாகி சொற்களைக் கேட்டு அவன் கோபந்தணிந்து அவன்பேரி

ல்மிகுந்த இரக்கத்துடனே கிருபையால் சுலேயுமான் அலே கிஸ்ஸலாத்தின்பேரில் தன்னுவைக்கொண்டு ஆணையிட்டு ஓமனிதனேஎப்போதும் நான் உன்னை என்னுடைய கிருபையான காவலில் வைத்துக்கொண்டு நீ எதை நாடிவந்தாயோ அதற்குநானும் வெகு உதவி யொத்தாசைகள் செய்வேனென்று வாக்குக்கொடுத்து நாளுக்குநாள் தாசுல்முலுக்கின்பேரில் மிகுந்த அன்பும் ஆசாரமும் பிரியமும் அதிகமாகத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு என்னேரமும் அவனுக்கு மனத்தைரியமும் சொல்லிக்கொண்டிருந்தது அப்போது தாசுல்முலுக்கும் அதன் மன மிளகும்படியான பிரியமுள்ள தித்திப்பான வார்த்தைகளின் மதுரத்தைக் குடிப்பாட்ட அதைத் தன்விதிவசத்தி லாகும்படியாகச் செய்துக்கொண்டு நானுவிதமாகப் படைத்தோனைப் புகழத்தொடங்கினன்.

---

அகவல்-இ-ம்-எ தருலகாம்போதி.

ஆதியேரப்பே அழிவிலாப்பொருளே
சோதியேமாருத் துயரமில்லானே
நீசப்பொருளே நெடியவல்லவனே
அன்னைவயிற்றினுள் அன்று நீதாத்தாய்
பின்னுமிவ்வுலகிற் பெரியவினையெலாம்
நோக்குமுன்கொடுத்த நித்தனேசுத்தனே
வாக்கொடுபுகழ்வதா வரிசையுள்ளவனே.

வசனம்.

இப்படி நடந்துவருகிற நாளையில் ஒருநாள் அத்தத் தேவானது அதிக பிரியத்துடன் தாசுல் முலுக்கைப் பார்த்து நீ உண்டாகிற வூணயாதென்று கேட்டது அதற்குத் தாசுல்முலுக்கு மனிதர்கள் தின்கிற வூணனது சர்க்கரையும் நெய்யும் கோதுமையின் மாவு முதலியவைகளென்றுசொல்ல அதைக்கேட்டு அந்தத்தேவானது சீக்கிரமாக வெளியேபோயினது அப்போது ஒரு பெரிய நட்டமாக வழிப்போக்கர்கள் ஒட்டையின்மேல்கோதுமையும் நெய்யும் சர்க்கரையும் இன்னுந்தின்னுமான வஸ்துக்க

ளும் கொண்டுபோய்க் கொண்டிருந்தார்கள் அதை அந்தத் தேவுகண்டு அவைகளை அந்த ஒட்டகத்துடன் எடுத்து வந்து தாசுல் மூலுக்கின்முன் கொண்டுவந்துவிட்டது அப்போது அவைகளைத் தாசுல்மூலுக்கு கண்டு அதிகசந்தோஷத்தோடு அதன் மேலிருந்தவைகளை யெல்லாமிறக்கித் தன்னிருப்பிடத்தில் வைத்துக்கொண்டு ஒட்டகங்களைக் காட்டில் விட்டுவிட்டு தினந்தோறும் அந்தமாவை ரொட்டிசுட்டுத் தின்றுக்கொண்டு அதிகசந்தோஷமாக விருந்தான் இப்படி சிலநாள் சென்று ஒருநாள் தாசுல் மூலுக்கின் ஒரு மணங்கு கோதுமை மாவெடுத்து அதன் கூடச் சர்க்கரையும் நெய்யும்கலந்து கையினுற் பிசைந்து காலினல் மிதித்துச் சுற்றுப் பக்கங்களிலிருக்கிற உலர்ந்த விருகுகளைச் சேர்த்து அடுப்பில் ஒட்டவைத்து நல்ல மிருதுவாகவும் ருசிகரமாகவும் ரொட்டிகளைச் சுட்டுத் தயார் செய்து ஒரு ஒட்டகத்தையு மறுத்து அதற்குத் தகுமாகிய உப்பு மூதலிய மசலாக்களிட்டு நெய்யினுல் அதையும் பொரித்தான் அப்பொழுது அந்தத்தேவானது தாசுல் மூலுக்கைப்பார்த்து நீயே யின்றையத்தினம் இவ்வளவு வருத்தவெடுத்து எப்போதும் நீ செய்யாததற்கு மேலாக என்னத்திற்காக அதிகமாகச் செய்தாயென்று கேட்க அதற்குத் தாசுல்மூலுக்கு இவையெல்லாந் தங்களுக்காக செய்தேன் நீ மனிதர்கள் உண்ணுகிற வூணின் ருசியைப் பாருமென்று சொல்ல அதைத் தேவுகேட்டு ஆனுல்மனிதர்களின் ஊனெப்படிப்பட்டதோ வென்றெண்ணி அவை முழுதையுமெடுத்து ஒன்றையும் விடாமல் ஒரேமூச்சாக வாயினுள் ளெடுத்துப்போட்டு அதைமென்று தின்றுக் கொண்டு அதன் ருசிகாத்தைப்பார்த்து ஏனெனிலது யெப்பொழுதுமிப்படிப்பட்ட ருசியைப் பார்க்காதவை யானபேயால் இதன் ருசியைப்பார்த்து சந்தோஷத்தில் குதித்து கூத்தாடி தின்றுக்கொன்று அடிக்கடி ஷபாசென்று சொல்லி ஓ மனிதனே இன்றையதினம் எனக்கு கொடுத்தாற்போல என்னைப்பெற்றுவளர்த்த தாயுந்தகப்பனுங் கொடுக்கவில்லையே நானெப்போது மிப்படிப்பட்ட வுணவைத்தின்றது மில்லையே இன்னமமேநக தேவுகளும்இதுவரைக்கும் இப்படிப்பட்ட ருசியாகிய பதார்த்தங்களை புசி

த்தார்களே இந்தரொட்டியின்ருசியைகாண்பித்தாலே யித
ற்குப்பதிலாக நானென்னத்தைகொடுப்பேன் நான்மரண
பரியந்தம்வரையில்மறக்கேன் இதேமனதிலுறையப்பட்
டுப் போயிற்றேயென்று சொன்னவையெல்லாம் தாசுல்
மூலுக்குகேட்டு அதனுடைய கிருபையையும் ஒருமையும்
சந்தோஷமாகினதுங் கண்டு தினந்தோறும் வெவ்வேறு
விதமாகிய ருசியைத் தரும்படியான ரொட்டிகள் சுட்டு
அதற்குத்தகுந்த யிறைச்சியையும் பொரித்துக்கொடுத்
துக்கொண்டுவரத் தலைப்பட்டான் அதைத்தின்று அந்
த தேவானது அதிக சந்தோஷத்தையடைந்து மிகுந்த
கிருபைகூர்ந்து ஒருநாள்தானே கேட்கத்தொடங்கினது
ஆமனிதனே நீநாடோறும் எனக்கு வூணின்ருசியை வித
விதமாக விருப்பத்தையெல்லாங் காண்பித்தாய் அதனல்
நான்மிகுந்த பேரின்பத்தையடைந்தேனெப்படியெனில்
என்னுடலிலிருக்கின்ற விரோமத்திற்கு நூறுநாவுகளுண்
டாம் அந்தநூறு நாவுகளிலும் தாங்கள் எனக்குச்செய்த
இஹஸானுடன் சற்கூறைச் செய்து நிறைவேற்றுவே
னென்னும் என்னால் முடியாது ஆனல் இதுவரையில் என்
னுடைய கையினலே உன்னுடைய காரியங்கள் யாதொ
ன்று முடியவில்லை ஆனல் அப்படி யேதாவதிருந்தா
லென்னுடன் சொல்லென்றுகேட்க அந்தாசுல்மூலு
க்கு நான் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்
அதென்னவெனில் தேவுனுடைய கூட்டங்கள் பொய
யின்பேரில் பிரியமும் தாங்கள் சொல்லின்பேரில் நிலை
யில்லாமல்மாறிப்போகிறது என்றபடியால்தான நம்பேன்
ஆனல்நீசுலைமான் அலைகில்ஸலாத்தின் பேரில்ஆணை
யிட்டுத் தருவீரானல் நான் என்னுடைய மனதிலுள்ள
தையுமக்குத்தெரியப்படுத்துகிறேன் ஆனல் அதுதவிர
ஆல்லாவறித்தானென்றுசொன்னது அதற்கவன் நானறு
ப்பேனென்றுசொல்ல அதை தேவுகேட்டு அவ்வாணை
யிட என்னால்முடியாதென்று வெகுநேரம் ஆலோசனை
செய்து மிகுந்த வருத்தமாகிய வியாகூலத்துடனே ஆணை
யிட்டது இப்போது உன்மனதினுள் விருப்பனையைச்
சொல்லென்றுகேட்க அப்போது சொல்லத்தொடங்கி
னன்.

விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

வலையோனவிருக்குந்தேவே மகிழ்வுடன்சொல்லக்கேளாய்
நிலையில்லாப்பாவியாக நெடுநாளாய்யானுமிந்த
உலகினிலவதிப்பட்டு வருகினேன்கருணைமேனி
தலைவிதிப்படியேயுந்தன் றயவினிற்றரித்திட்டாலே.

தரு-இ-ம்-சங்கராபரணம்.

சொன்னலென்னகோபமாவாயே தேவேயென்மேல்
சொல்லப்படமாயிருக்குதேயெனக்கு தேவேயென்றான்

தேவிசொல்-தரு.

அஞ்சவேண்டாம்சொல்ல என்றனக்கு அரசன்மகனே
நெஞ்சுதுணிந்துநீநிகழ்த்தடாவின்று அரசன்மகனே

தாசல்முலுக்குசொல்-தரு.

துணிந்துச்சொன்னால் துஷ்டனென்பாயோ உன்பாதம
லர்பணிந்துசொன்னாலும் பார்க்கமாட்டாயோ பெருந்
[தேவே

தேவிசொல்-தரு

சொல்லாததைசொல்லேன்சொல்லடா அரசன்மகனே
யெல்லாவேலையுமென்னலாகுமே அரசன்மகனே

வசனம்.

இவ்வாறு தேவானது சொல்ல அப்போது தாசல் முலுக்கு ஓதேவே எனக்கு வெகுநாளாகப் பகாவலினுடைய பூமிகளைச் சுற்றிப்பார்க்கவேண்டுமென்கிற இயாபமிருக்கின்றது அவ்விடத்திலென்னைக் கொண்டுபோய்ச்சேர்த்துவிடவேண்டுமென்கிற நாட்டமிருக்கின்றதென்று சொல்லவும் அதைதேவுகேட்டுஒருமூச்சுகுளிர்ச்சியாய்க் பெருமூச்சுவிட்டு பின்புதன் இரண்டு கைகளாலும் பின்பு தலையின்மேல்மாறி அடித்துக்கொண்டுமூர்ச்சையாய்விழுந்துவிட்டது இப்படி ஒருநாழிகைவரைக்கும் பூமியின் மேல்கிடந்து அதன்பின்பு மூர்ச்சைதெளிந்துட்கார்ந்து ஆ ஆ வென்று பெருமூச்சசோதிதுக்கப்பட்டுதன்முகத்தில் வடிவங்கொலைய வேறுநிறமாய் ஓ மனிதனே அல்லாகுத்த ஆலா உன்னுடைய மவுத்தை யென்கையில் கொடுக்க

என்னுடைய மனதை உன்கையில் அகப்படும்படி ஆக்கி வைத்தானென்று சொல்லி ஓமனிதனே இப்போது நான் சொல்வதைக் காதுக்கொடுத்துக்கேள் பகவதியான பரிகள் பாதுஷாவினுடைய மகளாயிருக்கிருள் இன்னமஎன்னைப்போல 10-அத்தேவுபரிகளை அவள் தகப்பனுடைய குலாமாக விருக்கிருள் இன்னம் இதுதவிர அந்தநகர்சுற்றிலும் அனேகதேவுபரிகள் காவலாயிருக்கிறதுகள் நானும் அதிலொரு முத்திரைகாவற்காரனு யிருக்கிறேன் இன்னம்பட்டணத்திற்கு அடுத்தாப்போலிருக்கிறவர்களும் அக்கோட்டையின் நான்குசுவற்றையும் காத்திரார்கள் அப்படியிருக்க மற்றவர்போக என்னவல்லமையுண்டு இன்னம் உயிருள்ள எந்தப் பிராணிகளு அங்கேபோகவல்லமையில்லை இன்னம் ஸாஸா என்னும் காற்றுள்ளே போகமுடியாது இதுதவிர அப்பரிகளின் அரசன் உத்திரவுப்படி அனேக தேவுபரிகள் சுற்றிவர ஒரு வருஷத்தின் தூலதூரம் வரைக்கும் யாதொன்று வராதபடி காவலின்கட்டளையில் நேயகமாய் வழிகட்டிக்காவலர்களாக விருக்குறார்கள் அதனுலவ்விடம்போகஒருவராலுமுடிகிறதல்ல இன்னந் அநேக தேவுபரிகள் அந்தரமாக மேலே யாதொன்றும் வராமலிருக்கும்படி இரவும்பகலுமாக காவல் காத்துக்கொண்டிருக்கிறார்கள் இன்னம் பருந்து முதலிய எவ்வகைப் பறவைகளுக்குமேல்பறக்கிற திறமில்லை இன்னம் பூமியினுள்ளாக ஜியாரசன் தன்னினமாகிய எத்தனைலக்ஷமெலியோ சேர்த்துக்கொண்டு அதுவும் காவலாயிருக்கின்றது இன்னம் பூமியின்மேல் பாம்பு தேளு தங்களுடைய இனமாகிய படைகளைச் சேர்த்துக்கொண்டு அதுகள் ஒன்றையும் வரவொட்டாமல் காவலாயிருக்கின்றதுகள் இப்படியெல்லாம் கீழுமேலும் உள்ளும் புறமுமிப்படிப்பட்ட சொரேகாவல்களாயிருக்கிறபடியினுலே நானுன்னை எவ்விதமாக உள்ளேகொண்டு போய்ச் சேர்ப்பேன் அப்படி உன்னைக் கொண்டு போய்ச்சேர்க்காவிட்டாலும் என்னுயிருக்கு வருத்தமாக விருக்கின்றது சேர்க்கலாமென்றாலும் வருத்தமாக விருக்கிறது ஆனதால் நீ இப்போதொரு வேலைசெய் அதென்னவெனில் முன்னல் சமயல் செய்யென்று சொல்லா

வும் அப்படியே தாசுல் முலுக்கு தன்வழக்கப்படி ரொட்
டிமுதலியவைகளை கட்டுத்தயாருனன் அதையந்தத் தேவு
கண்டு ஒரு சத்தமிட்டது அந்த சத்தத்தைக் கேட்டவுட
னே வடப்புறமாக இன்னொரு தேவானது மறைவில் காவ
லாக விருந்ததே அது ஒரு பெரிய மலையைப் போல் வெளி
ப்பட்டு இவ்விடம் வந்து சேர்ந்தது அப்போ திரண்டு
மொன்றோடொன்றுகண்டு தரிசனையாய்ச்சந்தோஷத்தை
யடைந்து ஓரிடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தா
ர்கள் அத்தருணத்தில் தாசுல்முலுக்கின்பேரில் அந்த
தேவுனுடைய பார்வையானது விழுந்தது அதைத்தாசுல்
முலுக்கு கண்டு வுடனே அப்போது அந்த தேவானது
அதன் செய்த சலாத்தைக்கண்டு மிகுந்த ஆச்சரியப்பட்டு
அந்த தேவைப்பார்த்து ஓ அண்ணா யிவ்விடம் மிகுந்த
புதுமையானவிடமாச்சுதே அண்ணா இதுவரைக்கு மிவ்
விடத்தை ஒருவருங் கண்டதில்லையே அவர்கள் காதினா
லுங்கேட்டிரார்களே அப்படிப்பட்ட விடத்தில் மனித
னும் நீயுமாக ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறீர்களே இதனு
டைய விதத்தை எனக்குச்சொல்லென்றுகேட்க அப்போ
தந்தத் தேவானது இந்த மனிதனென்னுடன் மிகுந்த
அன்பு ஆசாரமுள்ள கட்டுதிட்டமில்லாத உபகாரமுள்ள
வனாய் தன்னுடைய யின்பமென்னும் வலையை என் கழுத்
திலிட்டு என்னைப் பிரியப்படுத்திக்கொண்டான் ஆனதால்
நான் இவனுக்கு எவ்விதத்திலும் துரோகஞ்செய்ய
என்னால் முடிகிறதில்லை அதற்காகவே நான் உன்னையு
மிவ்விடமழைத்தேன் நீயுமிவற்காக உதவிசெய்ய வேண்
டியதென்று இருவருங்கலந்து பேசிக்கொண்டிருக்குந்தரு
ணத்தில் தாசுல்முலுக்கு விருந்தாளியாகவந்த தேவுக்கு
முன்னில்வழக்கப்படி சமைத்த பதார்த்தமுதலியவைகளை
யிருவரெதிரில் கொண்டுவைத்தான்.

அப்போது அந்த விருந்தாகவந்ததேவானது அதை
எடுத்து வாயிற்போட்டு அதன்ருசியை பார்த்து மட்டில
டங்காத சந்தோஷம் பொங்கிக் கூத்தாடிக்கூத்தாடி அவை
களையெல்லாந்தின்று குடித்துப்பசிதீர்த்து கொண்டு பின்பு
விருந்துண்ணவந்த தேவானது என்னுயிர்க்கொப்பான
அண்ணாவுன்னை யிதுவரைக்கும் இந்த மனிதனுக்கு யா

தொருவுதவி யொத்தாசையான காரியங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறாரா அல்லதுயில்லையாவென்றுகேட்கவும் அதற்கந்ததேவானது இம்மனிதன் என்னையொருயிக்கட்டான வேலையை முடித்துக்கொடுக்கச்சொல்லி வருத்தப்படுத்துகிறான் அவ்வேலையானது என்னுடைய வெல்லையைவிட்டு நீங்கினதாக விருக்கின்றது அதனால் அதை நிறைவேற்றிக் கொடுக்க என்னைவிட்டு நீங்கினதாய்முடியவில்லை அதற்கு நீ மிகுந்த கிருபையுடன் கஷ்டமெடுத்துக் கொண்டாலொழிய அவ்வேலை முடியாதென்று சொல்ல அதை விருந்துண்ணவந்த தேவானது கேட்டுஎன்னால் முடியத் தகுந்தவேலை என்னயிருக்கிறது அதனால் நீயே குன்றிவிட்டாய் அதைச்சொல்லென்றுகேட்க அதற்கந்த தேவானது இம்மனிதனுக்கு குலேபகாவலியினுடைய பூவேண்டுமாம் அதைத் தேடுதலே நாட்டமாயிருக்கிறதென்று சொல்லவும் அதை விருந்துண்ணவந்ததேவானது கேட்டு ஓ அண்ணா நீதெரிந்திருந்தும் தெரியாதவர்களைப்போல சொல்லுகிறாய் அது குற்றமுள்ளதாக விருக்கின்றதென்று சொல்ல அந்தத் தேவானதுகேட்டு நான் சுலைமானபியின்பேரி லாணையிட்டுக் கொடுத்தேன் ஆனால் நீ கிருபைசெய்து இம்மனிதனுடைய நாட்டத்தின்படி கொடுப்பாயானால் நீ என்னுடைய மன்னிப்பு செய்தாற்போலென்றுசொல்ல அதையந்தத் தேவானதுகேட்டு அப்படியே யாகட்டுமென்றுசொல்லி தன்னுடைய தயக்கையாளான அபமாலா வென்ற ஒரு தேவானது தன் கையின்கீழ் 18000-தேவுகளை வைத்துக்கொண்டு பகாவலியினுடைய காவுசா காவல் காக்குகின்றதாக விருந்து அரசுநிலே செலுத்திக்கொண்டிருந்தது அதற்குமிந்தத்தேவானது ஒரு கடிதம் இவ்விதமாக வெழுதினது எப்படியென்றால்.

அகவல்-கரு-இ-ம்-கண்டா.

எனக்குமுன் னுதித்த என்தாசமக்கையே
தனக்கொன்சலாமதைச் சாற்றினேன்முன்பு
அடிமைலரதனை ஆகரவகாக்
குடிகொளமனதிர் கொண்டேனாயினும்
தப்பாமலெல்லாந் தானறிந்திடவே,

இப்போதுனக்கு எழுதும்சேதிகள்
பின்னுஞ்சகலமும் புரியவினையாகட
என்னால்மட்டும் எழுத நீயறிவாய்.

வசனம்.

என்தமக்கையே இந்த வலியமிஸ்கிரனுடைய சலா
முனக்கு உண்டாகவேண்டியது நானொருநாள் சிமைசோ
தனையாக வெளிப்பட்டுப் பார்த்துக்கொண்டு வருகையில்
அப்போது என்கண்ணில் ஒரு பிள்ளை அகப்பட்டது
அப்பிள்ளையைக் கண்டவுடனே நான் மிகுந்த ஆசையுட
னே யதை வளர்க்கவேண்டுமென்றெண்ணி அதையெடு
த்துவந்து இந்நாள்வரையில் நான் வளர்த்துக்கொண்டு
வந்தேன் இப்போது நானிறந்து போவேனேயானால்
என்வீடும் நாடுமாய்விடும் பார்ப்போருமில்லாமல்போ
ய்விடும் ஆனதால் நாமிருக்கும்போதே இதை ஒரு வரிட
ம் அனுப்பிவைக்க வேணுமென்கிறதாக எண்ணி நான்
இப்பிள்ளையை உன்னிடத்திற்கு அனுப்புவது நலமென்
றெண்ணி அனுப்பினேன் ஆகையால் இப்பிள்ளையை
நானெப்படி யாதொரு வருத்தமும் வராமல் வளர்த்தே
னோ அதற்கு ஆயிரம்பங்கு இருமையாக நீவளர்க்கவேண்
டியதென்று ஒரு காயிதம் எழுதி அதை ஒரு தூதனாகிய
தேவின் கையில்கொடுத்து தாசுல்முலுக்கின் முகத்தைப்
பார்த்து நீ இவன் கூடப் போவென்று சைகைசெய்து
பின்னும் தேவானது சொன்னது உன்னை நான் இப்போ
து தேந்து மலரைக் கையாலெடுத்து எறிவது போல
உன்னை வெளியில் எறிந்துவிட்டேன் நீபோய் உன்னு
டைய நாட்டை நிறைவேற்றிக்கொள் ஆனால் எனக்கு
எவ்வினு விடாமோயானால் நீ நினைத்த யிடத்திற்குப்
போய்ச் சேருவாயென்று சொல்லி அந்தத் தூதன்கூட
அனுப்ப அத்தூதன் தாசுல்முலுக்கை இடது கையினுள்
உட்காரவைத்து வலதுகையினாலே மேலே மறைவாகமூடி
க்கொண்டு வழிநடக்க வெளிப்பட்டுக் காடு மலையெல்லாம்
விடுதிமுடியாகக் கடந்து இமக்குதென்னும் விடுதிற்போய்ச்
சேர்ந்து அவ்விடத்தில் தூரமாய் நின்று மிகுந்த அன்பு
டனே சலாஞ்செய்து தாசுல்முலுக்கையும் அந்த கடிதத்
தையும் அவன் கையிற்கொடுத்தது அது இரண்டையும்

வாங்கிக்கொண்டு அந்தத் தாசுல்மூலுக்கைப் பார்க்கவும் தோட்டத்தில் பூமலர்ந்தாப்போல் அவன் முகமலர்ந்து அதிக சந்தோஷங்கொண்டு உடம்பெல்லாம் பூரித்துப் பொறுக்கமுடியாத ஆனந்தத்தினால் அந்த தூதன் முகத்தைப் பார்த்துச் சொல்லிற்று ஓ என்னுடன் பிறந்தானே எனக்குப் பொன்னின் மலை அகப்பட்டாலும் அல்லது சுலையுமாநபியினுடைய மோதிரம் அகப்பட்டபோதிலும் இவ்வளவு சந்தோஷம் நான் படமாட்டேன் இப்போது எனக்கு இவன் வந்ததினால் அவ்வளவு சந்தோஷமுண்டாயிற்றென்று சொல்லி அந்தக் கடிதத்தை உடைத்து அதனுள் எழுதியிருக்கிற சங்கதிகளையெல்லாம் படித்துப் பார்த்துக்கொண்டு உடனே அக்கடிதத்திற்கு தன் தமையனுக்கு பதில் கடிதமெழுதினது அது எப்படியெனில் என் அன்புள்ளவனே என்னுடைய சலாமுனக்குண்டாக வேண்டியது நாளொருநாள் நகர் சோதனைக்காக வேண்டி வெளிப்பட்டு சோதித்து வருகையில் அப்போ ஒரு பாதுஷாவின் மகள் அதிக அழகினையுள்ள பெண் ஒன்று என் கையில் அகப்பட்டது அப்பெண்ணை நான் கொண்டுவந்து நாளொருமேனிப் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து அதற்கு மகுமூதா வென்றும் பேர்வைத்து வளர்த்துவருகிறேன் இப்போது அப்பெண்ணிற்குத் திரண்டிருண்டவயதும் உண்டாயிற்று அவள் முகம் பதினாறு பக்கத்தில் சந்திரனமுகைப்போல இலங்கிக்கொண்டிருக்கிறது அதற்குச் சரியாக மணவாளனை நீ அனுப்பிவைத்தாய் அல்கம்துலில்லா நானந்த இருவருக்கும் வதுவையும் செய்து முடித்து விட்டேனென்று எழுதிவந்த தூதன்கையிற்கொடுத்து அனுப்பிவைத்தது.

---

ஐந்தாவது கதை,

தாசுல்மூலுக்குலேபகாவலியினது
துடவையினுட்சென்று
அம்மலரைக் கைவசமாக்கிப் பின்பு அவன்மேல்
மோகித்தவிபரம்

5-வது அம்மலாவின்படம்.

இவ்விதமாகத் தாசுல்மூலுக்கு மகுமூதா வென்றும் பெண்ணுடனே வெகு இஷ்டமுள்ளவனாகவிருந்தான்

அப்படியிருந்து அப்பெண்ணுடன்கூடிக் கலந்துபோகாமல் தன்வாயைக் குடுவையை மூடினாற்போல வாயைமூடிக்கொண்டு ஊமையைப்போலிருப்பான் இப்படி சிலநாளாக சென்றுவருகையில் ஓரிரவில் தாசுல்மூலுக்கு மிகுசந்தோஷத்தோடு ஆடையாபரணங்களணிந்து தாம்பூலந்தரித்து மணவரைகள் அணிந்து முகமலர்ச்சியோடு உட்கார்ந் திருப்பதைத் தன் பெண்சாதியாகிய மகுபுதா கண்டு இதுதான் நற்றுணமென்றறதாகத் தன்மனதிலெண்ணி அருகிலுட்கார்ந்து என்பிராண கணவனே நானொன்று சொல்லுகிறேன் அதைக்கேட்டு அதற்கு பதிலுத்தாரந் தரவேண்டுமென்று அன்புடனே சொல்லத் தொடங்கினாள் என்னுயிர்மன்னா உலகத்தில் மனுவாசப் பிறந்த ஆண்பெண்கள் இரவில் பெண்சாதியும் புருஷனும் ஒருவரோடொருவர் கட்டிப்பிடித்து ஒருவர்க்கொருவர் முத்தியிட்டு உதரத்தின் மதுரத்தைக்குடித்து ஆனந்தக்கடலில் மூழ்கி மிகுந்த பேரின்பத்தையடைந்து சுகிக்கின்றதாகவிருக்கக் காமத்தொழிலை விட்டு அத்தகுமாரராகப் படுக்குமிடத்திற் றனியாய்ப்படுத்தெழுந்திருக்குங் காரணமென்னவென்றுகேட்க அதற்குத் தாசுல்மூலுக்குச் சொல்லத்தொடங்கினான்.

ஓபெண்கள்நாயகமே நீசொன்னதையெல்லாஞ் சரியே இன்னம் இதற்குமேலாக அதிகவிருப்பமுஞ் செய்வதுகண்டு அப்படியிருக்க என்னுடைய உயிருக்கு அதன்பேரில் ஏதொருவிருப்பமில்லை அதைநினைத்தபோதிலும் ஆசைதருவதில்லையென்று சொல்லிப் பின்பு நானினைத்துவந்தவை யெனக்கு ஒருபெரியமலைபோலேயிருக்கின்றது அதை முடித்து நிறைவேற்றுவது என்பேரல்விதியாயிருக்கின்றதற் காரியம் முடியுந்தனிலும் தான் இவ்வுலகத்தில் சகலயின்ப ஆசைகளையும் பொய்யேயென்றுவிரதமாக்கிக்கொண்டிருக்கிறேன் அதை மகுபுதாகேட்டு அதென்னகாரியம் அந்த பிந்த வடியாளுக்கு சொல்லவேண்டுமென்று கேட்க அப்போது தாசுல்மூலுக்கு ஓபெண்கள் நாயகமே நான் வெகுநாளாக குலேபகாவலியினுடைய தேசத்தைப்பார்க்க இச்சித்திருக்கிறேனென்றுசொல்லவும் அதை மகுபுதாகேட்டு இன்சா அல்லாகுத்த

ஆலா நாட்டமென்னுங் காற்றின்மூடிணையை மதியென்னு மோகத்தினால் அவித்து உன்னாட்டத்தின்படி அத்தேயத்தை யுனக்குக்காண்பிக்கவும் நீபார்க்கவும் செய்வேன் இதை நீர் உன்மனதில் உறுதியாகவையுமென்றுசொல்லி இப்படியிருவரும் இராவெல்லாம் பேசிக்கொண்டே அன்றிரவைப்போக்கினார்கள் அப்போது சந்திரன் தன்னலங்காரத்தை மாற்றவும் சூரியன் தன்உக்கிரத்தை யேற்றவுமாகவுடுத்தி அப்போது அம்மலர் அவர்களிருவரும் படுத்திருந்த வீட்டைவிட்டு வெளியேகொண்டு வந்துதான் வலதுதுடையிலொருவரையும் உட்கார வைத்துக்கொண்டு அவர்களிருவர்பேரிலும் மிகுந்தகிருபையாகிய பிரியஞ்செய்யத்தொடங்கினது அப்போது மருமூதாவென்பவளெழுந்துகைகட்டி மிகுந்த அன்புடனே ஓ என்னுடைய அம்மணியே என்மனதிலொருநாட்டம் வந்திருக்கிறது அதை உன்னுடன் சொல்லுகிறேன் நீ அதை யின்பத்துடன் காது கொடுத்து கேட்டுக்கொள்ள சம்மதியாயிருக்கு மாயின் சொல்லுகிறேன் என்றுசொல்ல அதை அம்மாலா கேட்டு மூதாவின் முகத்தோடு தன் முகத்தை வைத்து கனிவாயை தன் வாயால் முத்திமிட்டு என்னருமைக்கண்ணாகிய மகளே உன்மனதில் உதித்தவருத்தத்தின் ஆட்டத்தை சொல்லென்று கேட்கஅப்போது மருமூதாசொல்லத் தொடங்கினாள். என்னை வளர்த்துப்பிரியத்துடன் நான்கேட்டவை யெல்லாந்தந்த அம்மா யிப்போ என் புருஷன் பகாவலியினுடைய தேயத்தைப் பார்க்கவேண்டுமென்கிற நாட்டங்கொண் டிருப்பதால் அவளிடத்தைக் கொண்டுபோய் காண்பிக்க உன்னையொழியமற்றவரெவராலுமுடியாது ஆனதால் கொண்டுபோய்க் காண்பிக்க நாடுகிறேனென்றுசொல்ல அம்மாலா கேட்டு அதற்குத் தகுமான வார்த்தைகளைச்சொல்லிசிலநாள் கழித்தது அப்படி அம்மாலா அதை மறந்துவிடுமென்று சிலநாள்களைத்தள்ளி வந்ததும் ரூமூதா அதை மறவாமல் தினந்தோறுங் கேட்டுக்கொண்டே யிருந்தது அதனால் அம்மாலா மிகுந்த வருத்தத்துடன் ஒருநாள் அப்படியேயாகட்டுமென்று வாக்குகொடுத்து அப்போது எலிகளுக்கெல்லாம் அரசனாகிய எலியைக்கூப்பிட்டு இவ்வேளை இவ்விடத்திற்கும் பகாவலியின் சோலைவரைக்குஞ்சுரங்கஞ் செய்[torn]

என்னுயிரின் உயிராகிய பருமகனான் தாசுல்மூலுக்கை உன்கழுத்தின்மேல் வைத்துக்கொண்டுபோய் அச்சோலைக்குட் சென்று வருத்தங்களொன்றும் வந்து நேரிடாதபடிக்கு பாதுகாத்து உன்கழுத்தைவிட்டுக் கீழிறங்காதபடிக்கும் இறங்கவொட்டாமலும் அவ்விடத்தைக்காண்பித்துக்கொண்டு வாவென்று கட்டளையிட அதுபோலவே அவ்வெலிராஜன் சுரங்கத்தோண்டிக் கழுத்தின்மேல் தாசுல்மூலுக்கை யேற்றிக்கொண்டு அத்துடையின் உட்செல்லவும் அப்போது தாசுல்மூலுக்கு அத்துடவையைக்கண்டு மெள்ளமெள்ள நகர்ந்து கீழேயிறங்கப் பிரயத்தினஞ்செய்ய அவ்வெலிராஜன் விடவில்லை அதன் பின்பு எலிராஜன் திரும்பிவர நடக்கையில் அதைக்கண்டு தாசுல்மூலுக்கு எலிராஜனைப்பார்த்து ஓ எலிராஜனே நான் இத்தோட்டத்தினுட்சென்று இதன் விநோதங்களை நான் பார்க்க நாடுகிறேன் நீ என்னைப் பார்க்கவிடுகிறாயில்லை அப்படி நீ என்னைவிடாவிட்டால் உன்னை ஹலாக்குசெய்வேனென்றுசொல்ல அதை எலிகேட்டு பயந்து நம்மால் ஒரு கெடுதிவருமாயின் நம்மை அம்மாலாவா லென்ன வருத்தத்தைச் செய்யுமோவென்றெண்ணி மிகுந்த எண்ணத்தோடு கீழேவிட்டது.

அப்போது தாசுல்மூலுக்கு கீழேயிறங்கி இவைகளை யெல்லாம் பார்க்க வேண்டுமென்று நாடிப்போகையில் அங்கேபொன்னினாற் பூமியும் நாலுபுறமும் வெள்ளியினால் சுவரும் நாகசரியாணிமுத்துக்களும் மேலுங்கீழுமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கவும் அதனடுவில் பேரொசினலமைந்து நின்ற வாய்க்கால்களும் அவ்வாய்க்காலினுள் கமகவென்னுங்குலாபி நீர் ஓடிக்கொண் டிருக்கின்றதும் பலபலவிதமாக விநோதங்களிருப்பவை யெல்லாங்கண்டு ஆஹா ஆஹா இதென்னபுதுமைகளடங்கிய சோலையைப் பார்ப்பவர்களுடைய கண்ணைநற்குச் சூரியன் மறைந்தவுடனே வானத்திலுண்டாகும் சிவப்பைப் போல் அத்துடன் சிவந்தபூக்களின் பிரகாசத்தினால் தோற்றமாற்று இன்னும் அத்தோட்டத்தினுள்ள குலாப்பூவின்மேல் பனித்துளிகள்விழுந்திருப்பதைப்பார்த்தால் அதிலுள்ள சிவந்த பூக்களின் சிவப்பினால் அதை

ப்பார்க்க வெட்கிற்று அதனுல்வேர்வையுண்டாயினதாகத்
தோற்றலாயிற்று இன்னம் அவ்விடத்திலுள்ள அக்கூ
பழத்தின் கொத்துக்கள்வெண்மூகத்தைப்போல விளங்கிக்
கொண்டிருப்பதை வானத்திலுள்ள குஞ்சுதச்சி நக்ஷத்
திரங்கண்டு நம்மிதற்கு சரியாகமாட்டோமென்றுவெட்கிற்
று இன்னம் அந்த குலாபிபூவின்மேலுள்ள பனித் தண்
ணீரிலிருந்து ஒருதுளி நீர் சமுத்திரத்தில் விழுமாகில்
சமுத்திரத்தின் தண்ணீரு மதிலுள்ள மச்சங்களும்அப்
பூவின் வாசனையாய் விடும் இன்னம் அவ்விடத்திலுள்ள
கோழிகளின் சத்தத்தைவானங்கேட்குமாயின் அதன் தி
ரும்புதலையைவிட்டு நின்றுபோய்விடும் இன்னம் சுஹரா
வென்னும் நட்சத்திரமானது அதன் ஓசையைக்கேட்ட
மாத்திரத்தில் சந்திரனென்னுந் தம்பட்டப்பலகையைக்
கேட்டமாத்திரத்தில் சந்திரனென்னுந் தம்பட்டப்பல
கையைத் தன்கையிற்பிடித்துக்கொண்டு ஆட்டத்துடன்
ஆடிக்கொண்டு கீழே குதித்துவிடும் இன்னம் அவ்விடத்
திலுள்ள இலந்தைப்பழங்கள் தெய்வலோகத்தின் பெண்க
ளின் உதட்டின் சிவப்பிற்கு அதிக சிவப்புள்ளதாக விரு
க்கின்றன இன்னம் ஆவரைமிரட்டுகின்ற பருவப்பெண்
கள் தாங்கள் சரீரத்தைத்திருக்குமாக உடலைவைத்து நடப்
பார்களே அதற்குமேலான செம்மையாய் வளர்ந்திருக்
கிற சருமாங்களுமுண்டு இன்னம் அவ்விடத்திலுள்ள
குத்துவிளக்கிற்குச் சூரியனும் சரிசமான மாகமாட்டாது
இன்னம் அதனுடைய வெண்மைநிறத்திற்கு சந்திரனும்
ஒப்பாகமாட்டாது அம்மரங்களிலுள்ள பழங்கள் தாங்கு
வதற்கு முத்துமாணிக்கங்களு மீடாக மாட்டாது எப்
படியெனில் சூரியனென்னும் மரத்தில் நக்ஷத்திர
மென்னும் பழங்கள் பழுத்திருப்பது போலிருந்தது
இன்னம் அக் குளத்தின்மேற் குலாபி பூவின்கப்
புகள் நகமுகமும்வளைந்து விழுந்துகிடந்தது இன்னம்
அக்குளத்தினுள் வெண்மூகத்தின் உருவங்கொண்ட
வாத்துகோழிகளு நீந்திவிளையாடிக் கொண்டிருந்தது.

இவைகளையெல்லாங்கண்டு தாசுல்முலுக்கு முன்னிக்
காலெடுத்துவைத்து நடந்தனன் இவ்விநோதங்களைக்
கண்ணிற்கண்டு அதிசயத்தோடு பார்த்துவருகையில்

அங்கே வெள்ளி பொன்னால் சுவர்களின் கட்டடம்கட்டி
அதற்கு வெண்முகத்திலும செம்முகத்தினாலும் நகமுக
மும்திர்ந்து இரங்குத்துறைகள் மரகதத்தினாலும் அதற்
குப் பவளங்களினால் பதிப்பும் இன்னம் அனேகவிதமா
கிய சோடிப்பின் அலங்கிர்தமாகியகுளமொன்றிருந்தது
அக்குளத்தினுள் நீரானதுகுலாபி நீர் நிறைபபியிருந்தது
அக்குளத்தினிடையில் வெண்ணிறமாகவும் மிகுத்த வாச
னையுள்ளதாகவும் நல்லவர்ணமுள்ளதாகவும் ஒரு புஷ்ப
மிருக்கக்கண்டான் அதைத் தாசுல்முலுக்கு கண்டு தன்
மனதிற்குள் திடசித்தனாகி இம்மலரோ அல்லவோவென்
கிற எண்ணம்நீக்கி இஃதே குலேபகாவலியெனவு கிட்டே
நெருங்கி மேலிருந்த வஸ்திரங்களைந்து கீழேவைத்து
அக்குளத்தினுள் உட்கார்ந்து நாம நாடிய மலாிருக்கு
தேயென்று அதையறுத்துக் கரையேறித் தன்னுடமான
ங்களை யுடுத்திக்கொண்டு அம்மலரை யிடையிலவைத்துக்
கட்டிக்கொண்டு பின்பு அவவிடத்திலுள்ள மாளிகைகளை
பார்க்கவேண்டுமென்கிற கருத்தாக முன்னோக்கி நடக்கை
யில் மாளிகை முத்துமாணிக்கங்களா லுருக்கொண்ட
ஒருவீடானது தோற்றினது அவ்வீட்டின் வாசற்படியா
னது புதல் வானத்துணியாம் வளைவுபோலிருந்தது இன்
னம அவ்விடமுள்ள ஒவ்வொரு வீட்டினழகுக விலக்கு
வதற்கு முன சூரிய சந்திரனுடைய ஒளிவுகள் மயங்கி
வடிவுகுறைந்துவிடும அதன் முகப்பில வெள்ளி பொன்
னினாற்செய்த திரையுங் கட்டியிருந்தது இவ்விதமுள்ள
வீடுகளைக்கண்டு தாசுல்முலுக்கு விளக்கின வெளாச்சத்
தைக்கண்டு அந்தப்பூச்சி யெப்படி தன்னுயிரை மாய்த்து
விடப்போக விடுகின்றதோ அப்படி அவ்வீட்டினுள்
நுழைந்து அவ் விநோதங்களைக் கண்டு தியங்கி மயங்கி
கலக்கந் தெளிந்து பின்னு மின்ன மென்னயிருக்கிறதோ
முழுதும் பார்ப்போமென்று மனதைரியத்தோடு பார்க்கை
யில் அங்கோர் பொன்னு வெள்ளியினாலமைந்து முத்து
வயிடூரியத்தினா லழுத்திப் பவளமுதலியவைகளிற் சிங்
காரித்து மரகதத்தினாற் கால்கள் அடைத்துஇவ்வலங்கிர்த
முள்ள ஒருமஞ்சமிருந்தது அதன்பேரில் பரிகளுக்கெல்
லாம் பக்கத்துநிலவு வெட்டி மசங்கத் தக்கதாக விளங்கு

கின்ற முகமும் அமாவாசையிருட்டைப் பழிக்கத்தகுந்த கருமண்கறுப்பும் அம்பணல் இலங்குகின்ற பிரகாசம் போல விளங்கும மயிரின்பளபளப்பும் அன்றுதோன்றும் பிறையைப் பழிக்குகின்ற நெற்றியும் மதன்வில்லை யிகழச் செய்யாநின்ற புருவமுஞ்சடலையும் மீனையும்மானையும் விஷத்தையும் நகைக்குங் கண்ணும் கண்ணாடியை ஒப்பி டாத கனமும் எள்ளின்பூவை மறைக்குகின்ற மூக்கும் பசளைக்கீரையைப்பருக்கின்ற காதும் செம்பவழம் கொவ் வைப்பழமுதலிய சிவப்பைக்குறைக்க நாணுமுதடும் ஆகா யத்தின் நட்சத்திரத்தையும் யாதுளம் விரையையும் என் னொருக்கத்திற்கு ஒவ்வாதென நிந்தனை செய்யும்பற்களும் கிளிமொழியை பழிக்குஞ் சொல்லும் குயிலோசையைமற க்கும் மிராகமும் தேன்மதுரமொவ்வாத மொழியும்மூங்கி லடியைப்பழித்துத் திரண்டகைகளும் மலையைப்பழித்த கொங்கையும் ஆடவர்கள் அதுவோ இதுவோவென்று ஆனந்தமடையும் அல்குலும் வால்மரத்தை யொப்பி டாத துடைத்துமை வடிவமுள்ள ஒரு பெண்கூந்தல் அவிழ்த்துகிடக்கவும் இட்டிருக்கும் அங்கிரவிக்கைகள் மேலேறி யிருக்கவும் இடையலணிந்த சேலைசுழன்று கிடக் கவும் வாரிமுடித்த தலைமயிர்கள விரியவும் நெற்றியின் பேலொரு கையைவைத்தும் அவளின் பேரழகினால் பூமி வானமெல்லாம் ஒரேயழகிலங்கத் தன் திரண்டுருண்ட சாமான்ய வயதின்மலாதினால் படுத்து மாறுங்காலமாக நித்திரை செய்வதைக்கண்டு மயங்கிவிழுந்து நெடுநேர மூர்ச்சையாய்கிடந்து அம்மயக்கந் தெளிந்தெழுந்திருந் து தனக்குள்ளே தானே இவ்விதமாய்ச்சொல்லத்தொடங் கினான்.

---

தரு-இ-ம்-மோகனம்.

சித்திரமோயிவள் மெத்தவழகுள்ளவல்லிவன்ன
நித்திரைசெய்கிருள் மெத்தைமேல்மாமலர்புல்லி
நல்லசுவனத்தின் வல்லிமோயாதொன்றுமறியேன் இவள்
மெல்லியமோகினி மாதோயிவளொயிற்றெரியேன்
சொக்குதேஎன் னுயிர் பக்கத்திலிருந்திடநாடிதுயா
புக்குதேமோகமு மக்கினியென்மேலுமோடி

கட்டியணைந்து கனிவாய்மதுரத்தையருந்துளப்போ
வட்டத்தனத்தாளை கிட்டியிருந்தின்பம்பொருந்த

வசனம்

இவ்விதமாகத் தாசுல்முலுக்கு மோகமயக்கந் தலைக்கேறி நானுவிதமாகத் தனக்குள்ளே தானேபுலம்பி அறிவினலாத்திரத்தைப் பக்கி ஆஹா நாமிங்குவந்ததற்கு ஒரடையாளம் வேண்டுமென்றெண்ணி மோதிரத்தை கைவிட்டுக்கொண்டு மனம்வராமற்படி திரும்பி சுரங்கத்தின் வழியாக எலியின்மேலேறிக்கொண்டுவருகையில் அதற்கு மகுமூதாபோன அரசன்குமாரன் வரவில்லையென்று முகம் வாட்டமுள்ளவளாய் நிலைதளர்ந்திருக்கும் சமயத்தில் அவளிடம்வந்துசேர்ந்தானரசன் வரவைக்கண்டு மகுமூதா அதிகசந்தோஷமடைந்து சிங்காரித்துக்கொண்டு மணவாடை கமகமவென்று மணக்க இருவருமவ்விரவில் சாரையும் நாகமும் புணர்வதுபோல் ஒருவர்க்கொருவர் கட்டியணைத்து மதுரத்தைக்குடித்து ஆனந்தக்கடலில் மூழ்கி சிலநாள் வரைக்கும் காலம் கழித்துவந்தார்கள்.

---

ஆறுவது கதை.

தாசுல்முலுக்கும் மகுமூதாவும்
ஹம்மாலாவிடத்தில் விடைபெற்றுக்கொண்டு
போனதில் பரியிடத்திற்குச் சென்றதும்
அங்கிருக்குந் தன் தமையன்மார்களைச் சிறையைவிட்டு மீண்டதும்
சொல்லு விபரம்.

---

வசனம்.

ஆ ஆ பேரின்பக் கடலினைக்கடந்துதெளிந்த அறிவுள்ளோர்களே கேளுங்கள் ஓரிரவில் தாசுல்முலுக்கும் மகுமூதாவும் கட்டியணைத்து மதுரத்தைக் குடித்து இரண்டுபேரும் மல்லிகைமுல்லை இதழ்களை விரித்து சூரியப்பிரகாசம் பொருந்திய நிலைக்கண்ணாடிபதித்து முத்து மஞ்சங்கள் தொங்கலாடுகின்ற பஞ்சணைமெத்தையின்

மேல் காமலீலை செய்துமுடித்து அவ்வானத்தினால் நானுவிதமாகிய பேச்சுகளெல்லாம் பேசிக்கொண்டு மட்டிலடங்காத சந்தோஷயாயிருக்கிற வேளையில் அம்மொழியோடு சேர்ந்தாற்போலவே பொன்கலமணியாகிய காமக்கூடே ஆனவிவ்விடத்தில் நானாவிதமாகிய எல்லா சந்தோஷங்களையுமுண்டு வேறொன்றின் துக்கமில்லை நாம் நினைத்த போகமெல்லாம் தேவையானருசிகளும் இன்பங்களுமுண்டு ஆனால் என்னையவர்களுமவர்களை நானும் பார்ப்பதை விட்டு எதுவரைக்கும் விலகியிருப்போம் இன்னமிஷ்டாளிகளுடன் சேராமலுமவர்களுடன் பேசாமலுங்கூடாமலுமெதுவரைக்கும் பிரிந்து துக்கத்தில் மூழ்கியிருப்போம் இன்னம் நம்முடைய பகையாளியின் கைகிழகப்பட்டிருப்பதை விட்டு நம்மைப்போன்ற வடிவுள்ளோர்களுடைய கூட்டத்திற்போய்ச் சேர்வதற்கு நாமிருவருக்குந் தகுந்த யுக்தியொன்றெடுக்க வேண்டியதென்று சொல்லத்தொடங்கினான்.

அகவல்-இ-ம்-கண்டா.

பூவினில்வாசம் பிறந்ததுபோல
மேவிடாதிருந்ததாம் விட்டுப்பிரிந்து
இருபயதில்பயனென் னலங்கியசிசாபோல்
மருமலர்சொருகு மங்கையென்றான்.

வசனம்.

இம்மொழியை மகுமூதா துகேட்டு எழுந்துநின்று என்னரசனே நீ திடசித்தஞ்செய் நாம் நாளையதினம் போகும்படி கேட்டுக்கொண்டுபோய் நீ ஒன்றுக்கு மஞ்சாதேயென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது அவ்விருளானது அவனுடைய தலைக்கூந்தலினுள்ளோடிப்போயொளித்துக் கொள்ளும்படி சூரியன் நமதிகாரஞ்செலுத்தியாளுமுலகத்தை மூடியிருளை ஓட்டவேணுமென்கிற ஆக்கிரமத்தின் கோபத்தில் கண்சிவந்து முகம்வெளர்வுறத் தன்கிரணத்தைக் காண்பித்துக்கொண்டு வெளிப்பட்டது அப்போது அம்மாலா தன் பழக்கப்படி உலகம் வெறுத்த உடன் அம்மெத்தையினுள்வந்து விநோதமாய் கனிவற்கங்களும்பலமணி முத்தும்பதித்த வஸ்திரங்

களையிருவருக்குந் தரித்து இரண்டு துடையின்மேலிருவரு
முட்காரந்துக்கொண்டு பலவித ருசியுள்ள கனிகளையூட்டி
அடிக்கடி யிருவர்களையு முத்திமிட்டு அதிக சந்தோஷப்
படுத்தியும் இருவரின் முகமும் புஷ்பம்வடியாதது போல
விருக்கிறதேயொழிய முகங்களை செழிக்காமல் வாட்டமாயி
ருக்கக்கண்டு என் கண்ணின்மணியாகியமகளே மணியே
ஒளிவே தெளிவேயென்று என்மகளினுரியவராகிய மரு
மகனே உங்கள் மனதிலிருப்பவைகளைச் சொல்லு நான்
ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களானபோதிலும் இறக்
கிக்கொண்டுவந்து கொடுப்பேன் சொல்லுங்களென்று
கேட்க அப்போது மகுமுகா எழுந்து கைகட்டி மிகுந்த
தாட்சிமையுடனே என்னம்மணி இதுவரைக்கு மெமக்கு
எவ்வஸ்துகளும் யாதொன்றுங் குறைவின்றிப் போசித்துப்
பூரித்தோம் ஆனால் உன்னை விட்டுப் பிரியும் பிரிதலையின்
தீயானது மனதை கொளுத்திவிடும் இன்னமுங்களுடைய
கூட்டத்தைவிட்டுப் பிரிவது உடலைவிட்டுயிர் பிரிவதொக்
கும் ஆனாலெனக்கு நமது சாதியாருடைய பிரிவின் தியா
னது என்னெஞ்சைக்கொல்லென் றருத்தியி னெருப்பு
மெழுக்கையுருக்குவதுபோல என்வல்லமையும் உருவை
யும் உருக்கிவைக்கின்றது அதனால் சிலநாள்வரைக்கும்
மானிடர் கூட்டத்திற் சேர்ந்துவரும்படி உத்திரவு கொடுக்
கத் தங்கலிஷ்டத்தைத் தேடுகிறேன் அம்மாலாவெங்கிருந்
தபோதிலும் இரவும்பகலும் உன் வணக்கத்திலேயே
யிருப்பானென்றுசொல்ல அதை அம்மாலாகேட்டு குளிர்
ந்த பெருமூச்சு விட்டு இதுவரைக்கு முன்னைநான் இதற்
காகவேண்டித் தான்வளர்த்தேன் இரவும்பகலும் என்னு
டைய கண்ணிற்கு உன்னுடைய தீதாறப் பார்வையிட்டுக்
கொண்டிருந்தேன் ஆனாலுன்னா லொன்றுமில்லை நாயக
னுடைய நான்முன்புரமா யிருக்கின்றதே ஆகையாலந்தப்
போதனைகளெல்லா முன்னருகி லிருக்கின்ற அரசன்மகன்
செய்ததேயல்லாமல் உன்னாலொன்று மில்லையென்று
நானறிந்து கொண்டேன் கடைசியிலிப்படி முடியுமென்று
நானறிவேனாகில் எப்போதுமவனிடத்திலுன்னைப்படிக்க
வைத்திரேன் இக்குற்றமென்னாலானதே யொழிய உன்னா
லானதல்லவென்று பலவாறுகச்சொல்லி அப்போது அம்

மாலா இனிமேலிவர்களுக்கு இவ்விடமிருக்கசம்மதியில்லை என்றெண்ணியுடனே யொருதேவானைத யழைத்து இவ்வரசன் குமாரன்கருத்து எவ்விடம்போக நாடுகிருனையவ்விடங் கொண்டுபோய்ச்சேர்த்துவிட்டு அவர்களிடத்திலொரு சீட்டெழுதிகொடுக்கச்சொல்லி வாங்கிக்கொண்டுவந்தெனக்குக் கொடுக்கவேண்டுமென்று கட்டளையிட்டு உன்னுயிரின் விடுதலைபெற்றுக் கொள்ளென்று சொல்லிப் பின்பு அம்மாலா தன்மயிரிலிருந்து இரண்டு மயிரைப்பிடுங்கி ஒன்றைதாசுல் மூலுக்கின்கரத்திலும் ஒன்றைமகுமூதாவின் கரத்திலுங் கொடுத்து எவ்வேளையுங்களுக்கு வருத்தம் அல்லது என்னுட்ட வருமாகிலும் அல்லசெவ்வல்துவைப்பற்றி யாவது நினைவுவருமேயாகிலும் மயிரை நெருப்பின்மேல் வைப்பீர்களானுல் நானுப்பதினெண்ணாயிரம் தேவாளும் கண்மூடி திறக்குமுன்னம் அவ்விடம் வந்து சேர்ந்தோமென்றெண்ணிக்கொள்ளென்றுசொல்லி மகுமூதாவின் கையைப்பிடித்து தாசுல் மூலுக்கின் கையிகுபிராகிய வஸ்துவை உன்னிடத்திலொப்பித்துவிட்டேன்னாலுனக்கென்ன குறைவுவந்தபோதிலும் பொறுத்துக்கொள்ளவேண்டியதென்றுடனே யொருதேவனைத் யழைக்கவு மதுபெருத்தமலைபோலவெழுந்து கோடையிடியிடித்தாற் போலே சத்தமிட்டுக்கொண்டுவெகு ஆரவாரத்துடனே அம்மாலா இருவரும் என்னையேனழைப்பித்தாயென்றுகேட்க அதற்கு அம்மாலா இருவரும் எங்கேபோகநாடுகிறார்களோ அவ்விடத்தில் விட்டு வரவேணுமென்றுசொல்ல அதற்குத்தாசுல் மூலுக்கு எம்மைப் பிரதௌலென்னு நகரத்திலுள்ள தில்பரியென்பவளுடைய சோலையில் விடவேணுமென்றுரைத வுடனேயதைக்கேட்டு அந்தத்தேவானது இருவரையுந் தோள்மேலெடுத்துக்கொண்டு ஒருநொடிப்பொழுதிலவர்கள் சொல்லியவிடத்திற் கொண்டுபோய் விட்டுவிட்டு இரசிதுகேட்டது.

அதற்குத் தாசுல்மூலுக்கு கொஞ்சந்தாமசஞ்செய்து எழுதிக்கொடுக்கிறேனென்று சொல்லியசத்தம் அவ்வேசியாகியவள் காதில் விழுந்து அதைக்கேட்டிவளோடிவந்து கண்டறிந்து மோதிக் காலிலடித்துயவனுடைய

சுக்கூறின் ஸ்துதிசெய்து புகழ்ந்து சொல்லத்தொடங்கினர்.

அகவல்-இ-ம்-கண்டா.

போனநாள் முதலாய்ப்புண்ணியவாளா
நானுமிறையோனைநாடியேயஞ்சி
வணங்கிச்சூதில்வரிசைதுவாக்கேட்க
யிணங்கியேயிருந்தேனிதுநாள்வரைக்கும்.

வசனம்.

பின்பு அரசன் மகன்றன்னைக் கொண்டுவந்த விட்ட சங்கதியை ஆதியோடந்தமாக வெழுதி அம்மாலாவினிடம் கொடுக்கும்படி தேவினுடைய கையிற்கொடுத்தவுடனேயதுவிடை பெற்றுக்கொண்டுபோய்விட்டது. பின் வந்தவேசியுந்தான் போனதும் வனத்தில் நடந்ததும் அம்மாலாவைக்கண்டதும் அதனிடம் பட்டபாடுகளும் மகுமூதாவை மணஞ்செய்ததும் தாங்களவ்விடம்விட்டு நீங்கியதும் பகாவலியின் சோலையில் சென்றதும் பூக்கொண்டுவந்ததும் சகலசங்கதிகளும் ஆதியோடந்தமாகச்சுருக்கமாய்த் தெரியப்படுத்திய பின்பவளெழுந்து மகுமூதாவிடஞ்சென்று அவளைக்கண்டிவருமமனமொத்து உயிருமுடலும்போல்மணமும் பூவும்போலவும் தழுவி நிழலைப்போலவும் கூடிக்கலந்து சுகமாக சில நாள்வரைக்குமரசன் அவர்களுமாயிருக்கையில் அப்போதரசன் குமாரனுக்கு மலரை தன்தேசம் கொண்டுபோக வேண்டுமென்பதைக் குறித்து நாட்டமாய் நாடிப் பூவைக் கொண்டுபோய்க் கொடுப்போமாகில் தந்தையின்கண் வெளிச்சமாய் விளங்குமென்று உடனே யாத்திரைக்குத் தகுமான பண்டங்களைத்தயார்செய்து கப்பலைக்கொண்டு வந்து அதிலேற்றுங்களென்று தலைமேவகர்களுக்கு உத்தரவுகொடுக்க அதுபோலவேயுடனேதயார்செய்தார்கள். அதற்குள்ளாக ராசகுமாரன்முன் சிரச்சாலையினதிகாரமுள்ளவனோடி வந்து மிகவும் வணக்கத்துடன் பூரேப்பி ராசகுமாரர்களின் விதியின் கட்டளையிற்றுங்களென்ன உத்தரவுகொடுப்பார்களோ அக்தொன்றுந்தெரியவில்லை என்றதே அப்போதர

சன்மகன் அவ்வீட்டுக்குடையவன் புறமாகத்திரும்பி ஓ பெண்ணே நானென்னவை யென்குமாரர்களுக்காக உன்னிடத்தில் சிநேகவுதவி யொத்தாசையின் முடுக்குகள் செய்வேன் அதை எதுவரையில்கேட்கவேண்டாமெனில் உன்னுடைய அடையாள முத்திரையவர்களின் பின்றுடையின் மேற்புறமாகப் பதிக்கிற வரைக்குமென்று கட்டளைசெய்து பின்பவளவர்களைக் கொண்டுவரச்சொல்லியவர்களுக்காக அப்பெண்ணுடன் இவர்கள் பூமேருமென்னும் பட்டணத்தை யாளப்பட்டவர்களே னிவர்களை நீவிட்டுவிட்டால் உலகத்திலுனக்கு அதிகபெயர் கிடைப்பதுமன்றி உன்னுடையபெயருமப்ரபலமாகு மிவர்களுந்தன் தேசஞ் சேருவார்களென்று நானுவிதம் உதவியொத்தாசையின் மொழிகளெல்லாமோதிட அதற்கவள் நான்சொல்லும்வேலைகளை இவர்கள் கேட்காதவரையில் ஒருபோதும் விடமாட்டேன் அஃதென்னவெனில் என்னுடைய முத்திரையைப் பதிப்பித்துக் கொள்ளாதவரையிலென்று சொல்ல அதை சிறையிலிருந்த நான்குபெயருங் கேட்டு நாமிதை யொப்புக்கொள்ளாவிடில் நமக்கு விடுதலை யாகிறதில்லை யென்றெண்ணங்கொண்டு இதையல்லாமல்வேறேவழியில்லையென் றொப்பிக்கொண்டு முத்திரையினடையாளத்தைப் பதிப்பிக்கச் சொல்லி அவனைவிட்டு புலிவாயிலகப்பட்டு மீண்டதுபோல தங்களுயிர்களை அவனிடத்திலிருந்து மீட்டுக்கொண்டு போகும்போது அவர்களிலொவ்வொருவருக்கு அதிக விலைகளுயர்ந்த முத்துகள் பதித்த உடுமானங்களையுடுத்தி இலக்ஷரூபாய் வழிசெலவிற்குங் கொடுத்தனுப்பினான் அவர்களை போகிறவழியில் சிலரைத் தங்களுக்குச் சேனையாகச் சேர்த்துக்கொண்டு நகரைநாடி நடந்தார்கள் பின்புதாசல்மூலுக்கு மூதாவையும் தில்பரிலக்காவைப்பார்த்து நீங்களின்னவிடத்திலிறங்கியிருங்கள் நான் கால்நடையாகவந்து நடந்து வருகிறேனென்றுசொல்லியவர்களை கப்பலின் மார்க்கமாக அனுப்பிவிட்டான்.

---

ஏழாவது கதை.

## தாசுல்மூலுக்கு தமயன்மாரிடம்

அடைந்ததும் தமையன்மார் மலரைப் பறித்துக்கொண்டதும்

சொல்லும் விபரம்.

7-வது தமயன்மார் தாசுல்முலுக்கின்படம்.

---

வசனம்.

பின்பு தாசுல்மூலுக்கு பிச்சைக்காரன் வேடங்கொண்டு தமையன்மார்களின் பின்னாகத்தொடர்ந்து நடந்துபோய்க்கொண்டிருந்தான் ஆகிலுமவனுடைய நாட்டமானது தமையன்மார்களின் நாட்டமென்னவிருக்கிறதோ அதையறியவேண்டுமென்று பின்றொடர்ந்து அவர்களிறங்குமிடத்தில் ஒரு மூலைப்புறமாயொதுங்கியிருந்தவர்கள் சொல்லும் பொய்யான வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தான் அவர்கள்பேசும் பேச்சுகளினால் போசவல்லமையான பொய்யானவார்த்தைகளை மென்மேலாக விடாமல் நித்தமும் பேசுவதினால் இவர்களதிருடர்களென்றெண்ணி திருடர்களே மோசக்காரர்களே நீங்கள் பொய்பேசினீர்களே இதோ நான் கொண்டுவந்திருக்கிறேன் பாருங்களென்று தன்னிடையில் வைத்துக் கட்டியிருந்தமலரையவர்களின்முன்னால் அதிககோபத்துடனெடுத்து வைத்தான் அதைக்கண்ட அரசன் மக்கள் வெட்கித் தலைகுனிந்து பின்னவன் முகத்தை நோக்கி நீ கொண்டுவந்த மலரின் வல்லமையை நாங்கள் கண்டறிவோம் அதுபொய்யாவிடில் நாம் உன்னை நினைத்தபடி தண்டனை செய்வோமென்று உடனே யொருகுருடனைப்பிடித்து அம்மலரையவன்கண்ணிற் றேய்க்க உடனே யவன் கண்விலக்கினது அதைக்கண்டவர்கள் அதிக வெட்கமடைந்து தலையைக் கவிழ்ந்து பெருமூச்சுவிட்டு வலுவினால் அவனிடமுள்ள மலரைப் பறித்துக்கொண்டு கன்னஞ் சிவப்புறவடித்துக் கழுத்தில் கரத்தைக்கொடுத்து அப்புறமாக வெளியே தள்ளிவிட்டுப் பின்பவர்கள் அதிக சந்தோஷத்தோடே கூடிப்பாடி வேடிக்கையுடனவ்வூரைவிட்டு காடு மலைவனம் வனாந்தி

ரம் கான்யாறுகள் குன்றுகள் சோலைகள்கடந்து தங்கள்
தகப்பனாகிய அரசனுக்கு நாங்கள் பலர்கொண்டு வருகி
ரோமென்று அறிக்கையிடென்று தூதனுக்கோத அத்
தூதன் கேட்டு உடனே ஓடோடியுஞ் சென்றுசைனுல்
க்கராமுலுசனுக் கறிவித்தான் அச்சேதியை அரசன்
கேட்டு அதிக சந்தோஷமாகி படிக்கடி யிக்கவியைப்
பாடினான்.

---

அகவல்.

இறந்திடும்பேர்க்கு எழுந்திடாவாவி
உறைந்திடும்படியா யோதினன்றாசன்
துக்கக்கடலைத் தொலைத்திடும்படியாய்
மக்களின்சேதி வரவினைக்கேட்டு
பூசபாலரா கூடிருவிழிபெற
சரசமாயின்று பலித்துமென்றதிக
ஆனந்தமாகி யவர்களைக்காண
கோநகர்விட்டுக் கூட்டமாயெழுந்தான்.

---

வசனம்.

அச்சேதியை அரசன்கேட்டுச் சந்தோஷக்கடலில்
மூழ்கிச் சேனைகளெல்லாம் சூழ்ந்துவர ஜெயப்பேரிகை
முழங்கி வானங் குமுறுவதுபோல ஒலிகளெழும்பித்தது
கள் குதிரை மறைக்காக நகரைவிட்டு இரண்டு மூன்றுவிடு
திக்குமுன் னெதிர்கொண்டுபோய் மக்களைக் காண அவர்
கள் தந்தையைக்கண்டு ஒவ்வொருவராகப்பாதம்பணிந்து
முத்திமிட அவர்கள் கையை யரசன் பிடித்துக் கண்ணி
லொத்தி முத்தமிட்டு ஒவ்வொரு பிள்ளைகளாக மாரோடு
சேர்த்தணைத்து பிரியஞ்சொல்ல அப்போது பிள்ளைகள்
தாங்கள் கொண்டுவந்த மலரின் சேதியைத் தெரியப்படுத்
தியிம்மலரைக் கண்ணிற் றடவிக்கில் கண்ணொளி விளங்கு
மெனச் சொல்லிக்கொடுக்க அதையரசன் வாங்கியுடனே
தன் கண்ணிற் சேர்த்துக்கொள்ளவும் வானவெள்ளிபோ
லிரண்டுகணுணும் விளங்கிட அப்போதரசன் அல்கம்து

வில்லாவென்று சொல்லியிம்மலரால் போனகண் விளங் கினதேயென்று அதிக சந்தோஷமாய் தன்னகரம் வந்து சேர்ந்து வீதிகடோறும் மந்திரி பிரதானி சீமான் முதலிய மற்றுள்ளோர்களுமாகிய எளியோர்களுக்கு ஆடையாபர ணமும் பணங்களுங் கொடுத்து வாசற்படிகடோறும் பேரிகை முழக்கோடு மங்கலக்கோலங்கள் போலச் செய்யுங் களென்று பேரிகை யடிக்கவைத்தனன் அதுபோலவே நகர் முழுதும் அரசனுக்குக் கண்விளங்கினதேயென்னும் சந்தோஷத்தால் நகர்முழுதும் அலங்காரஞ் செய்துஎளி யோர்களுக்குத் தானதருமம் வஸ்திரம் பணம் முதலியவை கள் அதிக சந்தோஷத்தோடு ஒருவருடம் வரைக்குஞ்செ ய்துவந்தார்கள்.

---

## எட்டாவது கதை.

### பகாவலி தூங்கிக் கண்விழித்துப் பின்பு குளத்தைக்கண்டும் அதில் மலரைக் காணாததும் அம்மலரைக் கொண்டுபோன கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டவிபரம்.

---

வசனம்.

கருமேகமானது பூரணச்சந்திரனை மறைப்பதுபோல சாளரங்களுள்ள அம்மெத்தை குளிர்ந்த பகாவலி யாயநி த்திரை செய்துகண்ணை முழித்து தன் ஸ்தனபாரத்தைநவி ட்டு மேலிருந்த ரவிக்கையைத் தன்கையால் தென்னங் குரும்பைப்போல விருக்குமுலையை மறைத்து அவிழ்ந் திருந்த பூக்கள் தழைத்த கூந்தலை முடித்துப் பலகோர மாயிருந்த ஆடையாபரணங்களைச் சீர்படுத்தி தலைமேல் துணியைப் போட்டுக் கொண்டுமெள்ளத்தள்ளாடி அன் னம்போலப்பின்னி ஒய்யார நடையாக நடந்து பன்னீரா ல்நிரப்பியகுளத்தினருகில்வந்து தன் முகத்தைக் கழுவிக் கொண்டிருக்கையில் அம்மலரின்மேற் பார்வைவிழுந்தது அப்போதவளிதென்ன புதுமையிருக்கிறதென்றெண்ணி

வெகுநேரம் வரைக்கு முற்றுப்பார்த்துமனதிற்கொன்றுந் தோற்றுமல் அவள் மெழுகு உடலையி லுருகுவதுபோல் உடலுருகத்தக்கதாக தலையைக் கவிழ்த்துவேனிற்காற்றில் மலர் வாடியதுபோல முகம் மிகவும் வாடிப்பார்க்குந் தருணத்தில் தன் கையிலிட்டிருந்த மோதிரத்தின் பேரில பார்வை விழுந்தது அப்போதவள் அதிசயவொருதலாய்தென்னகாணுத கோதாரி நாயகனே நானிப்போது சன்னமாய்க்கினவுகண்டேனென்று கையைப்பிசைந்து நாம் கினவு கண்டோமாகில் இக்குறியொன்றுமாகாதென்று மனங் களித்தெழுந்து யாராகிலு மிவ்வேலை செய்ய முடியாது ஆனாலிது மனிதன்செய்த காரியம்போற்றெரியவருகிறதென்றறிந்துக்கொண்டு பதினாயிரம் தேவர்களின் காவற்குள்ளிருப்பதைக் கொண்டுபோக வல்லமையாளரெவருண்டென்றாராய்ந்து தெளிந்துகொண்டாள் பின்பப்படியிக்கட்டாகிய விடத்தில் யாதொரு தடங்கலுமில்லாமல் கொண்டுபோக வல்லமையாளர்யாவரென்றெண்ணித் தான் பிடித்திருந்த அலங்காலத்தை நினைத்துத்தானே வெட்கிக் கடலினுள் மூழ்கி யிக்கவியைப்பாடினாள்.

ஓ கள்வனே உன்னுடைய பேரையுமுன்றேயத்தின் பேரையும் நீ மலர் கொண்டுபோன வேலையுங் காண்பின் உன்னைப்போல் உலகில்வல்லவனொருவனிரான நீசெய்த வேலையானது மனிதரைக் கொண்டாடுகிறதில்லை ஆயினும் மலர்போன்ற உன்கையை நான் காண்பேனாகி லென்கண்ணிலுன்னிருகையை யொத்தி முத்தமிட்டுக் கொள்ளுவன் இவ்விடத்தில் பரிகள் சுற்றிக் காவலாயிருக்க அதுகளைத் தப்பித்து அதன் பேரிலு மோதிக்காமல் மலரின் கருத்தாகவேயிருந்து மனதிற் சுரங்கமிட்டு அனியாயமாக மலர் கொண்டு போய் விட்டாய் உண் கண்ணானது யாதொன்றையும் பாராமல் என்னுதட்டின்மேல் விழுந்து. தேன் கூண்டைக் கண்டாயேயொழிய அதிலுள்ள மதுரத்தை யறியாய் ஆனால் சீட்டிலெழுதி சர்க்கரையின் பெயர்போலுருசைகண்டாய் ரொக்கத்தை நீ எடுத்துக்கொண்டு போய்விட்டாய் வெறும் பெட்டிமட்டுங்கே கிடக்கின்றதென றுபலவாறுகக் கவிபாடிப் புலம்பினள் பின்பு ஆயாசத்தோடு கைசேதப்பட்டுக் குளக்கரையை விட்டுப் பொன்

போலிங்குமா த்திஞுமேல் வந்து உட்கார்ந்துகொண்டு காவல் வைத்திருந்த தேவுகளை யழைத்து உங்களை அம்ம லருக்குக் காவலாக வைத்திருந்ததில் பயமென்ன அதை ப்பறித்து யாருக்குக் கொடுத்து விட்டீர்களென்று ஒவ்வொ ருபரிகளாக விசாரித்துதண்டனைக்கொடுக்க ஆரம்பித்தாள் ஆனால் விதியினம் பறக்கையில் மசுத்தியின் சேடயமதத் ததைத் தாங்கும் வென்று கொஞ்சமுமறியாமல் பரிகளுட னுங்களுக்கு வல்லு ரோடிருக்க நா டமூண்டாகில் வெ ளையு மலரையும் என் எதிரில் கொண்டுவந்துவிடுங்களெ ன்றுசொல்ல தேவுகள் நடுநடுங்கி மனப்பயத்துடனே யப் போதே எழுநூறு பரிகளையும் மலரையுங் கண்டுபிடிக்க வெளிபபட்டார்கள் மலரைப்பறித்தவ னின்னானென்று அறியாதவர்களாகையால் எங்குந்தேடியு மவனைக்காண வல்லை இவர்மான மெய்தான் காணுதவனுடைய அடை யாளத்தை எவ்விதமாகக் கண்டுபிடிப்பன் அவனுமிவ னைப்போலாகி விடுவானுகி லவனைக் கண்டுபிடிப்பான் ஆயி னும் காவலினுடைய மனதினுள் காமவிற்பட்டு வந்து சந்தாய் விட்டது அதனால்வள் அக்கள்ளனைப் பிடிக்க மனந்தாளாதவளா யவனைக் கண்டுபிடிக்கத் தானே மாறு வேடமாக வெளிபபட்டார்கள்.

விருத்தம்-இ-ம்-புன்னகவராளி.

புந்திபுண்ணாகநொந்து பூவையாள்சேரப்பட்டு
நிந்தனைக்கிடமுமாச்சே நேர்மலரதுவும்போச்சே
வந்திந்தக்கோலஞ்செய்த மன்னவன்யாரோகாணேன்
எந்தநாள்திசையோவென்ன வந்திழைப்புறப்பட்டாளே

தரு-இ-ம்-புன்னகவராளி.

தேடப்புறப்பட்டாளே பகாவலி தேடப்புறப்பட்டாளே
தேசதேசந் திரிந்து தேடிப்பிடித்திட
மாய்வேடங்கொண்டு மன்னனைப்பிடித்திடதேட
மாயவேடக்காரன் மருமமறிந்தவன்
பாமுள்ளளவீர பாக்கியனைக்காணதேட
ருதுங்கள்ளனுட சிமையும்பூமியும்
சேதிமுழுதுங்கண்டு திருடனைப்பிடித்திடதேட
நன்று அவனுடைய நடத்தையறிந்துபின்
சென்றுமலரையிங்கு சேர்க்குவோமெனநாடிதேட

### வசனம்.

இவ்விதமாக சகலதேசங்களு மவனைத்தேடிப்பார்க்கையில் இவள் சகல தேசங்களையும் மனிதர்களையும் பார்ப்பாள் இவனை யொருவரும் பாரார்கள் இவ்விதமாகத் தேயமெல்லாந் தேடித்தேடிக் கடைசியிற் பூரோப்பென்னும் பட்டணபபோய்சேர்ந்து வீதிவீதிகடோறும் பலமாகப் பெற்று இவளுஞ் சந்தோஷத்தை யடையாள் இன்னம் வீடுவீடுகடோறும வாருமல் வாசற்படியில் பேரிகைமுழக்கமிடுவதைக்கண்டு ஆரம்ப ஆச்சரியப் பட்டவளாகிப் பின்பு கடைசியிற் றன்னுருவை மாற்றி வேற்றுருவமாகிப் பதினறு வயதினையுடைய மானிடவேடந் தரித்து அந்நகரிலொருவனை யிஷ்டம்செய்து இதென்ன வினோதம் வீடொன்றும் தவருமல் வாசற்படிகடோறும் பேரிகை முழக்கத்தோடு பேரின்பஞ்செய்கிறவித மென்னவென்று கேட்க அதற்கவன் இவ்வரசன் புத்திராதிகளதிக வருத்தமெடுத்துச் சிலநாள்வரைக்குந் தேசசஞ்சாரஞ்செய்து குலோபகாவலியின் மலர் கொண்டுவந்து கொடுக்க அதை யரசன்வாங்கித் தன் கண்ணிற்றேய்த்துக் கொண்டவுடனேவானவெள்ளிப்போன கண்கள்ஒளிமேலிடவும்அதனுலரசனன்று முதலாக ஓர்வருடம்வரையில் மனைவாசற்படிகள்தோறும் பேரிகையழகரோடு எளியோர் வலியோர் பெரியோர் சிறியோர் எல்லாரும் மகா சந்தோஷஞ் செய்யுங்களென்று கட்டளையிட அதுபோலவே நடந்து வருகிறதென்றார் அதை யப்பெண்களுக்கரசிகேட்டு அதிகசந்தோஷத்துடன் அல்கம்துலில்லா இன்று நாம்நாடி வந்தது கைகூடினது நம்முடைய கஷ்டமும் நிறைவேறினதென்றும் நம்மை மோசஞ்செய்தானே அவனுடைய நகரமு மிந்தநகரமா யிருக்க வேணு மென்றெண்ணியவளினி நமதுகையி லகப்படுவான் நமது கலக்கங்களும் நீங்கிவிடு மென்று உடனே கடற்கரையோரஞ்சென்று உடல்மேலிருந்த வஸ்திரங்களை யிறக்கிவிட்டு அதில் மூழ்கியுடலைச் சுத்தி செய்துக்கொண்டு சந்திரனைப்போல வெளிசாமக்கணையேறி ஆணுருவந் தரித்து மிகுந்த அலங்கிர்தத்து னேயரசன் மெத்தையின் புறமாகச் சென்றும் இன்னங் கடைவீதியின் புறமாக மெள்ளமெள்ளக்குல

க்க நடையாக வந்துவருவதை யாராவது பார்க்கில் அச்சித்திர வடிவாளைக்கண்டு திகைத்து மலைத்து மயக்கத்தோடு அதிசயப்படுவார்கள் அவளின் கண்ணைப்பானது யார் மேற்படுமோ அவர்கள் மயங்கி விடுவதேயன்றி நிலையிருக்கள் இன்ன மவளினழைகைக் காண்போர்களெல்லாம் துவண்டைப்போலமெய்மறந்து நின்றுவிடுவார்கள் இன்னம் அனேக ரவளுடைய அழகின் பிரஸ்தாபமானது இருக்க இருக்க அரசனுமிந்தச் சங்கதியையறிந்து சகல மனிதர்களால் கேள்விப்பட்டு அவளை பார்க்கவேண்டுமிங்கே கொண்டு வாருங்களென்று அரச னுத்திரவாயினது அதுபோலவே அவளை யரசன் கொலுமுன் கொண்டு போய் விடவும் அரசன் அவளை நோக்கி நீயெங் ருந்து எங்குவந்தாய் உன்பெயரென்ன உன் னூர்ப்பெயரென்ன நீ என்னத்திற்காக விங்குவந்தாய் சொல்லென்று கேட்க அதற்கவள் என்றேயத்தின்பேர் சூரியகாந்தி பட்டணமென் பெயர் பாரோகு நான் சேவகத்தொழிலைத்தேடி யிங்கடைந்தேனென இப்போது தங்களுடைய தர்பாரில் சேரவேண்டு மென்று அடியேன் நாட்டத்திற்கோருகிறேன் தங்களிஷ்ட மெவ்விதமோ நானறியேனென்றபோது அரசனதைக்கேட்டு சந்தோஷத்தோடு நல்லதென்று அன்னவஸ்திரம் நிதிமுதலியவை இவன் வந்துகேட்டா வில்லையென்று தாங்கள் சொல்லாமல் கொடுக்கவும் தர்பாருக்கு வரத்துப்போக்கா யிருக்கும்படி யுத்திரவுகொடுத்தான்.

அதேப்பிரகாரம் யிவளுக்குச் சிலநாள் வரைக்குஞ் சென்றுவருகையிலொருநாள் ளரசன்குமாரர்கள் நாலு பேரும் அரசனுடையகொலுமுன்பாகமார்போடணைத்து முத்தியிட்டு பின்பவர்களை நாற்காலியினுட்காரும்சைகை செய்தான் அப்பே தந்த சடையிலுள்ள ஒருவனை பகாவலிபார்த்து இன்னல்வரும் யாரென்றுகேட்க அதற்கவன் நீயறியாயா இவர்தானரசன் குமாரர்களென்றுசொல்ல அதை பகாவலிகேட்க இவர்களால் அம்மலரைக் கொண்டுவர அவ்வளவு வல்லமையுண்டாவென்று தன்னுடைய அறிவென்னு முரைகல்லிலுரைத்துப் பார்க்க இவர்கள வ்வேலை செய்தோர்களென்று தன் புத்தியிலகப்படவில்லை

பின்பதைக்கொண்டு எவ்வளவாலோசித்துத் தோன்றுமல்கடைசியி லிவர்களல்லா யென்று முகக் குறிப்பால்நிதானித்துக்கொண்டு பின்பவ ளரசனுக்கு இளங் குமாரர்களுண்டா அம்மலரைக்கொண்டு வ ப்போனவர்களியாரென்று விசாரித்தாள் அதற்கவர்களின்னம் யாருமில்லையென்று சொல்ல அதைக் கேட்டவர்கள் அதிக பயங்கொண்டு கலக்கப்பட்டு விதியினுடன்பேரிட்டு இக்கவியைப்பாடி ஓஅஷ்டபாக்கிய மேனியே என்னுடைய மதியென்னுங்கத்தியினு லவிக்கக்கூட வில்லையே இன்னம் வருத்தமாகிய வினையைக்காணில் இராக்கதராகிய பொருளாகவல்லவா சொல்லவேண்டியது அப்படியிருக்க என்னுடைய கருதது வெளியாகவில்லை அதுமனி ரைக்கொண் டெப்படித் தைரியப்படப்போகிறது இப்போது நான்கூட வினைவை என்னென்று சொல்லுவேன் இது அதிகவிரிவானதென்று புலம்பலாயினள்.

---

விருத்தம்-இ-ம்-கலியாணி.

என்னையுமலையச்செய்ய எத்தனைநாளாய்பாவி
மன்னியமனதில்வைத்து மாருட்டஞ்செய்திட்டானே
கன்னியால்கோலமெல்லாங் கண் ணிறுற்கண்டுயானுன்
இன்னவதினலேசத் தானென்றுமறிகிலேனே.

தரு-இ-ம்-கலியாணி.

மோசஞ்செய்யவந்தானங்கே முடியளவும்விசம்பொங்க
வேசம்வேறுருவெடுத்துவேடிக்கையாய்ப்பார்க்ன்றனே
மூளையையுரியுமாப்போல் மின்மலரைக்கொண்டுபோனான்
காளையெவனோநான்காணேன்      கள்ளனையறிந்திலனே
பாவிமிக்கோலங்கள்செய்தான் பாதவித்துவாடவென்னை
ஆவிபரக்குதேதான்      அம்பலரைக்காணுதாலே
ஒளித்துக்கொண்டான்மூலையிலேஓடிதாமேவெல்லக்கண்டு
விழித்திட்டாலுங்கேளான்பாவி வேதனையுளக்கினனே

வசனம்.

இவ்வாறு தனக்குள்ளே தானே புலம்பி அவனைப் படிப்பட்டவனே என்னுடைய சோலையிலுள்ள மலரை என்னுயிரை பறிப்பதுபோல பறித்துக்கொண்டுபோய் விட்டானே என் பெயருடைய சீசாவை யுடைத்துவிட்டு மறைவாயிருந்து இன்னஞ் சிலகாப்பணத்தை பெறிந்தானே அதனால் நானலைந்து காடுகாடாக சீமைசீமையாக ஓடியலைந்துத்தேடினதற்கு இவ்விடம்மலரகப்பட்டதென்று மலர்மலர்ந்ததுபோல முகமலர்ந்து யாதொரு சந்தேகமுமின்றி அம்மலரை யபகரித்தவனுடைய பகடையே என்னைப்பார்ம்மறைந்து போகும்படி திரும்பிவிட்டதே யென்று நானெங்குபோவேன் யாருடனிதை முறையிடுவேன் அல்லாது நானென்ன முறையிடுவேன் அல்லது நானென்னமுறையிட்டபோதிலு மதை விசாரிக்கப்பட்டவரியாரென்று தன்மனதிலுட்டானே புலம்பிக்கொண்டு இவ்வரசனுக்கு முன்னம்பிள்ளைகளிருக்கிறதினால் இன்னவர்களைப் பார்க்கில் அவ்வருத்த வேலைகளைச் செய்யவிவர்களால் முடியாது ஆனாலின்னங் கொஞ்சநாள் பொறுத்துப் பார்க்கலாமதனாலென்ன விளைகின்றதோ அதையுமறிவோமொரு நாட்டங் கொண்டுவிட்டான் சுபகானல்லா இத்தனை உள்ளாவென் பேச்சாயிருக்கின்றது மோகம் மோகினையைத் தேடுவதாயிருக்க ஆனாலதை நிதானிக்கில் நேர்மையாகவே யிருக்கின்றது எப்படியெனி லெதுவரையில் மசூக்கு ஆக்குடைய நாட்ட மில்லாதிருக்கின்றதோ அதுவரையில் நாட்டம் வீணாயிருக்கின்றது அவன்றேடுதலும் பிரயோசனந் தாராது தேடும் வேளையில் நெருப்பு வைக்கினெஞ்சில் பந்தங்கொளுத்தியது போலிருக்கிறன அந்த நெருப்பானது மாசூக்குடையதா யிருக்கின்றது எந்தக் காமன் வெளிப்புறத்தில் காமினியைத் தேடில் செய்வன வெளிப்புறத்தில் உள்புறத்தில் பதம் வைப்பதா யிருக்கிறது ஆஷிக்கே அவ்லாமாசூக்கைக்கொண்டு முடிகுதலாயிருக்கிற அவ்வேலை மசூக்குத்தா யிருக்கின்றது வெளிரங்கத்தில் மசூக்குத்தா யிருக்கின்றது.

of Books, Madras

ஒன்பதாவது கதை.

## அம்மாலாவுடன் தேவுகள்வந்து

### தாசுல்முலுக்கிற்கு மெத்தையும் சோலையும் செய்து கொடுத்தவிபரம்.

9-வது பகாவலியின் மாடமுஞ் சோலையுஞ் செய்தபடம்.

வசனம்.

தாசுல்முலுக்குத் தன்தமையன் மார்களுடனே போகும் பாதையில் மலரைப் பிடுங்கிக்கொண்டு கனவருத்தமுற அடித்துப் பிடித்து தள்ளிவிட அதனால் மனம்நொந்து வெளியே புறப்பட்டவர்களைவிட்டுநீங்கிப் பின்னணியாக விறகை நெருப்புத் தின்பதுபோல சரீரத்தை மென்றுக் கொண்டு ஆயாசத்துடன் மலைவனம் வனாந்திரங் கான்யாறுகள் நதிகளெல்லாங் கடந்து தன்றகப்பனுடைய எல்லையில் புலிகரடி முதலிய ஜவான் மிருகங்களுள்ள வனத்திற் சேர்த்து சக்கிமுக்கிட்டு நெருப்புண்டாக்கி அந்நெருப்பின்மேல் அம்மாலா கொடுத்த ரோமத்தையிடவும் அம்மயிர் சால்டாங்கு வேகுவதற்கு முன்னமாக ஹம்மாலா 18 தேவு கணங்களுடன் சண்முடித் திறக்குமுன்னம் வந்து சேர்ந்து தாசுல்முலுக்கு பிச்சைக்கார வேடமாயிருப்பதைக்கண்டு மனம் நெருப்புப்போலாய் ஓ அரசன்குமாரனே என்மகளை நயன்னவேலை செய்காய் நீயுன் வடிவை இவ்வடி நோக்கிக் கொண்டாயெனக்கேட்க அதற்கரன்குமாரன் உன்கிருபையினா லெல்லோரும் க்ஷேமம ஆனாலெனக்கொரு நாட்டமுண்டு அதென்னால் முடிகிறதல்ல இதற்காக அதுகளைச் செய்து முடிக்கத் தங்களுக்கு வருத்தங் கொடுத்தேனென அதற்கு ஹம்மாலா நீயென்ன கற்ற கல்வி யெல்லாம் பேசுகிறாய் உன்னாட்டமென்ன அதை சீக்கிரமாய்ச்சொல்லென அதற்குத் தாசுல்முலுக்கு அக்காட்டில் பகாவலியினுடைய சோலைபோல மாடகூடங் களுண்டாக்கித் தரவேணுமென்று நாடுகிறேனென்றபோது அம்மாலா ஓமனிதனே ஈதொரு பெரிதல்ல சீக்கிரமாக உண்டாக்குவதற்கு நானவள் தோட்டத்தைக் கண்டறியேன் அப்படி காணாததை நான் எப்படி யுண்டாக்குவேனென

ன அதற்கரசகுமாரன் நானெப்படி சொல்கின்றேனோ அப்படி உண்டாக்கென்று சொல்ல அதை அம்மாளோ கேட்டு தன் தேவுகளை நகருகமனுப்பி முத்து கெம்புவயிடூரியம் கோமேதகம் பொன்வெள்ளி முதலிய அளவற்றவைகளைக் கொண்டுவரும் படியேவிட தேவுகள் அதுபோலவே மூன்று நாளைக்குள் மேலெழுதியவைகளைக் கொண்டுவந்து மலைபோல் குவித்து விட்டதுகள் அப்போதரசகுமாரன் எவ்விதங் காட்டினானோ அவ்விதமாகவே காட்டத் தொடங்கினதுகள்.

முதல் பத்து கெஜம் கடைக்கால்வெட்டி மண்ணையெடுத்து போட்டுவிட்டு அப்பள்ளிநிறையத் தங்கத்தை நிறப்பி முத்துவெள்ளிகளினால் சுவர்கள் ஜன்னல் முதலியவைகள் கட்டி உன்னதமான சிங்கார வேலைகள்செய்து முடித்து அச்சோலையைப் போலவே இச்சோலையுண்டாகிய கனமான வேலைகளும் தீர்மானஞ் செய்து முடித்தார்கள் இத்தனை வேலைகளுக்கு அப்பணத்தில் பேர்பாதியில் பேர்பாதி செலவாயினது மற்றப்பணத்தில் கால்பங்குபணம் அரண்மனைச் செலவிற்கும் கால்பங்கு பணம் கஜானாவிற்கும் சேர்த்துவிட்டு மப்போது அரசன் குமாரனுக்கு அவ்வேலைகளெல்லாங் கண்டு முடிவானதைப்பார்த்து சந்தோஷமாயினது அப்போ தஜமலா தாசுல்முலுக்கைப் பார்த்திப்போதெடுத்த வருத்தமெல்லாம் நீ கண்டாயா வெவ்வளவு கஷ்டமான வேலைகளைச் செய்துமுடித்தேன் ஆயினு முனக்காகத்தானெவ்வளவுவருத்த மெடுத்தபோதிலு மனிதனுக்கு இதற்கென்மடங் கொத்தாதாசைச் செய்யினு மவன் பகைத்தனம்விடான் நானுன்னை அதிகப்பிரியமாகவும் வருத்தமாகவும் வளர்த்ததுந்தவிர ஒருவரும்போகமுடியாத பகாவலியினிடத்திற்குப் போகவும் வைத்தேன் நீ யவ்விடம்போய்ச் செய்த வேலையினாலவளெங்கள்பேரில் எவ்வளவோ அதிகாரங்களையெல்லாஞ் செலுத்தினாள் அதையெல்லாம் பொறுத்துக் கஷ்டமெடுத்துக் கொண்டேன் நானிவ்வளவு வேலைகளெல்லாம் அந்த மருமூதாவை வேண்டிச்செய்தேன் ஆகையால் நீ பத்திரமாக இனிமேலென்மகளிக்கு யாதொருமனவருத்த முதலியவைகள் வாராதபடி காப்பாற்றென்று சொல்லி

அதிகாட்டளைகளிட்டுப் போய்விட்டது பின்பு மருமூதா வலையை யுபத்தில் வைத்திருந்தானே அவ்விடத்தற்கு அதிக ஆடம்பரமாகச்சென்று அங்குள்ளவர்களை யானை யின்மீது அம்பாரிகட்டி யதன்மேலவர்களை யேற்றிக்கொண்டு மூன்வெள்ளித்தடிக்காரருடன் குதிரையை வெள்ளி ப்பொன்னாற் சிங்காரித்து அதன்மேலேறி மேளவாத் தியத்தோடு ஆடம்பரமாக பாதைகடந்து பலேவனம்வனந்திரங்களை யெல்லாந்தாண்டி விடுதியாக இறங்கித் தான் புதியதாயுண்டாகிய மெத்தையிற் கொண்டுவந்துசேர்த்து அதிக சந்தோஷமாக இரதியுமதனைப் போலக் காமக்கட லில் மூழ்கிச் சுகமா யிருந்தார்கள்.

---

தாசுல்முலுக்கு கட்டிய மெத்தை

சோலையின் சங்கதியை சைபினுல் முலுக்கறிந்த விபரம்.

10-வது தாசுல்முலுக்கின் மாடதோப்பின் படம்.

---

தாசுல்முலுக்குடைய அடிமையில் சாதென்கிறவன் வனசஞ்சாரஞ் செய்துக்கொண்டிருக்கையில் அவ்விடம் சிலபேர்கள் தலைபேல் விறகுகளை யெடுத்துக்கொண்டு போகக் கண்ணுற்கண்டு அவர்களை நோக்கி நீங்களவ்விடங் கொண்டுபோகிறீர்க ளெவ்விடமாக இவ்விறகைச் செலுத்துகிறீர்களென்றுகேட்க அதற்கவர்கள் நாங்கள் ஷஹறிஸ்தானென்னும் பட்டணத்திற்கு நித்தியகாலமிதே தொழிலாக விறகு கொண்டு போகிறோமென்றுசொல்ல அதற்கவனெங்களுடைய அரசன் நூதனமாகயேற்படுத்திய பட்டணத்திற்கு இவ்விறகைக்கொண்டு போய் போசனம் சமைக்கும் வீட்டில் போடுங்களுக்குத்தகுந்த இனாம்களும் சரியான கிரையங்கொடுப்பான் பட்டணமுமதோ அருகிலிருக்கின்றது வாருங்களென்றழைக்க அதற்கவர்கள் நாங்களெங்கள் தலைமுறைவழியாக இதோ நாடிற்குவந்து விறகுகளையொடித்துச் சுமைகட்டி வழக்கமாக விற்பனைசெய்கிறது அப்படியிருக்க இக்காடிலொரு பட்டணமறியோம் அல்லதுண்டென்றுங் கேட்டு மறியோமென்

றுசொல்ல அதற்கந்தசாது நீங்கள் கொஞ்சதூரம் நடவுங்கள் உங்களுக்கு அந்த நகர்தெரிந்தால் வாங்க ளில்லாவிடில் திரும்பிவந்து விடுவீர்களெனச்சொல்ல அதை விறகுவிற்போர்கள் கேட்டு கிரயந்தருவதுந்தவிர இனமுங் கிடைக்குமென்ற ஆசையினால் அந்த சாது பின்னைநடந்துசிலதூரம் போகையில் அந்நகர் தெரியலாயினது அதைக்கண்டு விறகு விற்போரெல்லாம் அடாபாவி நீஎங்களைப் போதித்து இத்தீயில்விடவா கொண்டுவந்தாயடா குடிகேடா அவ்வினைவின்மேல் கல்லுவிழ அப்பட்டணத்தில் மண்ணுவிழவென்று எல்லோரும் நாங்கள்வந்த பிரயோசனம் போதும்போதுமெனச்சத்தமிட அதற்கவன் நீங்களொன்றுக்கு பஞ்சவேண்டாம் இவ்வெளிச்சமானது அம்மெத்தைகளுக்குப் பதிப்பித்திருக்கு முத்துமாணிக்கங்களினொளியென்று சொல்லி நீங்களென்பின் வாருங்களென்றழைக்க கூடவே இன்னஞ் சிலதூரம்போனார்கள் அவ்விடமுள்ள பூமியெல்லாம் பொன்னால் நிரப்பியதாய் தெரியலாயினது அப்போதெல்லாரு மவன்சொல்லை தப்பி முன்னேக்கி நடந்திடக் கடைசியிலவர்களை யரசன் முன்பில் கொண்டுபோய்விட அப்போதரசனவர்களுக்கு ஒவ்வொரு பிடி முத்துகளை வாரிக்கொடுத்து உயர்ந்தவிலையுள்ள வஸ்திரங்களு மினமாகக் கொடுத்தனுப்பினன் பின்பவர்களை நோக்கி நீங்களிங்குவந்து குடியாகச் சேர்வீர்களாகில் நித்தமுந்தவருமனிதற்கு மிரட்டிப்பாகப் பெற்றுக்கொள்வீர்களென்று சொன்னான் அதைக்கேட்டவர்களுந்த ஆசையினால் அதேபடி நாங்கள் வந்திருக்கவேண்டுமென்று நாட்டஞ் செய்து கொண்டோமென்றார்கள்.

பின்பவர்கள்வந்து குடியாகச்சேர்ந்துவிட இதைச் சுற்றிப்பக்கத்துள்ள சீமையோர்கள் கேட்டதிசயப்பட்டு பட்டணத்தைக்காணவேணுமென்று வருவோர்களெல்லா மிப்பட்டணத்தைக்கண்டு தங்கள் தேசம்போகார்கள் அவ்விடமே நிலையாக நின்றுவிடுவார்கள் இப்படி நாங்களெல்லாங் கலந்துபோவதைக் கொத்துவாலறிந்து அதை மந்திரிக்குச்சொல்ல அவையவ னரசனிக்குச் சொல்லிக்கொண்டேயிருப்பான் இப்படியிருக்க ஒருநாள் இன்றிரவில் ஆயிரம் வீட்டார் வீடுகளைவிட்டு ஓடிப்போய்விட்டார்களெ

ன்று கொத்துவால் மந்திரிக்குச் சொன்னான் அதற்கு மந்திரியவர்கள் போகுமிட முனக்குத் தெரியுமாவென்று கேட்க அதற்கவன் 25 மயில் வரைக்கும் ஒருகாட்டில் பொன்னுலனாடு பண்ணியதுபோல ஒருபட்டணஞ் செய்திருக்கிறது இன்னும் பட்டணத்தினுள் தோட்டமும் வீடுகளுங் கட்டியிருக்கின்றது இவ்வுலகிலெங்கு மதற்குச்சரியிராது இன்னு மவன்செய்யுந் தருமமானது ஆத்திமைபோலவும் நீதத்தில் நவ்வேவஷருவானைப் போலவும் அதிகநற்குணமோடு அரசு செய்கிறானென்றுஞ் சொல்லவும் அதனை மந்திரி நம்ப வில்லையேயெனில் இபபடிப்பட்ட வேலைகள் மனிதரால்செய்ய ஆகாத வேலைகள் அதை மனிதன்செய்து முடிக்க என்னவல்லமை யிருக்குதென்றுசொல்ல அதைக்கேட்டு கொத்துவால் ஏனடிக்கா யுண்மையான சேதிகள் வந்துகொண்டிருக்குதென்று அதெவ்விதமாய்ப்போயாகுமென்று பின்னும் அல்லாகுத்தஆலா எவ்வித வல்லமையுள்ளவனில் ஆண்பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவு மாக்கிவிடுவான் இன்னமிந்தத் துனியாவினுடைய வாழ்வு ஒரு பெண்ணுருபோலிருக்கிறது அதை யொரு ஆண்ருபமாகத் தெரிவிக்கவும் வல்லவனென்றுசொல்லி ஓ மந்திரியே இதற்கொப்பாக ஒருகதை சொல்லுகிறேனதைச் சற்றேகவன்மாகக் கேளும் அது யென்னவெனில்.

ஒரு அரசன்மகள் ஒருதேவியினுடைய உதவியைக் கொண்டு ஆணுருவாகி யொருபெண்ணை மணம்புரிந்த கதையை நீ கேட்டதில்லையா அதெப்படியெனில் முன்னாளிலே ராசனுக்கு நல்ல நல்ல அழகினையுடைய மனைவியர்களநேக ரிருந்தார்கள் அதிலாருக்கும் பிள்ளைகளில்லாமலிருந்தது அம்மனைவியர்களோர் மனைவி அதிருபவதியாயிருந்தாள் அவள் கற்பவதியாகி ஒருபெண்ணைப் பெற்றாள் இப்படி மூன்று தரங் கற்பவதியாகி ஒருபெண்ணைபெற்றாள நாலாவது தரங்கற்பவதியாயிருக்கையில் அரசன் இவளிந்ததரமும் பெண்ணைப் பெறுவாளாகில் உயிரோடே கொன்றுவிடுவேனென்று பகுஞ்செய்துக்கொண்டான் கட்டளைப்பிரகாரம் அந்தமுறையு மதிக அழகினையுடைய ஒரு பெண்ணைப்பெற்றாள் அவ்வழகினைக்க

ண்டு இது பெண்ணென்றால் அரச னிருவரையும்வெட்டி விடுவானென்கிற பயத்தினால் வெட்டவெளி ஆண்பிள்ளையென்று பெயர்வைத்தான பின்பு சாஸ்திரவாதிகளையழைத்து நீ இப்போது பிறந்திருக்கிற பிள்ளையின் முகத்தை 10 வட்டம் வரைக்கும் பார்க்கக்கூடாதென்று கட்டளையிட அதைச் சாஸ்திரவாதிக ளரசனுக்கோத அதைக்கேட்டரசனு மதுபோலவே யிருந்துவிட்டான் பின் அந்தப் பெண்குழந்தை நாளுக்குநாள் மதிபோல் வளர்ந்து வருகையில் அக்கணக்கின் வருடங் கிட்டநெருங்கிவர அப்போது மகளுக்கு சேதியைத் தெரியப்படுத்தினாள் மகளே இனிமேல் அரசனிடத்துக்கு நீ ஆண்வேடம் போட்டுக்கொண்டு போக்குவரத்தாக இரு அதில் நம்மிருவர்க்கும் மீட்சியென்று சொல்ல அதுபோலவே யப்பெண் ஆண்வேடந் தரித்துக்கொண்டு தகப்பனிடத்திற்குவந்து அதிகநேயமாயவனிடத்திலிராமல் போக்கு வரத்துமாயிருந்தாள் அப்படி யிருக்கையில் தன்குமாரனுக்கு விவாகம்செய்யத்தகுந்த வயதானதென்று வேறொரு ராசனிடத்தில் பெண்ணெப்பந்தமுஞ்செய்து சந்தோஷமா யிருக்கையில் நாளும் சமீபமாய் நெருங்கினது அப்போதரசன் தன் குமாரனுக்கு அதிக விலையுயர்ந்த ஆடையாபரணங்களைத் தரித்து யானையைப் பொன்வெள்ளியினால் சிங்காரித்துத் தன்னெதிரில் உட்கார வைத்துக்கொண்டு சேனைகளெல்லாம் சூழ்ந்துவர நகரத்தைவிட்டு வெளியாப்போகையில் அப்பெண் தான்செல்லும் ஹாலை அந்த ஆடையின் பேரில் சிரிப்பும் அழுகையுமாகத் தன்வெட்கத்தை நினைத்து விசனத்தோடு விதிவிடுதியாக இழுத்துச் சென்றுக்கொண்டிருக்கையில் ஒ விடுதியில் காடுமலையாக யெதிர்ப்பட்டது அதிலன்றிறங்கி யிருக்கையில் அன்றிரவில் இராசகுமாரத்தி தன்வெட்கத்தின் கொடுமையினால் இதற்காகிலும் உயிரை மாய்த்துக்கொள்ளுவது உத்தமமென்றெண்ணி ஒருவருக்குந் தெரியாமல் அக்காட்டினுள் போய்விட்டாள் தன் மனதின் ஆயாசத்தினால் நலமென்றெண்ணி அவ்வனத்துள தொலைதூரமாக நடந்துபோகையில் ஒருவிருட்சமானது தோன்றினது அவ்விருட்சத்தினடியில் ஒரு பெருமலைபோன்ற தேவனானது வாசஞ் செய்யு

மிடமாயிருந்தது அவ்விடம் அத்தேவான துட்கார்ந்துக் கொண் டிருக்கையில் இவ ளங்குபோய்ச் சேரவும் இவள் முகத்தின்வடிவை யதுகண்டு அவளழகின்மேல் வெறி கொண்டு மனிதனுடைய வடிவுபோலாகி அப்பெண்ணெ திரில்வந்து அவனின் சங்கதிகளைக் கேட்டது அப்போ து அவளாதியோடந்தமாகத் தன்னுடைய சங்கதிக ளியா வற்றையுஞ் சொல்லத்தொடங்கினாள்.

---

விருத்தம்-இ-ம்-கலியாணி.

சொல்லெனக்கேட்டாயென்றன் சேதிகள்முழுதுமின்று
நல்லதோர்விபரமாக நானுரைக்கக்கேளாய்
வல்லவன்மக்களொன்றேதான் வகுத்திட்டவிதிதப்பாது
நல்லவரிதனைக்கொள்வார் நிலையிலா ரறிந்திலாரே.

தரு-இ-ம்-தோடி.

சேதியெல்லாஞ்சொல்லச் சீருடன் கேட்டிடு ஐயாவேவெகு
துன்பமடைந்தவ ளிந்தவுலகத்தில்ஐயாவே
நீதியுள்ளராஜ னென்றன்றந்தையரும்ஐயாவே
நீதியுமானபிள்ளை ஆணொன்றுமில்லைகாண்ஐயாவே
பிறந்தபிள்ளையெல்லாம்பெண்ணாய்ப்பிறந்ததுஐயாவே அவ
ர்-பின்புவிரதமொன்று செய்துகொண்டாரிதுஐயாவே
இறந்திடாமல்பிள்ளைபெண்ணாய்ப்பிறந்தாக்கால்ஐயாவே-அ
தை-ரண்டுதுண்டாய்வெட்டி எடுத்து எறியேனென்றார் ஐ
யாவே-அந்த முறையுமாணாய்ப்பிறக்காமல் பெண்ணாக ஐ
யாவேபிள்ளை-அழகாய்ப்பிறந்திடவையர்க்குச் சொல்லாமல்
ஐயாவே-இந்தப்பிள்ளையாணாய்ப் பிறந்ததென்றோதினார் ஐ
யாவே அவர்-இன்பமாயியன்றெனைவைத்துவளர்த்தார்கள்
ஐயாவே-எனக்குமணஞ்செய்ய இப்போது சொல்லுகிறார்
ஐயாவேதான் ஈனமுள்ள பெண்ணையிருக்கையிலென்செய்
வேன்ஐயாவே தனக்குரையாமல் தனியாக யிங்குவந்தே
ன்ஐயாவேஇப்போ-தாமசமில்லாமல் காப்பாற்றிடுவென்னை
ஐயாவே

வசனம்.

இவ்வாறு அரசன்மகள் அதிகவிசனத்தோடு சொன்னதையெல்லாம் அந்தத்தேவானது கேட்டு அதிக இரக்கத்தோடு ஓ பெண்ணே நானுனக்குத்தரும்பொருளை அழித்துவிடுவாயோவென்றுகேட்க அவளதைநானழிக்கேன் உன்சொற்படி நானடப்பேனென அப்போதுதேவானது என்னுடைய ஆணைகுறியைநான் ஒட்டிவைத்துக்கொள்ளுகிறேன் உன்வேலையை முடித்துக்கொண்டுபோகும்போது அதை யெனக்குக் கொடுத்துவிட்டு உன்குறியை நீ வாங்கிக்கொண்டு போகச்சம்மதி யிருந்தாலப்படியே முடித்து தருகிறேனென்றுசொல்ல அதையவள் கேட்டது போலவே சம்மதிக்கவும் தன்குறியை யவளுக்குக்கொடுத்து அவள்குறியைத்தான் வாங்கிக்கொண்டது அப்போதவளதிகசந்தோஷத்தோடு ஆணுருவங் கொண்டுதாளிறங்கியிருந்தகூடாரத்தினுள்வந்து விட்டாள் பின்பு விடுதியாகச் சிலநாள்வரைக்குப் நடைநடந்து பெண்கொடுக்குமரசன்றேயமடைந்த மகனுக்கு விவாகமுதலியசடங்குகளைசெய்து கலியாணத்தைச் சந்தோஷத்தோடு முடித்து அரசன் தன்குமாரனை யங்குவிடுதிவிட்டுத்தன்றேசம்போய்ச்சேர்ந்தான் பின்பு ராசகுமாரன் மாமியார் வீட்டில்சில நாள்வரைக்குமிருந்து உண்டு சுகித்து பெண்சுகபரிந்து ஒரு ஆண்பிள்ளையும் பிறந்தது அப்போதரசன் குமாரன் நாம்வந்து வெகுநாளாயிற்றென்று தன்னகரமடையக்கருதி தம்மனையாளோடு மாமனளித்த சீதனங்களையெடுத்துக் கொண்டுவந்து பாதையை தொலைத்துவந்து முன்வந்திறங்கியிருந்த விடத்திற்கு வந்தான் அப்போதவன்தான் வாக்குக்கொடுத்தபடி தேவுடைய இடமாகவும் மாத்தடியிற் சென்று நோக்குகையில் அது ஒரு கிழவியைப்போல் மூக்காடிட்டழுதுக் கொண்டு அழுமுகமாக உட்கார்ந்துக் கொண்டிருந்தது அப்போதரச குமாரன் தேவை நோக்கி உன்னுடைய கிருபையைக்கொடு நானென்னுடையநாட்டத்தைப்பெற்றுக்கொண்டேன் இப்போதுன்னுடைய குறியை வாங்கிக்கொண்டு என்னுடைய குறியை யெனக்குக் கொடுமெனக்கேட்க அதற்குத் தேவானது இப்போதெனக்கு நீ சொல்லியவை கொடுக்க முடியாது விதி

யிலெழுதினபடிவாயின தென்று சொல்ல அதென்னவித ஞ்சொல்லென வப்போது தேவானது இதேவடிவாக உன்வழிபார்த்துக்கொண்டு உட்கார்ந்துக் கொண்டிருந்தே ன் அப்போதுபாதுஷா வென்னும் தேவானது இங்கே வந்து அதை கொன்டெனக்கு அதிக காமமீறினதும் மோகத்தின் வலுவினால் பொறுக்கமுடியாமலெதிரோடி அவளைமாரோடு கட்டியணைத்து இருவருங் கூடிக்கலந்து மகிழ்ச்சியாயினோம் ஆனாலிப் போது நான்உன்பெண் குறியைக்கொடுத்துவிட்டு என்னுண் குறியை வாங்கி ஒட்டிக்கொள் வேணுமில் என்பிழைக்குந்தனத்தை விட்டுக்கைக மூவிட வேணுமாகையாலிப்போதெனக்கு ஆடவர்களுக்காகிலும் மாதர்களுக்கு அதிகமோகமுண்டென்று தெரியவந்தது ஆகையால் இப்போது வந்தவழியேதிரும்பிச் செல்லு என்வஸ்தையுனக்கேதத்தஞ்செய்து விட்டேனென்று சொல்லிப் புலம்பலாயினது.

---

தரு-இ-ம்-புன்னுகவாரளி.

அன்றுமுடிந்தவனை பொன்றும்தப்பாதிங்குவிதியே
இன்று அவளுக்கு ஈயலானேன்குறிவிதியே
மதியாலிட்டகாம மாற்றல்லலியுணடோவிதியோபுவியில்
சதவினைவந்தால் நடுக்கமுடியுமோவிதியே
ஆகாக்கருத்தை ஆக்கிடமுடியுமோவிதியேவிட்டுப்
போகாக்கருமத்தைப்போக்க முடியுமோவிதியே
கட்டளைப்படியாச்சு காணக்கண்ணுலிங்குவிதியேஇப்போ
மூட்டிவிழுந்தாலு முடிந்ததுவாராதுவிதியே

---

வசனம்.

இவ்வாறு கொத்துவால்சொல்ல அதைமந்திரி கேட்டு அல்லாஹுத ஆலாவினுடைய வல்லமைம உண்மையாயிருக்கின்றது அதிலெனக்குயாதொரு சந்தேகமுமில்லை ஆனால்இவ்வதத் தொழில்கள் மானிடரைக்கொண்டு முடிக்கிறது என்னறிவில கப்படவில்லை இதையறிவுள்ளோர் கேட்கிலும் அதையொத்துக் கொளுவார்களென்றுசொல்

ல அதற்கு கொத்துவால் நீ ஒருபகீரைக் கொண்டொரு குருவியின்கதை கேட்கவில்லையோவென்று சொல்லத் தொடங்கினன்.

அதென்ன வெனில் சுலையுமானபியினர சாட்சிநாளையிலொருநாள் பெண்ணொன்றிரண்டு குருவிகள் வீதியிலிறங்கி மேய்ந்துக் கொண்டிருக்கையில் ஒருபகீரானவன் சும்மாயிட்டுக் கொண்டு தூரமாகவருவதைநோக்கி பெண்குறி ஆண்குருவியோடு பகைவன் வருகின்றான் அவன் காத்திலகப்பட்டு வருத்தமடைவதற்கு முன்னமாக எச்சரிக்கையாயிருப்பது நலமென்றோத அதற்கு ஆண்குருவி நாயன்புறத்தைச் சேர்ந்தோரால் யாதோர் சந்தேகமுமில்லை அவர்களிறைபரேன் வழியேரில் நடக்கப்பட்டவர்கள் அவர்களொருவருக்கும் வருத்தமுங் கொடுக்கிறதில்லை யென்று ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டிருக்குந் தருணத்தில் அந்த பகீரும் அவ்விடம் வந்துசேர்ந்து தன்னுடைய அக்குளினுள் மறைத்துவைத்திருந்த அம்பையெடுத்து யதின் பேரில்விடவும் அது ஆண் குருவியி னிறகிற்பட்டு ஓரிறகு ஒடிந்துவிட்டது அப்போது அவன் கையிலகப்படாமல் தட்டுவிட்டுத் தடுமாறி சுலையுமானபி யிடத்திற்குப் போய் மின்னின்றவனைப் புகழ்ந்து மிகுந்த வணக்கத்துடனின்று பகீரென்னைவீணாக அடித்து இறகை ஒடித்து போட்டானென முறையிட்டது அதனையவர் கேட்டுடனே யவனையழையென அப்பேர்தாசன்முன் கொண்டுவந்து விடவும் சுலையுமானபி வெகுகோபத்துடனே யவனைநோக்கி நீயேன் இதை யடித்தாயென்று கேட்கவுமதற்கு அவன் நானிதையடித்ததினாலென்னகுற்றம் வந்து நேரிட்டது ஏனெனில் இது மனிதர்கள் தின்னும் வஸ்தாயிருக்கின்றதெனச்சொல்ல அதை அக்குருவியானது கேட்டு நானே யீனத்தவன் இன்னம் எல்லா பறவைகளிலும்சிறியபறவையாயிருக்கின்றேன் இன்னம் நான் இஷ்டவாளிகளுடன் பால்பழம் போல இஷ்டம் வைக்கிறவன இன்னம் பகைவனைக்கண்டால் புலியைக்கண்ட மான்போலே யோட்டப்பட்டவன் நானுன்னுடைய உடுப்பைக்கண்டு மோசஞ் செய்வாயென்று நம்பி சயன்பாதையிலுள்ளவன் யாருக்குங் கெடுதலை செய்யேனென பெண்ணினதற்

கு இப்போது நீயி தானுடைய உடுப்பு மயக்கமோசத்
தினுள் நிறைந்திருக்கின்றது ஆனதாலிப்போதைகழட்
டிவைத்துவிடு இன்னமென்னைப்போலுன்னுடம்பை உன்
மோசத்தின் வலையிலகப்படாதிருக்கும் படியெனச்சொல்ல
அதை கலையுமாநபிகேட்டு அதிக சந்தோஷமாய்ப் பகீ
ரை லஹனத்துச்செய்து அனுப்பிவிட்டார்.

இப்படி சில காலங்கழிந்தபின் ஒருநாள் அக்குருவி
யானது ஓரிடத்தில் மேய்ந்துக்கொண்டிருக்கையில் ஒரு
பகீரானவர் அதைத் தந்திரயுக்தியினால் பிடித்து கூண்டி
லடைத்து வைத்துக்கொள்ள அப்போதக் குருவியானது
எதினிமேல் நாமுயிரோடிருப்போமென்கிற நம்பிக்கை
யற்று இப்படிச் சொல்லத்தொடங்கினது ஓ நன்மைவழி
யின் மனிதனே யென்னை விற்பனை செய்வதினாலுனக்கு
என்னபிரயோசனங் கிடைக்கும் அல்லது என்னை யறுத்
துத்தின்றாலும் உன் வயிறும் நிறையாது அல்லதுஎன்னை
வைத்திருந்தபோதிலும் யாதொருபலனுமில்லை ஆனதா
லென்னை யாதொன்றுஞ் செய்யாமல் விட்டு விட்டால்
உனக்கு நலமாகிய சில சேதிகள் சொல்வேனென அதைப்
பகீர் கேட்டு அதிக சந்தோஷப்பட்டு அக்கூட்டைவிட்டு
வெளியாக்கி அதன் காலைப் பிடித்துத் தன்கையின்மே
லுட்காரவைத்துக் கொண்டு நீயெனக்குச் சொல்லுகிறே
னென்றதைச் சொல்லென்று கேட்டான் அப்போதுகுரு
வியானது ஒருலகத்தார் அல்லாகுத ஆலாவை நாடுவா
ராகில் ஒருசியின் கண்ணினுள் எழுபது ஒட்டகத்தைப்
புகுகவைப்பான் அது உண்மையாயிருக்கின்றது அல்
லாவின் வல்லமையைக்கொண்டு ஒன்றும் தூரவில்லை
ஆனால் கிட்டேயிருக்கின்றதென்பேரில மனிதன் எப்போ
தும உண்மையென்றெண்ண வேண்டியது இரண்டா
வது எந்தவேளைக்கும் தனக்கு உத்தியாருக்கில்லையோ
அதை நினைப்பதைக்கொண்டு துக்கத்தி லிருக்கலாகாது
ஆனாலென்னை விட்டுவிட்டாலிதற்குமேலுஞ் சொல்வே
னென அதை பகீர் கேட்டுவிடவும் அக்குருவியருகிலுள்ள
மரத்தின்கிளையில் பறந்து உட்கார்ந்துக்கொண்டு ஓபகீரே
நீ பெரிய அறிவில்லாதவனாயிருக்கிறாயிப்படி யகப்பட
வேஎன்னை அடைத்து தோற்றுவிட்டாயே என்னுடைய

வயிற்றிலுள்ள விலையில்லாத மாணிக்கமொன்றிருக்கின்றது நீ என்னைக்கொன்று தின்பாயாகிலது உன்கையில கப்படுமே யென்றுசொல்ல அதைப் பகீர்கேட்டு கைசேதமேயென்று கையைப் பிசைந்துக்கொண்டு ஓ பறவையே மிஞ்சினது நலமாயிற்று அப்பிரயோசன மென்னைவிட்டு நீங்கின ஆனாலுங் குறைவில்லை இப்போதாவது ஒரு புத்தியானது சொல்லென்றுகேட்க அதற்குக் குருவிஉனனுடைய மனம் வழுவழுப்பானதா யிருக்கின்றது என் மொழி அதன்பேரில் பிரயோசனந்தராது வீணானதைச் சொல்லி என்னபயனுண்டு குருடன் முன்பின் அழுதால் கண்ணிற்குக் கேடென்று சொல்லுங்கதைபோலவாம் ஓ அறிவில்லாதவனே இப்போதும் நானுனக்குச்சொல்லியது என்றறியாமல் என்சொல்லால் நீமயங்கி என்னைவிட்டுவிட்டாய் ஆனதால் நான் மாணிக்கத்தை யெப்படிவிழுங்குவே னென்றுசொல்ல நீயறியாமற் போனாயென்று குருவி பறந்து போய்விட்டது பகீரும் ஆயாசத்தோடு தன்னகரம் போய்ச்சேர்ந்தான். இப்பேச்சனுற் றங்களுக்கு அசத்தியமுண்டு அல்லாகுத்த ஆலாவிற்கு எல்லா வித்தைக்கொண்டு குதரத்தும் வல்லமையுமுண்டு ஆனால மனிதனுக்கு வேண்டுதலையா யிருக்கின்றது புன்னம் யாதொன்றும் நிசமாகக்கண்டு அரசர்களுக் கறிக்கையிடவேண்டியது காணுமுன்னமே சொல்லலாகாது இதற்காகஉனக்குத்தகுமாயிருக்கின்றது முன்னமாக நீபோய் உன் கண்ணால்பார்த்து பின்னரசனுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று சொன்னான்.

### பதினேராவது கதை.

### சைனுல் முலுக்கு தம்மாசனேடு படைகளுடன் விருந்துண்ணப் போனதும் தாசுல்முலுக்கையும் பகாவலியையும் நோக்கிய விபரம்.

---

11-வது சேனைகளின் படம்.

வசனம்.

அதிகவல்லமைபொருந்திய கொத்துவால்கடைசி மந்திரியினிடம் விடைபெற்றுக்கொண் நிகாரெனும்

பாதையைப்பற்றி பலதூரம் நடக்கையில் ஹீராவென்பவள் இவ்வனத்தில் ஒரு அமளிகுமளியாகின்ற புகையைப்போல அதனுடைய காந்தி ஆகாயமட்டு மளாவுகின்றதென்று ஒளித்தான் அதற்குள்ளே சில குதிரைகள் முன்னுகினது அங்குநோக்கிப் பொன்னிறுலுள்ள பூமிதோன்றினது இன்னந் தருக்களும் மாளிகைகளும் விசித்திரமான மனைகளும் தெரியலாயினது அதை தீயின்வெளிச்சமென்று சந்தேகங்கொண்டார்களே அதுதீயல்ல அம்மாடகூடங்களினுடைய பிரகாசமாயிருந்தது அதற்குள்ளே கொத்துவாள் வருகிற சங்கதியைத் தாசுமுலுக்கிற்கு ஒற்றர்கள் தெரிவித்தனர் அதைக்கேட்ட அரசன் அவுசுகளைப் பனிநீரால் நிறப்பி காரிஞ்சாக்கள் விடுங்கள் இன்னைம் மாணிக்கத்தால் சிங்காரித்த தாழ்வாரத்திலுட்கார்ந்துங்கள் கொத்துவாலையென்று கட்டளையிட அதுபோலவே கொத்துவாலை யுட்காரவைத்தனர் அப்போது கொத்துவால் அவ்வீட்டை எந்தப்புறமாக கண்ணால் நோக்கி அதிலுள்ள முத்து மாணிக்கங்களுடைய ஒளிவு மின்னலைப்போல பிரகாசித்திருக்கின்றது பின்பு இரண்டரைமணி நேரத்திற்குப் பொன்வெள்ளியினிழைத்த முத்துமாணிக்கம் பதித்திருக்கும் சிம்மாதனம் கொண்டு வந்து வைக்கச்சொல்லி கட்டளையிட அதுபோலவே கொண்டுவந்து வைத்தார்கள்.

---

தரு-இம்-ஆனந்தபைரவி.

அந்தமுங்குணமும்வாய்ந்த ஆடார வீரசூரன்
சந்திரவதனமன்னர் தாசுல் முலுக்குகொலுவில்வந்தார்
மூத்துஅருமசொருகி மோகனப்பொன்மாலையிட்டு
சத்துராதிகள்தன்னைவெல்லும்தாசுல்முலுக்குகொலுவில்
வந்தார்-பூவைமார்கள்பொன்சொரியப் பொன்கவரிதானும்வீச-தீவையொருகுடையிலாளும் தாசுல்முலுக்குகொலு
வில்வந்தார் வேதியர்மென்மேலும்வாழ்த்த விருதுகட்டியங்கள்கூற-தாதிமார்கள்வாழ்த்திவரத் தாசுல்முலுக்கு
[கொலுவில்வந்தார்.

---

வசனம்.

இவ்விதமான ஆடம்பரத்தோடு அரசகுமாரன் சிம்மாசனத்தின் மேல்வந்து உட்காரவும் அப்போது கொத்துவா லெழுந்து சலாஞ்செய்து அடிபணிந்து வாழ்த்திப் புகழ்ந்து பின்பு சொல்லத் தொடங்கினன் கேளும் மகாராஜரே சூரியகாந்தி பட்டணத்திற்கு அதிபதியாகிய அரசனுக்குத் தாங்களிவ்வனத்தில் நூதனமாகக் கோட்டை கொத்தளமும் மாடங்களுமசெய்து குடிகளைச்சேர்த்து ஊருண்டு பண்ணுவதாகிச சேதி ஒன்றுவந்து சேர்ந்தது அதனுல் நானிங்கடைந்தேன் இவ்விடத்தின் சவிஸ்தாரமெல்லாம் கண்டுதெளிந்து அரசனுக் கறிக்கையிட வென்றுசொல்லி மிகப்புகழ்ந்து தங்கள் மனதில் ஊருண்டாக்கி அரசாளவேணுமெனகிற நாட்டத்தோடு யுத்தமும் செய்யக் கருத்திருக்குமாயி னங்குமேதேடி தயாராயிருக்கின்றது ஆனல் நீ தாழ்ச்சி பதக்கங் கழுத்திலணிந்து அரசன் கொலுமுன்வருகி லொன்றுமில்லை அதேனெனில் ஒருகையி லிரண்டுவாளிராது ஒரூரி லிரண்டரசன் வாழலாகாது அப்படியிருப்பது முடியாது இருந்ததுமில்லையென்று சொல்ல அதைத் தாசுல்முலுக்கு கேட்டு நான் மிருகங்கள் சஞ்சரிக்குமான வனத்தில் நாயகனைவணங்குவதற்காக ஒருமாளிகைகட்டி அதில் வணங்கிக்கொண்டு வருகிறேன் எனக்கு அரசாட்சி செய்யவேணுமென்கிற நாட்டமேயில்லை பகைதனத்திலுடைய கருத்துமில்லையென்றுசொல்ல அதை கொத்துவால் கேட்டு சந்தோஷமாக விடைபெற்றுக்கொண்டுபோய் மந்திரியுடன் தான் கண்டதும் பேசினதும் ஆதியோடந்தமாகச்சொன்னன் அதை மந்திரிகேட்டு ஒருநாழிகைவரைக்கும் சஞ்சலக் கடற்குள்மூழ்கி எண்ணமிட்டு பின்றெளித்து இச்சேதிகளையெல்லாம் அரசனுக்கறிவித்தான் அதை சிலர்கேட்டு மெய்யென்றும் எண்ணிக்கொண்டார்கள் அந்நேரம்பகாவலி அவ்விடம் ஆசாரமாயிருந்தாள் அவளிச்சேதியையெல்லாங்கேட்டு அல்கதுலில்லாவென்று நாம் நாடிவந்த கோறிக்கை முடியவில்லையென்று எண்ணங்கொண்டிருந்தோமே அவ்விருளான எண்ணமானது அச்சேதியின் பொழுதினுல்விலகி ஓடிப்போயிற்று இன்று நமது

கோரிக்கை நிறைவேறின தென்று சந்தோஷித்தான் பின்பு அரசன் இச்சேதியைக் கேட்டு சஞ்சலக் கடற்குளளாய் தலையை வளைத்து சொக்கா உன்கைமேல்வைத்து இரண்டரைமணி வரைக்கும் யோசனைசெய்து பின்பு சிரசை யுயர்த்தி இப்படியிருக்க நம்மரபிற்கு கெடுதிவருமென்று யெண்ணி விசனமிருக்குங்காலையில் மந்திரி அதிக வணக்கத்துட னெழுந்து நின்று கைகட்டி முன்னுள்ள அறிவாளிகள் பகைவனை யுறவாடி கெடுக்கவேண்டுமென்றுசொல்லி பழயகதையை யரசனுக்குச்சொல்லி நாமவ்விடஞ் சென்று இஷ்டமென்னும் வலையை யவன்கழுத்திவிட்டு அவனை நாம் கைவசமாக்கிக்கொள்வது நலமென்று சொல்ல அதை யரசன்கேட்டு இவ்வேலைசெய்ய உன்னுலாகுமே தவிரமற்றொருவரா லாகுமென்று நானறிகிலேன் நீயே யங்குசெல்லென்றுசொல்லி பினபு பாம்புஞ் சாக வேணுங் கோலு மொடியாதிருக்க வேணுமென்னும் பழமொழிபோல என்பெருமைத்தனங் குறையாமலுங் கூட நமக்கு ஒடுங்கும் படியாகவும் சம்மதிப்படுத்திக்கொண்டு வாவென விடையீய அவ்விடையைப் பெற்றுக்கொண்டு தாசுல்முலுக்கின் பட்டணம் புறப்பட்டார் மந்திரி வருகிற சேதியை ஒற்றர்கள் அறிக்கையிட அதைத்தாசுல்முலுக்குகேட்டு தன்னரண்மனையினுள் உயர்ந்த விலைகள் பெற்ற பனுத்துகளின் விரிப்புகள் விரியுங்கள் குளங்கள்தோறு முன்னீரை நீக்கிப் பன்னீர் நிறப்புங்க ளதுகள போகக் காரியஞ் சாவைபுங்கள் முத்து மாணிக்கங்கள் பதித்திருக்கிற தாழ்வாரத்தி லுட்கார வையுங்களென்றுசொல்லி கட்டளையிடுந்தருணத்தில் மந்திரியு மங்குவந்தடைய எவலர்கள் அரசன்சொற்படி செய்து முடிப்பார்கள் அப்போதரசன் குமாரனுந் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு நவமணி பதித்த நாற்காலி கொண்டுபோய் நடவும் அதன்மேல் சந்திரனைப்போற் சென்றுட்கார்ந்தான் உடனே மந்திரியெழுந்து பேட்டியாய்ப் புகழ்ந்து எதிரில் நின்று தங்களிடத்திற்கு இதற்கு முன்னொரு அரசனுடையதூதன்வந்து தங்களுடன்பேசி இவ்விடத்தி னடவடிக்கை முதலிய சேதியையெல்லாம் அரசனுக்கு ஆதியோடு அந்தமாகவும் தங்கள் இஷ்டத்தையுங் கூறினன்.

அதனலரசனுடைய கோபாக்கினி மூண்டிருந்து
அதிக சந்தோஷமாயினும் இன்னம் தங்களுடைய பேட்
டியாகவும் நாட்டங் கொண்டிருப்பது வடகடலுந் தென்
கடலு மோரிடத்திற் சேர்ந்த பாவனைபோ லிருக்குமென்
றுசொல்ல அதனைத் தாசுல்முலுக்கு கேட்டு முன்னணி
யாக அரசனுடன் பேட்டியாக தென்புறமாகத் தருமாயிரு
ந்ததேதவிர இப்போது முன்னமரசன்புறமாய்விட்டது
ஆனாலுமிகவும் சம்மதியே என்னுடைய நாட்டமு மிது
போலவே யிருந்ததென்றுசொல்ல அதற்குமந்திரி அல்
லாகுத்தஆலா நாடுவானாகில் ஒருவாரத்திற்குள்ளே அர
சனு மிங்கு வருவாரென்று சொல்லி முடிவானது அப்
போது விருந்தளிக்கும் நாட்டமோடு அரசன்குமாரன்
போசனஞ் சமைப்போனுக் கறிக்கையிட அவனதைகே
ட்டு உடனே நெய் பால் முதலியவற்றினால்விதவிதமாகிய
ருசியைத்தருகின்ற போசனத்தை முத்துமாணிக்கத்தினு
டைய தாம்பாளத்திலிட்டுப் பொன் வெள்ளியினாற்செய்த
தஸ்கரினால்மூடி சூரியப்பிரகாசம்தங்கிய விரிப்பாதை
விரித்து அதன்பேரில் கொண்டுவந்து வைத்தான் அப்
போதரசன் குமாரனு மந்திரியுமாகக் கூடிக்கலந்து உண்டு
சுகித்துப் பின்பு மந்திரியுடன் வந்தபேர்களெங்களுக்கும்
போசனம்விசாரித்து அவர்களுக்குப் போசனம் வைத்த
வைகளை அவரவர்களுக்கு கொடுத்துவிடுங்கள் வாங்கவே
ண்டாமென்று கட்டளையிட அதுபோலவே ஏவலாளர்
கள் செய்து முடித்தார்கள் பின்பு யாவருக்கும் சாந்து
பனிநீர் தெளித்து மல்லிகை மலர்ச்செண்டுகள்கொடுத்து
தாம்பூல மீந்து சகலரும் சந்தோஷமடைந்தார்கள் அரச
ன்மந்திரி விடைபெற்றுக்கொண்டு சூரியகாந்திப் பட்ட
ணம்போய்ச் சேர்ந்து அரசனிடத்தில் நடந்த சவிஸ்தார
மெல்லாம் ஒன்றுந் தவறாமல் ஆதியோடந்தமாகச் சொல்
லினன்.

பின்பு தாசுல்முலுக்கு ஓர்தினம் அம்மாலா முன்
னால்கொடுத்தரோமத்தையெடுத்து தீயின்பேல் வைக்கவும்
உடனே அம்பாலா ஆயிரந்தேவு கூட்டத்துடனே கண்
ணொளிப் பொழுதுக்குள் யங்கு வந்தடைந்திட அப்போத
ரசன்குமாரனும் மகுமூதாவுமெழுந்து சலாம்செய்து நின்

148583

றிட அவர்களிருவரையுங் கண்திருஷ்டி கழித்து மார்போ டணைத்து மாலைமூத்தியிட்டு மிகுந்த பிரியஞ்சொல்லி சுக க்ஷேமமாவெனவினவ தங்கள் கிருபாகடாக்ஷத்தினலெல் லா வஸ்துக்களை கொண்டும்யேன்மேலும் சந்தோஷ பேதவிர யாதோ ரவஸ்தையில் துக்கந்துயர மில்லை ஆனலிராசனுக்கு நாளையத்தினம் விருந்தளிக்கும்படி தேமகமாயிருக்கின்றது அவ்வரசன் ஆங்கிருந்திங்குவரு வான் அதற்காகயிங்கிருந்து அந்நாள்வரைக்கும் விலையு யர்ந்த பனாத்துகளினாலும் பச்சை சிவப்பு-ஊதா-கறுப்பு- மஞ்சள் வெள்ளை இவ்விதமாகிய பற்பலவற்றை விரிப்பு கள் விரிக்கவேண்டும இன்னமொவ்வொரு கோசிற்கு செந்நிறம் வெண்ணிறம்-மஞ்சள் நிறம் கருநிறம்-இன்னம் நானாவிதமாகிய சடங்குகள் தயார்செய்துரத்தினகரைகள் விட்டு முத்துக்களினால் குச்சுகள் தொங்கவிட்டு பொன் வெள்ளினால் கூட்டங்களடுத்து முத்துகள் பதித்த சயறு கள்கட்டி விசித்திரமாகிய படங்களடிக்கவேண்டும் இன்ன மவனோடுவருகிறசிறியோர் பெரியோர்களுக்கும் மந்திரி மார்களுக்கும் அவரவர்களுக்குத்தகுந்த வெவ்வேறு விடு திகளால் வேண்டிய இவ்விதகாரியங்களி லெனக்கோர் குறைவுவடையாம லிருக்கும்படிசெய்து கொடுக்க நானடு கிறேனென்றுசொல்லினன் அதைஹம்பாலாக்கேட்டு ஓரி ரவிற்குள்ளாக அந்தத்தேவுகளினாலவன் சொன்னதற்கு மும்மடங்கதிகமாகச் செய்து முடித்து கொடுத்துமுன்தன் றேயமடைந்து விட்டார்கள் பின்பு சையினால் முளுக்கு பொன்கொடுத்தவாயிதாவின்படி போவதற்காகத் தன்மந் திரிமாரை யழைத்து நாமவ்விடம்போவதற்காகப் பொன் வெள்ளிகளினு லிழைத்த உயர்த்தியான விலையினையுடைய ஆடையாபரணங்களணியுங்கள் ஆயுதங்களை யெடுத்துப் பூட்டிக்கொள்ளுங்கள்மேகத்தையளாவிக் காற்றைப்போல் பறக்கத்தக்க குதிரை ளுக்கு விதவிதமான சிங்காரிப்புகள் செய்து ஒருபெருங்கூட்டமிட துபுறமும் மலைபோலுயர்ந் த யானைப்படை முன்னணியாயும் அதற்குப்பின் பொன் தடிக்காரர்களு மதன்பின் வெள்ளையானையைச் சிங்காரித் துக் கதிரொளி விலகிய சிம்மாசனத்தை யமைத்துத்தயார் செய்யுங்களென்று விடை கொடுக்க அது போலவே மந்

திரிமார்கள் தயார்செய்து அரசனுக்கறிக்கையிடவு மப்போது சையினுல் முலுக்கு மந்திரி தந்திரிமார் முதலிய பெரும்படையோடுபம்பை எக்காளம் மல்லாரி துந்துமி தப்பட்டுமுதலிய மேளவாத்தியங்கள காதுகளடைக்கப் பூமிகளதிரத்தக்கதாக நகர்விட்டெழுந்துபோக அதிகவிலைகளுயர்ந்த ஆடையாபரணங்கள் தரித்து ஆயுதங்களணிந்து மின்னல்போல கரத்தில் வாள்களிலங்க குதிரையின் மேலேறியவர்களும் வந்தார்கள். பின்பு காவலியும் ஆண்வேடதரித்து தலையில் தருவும் இடையில் வாளும் கரத்தில் கேடயமும் தாங்கித் தன்னை முத்துமாணிக்க முதலிய ஒருவரும் விலைமதிக்க வொவ்வாத ஆடையாபரணங்களைப் பார்ப்போர் கண்கள் கூசும்படியாகவணிந்து அவளுமங்கு சேர்ந்தாள் அப்போதரசன் மிகுந்த ஆடம்பரத்தோடு தாசுல் முலுக்கினுடைய பட்டணமே வெளிப்பட்டு மெசந் தூள் பறக்கும்படி புறப்பட்டான்.

---

தரு-இ-ம்-கலியாணி.

வாரார்துரைவாரார்துரை வர்னப்பரியேறி
போரார்துரைபோரார்துரை புதுதேசத்தைகாண்-வாரார்
சூழமந்திரிமார்கள்புடை சுற்றிமலர்தூவ
வாழும்புதுநகராண்டிடவரிசையையி னுல்முலுக்கு வாரார்
வெண்சாமரைவீசப்பெண்கள் விருதுக்கொடிபறக்க
அஞ்சாநரர்தனைக்கண்டிட அரசர்சையினுல் முலுக்கு-வா
சேனைப்படைஜேஜேயென திரர்புடைசூழ
தானைப்படையுடன்கூடத் தயவாய்சையினுல்முலுக்கு-வா

வசனம்.

இவ்விதமாக நடந்துபோகையில் தாசுல்முலுக்குக் கூடாரங்கள் சூரியப்பிரகாசத்தைப்போலத் தோன்றலாயின அதைக் கண்டரசன் இப்பிரகாசப்பொருந்திய தலமானது மின்னலைப் போலிலங்கிக் கண்ணொளியைமயக்கிவிடுகின்றதே இது யாவை னிடமோவென்று சொல்ல அதற்கு மந்திரி நான்முன்னேகும்போது இதுவனமாயும்

தருக்களும்புற்பூண்டுகளுமாயிருந்தது இதற்குளிவ்வரசன்
இரவிற்குள்ளாக விதவிதமாகியவானமுள்ள வேடிக்கைக
ளான இடமாய்விட்டது இங்குநாம் மூச்சுவிடவும் இட
மில்லைவல்லமையுள்ள நாயன ஒருபடைப்புகளுக்கு இவ்
விதமான வல்லமையைக்கொடுத்திருக்கிறான் அவனுடை
யசிபத்தாகிய வல்லமையின் மகிமையை அறிவில்லாதவர்
கள் ஒருவராலு மறியமுடியாது அறிவானயவ்வதிசயத்
தில்மூழ்கிவிட்டது நிகார் என்னுபபட்டணம் இன்னம்
வெகுதூரத்திலிருக்கின்றது அவ்வரசனிப் புதுமைகளை
யிவ்வழியிற்குள வேடிக்கையாகக் காண்பித் திருக்கின்றான்
இதை நாம்பார்க்கவேண்டுவதாயிருக்கிறதென்று மந்திரியு
மரசனுமாய் இப்பிரபலத்தைப் பேசிக்கொண்டிருக்குந்
தருணத்தி லவர்கள் முன்பாக ஒருதூதன்வந்து எங்களர
சன் தங்களுடைய சேனைகள் இவவிருப்பின்ம்பலெங்கிரு
ந்து எறினார்களோ அதுகொடுத்து முன்னாக்கிலவரவர்
முன்னாலிருக்குமான விரிப்புமுதலிய வஸ்துக்களை ஏழை
கள் பிச்சைக்காரர் முதலியவர்களைக்கொள்ளையாக எடுத்துக்
கொள்ளும்படி கட்டளையிட்டானென்று இன்ன மிந்த கூ
டாரங்களால் தங்களுக்கிழிய எந்தவிடுதியல் மனமிருக்கு
தோ அதில்இரா நின்றசந்தோஷத்தோடு சுகமடைந்துஇன்
பம்பெறும்படி சொன்னானெனச் சொல்லினள் அதைக்
கேட்டு அரசனு மந்திரிசேனைகளு முன்னோக்கிச் செல்லு
கையில் அப்பொன் வெள்ளியின் பூமியைக்கண்டு எப்படி
முன்னருவார்களோ அப்படிப்பட்ட விநோதங்களை அதி
சயமானவைகளைப் பார்த்துக் கொண்டே போனார்கள்.

அப்போதாசுல்மூலுக்கு ஒருவிடுதியின்முன்னாகஎதி
ர்கொண்டு வந்து பாதம்பணிந்து மிகுந்த வணக்கத்துட
னே அரசனமந்திரி சேனையோடு வெகுவேடிக்கையும்
அமளி குமளிகளாக ஆட்டம் பாட்டத்தோடு வாத்தியங்
கள் முழக்கமிடத் தன்னகர்க்குட் கொண்டுசென்று அரச
னைப் பச்சை மரகதத்தினாற் செய்திருக்குமிடத்தில் அதிக
மருங்குடனே அன்போடு உட்காரவைத்து முனனிலும
டங்கு பிரகாசிக்கும்படி சிங்காரித்து விதவிதமாகிய விரிப்பு
கள்விரித்து குளங்களில் பனிநீர் நிறைப்பி காரியஞ்சாக்
காள் விடுதது அலங்கிர்தஞ் செய்திருப்பதை அரசன்கண்

டு அதிசயப்பட்டு மெய்மறந்திருந்தனன் பகாவலியும் அவனழகைக்கண்டு அந்தப்பூர்சி தீபத்தைக்கண்டு தன்னுயிர் எப்படி மடித்துக்கொள்ளுமோ அப்படி மூர்ச்சையாயினள் பின்பு சிலநேரஞ்சென்று மயக்கந்தெளிந்து நித்திரை செய்தவன்போலத் தன்விழியைக் கசக்கிக்கொண்டு அவ்விடத்தைப் பார்க்கலுற்றாள் அம்மெத்தைகளிருக்கிறதும் அதிலே வேலைகளடி முடித்திருக்கிறதும் தன் மெத்தை மேடைபோலிருப்பதைக்கண்டு அதிசயப்பட்டுத் தன் மனதிற்குள் தானே இவனை பெலத்த சூனியக்காரனாயிருக்கிறான் என்னுடைய மாடகூடங்களைவேரோடேபிடுங்கிக்கொண்டுவந்திருக்கிறான் இக்காட்டைப் பட்டணமாக்கி மனிதர்களையுஞ் சேர்த்திருக்கிறானென்றெண்ணி தனக்குப் பணிவிடை வேலை செய்யக் கூட அழைத்து வந்த பரியைப்பார்த்து உனக்குக் கண் பார்வையினிதானத்தினால் விசாரிக்க வேண்டுமிதென்ன புதுமையாயிருக்கிறதென்று சைகைசெய்ய அப்பரியானவள் நிதானித்துச் சிலநேரம்பொறுத்து உன்னுடைய மாடகூடமிங்குவரவில்லை கொஞ்சமும் சந்தேகம் வைக்கவேண்டாம் இது அதனவேலையாயிருக்கின்றது இது இம்மனிதனால்செய்யப்பட்ட வேலையேயொழிய மற்றொன்றில்லை அதற்குச் சரியாக உண்டுபண்ணினது அதற்குமிதற்கும் ஒரு மாறுபாடு சொல்லவு முடியாது எவ்வேலைகளின் சட்டத்தைப் பார்க்கிலுமொன்றுவதேரக் குறையவில்லை சமமாகவேயிருக்கிறதென்றவள் சொல்ல அதைப் பகாவலிகேட்டு அதிக சந்தோஷப்பட்டு இன்றுதான் கள்ளனையும் பிடித்தேன் இன்னம் போனபொருளு மகப்பட்டது இவ்வேளையில் மறைவாயிருக்கிறதை வெளிப்படுத்த மேவனுமென்கிற பழமொழிபோல வெக்கமென்னுந்திரையினால் மூடி நம்பிக்கையென்னு மாணியினாலடித்து நிதானிப்பினுடைய பாதத்தை யூன்றிச் சும்மாயிருந்துவிட்டாள்.

பின்பு தாசுல்மூலுக்கி னுத்தரவின்படி வேலைக்காரர்கள் சகலருக்கும் போசனமிடுவதற்காக வெள்ளைபட்டின் விரிப்பை விரித்து பொன் வெள்ளியினாலான தாம்பாளங்களில் அதிக ருசியைத்தருகின்ற நானாவிதமாகிய போசனங்களை நிறைப்பி விதவித கனிகாய்களும் கறிவகை

களும் லட்டு மிட்டாய் முதலிய தினுசுகளுமாகச் சோடி
த்து வைத்திருந்தவைகளை இதிலெழுத முடியாததலால்
கொஞ்சமாகச் சுருக்கி யெழுதலாயிற்று அப்படிப்பட்ட
வைகளை அரசன் முதலிய யாவர்களுக்கும் விருந்தளித்தா
ர்கள் அவர்களெல்லாம் அதனையுண்டு ஆனந்த சந்தோ
ஷத்தோடு மிப்படிப்பட்ட விருந்து நாமொருபோதும்
தின்றதில்லையே இதுகளின் வாசனை கரத்திலொட்டியது
தேய்க்கினும் போகவில்லையே இனிமே லிப்படிப்பட்ட
வூணைப்போது காணப்போகிறோமென்று அதிக சந்தோ
ஷமடைந்தார்கள் பின்பவர்க ளடங்கலுக்கும் ஏலம் சாதி
க்காய் லவங்கம் முதலியவைகள் தாம்பூலத்தில் வைத்து
சாந்து பனிநீர் பரிமளந்தெளித்து அதிக சந்தோஷப்
படுத்திப் பின்பு நானாவித நடனஞ்செய்யுந்தாசிமார்களைக்
கொண்டுவந்து சதுரில் ஆட்டுவித்தான் அன்னடனத்தை
அனைவருங்கண்டு அதிக சந்தோஷமடைந்திருந்தார்கள்
அப்போது தாசுல்முலுக்கு மிருந்த வளக்கமாகச் சில
சேதிகளைப் பேசிக்கொண்டிருந்து பேச்சின்முறையாகவே
தங்களுக்கு எத்தனை குமாரர்களுண்டென்று கேட்டான்
அப்போதரசன் தனக்கு இன்னம் பிள்ளைக ளில்லையா வெ
ன்று கேட்டா னதற்கரசன் கடைசியில் எனக்கொரு பிள்ளை
பிறந்தது அதனாலெனக்கு இருந்தாப்போலிருந்து ஒரு
முடிவுவந்து நேரிட்டது அது அல்லாகுத்த ஆலாவினு
டைய கிருபையினால் நீங்கிவிட்டது அக்காலசுதியிற் பிறந்
தபிள்ளை எங்கிருக்கின்றதோ அதை அல்லா அறிவா
னெனக்குத் தெரியாதென்றுசொல்ல அப்போது தாசுல்
முலுக்கு அவ னெவ்விதத்தைக் கொண்டு இவ்வித அர
சன் வாழ்க்கையை விட்டுவிட்டானா இதைவிட்டுப்பிரிந்து
போனானா அவனுயிர் கூட்டத்திலுள்ளவர்க ளறிவார்களி
ல்லையாவென அப்போது சைனுல்முலுக்கு அவன்பிரிந்
தசங்கதிகளை ஆதியோடந்தமாகத் தான் கண்ணிழந்தவ
ரையில்சொல்லி இதி லிம்மந்திரியைத் தவிர மற்றயாரும்
பயனையறியார்களென்று சைகையாகக்காட்ட அப்போது
தாசுல்முலுக்கு அம்மந்திரியின் புறமாகத்திரும்பி இக்கூ
ட்டத்தில் அவனைப்போல யாரைக் கண்டீர் யென்று கே
ட்க அதற்கு மந்திரி வெகுநேரம் நிதானித்து வடிவிலும்

நிறத்திலும் உன்னைக்காண நான் யாரையுங் காணவில்லை பேச்சுகளும் நட்புகளு குணங்களும் அடையாளங்களும்நீயேயென்று தோற்றுகிறதென்றுசொல்ல அதைதாசுல்மூலுக்கு கேட்டு எழுந்து தகப்பனுடைய பாதம் பணிந்துநின்று இதுகாலம்வரைக்கு மென்விதிவசத்தால் வருத்தங்கள் அடையவேண்டுமோ அதுகளுந்தொலைத்தேன் இன்னம் தங்களுடைய முகத்தை விட்டுப்பிரிய விதியிலிருந்தபடி யதுகளையுந் தொலைத்தேன் அன்பு அநேகர் முயற்சிகளால் தங்களுடைய திதாரை எவ்விதமாய்க் காணவேண்டுமென்று நினைத்தேனே அதையுங் கண்டேன் எவ்விதமாய்த் தங்கள் பாதம்பணிய நாடி யிருந்தேனே அதுபோலவே இன்று பெற்றேனெனச் சொல்ல இம்மொழிகளையெல்லாம் சைனுல்மூலுக்கு கேட்டுச் சந்தோஷத்தின் மகிழ்ச்சியாய்கட்டி மார்போடணைத்துச் சிரசையுங் கண்ணையு முத்திட்டுக்கூரிய சிசுதாவுஞ்செய்து மகனோடு சொல்லத் தொடங்கினன்.

ஓமகனே உனக்கு அல்லகுத்தஆலா இவ்வாழ்வுகளை வேண்டுமட்டும் உனக்குங் கொடுத்திருக்கிறனே நான்பிறந்தவன்றே சாஸ்திரவாதிகளா லுனக்குண்டாகும் பலாபலன்களை யெல்லாங் கேட்டிருக்கிறேன் அல்கம்துலில்லா என்றவர்கள் முன்சொல்லியபடி நான் என்கண்ணைக்கொண்டு நோக்கினேன் என்னிரண்டு கண்ணிற்கு முன்னிலுமிரண்டு பங்கு ஒளிவானதென்று நானாவித மொழிகளோடிகடைசியில் நீ இது வரைக்கும் கலியாணஞ்செய்து பெண்சுகத்தை யறிந்தா யில்லையாவெனக்கேட்க அதற்குத் தாசுல்மூலுக்கு தங்கள் அடிமையானவனுக்கிரண்டு மனைவிகளிருக்கிறார்களென்று சொல்லினன் ஆரை தங்களுக் குத்திரவாகுமோயானால் தங்களெதிரிலாய்த் தங்கள் பாதம் பணிவார்களென்று சொல்வதை யரசன்கேட்டு நல்லதென்று ஒப்பிக்கொள்ள அப்போது தாசுல்மூலுக்கு தன்மாளிகையினுட் சென்று தில்பாரி, பகுமூதா யிவர்களிருவரையும் அரசனுடைய சன்னிதானத்திற்குக் கொண்டு போயினன் அவரிருவரு மவ்விடத்தினருகில்வந்து திகைத்து நின்றனர்களதை சைனுல்மூலுக்கரசன் நோக்கி அவர்களென்னிடத்திற்குவாராமலங்கு திகைத்து நின்று

விட்டார்களென்று சொல்ல அதற்குத் தாசுல்மூலுக்கு ஆனாலவர்களிருவரு மிவ்விடத்திற்கு வெட்கத்தைக்கொண்டு வராதிருக்கவில்லை இந்நான்கு இராசகுமாரர்களுமவரிடத்தில் சிறையிலகப்பட்டு அவர்களுடைய முத்திரைகைச் சூத்தாம்பட்டையின்மேல் பதிப்பித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் ஆனதால் பொய்மெய்யென்று தாங்கள் பார்வையிட நாடுவீர்களாகில் அவர்களு மிங்கிருப்பதால் பார்த்துக்கொள்ளுங்க ளென்று சொல்ல அம்மொழிகளை யிந்நால்வருங்கேட்டு வெட்கித் தலைகவிழ்ந்தவர்களா யவ்விடம் விட்டெழுந்து போனார்கள்.

அப்போது சைனுல்மூலுக்கு தன் குமாரனாகிய தாசுல்மூலுக்கைப்பார்த்து உன்சங்கதிகளெல்லாஞ் சொல்லென்றுகேட்க அதற்கு அரசன் குமாரன் அண்ணமாருடன் பாதையில் சேர்ந்து தில்பரியுடன் சொக்கட்டான் விளையாடினதும் தாங்கள் கொண்டுவந்த ஆஸ்திகளையெல்லா மவளுக்கிழந்து சிறையிலகப்பட்டதும் தானவளுடன் சொக்கட்டான் விளையாடி கெலித்ததும் அவளால் குலோபகாவலி மலரைக் கொண்டுவரப் போனதும் வழியிற் பட்ட துன்பங்களும் அம்மலரைக் கண்டதும் அவளால் மகுமூதாவை விவாகஞ் செய்துகொண்டதும் பகாவலியின் சோலைபுக்கினதும் அவள் நித்திரை செய்துக் கொண்டிருந்ததும் பனிநீர்குளத்தில் மலரிருந்ததும் அதைப்பரித்ததும் அவ்விடம்விட்டு தில்பரி நகர்வந்தது அண்ணமாரைமீட்டது தில்பரி இந்நால்வருக்கு முத்திரையிட்டனுப்பினது அவர்கள் பாதையில் நான் கொண்டுவந்த மலரை பறித்துக்கொண்டதும் மஹம்மாவாலே இந்த நகர மூண்டாகியதும் முதலிய சிலசங்கதிகளையும் ஆதியோடந்தமாகச் சொல்லிவந்தனன் இவைகளையெல்லாம் சைனுல்முலுக்கு கேட்டுக் கொண்டிருக்கையில்தாசுல்முலுக்கினுடைய தாயின் ஞாபகம் வந்து அப்போது மகனைநோக்கிச் செந்தாமரை மலர்போன்ற என்னிருகண்ணிற்குப் நல்லொளிவுதந்த மகனே உன்னால் நானிழந்த கண்ணைப் பெற்றதன்றி அதிகமகிழ்ச்சியடைந்தாற்போல் உன் தாயாரு முன்னைக்கண்டு அவளுடைய விசனமெல்

லாம் சந்தோஷிக்கும்படி நான் முன்னமாக நீவந்த சங்கதியெல்லா மவளுக் கறிக்கையிட்டு அவள் மனதையு மகிழ்விக்கவேண்டி சொல்லவேணுமென் றெழுந்து சீக்கிரமாகத் தன்னரண்மனையடைந்து அவளை இக்கட்டாகிய வருத்தத்தில் வைத்திருந்தானே அதற்காக அவளிடத்திற்போய் அவளுக்கேதேதோ ஒப்புதலாகிய போதனையெல்லாம் போதித்து அவளை வேண்டிக்கொண்டு வார்த்தைப்பாடுவாங்கிப் பின்னால் தாசுல்முலுக்கு வந்திருக்கிற சேதியையெல்லாம் தெரியப்படுத்தினன்.

---

பனிரெண்டாவது கதை,

## சையிஹுல் முலுக்கினிடத்தில்

பகாவலி விடைப்பெற்றுகொண்டுபோனதும்

பின்னும் அவள் தாசுல்முலிக்கிற்குக் கடிதம்மெழுதியதும்

அதற்க்குப் தாசுல்முலுக்கிர்குக் பிரிதிகடிதம்மெழுதிய

சங்கதியின் விபரம்.

---

வசனம்.

சையிஹுல்முலுக்கு தன்னகரமடைந்த பகாவலி யவ்வரசனிடம் விடைபெற்றுக்கொண்டு தன்சோலையிலடைந்து கடிதமொன் றெழுதித் தன்னிடமாயிருந்தவனுடைய மோதிரத்தையுங் கட்டி முன்னால் தன்கூட வந்திருந்தமரியின் கைகொடுத்து ஓதேவே இவ்விரண்டையுங்கொண்டுபோய் அரசன்குமாரன் உலக விசாரணைக் காரியமுதலானவைகளையும் ஒழித்துத் தனியாயிருக்கு நேரம் இக்கடிதத்தையுமிம்மோதிரத்தையு மவன்கையிற்கொடுவென்று கட்டளையிட அதுபோலவே அப்பரியானது தாங்கிக்கொண்டு பறந்து ஒரு கண்ணொடி பொழுதிற்குள் தாசுல்முலுக்கினுடைய பட்டணம் வந்து சேர்ந்து அவனெழுந்திருக்கும் வேளையின்காலத்தை நோக்கிக்கொண்டிருந்து அப்படியிருக்கையில் தாசுல்முலுக்கு தன்னுடைய உலக வேலைகளையெல்லா முடித்துக்கொண்டு பகாவலியின்மேல்

ஙியாபகமாகவே மோகக்கடலில் மூழ்கித் தனியாயோர்வீட்டினுளடைந்து உட்கார்ந்து கொண்டிருந்தான் அத்தருணத்தில் பரியானது எதிர்சென்று மிகுந்த தாட்சிணையைசெய்து தான் கொண்டுவந்த இரண்டுவஸ்துவையுமவன் கரத்திலீந்தது அதைவாங்கிய ராசன்குமாரன் தன்மோதிரத்தின் குறிப்பை யறிந்துகொண்டு பின்வந்த கடிதத்தையுடைத்துப் பார்த்தான் அடிக்கடிதத்தி லெழுதியிருந்த பாவனையாவது.

---

ஜம்பை-இராகம்-பைரவி.

ஆதியைமென்மேலாக அகத்தினிலேமுன்புகழ்ந்து
சேதியெல்லாந் தானெழுதச் சாலமைபின்னையெழுதி
தாரகையால்வானமொளி வாசமிகச்செய்தாய்
பாரைமனுவின்னுலழகாக வினியமைத்தாய்
இறையவனேயழகுபரி யோர்க்கதிகமீந்தாய்
முறையாய்பரிமனுநீதில் லோகமதுமுள
ஆசைக்கொண்டான் வெயிலின்மேலானதிருமகனு
நேசமுடன்ராப்பகலும் நினைவுமறவாமல்
காமக்கடல்தீமூட்டிக் கருத்தெரியநினைவால்
தாமதமில்லாமல்பொங்கித் தணல்பெருகிவீச
கனவுகண்டபாவனையாய் காளையேநீவந்து
மனதைக்கொளுத்திப்படி நீவைப்பதுஞ்சரியா
பெருமூச்சிவிட்டிங்கு பேதையாளும்
தருமமாவுமக்குமிது தானுரைப்பீரெனக்கு
பருந்தெடுத்தவாறதுபோல் பரித்துமலரெடுத்து
இருந்திங்குநானேங்க இவ்விதஞ்செய்யலாமா
ஆவியுன்னுற்றுன்பறக்க அங்கிருந்துவாழல்
பாவிகள்தன்தாழிலிதுவாம் பார்த்திபனேயென்று
செல்விமடந்திருமாது சிறுடனேகடிதம்
நல்வழியாலெழுதி நடத்திவிட்டாளங்கு

---

வசனம்.

அக்கடிதத்திலுள்ள எழுத்துக ளெல்லாம் இன்னம் வரிகளோடும் காம ஆசையினுடைய விபரமே யெழுதி

யிருக்கக்கண்டு தாசுல் மூலுக்கினுடைய மனதிலுள்ளடங்கியிருந்த காமத்தியானது சுரில்சுரீலென்று கொழுந்துவிட்டு ரசம்ததும்புவதுபோல் வெறுக்கமுடியாமல் மனந்தாளாமல் பொங்குகிறதை பொறுமையினலடக்கிகயிசூம் கடிதமுமையுமெடுத்து பகாவலிக்குப்பிரதி யெழுதிய வக்கணையானது.

அகவல்-இ-ம்-கண்டா.

நயனத்தொளிவே நாரியர்க்கரசே
கனிவுளகிளியே தண்மலர்மணமே
மோகக்கடலே மோகினியனமே
தாகந்தணிந்திடத் தண்புனல்கும்பமே
மூண்டிடதக்கினியு முடியவாகிட
வேண்டுவதொன்றும் விரும்பிடநினையாய்
அல்லும்பகலும் அரைநொடிநேரமும்
எல்லைகாணுமல் ஏங்கிக்கலங்கியே
மறைந்திடமுடியா மனதுபேரின்பமே
உறைந்தினிகண்டாய் ஓமணிமயிலே
தாகமும்நீயே மோகமும்நீயே
ஆகமும்நீயே ஆசையும்நீயே
அம்பொன்கொடியே அகங்குடிகொண்டாய்
செம்பொன்மணியே தெரிவையேயின்று
தீட்டியேகடிதம் திருத்தமாய்பருதி
மூட்டியேதிவு மூளவனுட்பினன்.

---

வசனம்.

இவ்விதமாகக் காமக்கடலின் திமூண்டெரியத் தக்கதுர்வார்த்தைகளையெல்லாம் மென்மேலடிக்கடி வரிகடோறுந் தவருமலெழுதி அதைமடித்து அதற்கு முத்திரையிட்டு அக்கடிதத்தை சமன்பரியின் கையில்கொடுக்க அதை அப்பரியானது வாங்கித் தலைமேல் வைத்துக்கொண்டு உயிரைக் காப்பாற்றுவதுபோல அக்கடிதத்தைப் பத்திரப்படுத்தி ஓடோடி மலைவன முதலிய வழிகளைத் தொலைத்து மோகக்கடலில் மூழ்கும் பகாவலியிற்கு ஓடப்போலக்

of Books Madras



கரையேற இக்கடிதத்தை அவள்கையிற் கொடுத்து அதையவள் வாங்கிக் கண்ணிலொற்றிக்கொண்டு அதைப்பிரித்துவாசித்து வரிகள்தோறு முத்தி ஹாஹாவென்று பெருமூச்சுவிட்டுக் காமக்கடலில் மூழ்கியிருந்தாள்.

---

பதின்மூன்றுவதுகதை,

பகாவலியினிடம் தாசுல்மூலுக்கு

சென்றதும் மாதாவானவள் பகாவலியைச் சிறையிலாக்கினதும்

தாசுல்மூலுக்கு விசனமடைந்து சொல்லும்விபரம்.

13-வது பகாவலியை சிறையிலடைத்தபடம்.

---

தாசுல்மூலுக்கு வெழுதியகடிதம் பகாவலியினிடம் வந்துசேர அதற்கு இரட்டியாகச் சந்தோஷமடைந்து அவனைக்காணாதிருப்பதின் றீயானது பூன்பொறுமை யென்னும் வெட்கத்தால் காமத்தை மூடியுந் தன்னால் தாளச் சகியாததாலே உடனே ஸமன்ரூப பரியையழைத்து நீ ஓடோடியுஞ் சென்று அதிவேகமாக ஹம்மாலாவை இங்கழைத்துவாவென அதைக்கேட்ட தட்சணமே யெழுந்து காற்றுப்பறப்பதுபோல கண்ணொளிக்குள்ளாக ஹம்மாலாவினிடம் வந்து சேர்ந்தது அதுவந்த வேகத்தைக்கண்டு என் தமக்கையே நீசுகமாவென்று விசாரித்துப் பின்பு நீ இவ்வளவு காபராவோடு ஏன்வந்தாயென்றுகேட்க அதற்கப்பரி நான்சுகமே ஆனால் பகாவலி இன்றேனா உன்னை நினைத்து அழைத்துவரக் கட்டளையிட்டாளென்றுசொல்ல அதை அம்மாலாகேட்டு கிடுகலங்கிகாபராபட்டெழுந்து என் நம்மையழைக்கா வேளையிலழைத்த காரண மென்னமோ வென்றுந்தோற்ற வில்லையே யென அங்கமுழுதும் நடுநடுக்கத்தோடு கைகால்பதறி ஓடோடியும் வந்து பகாவலியைப்பார்க்கையில் கண்ணிறமானது கெடவும் வியாதிக்கும் வியாதியாய் மேலிட்டு ஆறோடுவதுபோ லிருவிழியிலும் நீரோட அதிகவிசனமடைந் தோர்களைப் போல முகத்தின்வடிவழிலை நானாவிசனத்தோடு உட்கார்ந்திருப்பதைக்கண்டு அருகில்வந்தடி பணிந்து சிரசிலிருந்

து பாதம்வணக்கும் கையாற்றழுவி முத்திமிட்டு என்கண்
ணே பெண்ணே மயிலே குயிலே மானேதேனே உயிரே
யுடலே ஒளியே தெய்வே உன்மலர்போன்ற முகமானது
ஏனிப்படிவாடி இருக்கின்றது ஏனுன்னுடையவடிவை
இப்படியாக்கிக் கொண்டாய் ஏனிப்படி தேம்பித்தேம்பி
ழுகிறாய் என்னத்திற்காக உன்னுடையமலர்போன்றமன
தைத் துயரமென்னுந் தீயால்வேகவைத்து மென்மேலும்
பெருமூச்சுவிடுகிறாய் உனக்குவந்த துன்பமெனக்குவா
நீ எப்பொழுதும் சிரித்து விளையாடிக் கொண்டிருப்பவள்
இன்று இவ்வித விசனமடைந்திருப்பதை அல்லாவுக்
காக உன்மனதிலிருக்குமர்மத்தை என்னுடன் சொல்லெ
ன்று கேட்க அதையெல்லாம் பகாவலிகேட்டு கூடாதவர்க
ளைகூட்டிவைக்கப்பட்டவளே சேராதவர்களைச் சேர்க்கப்
பட்டவளே மாயப்பேச்சுகளைபோதித்து மயக்கப்பட்ட
வலே ஒன்றுந் தெரியாதவளைப்போல என்னுடன்பேச்சு
களை சோடித்துப் பேசுகிறாய் நீகொடிச்சுடவாமுகாக்கினிக்
கொப்பாகிய இத்தத்தீயை மூளவைத்துபற்றவைத்தாய்
இம்மிடிசளூ புன்னாலேநேரிட்டது இவ்வளவு வேலைகளை
யெல்லாம் முடித்துவிட்டுக் கடைசியிலறியாதவளைப்போல
கையை நெரிக்கிறாயா இதுகளெல்லாம் முன்மருமகனாலே
வந்ததல்லவா இன்னம்யாராலும்வந்ததல்ல அவனை நீயே
இவ்விடங்கொண்டுவந்து சேர்த்தாய் நாமறைவாயிருந்
தேன் அம்மறையும் வெளியாக்கினாய் என் மேல் ஒருவர்
கரமும்படாமலிருந்தது சையும்படவைத்தாய் என்னுட
லின்பேரில் ஒருவர்பார்வையும் விழாமலிருந்தது பார்வை
யும்விழவைத்தாய் நானித்திரையில் சிலைவிலங்க என்ன
அலங்கோலமாய்ப்படுத்திருந்தேனே அதையுமவன்கண்
டுபோனான் ஆனால் உன்னைப்பிடித்த துடிமை நீங்கவே
ண்டுமானா லவனைப்பிடித்த துடிமை நீங்கவேண்டுமானா
லவனைச்சீக்கிரமாக என்னிடங்கொண்டுவந்து சேரென்று
சொல்ல அதைஹம்மாலா கேட்டுச்சிரித்து நல்லது இவ்வ
ளவுவார்த்தைக்காக அழுது முகத்தை வீங்கவைத்துக்
கொண்டாய் சந்திரன்வக்கொளியுடலையும் கெடுத்துக்கொ
ண்டாய் அம்மா நீயெழுந்து உன்முகங்கைகாலைதுலக்கு
அவனைபிடித்துக்கொண்டு வருகிறேனது ஒருபெரியதல்

ல நானிப்பொழுதவன் காதைப்பிடித்துக் கொண்டு ஒரு நாடிக்குள்வருகிறேனென்றுசொல்லியுடனேஷாகினதான பட்டணத்தில்புறமாகப்பேசசுபேசுவதற்குள்ளாகப்போய்ச் சேர்த்து தாசுல்மூலுக்கை நோக்கி புன்னகைசெய்து உன மனதின் தீபமாகிய பகாவலி நினைத்திருக்கிறாள் சீக்கிரமாக எழுந்திரு உன்னையங்கு கொண்டுபோய்ச் சேர்க்கிறேனென்றுசொன்ன மொழியைக் கேட்டு இறந்தசவத்திற் குயிர் வந்தாப்போல அரசன்குமாரன் துள்ளியெழுந்துவிழ ஹம்மாலா அவனை வாரியெடுத்து மார்போடணைத்து அப்பால் தோள்மேலேற்றி வைத்துக்கொண்டு பகாவலியின் தோப்பின்புறமாய் பாய்ந்தது.

இச்சேதி யெல்லாம் பகாவலியின் ரூபான காதூனென்றவளுக்கு உன்மகள் பகாவலி அதிக துக்கமாய்விசனத்தில் மூழ்கியிருக்கிறாள் அதுமனிதன்பேரில் பரியின் குலத்திலுள்ளவன்பேரில் மோகவெறி கொண்டிருக்கிறாளென்று அவளுக்குத் தெரியப்படுத்திட அவைகளைக்கேட்டு அம்மொழியை மெய்பொய்யென்று நிதானிக்க வேணுமென்று பகாவலி யிருக்குமிடத்தில்வந்து பார்க்கையில் அவள் காமத்தினாசையில் மூழ்கியிருப்பதைக்கண்டு வெகு கோபமாகத்தன் முகத்தைத் திருப்புதலுடன் அடி கேடு கெட்டவளே அடி ஒய்யாரி அடி பசப்புக்கள்ளியே நீ யொருவன் பின்பற்றப்பட்டவளாயிருக்கிறாய் நீ என்னத்திற்காகவே இக்கோலங் கொண்டாய் பரியின் குலத்தின் பேரைப் போக்கடித்தாய் வெட்கத்தை வாங்கினாய் சீ சீ அறிவுகெட்டவளே நாம் நேற்றிருந்த பேரென்ன அடி பேரையின்று போக்கடித்தாய் அடி குடி கேடி பாதகி சூதுக்காரியென்று நானாவிதமாகிய பேச்சுகளெல்லாம் பேச அதையெல்லாம்பகாவலிகேட்டு தன்னிரண்டு கைவிரலாவிரண்டு காதையுமூடிக்கொண்டு மக்சருகிய பெட்ட கெட்ட ஆணைபேலாணையிட்டு தாயின் பாதத்தின்மேல் விழுந்து என்றாயே இதுவரையிலும் நான் ஆசையின் பெயரின்னதென்றும் ஆசை யின்னதென்றும் கேட்டுமறியேன் மனிதன் இவ்வடிவுள்ளவனென்றுங் கண்டதுமில்லை அறிந்ததுமில்லை கனவிலுங் கண்டறியேன் அப்படியிருக்க வீணாக இல்லாததும் பொல்லாததுமாக என்பேரை

வீணுகத் தூற்றிவைப்பதற்காக இடை கட்டிவந்தா யுன க்கு இல்லாத போதனைகளெல்லாம் போதித்தவன்யாரோ தெரியேன் அதை நீ மெய்ப்படுத்தாவிடில் உன்முன்னே தானே யென்னுயிரை மாய்த்துக்கொள்ளுவேனென்று சொல்ல அதனைத்தாயாகிய காதுன்கேட்டு இரம்பவு மன மிரங்கிக் கரைந்து ஆனல் நீ வெளிப்புறத்தின் சாதனை சாதிக்கிருய் வாயைமூடு நீகாலில் சலங்கைகட்டி ஆடுகிரு யென்று பேசிக்கொண்டிருக்குந் தருணத்தில் அம்மாலா தாசுல்புலுக்கை யெடுத்துக் கொண்டிருக்குந் தருணத்தி ல் அம்மாலா தாசுல்முலுக்கை யெடுத்துக் கொண்டுவந் து சேர்ந்தாள் அதைச்சமன்பரிகண்டு பகாவலிக்கு அம் மாலா கொண்டுவந்ததை சைகை செய்ய அதைப் பகா வலிகண்டு அம்மாலா கொண்டுவந்ததைச் சைகையாக அவ்வரசன் குமாரனை யோரிடத்தி லொளித்து வைக்கும் படி சைகைசெய்ய அந்தப்படியே அவனையோரிடத்தி லொளித்துவைத்தது ன்பு இவாகிரவரைக்குப்பகாவலி வெகு லாச்சாயோடு தாயாரின் கிட்டே உடலிங்கு மனமங் குமாக உட்கார்ந்துக் கொண்டிருந்தான்

அப்படி யிருக்கையிலிரவு மிகுதியாகவே பஞ்சனை மெத்தையின் மேல்போய் காதூன் நித்திரை செய்தனள் அப்போது பகாவலி தாயின் நித்திரையைச் சோதித்து அவள் நித்திரை கொண்டாளென்றங்குவிட்டு அடிமேல டியாக அச்சத்தால் நடந்து மனதாசையினுல் எப்போத வன் முகத்தைக் காண்போமென்கிற இச்சையினு லவனி ருக்குமிடஞ் சேர்ந்தாள் பகாவலிமின்னல்மின்னற்போல கண் புன்ருேனறிட தாசுல்முலுக்கு கண்டு கண்ணளிம ழுங்கித் தன்னிலைதடுமாறி மூர்ச்சையாய்மேலிழுந்தான் அப்போது பகாவலி ஓடோடியும் வந்து அவன் சிரசை தூக்கித் தன் துடையின்மேல் வைத்துக்கொண்டு முகத் தோடு முகம்வைத்து உதட்டோடு உதட்டைவைத்து மது ரத்தைக் குடித்து முத்தமிட்டு அதிக பிரியஞ்செய்தனள் பின்பவனை முகந்து புத்திமேல் முத்தமிட்டு முகர்ந்தனள் களைபட்ட அரசன் குமாரன் மூர்ச்சை தெளிந்துதன்னிலை யில் வந்து விழியைத்திறந்தவளைநோக்க அவள் படிமே ல் தன்றலையிருக்கண்டு கட்டிலடங்காமகிழ்வோடெழுந் து

ட்கார்ந்து அவளையிவனும் இவனையவளுமாக ஒருவர்க் கொருவரெதிரெதிராக காமத்தாலுமறு கிரியும் கிரியும் கரியும் கரியும் மதப்பட்டாற்போலும் சாரையும் நாகமும் ஒன்றோடொன்று கூடியதுபோல் கட்டியணைத்து ஒருவரை யொருவர் தழுவி உச்சியை முகந்து நயனத்தைக் கசக்கி உதட்டைக்கடித்து மதுரத்தைக்குடித்தும் தோளைப்பிசைந்தும் முலையை நெருடிக் கைமூலமுண்டு முலைமேல் நகக்குறிட்டு பற்குறியிட்டு காலைநெருடி சேலையைத் தெரிந்து மதப்பட்டாரிருவரு முதைப்பட்டார் இப்படி ஆலிங்கனம் செய்து தேன்கூடாகிய அல்குலின் சுகத்தினின் பத்தில்மூழ்கி காமத்தினை யவித்து இருவருமனுபோக யுத்தஞ்செய்து அலுத்துச்சலித்து நித்திரை யாயினார்கள்.

ஜம்பை-இ-ம்-பைரவி

தீராத ஆசையது தீரவிருபேரும்
பாராதபோது பருகினர்கள்கூடி
கொங்கைமதுரங்குடித்துக் கூடிபெருங்கடலில்
செங்கைசிவப் பாகத்தழுவி சேர்ந்தார்மனமகிழ்ந்து
கிள்ளைமொழியாள் காமங் கீழருவிதானோட
கொள்ளைகொண்டார்வென்மேலாய்க் கூடிப்பிரியாமல்.

வசனம்

அப்போது நித்திரை செய்துக்கொண்டிருந்த காமதூதன் பாதிமசவிற்குப் பின் நித்திரைதெளிந்து தூக்கம் தராததால் குளிர்ந்த வாடையும் சந்திரன் வெளிச்சமுமாயிருந்தபடியால் அச்சோலையெல்லாம் உலாவிப்பார்த்துக் கொண்டு வருகை யில் அங்கோரிடத்திலிருவரு மோய்ந்து படுத்துக்கொண் டிருக்கக்கண்டு அவளுடைய கோபாக்கினி மூண்டு கண்கள்சிவப்பேறி கோபத்தை யடக்கமுடியாமல் வேகமாகவந்து தாசுல்முலுக்கைவாரி சமுத்திரத்தில்எறிந்துவிட்டு பின்பு பகாவலியின் கன்னச்சிவப்பேற வடித்து பின்பவளை ஹிராமென்னுஞ் சோலையில் அவள் தகப்பனுடைய சிம்மாசனமிருந்தது அங்கு தகப்பனிடத்திற்குப் பகாவலியைப் பிடித்திழுத்துக்கொண்டு போய் தான் கண்ணிற் கண்டபடியே சகலமும் பேருசாவிற்குச்சொல்ல அதை அவ்வரசன்கேட்டு அதிகவிசனப்பட்டு

அவளுக்கறிவு பிறக்கும்படி சிலபரிகளை போதிக்கும்படி யனுப்ப அப்பரிகளதேப்ரகாரம் பகாவலியினிடமாகவும் இரவும் பகலுமாயிருந்து ஓ பெண்ணே நாம் மேன்மை யானபரிகூட்டமாயிருந்து மண்ணிற்பிறந்த மண்ணிற் பிறந்த மனிதர்களின்மேல் இச்சை வைக்கிறது எவ்வளவும் தகுதியல்லவே நம்மை நமது குலத்திலரசர்களல்லவோ மணம்புரியவேண்டும் அப்படிச்செய்யாவிடில் நமது குலத்திற்கு அதிக இழிவல்லவாவென்று சொல்லச் சொல்ல அது பகாவலிகாதில் விழுவதெப்படியிருக்குதெனில் அடங்கிறதீயை மூட்டுவதுபோல அடிக்கடி அவன்பேரை யெடுப்பதால் ஆசையின் தீமூண்டுக் கொண்டேயிருந்து அந்நங்கலில்லைடகல்காலமெல்லாம் அப்பெண்களுடன் பேசுவார்த்தைகளில் கழிப்பாள் இராக்கலமுழுதும் தாசல்முலுக்கின்பேரில்கொண்ட ஆசையின்கியாபகத்தில் கழித்து துக்கவிளையப்பாடிக்கொண்டிருப்பாள்.

அகவல்-இ-ம்-கண்டா.

காமதியாறிக் காட்டுங்கணவனே<br>
தாமலையாமல்தி தயவுசெய்தங்கு<br>
பாவியாள்கலக்கம் பறந்திடவாராய்<br>
ஆவியங்கம்போல் அணைந்திடவாராய்<br>
கண்டானுகிப்போல் காரிகையாட்கு<br>
பண்ணளித்தோடிணுப்ப தகமலவோ<br>
உன்னை நினைத்து உருகிறேனிங்கு<br>
என்னை நீநினைக்க ஆலயமென்செய்வேன்<br>
படுவதேசிறிதுன் பாடேபெரிதென<br>
தொடுவதேநினைத்துத் துயிலுமிலையே<br>
சற்றுன்முகத்தைத் தான்காட்டிடுநீ<br>
மற்றென்றும்வேண்டாம் மன்னனேயென்பாள்.

வசனம்.

இவ்விதமாய் அழுதுபுலம்புவதைப்பரிகள் கேட்டுப் பின்பு அப்பரிகளெல்லா மரசனிடமாகவந்து அடிபணிந்து நாங்கள் தினந்தோறும் பகாவலிக்கு என்னென்ன புத்திமதியானசொற்களை போதிக்க அதனலவளுக்கு நா

ளுக்குநாள் அவன்பெற்றுக்கொண்ட ஆசை அதிகமாகமூ
ளுகின்றதே தவிர அது குறைபடாகிறதில்லை அவள் வா
டியதுன்பத்தைவிட்டுச் சந்தோஷமாகிறதில்லை யென்று
சொல்ல அதையரசன்கேட்டு நாமின்றோடே நமது குமா
ரத்தியைக் கைகழுவிவிட்டோமென்றெண்ணி அதிக கோ
பத்தால் அவளிரண்டுகாலிற்கும் இரும்பின்றுடர்சங்கிலி
பூட்டிச் சிறைப்படுத்தினான்.

## பதினாலாவதுகதை.

---

### அதைவிட்டுமீண்டதும் அக்கிருந்துவனமடைந்து உருமாறிப்போகும்விதங்களின்விபரம்.

### வசனம்.

படுத்திருந்த தாசுல்முலுக்கை காறூன்கோபத்தால் வாரியெறிய அவன் அப்போதோர்பெருங்கடலின்போய் விழுந்துவிட்டானக்கடலில் மூத்துமூழ்குவதுபோல சுழலுக்குள் சிக்கி உள்ளேபோகிறதும் வெளியேவருகிறதுமாக மூழ்கிமூழ்கி நீந்திநீந்தி சிலநாள்வரைக்கும் வருத்தப்பட்டுக்கடைசியில் அலை ஒதுங்கியொதுங்கிக் கரை கொண்டுவந்து சேர்த்துவிட்டது அப்போதவன் அந்நீரால்நனைந்து உடலெலாமொடுங்கி அதிகுளிர்ச்சியினால் மெலிந்து உடல் முழுதும் வெய்யிலில் காயவைத்துக்கொண்டிருக்கையில் நடக்க வல்லமையுண்டாயினது அப்போதெழுந்து முன்னோக்கி சில தூரமாகநடந்துபோகையில் ஒரு தீவு எதிர்ப்பட்டது அதனுட்சென்று சுற்றி நோக்கிச்செல்லும்போது அதில் விதவிதமாகிய கனிவர்க்கங்களின் தருக்கள்தோற்றினது அதைக்கண்டு நகமுக முழுஞ்சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகையில் ஒருசோலை எதிரானது அதிலெப்படிப்பட்ட பழங்களிருக்குமெனில் மனிதனுடைய தலைபோலவும் முகம்போலவு மிருந்தது அக்கனிகளிவனைக்கண்டு கலகலவென்று நகைத்துப்பின் பெல்லாக்கனிகளுமாத்தினை கிளைகளின்மேலாய் விட்டதுகள் தாசுல்முலுக்கு இவ்வதிசயங்களையெல்லாம் கண்டு அல்லாகுத்த ஆல்லாவுடைய குதரத்தென்றெண்ணி அதி

க புதுமையாகிய டை விட்டுப் பின்னு மூன்னம்நோக்கி கடற்கரையில் ஒருகிச்சிறித்தோட்ட மெதிராயினது அதி லொவ்வொருகனிகள் ஒவ்வொருகும்பத்திற்கு நேராயிருந் தன அதைத்தாசல்மூலுக்கு கண்டு அதினருகிற்சென் றூர் கனியை யறுத்துரித்திட அதனுள் சிறிய சிறிய க ளைகளிருந்தது அதனுள் செந்நிறம் பொருந்திய சிறிய சிறிய பருந்துகளிருந்தது அதுகளெல்லாம்பறந்து போ ய்விட்டது.

அதையரசன்குமாரன் கண்டு இதுவும் அல்லாவின் சிபத்தென்றெண்ணிப் புதுமையாய்ப் பின்னுமூன்னும் நோக்கி நடக்க நடக்க விதவிதமாகிய அதிசயங்களைக்க ண்டு புதுமைப்பட்டு அப்பூமியில் போகுமிடங்கள்தோ றும் விதவிதமாகிய வேடிக்கைகள் தோன்றிட அதுகளை ப்பார்த்து நகமூகமூந்திரிந்து கடைசியில் அதிக வருத்த மாகி அவ்விடத்திலிருந்த விறகுகளையெல்லாம் சேர்த்து அதையொரு சுமையாகக்கட்டி அல்லாவின்பேரை நினை த்துக் கடலில்போட்டு அதன்மேரிலேறி யுகார்ந்தான் அது சிலநாளைக்குப் பின்பு ஒரு தீவின் கரையோரமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்தது அதைவிட்டிழிந்து மூன் ஞேக்கிப் புலம்பிக்கொண்டே நடக்கலாயினுன்.

விருத்தம்-இ-ம்-கல்யாணி

உலகிலென்னைப்போல் ஒருவரும் பிறக்கலாகா
சலமதைவிட்டமீன்போல சஞ்சலமகுதியான
தலமிதுவறியேனீது தனித்துநான்விரகத்தாதே
நலமிசையலைத்துகுன்றி நெட்டுர்யுபடர்கிறேனே.

---

தரு-இ-ம்-சங்கராபரணம்.

உன்னாலேநானலைந்தேன் என்கண்ணேபெண்ணே
உயிரைவைத்திருப்பனே என்கண்ணேபெண்ணே
முன்னாலேயீதரிந்தால் என்கண்ணேபெண்ணே
மோசக்கடலில கேன் என்கண்ணேபெண்ணே
மின்மினியானேனுன்னால் என்கண்ணேபெண்ணே
மேனிவடிவுங்கெட்டேன் என்கண்ணேபெண்ணே

தன்மனமிரங்கவில்லை என்கண்ணே பெண்ணே
தயவுசெய்தணையவாராய் என்கண்ணே பெண்ணே

---

வசனம்.

இவ்விதமாகப் புலம்பிக்கொண்டு போகையில் வழியில் ஒருவனம்வந்தெதிர்பட்டது அவ்வனத்தினுள் திரிந்துபார்த்து வரும்போது மாலைகாலமாயின அப்போதவ்வனத்திலுள்ள மிருகஜாதிகளின் பதத்தினால் ஓர் விருக்ஷத்தின்மேலேறி யுட்கார்ந்திருந்தான் அன்றிரவுபாதியிரவானவுடனே ஓரொலியானது தன்றேயத்தின் புறமாயிருந்தெழும்பியவன் காதில் விழுந்தது அந்தசத்தமானது எங்கிருந்து வந்ததென்று நகமுகமும் சுற்றிப்பார்க்கையில் ஒன்றும் தெரியவில்லை என்னமேவென்று கலங்கி தனித்திருக்கையில் அப்போதொரு வலுத்தபாந்தளானது தோன்றினது அது தாகூல் ருலுக்கேறியிருக்கு மரத்தின்கீழே வந்து நின்றது அதன் பெருப்பத்தையு முகத்தையு மரசன் குமாரன்கண்டு தன் தயிரியத்தைதயிழந்து அம்மரத்திலொரு கிளையை புதுமாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு மூச்சுவிடமாலிருந்தான் அப்போதவ்வரவவொருமணிநேரத்திற்குப்பின் வாயிலிருந்து ஒருமாணிக்சத்தை அம்மரத்தடியில் சக்கிவைத்தது அதனுடைய காந்தி சூரியனுடைய பிரகாசம்போலச்சுற்றிவர 40 கோசுவழிவரைக்கும வீசிட அவ்வெளிச்சத்தைக்கண்டு அவ்வனத்திலுள்ள பறவைக்குலங்களும் நாற்கால்மிருகங்களும் ஓடோடி அம்மாணிக்கத்தினெதிரில் வந்து மகிழ்ச்சியினால் கூத்தாடிக் கூத்தாடிக் கடைசியில் களைத்து பூமியில் வீழ்ந்துவிட்டதுகள் அப்போதவ்வரவமதுகளை தன் மூச்சின் வலுவினாலிழுத்துத் தன் வலுவினாலிழுத்துத் தன் வயிறுநிறைய விழுங்கிவிட்டு பின்பு அம்மணியையெடுத்துவிழுங்கிப் பின்பு தான வந்த வழியைநோக்கிப் போய்விட்டது அப்போதரசன்மகன் இம்மாணிக்கம் நமது கையில் சிக்குவதற்கு என்னவேலை செய்தாற்கப்படுமென்று அறிவையோசனைமேலிட்டு ஆராயும்போது கடைசியில் பொழுது விடிந்துவிட்டது.

அப்பொ தாசன் கு ரன் மரத்தைவிட்டிழிந்து கடற்கரையோரம்சென்று தன்னுலோசனையில் வந்தபடி ஈரக்களிமண் ணுருண்டையொன்று பெரியதாயுருட்டி யெடுத்துக்கொண்டு அந்நேரமானவுடனே அவ்விருட்சத்தின் பேரில் நேற்றிருந்த முறைப்படியே யேறி யுட்கார்ந்துக் கொண்டிருக்கையில் மறுநாளுமப் பாம்பானது அம்மரத்தினடியில்வந்து தன்வழக்கத்தைப்போல மாணிக்கத்தை சக்குவிட்டது அப்போதாசன்மகன் மாணிக்கத்தின் பேரில் விழும்படியாக ஈரமண் ணுருண்டையைதன்மேலேபோட்டான் அம்மண் அதைமூடிக்கொள்ளவும் காடெல்லாமிருளாய்விட்டது அப்போதம்பாம்பானது தலையைப்பூமியின்மேல் மோதியடித்துக் கொண்டிறந்து விட்டன அதைக்கண்டரசன்குமாரன் மரத்தைவிட்டிறங்கி ஈரமண்ணிற்குள்ளிருந்த மாணிக்கத்தையெடுத்து தன்னிடையிற்கட்டிக்கொண்டவ்விடம்விட்டு செழிப்பானதடத்தின் புறமாகச்சென்ருன் பகலெல்லாம் நடக்கிறதும்இரவானுல் ஒருமரத்தின்மேலேறிக்கொள்கிறதிப்படியாகச் சிலநாள் தாசுல் புலுக்கு நாள்கழித்துவருகையில் ஓரிரவில் ஓர்மரத்தின்மேலேறி யுட்கார்ந்துக்கொண்டிருந்தான் அம்மரத்திலே பேசும்படியாக மயினு அண் பெண் கூடு கட்டி யதில்குஞ்சு பொரித்திருந்ததுகள் அதுகளுக்கிது களிரவில் கதைசொல்லிக் கொண்டிருக்கும் அதிகதந்திரமுள்ளகதைகளாயிருக்கும அந்தக்கதையின்பேரில் தாசுல்முலுக்கு விருப்பமுண்டாகக் கேட்டுக்கொண்டிருந்தான் அப்போது குஞ்சுதாயைப்பார்த்து அம்மா நீயெனக்கு நகமுகாசங்கதிகளையெல்லாம தெரியப்படுத்தினுல் இக்காட்டின்சங்கதியேதாவதிருந்தால் தெரியப்படுத்தவேண்டுமென அதற்குத்தாயாகியமயினு இக்காட்டில்அதிகபுதையல்புதைத்திருக்கிறது இவ்விருநதூ பக்கன்புறமாக ஒருகுளமுண்டு அதனருகில் ஒருபெரியதாயிருக்கின்றது அதைசரீராக நல்பர் என் று சொல்லுகிருர்கள் யாதாமொருவனம்மரத்தின் பட்டையினுல் குல்லாச்செய்து போட்டுக்கொள்ளுவானுகில் எல்லாமவனகண்ணிற்குத் தெரியும அவனொருவர்கண் ணுக்குத் தோற்ருன் அதனருகிற் செல்ல எவ்வல்லமையுள்ளவனுலு முடியாது அம்மரத்தி

ற்குக்காவலாக ஒருபெரியபாம்பிருக்கின்றது அப்பாம்பின் மேல் கத்திவெட்டு குண்டுமுதலியவையினடி ஒன்றும் படுகிறதில்லையென்று சொல்ல அதற்குக்குஞ்சானது யாதாமொருவன் அங்குபோகவேண்டுமானால் அவனெவ்விதமாய்ப்போகவேண்டுமெனகேட்டு அதற்கு மயினா அம்மரத்தினருகிற்செல்லும் வல்லமையாளன் தைரியமுள்ளவனாகவும் மனந்துணிந்தவனாகவுமிருக்கவேண்டும் அக்குளத்தினருகில் அப்போதப்பாம்பவன்பேரில்விழவரும் அப்போதக் குளத்தில் குதித்துவிடவேண்டும் அப்போதவன் காகவடிவாய் விடுவான் அதற்குச் சந்தேகங்கொள்ளக்கூடாது பின்புபறந்து மாத்தினுடைய கிழக்குமுகமாயிருக்குங்கிளையின்மேல் உட்காரவேண்டும் அதில் கனக்கற்ற சிகப்புக்கனியை ஒன்றுதின்பானாகில் தன்பழையவடிவில் வருவான் பச்சைகனியின் குணமானது அதையறுத்துத் தலைமேல்வைத்துக்கொண்டால் கத்திவெட்டுப்படுகிறதில்லை அதையிடையிற் கட்டிக்கொண்டால் காற்றைப்போலப்பறப்பான் அவ்விலையின்குணம் வெட்டுப்புண்முதலியவைகளுக்குவைத்துக் கட்டினால் ஆறிப்போகும் அதனுடையகோல் ஆயிரமணங்குகனமுள்ள இரும்புப்பூட்டின்மேல் வைக்கில் திறந்துபோய்விடுமென்றுசொல்லியது அப்புதுமையான சொற்களையெல்லாம் தாசுல்முலுக்குகேட்டு மாத்தைவிட்டிழிந்து அதுசொல்லியபடி தேடிநடக்கையில் குளமெதிர்ப்பட்டது அதனருகிற்போகப் பாம்பு துரத்திக்கொண்டு வந்ததைக்கண்டு குளத்தில் குதித்தான் குதித்தவுடனேகாகவடிவமாய் பறந்து அம்மரத்தின்மேலுட்கார்ந்து செந்நிறக்கனியை யறுத்துத் தின்று முன்போல் மனிதர்வடிவானான்.

அதன்பின்பு பச்சைக்கனியையறுத் இடையிற் கட்டிக்கொண்டு பட்டையையுரித்துக்குல்லாதைத்துப்போட்டுக்கொண்டு அதிலொருகிளையை யொடித்துக் கோலாகக் கையிற் பிடித்துக் கொண்டு சிலநாள்வரைக்கும்பறந்து அக்காட்டைவிட்டு வெளியாய் ஒருபட்டணத்தைக்கண்டு அங்கிருந்து தன்னகரதினாற் றுடையைக்கிறி அதில் மாணிக்கத்தைவைத்து இலையைத்தடவவும் அப்போது பு

ண்ணறிவிட்டது அவ்விடத்தைவிட்டு பட்டணத்தின்புறத்தை நோக்கிநடந்தான்.

பதினைந்தாவது கதை.

தாசுல்முலுக்கு ஓர் குளத்தினருகில் சென்று அதில்முழுகினதும் தன்னுருவேற்றுருவானவிபரம்

15-வது பாம்பின்படம்.

வசனம்.

தாசுல்முலுக்கு மலைவனம் கானையாறுகள் முதலிய பாதைகளைக்கடந்து செல்லுகையில் ஓரிடத்தில்வங்குமாத்திஹலிழைத்து செய்த திருக்குளமும் அதற்குநாலுபக்கமும் நானுவிதமாகிய மலர்நெருங்கிதருக்களும் அதில் விதவித ருசியினையுள்ள கனிகளுமாகிய உன்னதமான குளிர்ந்தநிழலும் வாடையுமாகிய இடமொன்றெதிர்பட்டது அதனைக்கண்டவ்விடம்போய்சேர்ந்து அன்னிழலிலுட்கார்ந்தவுடன் அதிகசுகமாகிய நித்திரைவந்து விட்டது அந்தநித்திரைதெளிந்து உட்கார்ந்து நாலுபக்கமும்பார்க்கையில் எதிரில பால்போல் வெண்மையாகிய ஜலந்தோற்றலாயினது அதைக்கண்டு அந்நீர்மேலாசையாய் தலையிலணிந்திருந்த குல்லாவையும் கையிலிருந்த தடியையுமோர் மரத்தடியின் கிழே வைத்துவிட்டு அக்குளத்திலிரங்கிமுழ்கி வெளியேவந்துபார்க்க அக்குளமும் அவ்விடமும் மாறிவேறிடமாய்விட்டது அகனல் தாசுல்முலுக்குஆச்சரியப்பட்டுதன்னுருவைநோக்கிட ஆணுருமாறிப்பெண்ணுருவாயிருக்கக்கண்டு மிகுந்த வருத்தப்பட்டான் அரசன்மகனெனப்படிப்பட்ட பெண்ணுருவாகினனில் முகம் சந்திரனைப்போலவும் கண்ணை கண்ணாடியைப்போலவும் புருவம்வில்லைப்போலப்நெற்றிபிறைபோலவும் உதடு பவளம்போலவும் மார்பிண்டுபந்து போலவும் இவ்விதமாகியதேர்ந்தவயதுள்ளவளாய் தன்னுருவந்தானை நோக்கவெட்கமுற்று இனிநாமென்னசொல்வோமென்றெண்ணிமிகுந்தவருத்தப்பட்டு அவ்விடம்விட்டு நீங்கிப்பொறுமையோடு தலைகவிழ்ந்தவளாய் ஓரிடத்திற்போயுட்கார்ந்துக்கொண்டிருப்பதை வழியில் ஒருவன்

பாட்டை சாரியாகவந்த வாலிபக்காரனொருவ னங்குவந்தவளின் வடிவையும் வயதுங்கண்டு இவள் யாரோ இங்கு வெகுகாலத்தோடிருப்பதை யறியவேணு மென்றருகில் வந்து மானேதேனேமயிலேகுயிலே நீயிவ்விடத்தல்தனியாயிருக்க வேண்டிய காரணமென்ன உனக்கென்ன மிடிமைவந்து நேரிட்டது ஏன் தனியா யிவ்வனத்திலிருக்கிருய் சொல்லெனறுகேட்க அதற்கவள் என்னுடையதகப்பன் வியாபாரி யென்னை விடாமல் தான்போகும் தேசங்கள்தோறும் கூடவே யிட்டுக்கொண்டு போகிறது அந்த வழக்கத்தைபோல் இந்தமுறை நாங்களிந்த விடத்தில் வந்திறங்கி உண்டு தின்று குடித்துச் சந்தோஷத்தோடு படுத்து நித்திரை செய்து விட்டோம் அன்றிரவில் கள்ளரின் பெரிய கூட்டமெங்கள்மேல் வந்துவீழ்ந்து பணங்காசுகளைக் கொள்ளையடித்துக் கொண்டு என் தகப்பனோடு சக பேரையும் வெட்டிப்போட்டு என்னைமாத்திரம் விட்டுப்போய் விட்டார்கள் அதனால் நான் அதிகவிசனமடைந்து நடக்கவும் காலெழாமல பேசவும் வாயில்லாம லெவ்விடம்போவோம எவ்வூரிலிருப்போம் நாம் முன்பின்னறியோமே யென்று துக்கத்தினால் இவ்விடத்திலுட்கார்ந்துக்கொண்டிருக்கிறே னென்று சொல்வாள் அதை யவன்கேட்டு அதிக சந்தோஷமடைந்து பெண்ணே கண்ணே நீ என்னை விவாகஞ்செய்துக்கொள்ள சம்மதிக்குமானால் நானுன்னை என் வீட்டிற்கு கொண்டு போய் வீடொன்று கொடுத்து வைத்துக் கொள்ளுகிறேனென்று சொல்ல அதையவள்கேட்டு அவனுடைய வாலிபத்தை நோக்கி யவன்மேல் ஆசையின்றீயானது மூண்டிட அப்படியே யாகட்டு மென்று ஒப்பிக் கொண்டாள் அவன் அவளை யிட்டுக் கொண்டுபோய் பெண்சாதியாக்கிக்கொண்டு கட்டியணைத்து முத்தியிட்டு இருவரு மோகக்கடலில் மூழ்கியிருந்தார்கள். இப்படி சிலநாள்வரைக்கும் அவள் முன் வடிவை நினைத்துச் சிரிப்பும் துக்கமுமாக விருக்கையிலிருவரும் புணர்ந்து கற்பவதியாய் பத்துமாதமுஞ் சென்று ஓராண்பிள்ளைப்பெற்று சந்தோஷமாருக்கையில் நாற்பதா நாள் முழுகவேண்டு மென்றோர் குளத்திலிரங்கி மூழ்கித்தலையை யெடுத்துப்பார்க்க அவ்விடமும்மாறுபாடா

ய்த் தன்வடிவுமாறுபாடாய் அந்த ஆலாவினுடைய குதி
ரத்தினால் தன்னையொரு ஹப்பஷிவாலீபக்காரனாகக்கண்டு
அம்மகம்துல்லா வென்று சொல்ல ஆனால் நமக்கு முன்
னிருந்த அசல்வடிவு இல்லா விட்டாலும் பெண்ணுரு
வைவிட்டு இவ்வுருவமானதே மிகுந்த நலமென்றெண்
ணி நிற்கையில் மேலுதடு மூக்கிற்படவும் கீழுதடுமோவா
ய்க்கட்டையின் கீழ்ப்படவும் மூலைகளிரண்டு முழங்காலி
ற்படவும் சிறந்த சிரசாகவும நாவாலிரண்டு மூர்க்ககையுந்
தாழவக்கொண்டு இடியினுடைய சத்தத்தைப்போல் ஒ
லித்துக் கொண்டு கருமலைப்போல் ஒரு பெண்ணினருகி
ல்வந்து இடையை சட்டிப் பிடித்துக்கொண்டு ஓ வல்ல
மையற்றவளே என்னையும் பிள்ளைகளையும் விட்டு வந்து
மூன்று நாளாய் விட்டதே அப்பிள்ளைகள் பசியினால் வா
டிக்குரலிட்டு அழுதுக் கொண்டிருப்பதினால் நானுன்னை
க்காண எங்கெங்கிலுமலைந்து தேடித் தேடித் திரிகையி
ல் நீ எவ்விடத்திலுமகப் படாமல் மறைந்தாயிருக்கிறா
யென்று பிடித்திழுத்துக் கொண்டு தன்மனைக்குச் செல்ல
வும அங்குள்ள பிள்ளைகளெல்லாம் எதிரோடிவந்து இடு
ப்பைப் பிடித்துக் கொண்டு அப்பா இத்தனை நாள் எங்
கே போயிருந்தாய் எங்களுக் கென்ன கொண்டு வந்தா
யென்று கேட்க அதை யவன் கேட்டு இதென்ன புது
மையாயிருக்கிறதென் றெண்ணி மலைத்துநின்று வானத்
தின் புல்மாகத் தலையையுயாத்தி முகத்தைத்திருப்பி நாய
னே எதுவசைக்கு மென்னை யிப்படிப்பட்ட மிடிமையிலக
ப்படுத்தி வைப்பாய் இன்னம் நான் அந்ததேவின் கையி
ற்சிக்கி தான் பட்ட வருத்தமும் நீங்கவில்லையே அதற்
குள் இவ்வருத்தத்தில் சிக்கவைத்தாயே யென்று கலக்கத்
தோடு நிற்கையில் அந்நீலியானவன் தாசுல்முலுக்கின்
கையிலொரு கோடாலியைக்கொண் வந்துகொடுத்து பிள்
ளைகள் பட்டினியா யிருப்பதால் நீ சீக்கிரமாகக் காட்டுக்
குச் சென்று விறகுவெட்டிச் சுமைகட்டிக் கொண்டுவாவெ
ன்று சொல்லிட அதை யரசன் கேட்டு இதுவுங்கொஞ்
சம் நல்லதருண மாயிருக்கிற தென்றெண்ணி இந்தமஹே
ந்திர ஜாலத்தைக்கண்டு கைசேதமடைந் தோயென்று
மனதினுள் ஓராலோசனைசெய்து நாமிரண்டு தாயாக குள

த்தில் மூழ்கினதற்கு முதலொருருவ மாயினோம் பின்போருருவ மாயினோம் ஆனால் மூன்றுந்தரமுங் குளித்துப் பார்ப்போ மதனாலென்ன முடியுமோ அதையு மறிவோமென் றெண்ணி யிவ்விடம்விட்டு நீங்கியொரு குளத்தைக்கண்டு அதில்மூழ்கி சிரசை மேலுக்கெடுத்துப் பார்த்திடத் தனுருவமாறி முன்னால் மரத்தடியில்வைத்த குல்லாவும் தடியு மிருக்கக்கண்டு மேன்மேலு நாயனைப்புகழ்ந்து இனிமேலெப் போது நாமிக்குளத்திலு மிறங்கவும் கையை வைக்கவு மூழ்கவுங் கூடாதென்று தன்மனதில் நயபித்துக் கொண்டு சிரசில் குல்லாவைப் போட்டு கையில்தடியைப் பிடித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டுப்புறப்பட்டான் ஓ யறிவுள்ளவனே உன்காதை கொடுத்துச் சற்றேகேள் அல்லாகுத்த ஆலாபணி ஆதமிறகு கானகத்தினுடைய டோபையிட்டிருக்கிறான் இன்னயொருமைமிறடிக்கையிற் கொடுத்திருக்கிறான் இன்னம் இந்திரஜாலத்துக் கொப்பாகிய இந்தப்பூமியானது ஆகிறத்தினுடைய வாழ்வைத் தேடிக்கொள்ள இடமாகையாலிதில் நம்மையனுப்பிவைத்தான் ஆனதால் மனிதனுக்கு முள்ளும் பூவும் நீரும் கானலும் இவைகளையெல்லாம் நன்றா யறிந்துக்கொள்ளும்படி எந்ததோட்டத்தின் பூவும் எந்த ஆற்று நீரும் பொள்ளக் கூடாது. ஆனதாலிங்கு பூவற்காகிலு முள்ளு அதிக வர்ணமுள்ளதா யிருக்கிறது கானலானது எப்புறம் பார்த்தாலு மப்புறம் நீராகவே தோற்றுகிறது ஆனதாலறிவுள்ளவனே துணியாவினுடைய மாணிக்கந்தேடித் துனியாவில் மூழ்கிப் போவானாகி யிவனுண்மையாகத் தடியையும் குல்லாவையு மிழந்து ஆகிறத்தினுடைய நற்பலனைக் கொண்டும் கைசேதமாய் விடுவான் ஆகையால் துணிவைத் தேடப்பட்டவழி ரேடியா யிருப்பான் ஆகையால் நீ கைசேத முள்ளவனாயிராமல் அந்த ஆலாவின் ஆசையின் கடலில் மூழ்கிவிடு அப்போது உனக்குத் தடியும குல்லாவு மிருக்கக் கண்டாய்.

## பதின்மூன்றாவதுகதை.

---

சியாபரியினிடத்திற்குத் தாசுல்முலுக்கு சென்றதும்
இன்னம் பகாவலியின் சிறியதகப்பன் மகளாகிய
ராஹே அப்சாவைக்கண்டதும் இன்னமவளை
தேவியினுடைய சிறையைவிட்டு மீண்ட
தும் பிறகு பிறதவ்ஸென்னும் சோலை
யடைந்த விபரம்.

---

வசனம்.

தாசுல்முலுக்கு இப்படிப்பட்ட அனேக வருத்தங்களிலகப்பட்டு அதனால் விசனமடைந்தபடியால் பூமியின் மேல் நடப்பதைவிட்டு ஆகாயத்தின் மார்க்கமாக அவ்வகனியின் மகத்துவத்தினால் பறந்துக் கொண்டு வருகையில் ஒருநாள் ஒரு பெருத்தமலை எதிர்ப்பட்டது அம்மலையின பெருப்பமானது அதற்குச் சரிபார்க்கில் கோஹகாபு மலையும் சிறியதாகவே தோற்றும் அம்மலைமேல்வந்து சேர்ந்துச் சதுகளுஞ் சுற்றிப்பார்த்து வருகையில் பச்சைமரகதத்தாலிழைத்துக் கட்டிய உயர்ந்த கல்லின் வெதகதை வாசற்படியொன்று தோற்றலாயினது அதைக்கண்ட ராஜகுமாரன் அதனுடன் சென்றதைப் பார்க்க வேண்டுமென்றெண்ணியவ்வீட்டினுட் சென்று சிலநேரஞ் சுகம்பெற்று பின்பு அம்மெத்தையினுள் நபிமுகளுஞ் சுற்றிப்பார்த்து வருகையில் உள்ளுள்ள வஸ்துக்களையாதொன்றுந் தோற்றவில்லை அப்போது ஒவ்வொரு வீட்டினுள்ளாகப்புகுந்து என்னவிதக்குமாளிருக்கிறதோவென்று பார்த்து வருகையில் அதிக வருத்தமாகிய ஒருசத்தமவன் காதில் வழுந்தது அதைக்கேட்டங்குமென்று நோக்குகையில் சந்திரனொளிபோன்ற முகத்தினையுடைய திரண்டுரண்ட கும்பஸ்தனங்கள் விம்முறயினிப்புடனொரு வாலிபப்பெண் கட்டிலினமேல் படுத்துக்கொண்டு தேம்பித்தேம்பி யழுதுக்கொண்டிருக்க அரசன் மகன் கண்டு தன்சிரசிலிருந்த குல்லாவை

கழுட்டி கையிற்பிடித்துக் கொண்ட வளருகிற் சென்று இன்
பமனையு முயிரே யிந்த வாலிபப்பிராயத்தில் உன்னை யணை
த்து உதட்டின மதுரத்தை கடித்து தனியா நீக்கி யவன்
மனதில் காமத்தீயைக்கொளுத்தும் கண்ணே பெண்ணே
மயிலே குயிலே மானே தேனே யவன்மேல் கொஞ்சமு
மிரக்கமொழிந்தாயோ அதுசளைவிட்டு நீங்கி யிங்கு தனி
யாயிருக்கவேண்டிய காரணமென்ன வென்று கேட்க இம்
மொழியை யெல்லாமவள் கேட்டு இவள்சொன்ன பரிகாச
வார்த்தைகளோ லதிகவெட்கமாகித் தனதுப்பட்டாவை
யெடுத்து முகத்தை மூடிக்கொண்டு நீயார் யென்னைத்தே
டுவையாகில் ஓடிவிடு யில்லாவிட்டால் வெட்டுண்டுபோ
வா யென்று சொல்லினள்.

அதைத் தாசல்முலுக்குகேட்டு என்சிரசை வெட்டு
வையேயாகி லுனக்கீவேனல்லது வேறொருவனுக்கு கொ
டுக்கமாட்டேன் என்னிடத்தில் ஒவ்வொரு வஸ்துக்களி
ருக்கின்றது உனக்கு வேண்டுமானல் ஆயிருக்கின்றது
நீ பாதகனைக்கொண்டு எனக்குப் பயமுறுத்தனு லவனுக்
கொருபோதும் நானஞ்சமாட்டேன் ஆகையாலுன்னு
டைய சங்கதிகளை எல்லாம் சொல்லென்று விருப்புற்றுக்
கேட்க அப்போதவள் தன்றலையை எடுத்து நானபரியின்
மகள என்பேர் றாஹேஆபாசா என் தகப்பன்பெர் மூஷ
பர்ஷ அதிக அரசாட்சி செய்யப்பட்டவன் அப்படியிருக்
க ஒருநாள் என்சிறிய தகப்பன் பகாவலி நோய் கொண்
டாளென்கிற சேதிகேட்டு நானதை விசாரிகக வேணுமெ
ன்று அவளிருக்குந் தோட்டத்துட்சென்று வினவினபின்
பு அவ்விடத்தை விட்டு என்னிடம்வரத் திரும்பிவருகை
யில் வழியில் சியாதேவி என்னை வலுவினாபிடித்து இங்
கு கொண்டுவந்து என்னுன் சேர்வதற்காக நானவனு
க்கிடங் கொடுக்கவில்லை அதனலவனென்னை நாள்தோ
றும் விதவிதமாகிய வருத்தங்களை வந்து சேரிடும்படி
செய்வதுந் தவிர புணர்ச்சிக்காகவும் நித்தமும் வந்து
தொந்தரவு தொந்தரவு செய்து என்காற்கும் விலங்குபூட்
டி நித்தனென்றலையுமே வைத்தனேயோ மிடியை சளும்
வந்திறங்கிக் கொண்டிருக்கிற தென்றுசொல்ல அதை
தாசல்முலுக்கு கேட்டு உன் சிறியதகப்பன் மகளாகிய

பகாவலிக்கு என் வியாதிமேலிட்டிருக்கிறதென்று கேட்க
யதற்கவ ஒருமனிதன்பேரி லிச்சை கொண்டு சிலநாள்
வரைக்கு மிருவருங் கூடிக்கலந்து சுகித்திருக்குந்தருணத்
தில்வெவ்வேருய்ப் பிரியுங்காலம்நேரிட்டது இப்போதந்த
காமத்தியினல் லீலைமதனும்போல் வெறி கொண்டிருக்கி
ருள் தன்னுயிரை அவனுக்காக மாய்த்துவிடு கிறேனென்
றிருக்கிருள் அவள் துக்கத்தையு மிவ்வளவென்று சொல்ல
முடியாது அதை நீக்கவு மவளால் முடியவில்லை அவள்
புலம்புவதும் பதைப்பதையும் துடிப்பதையும் என்சிறிய
தகப்பன் கண்டு அவனைச் சிறையிலடைத்து விட்டான்
அதனுல் தன்னுடைய மனதில் அவ்வருத்தத்தை யெல்
லாமடக்கி அவன் கியாபகமறக்காம லிருக்கின்ருளென்று
சொல்ல அவைகளை எல்லாந் தாசுல்முலுக்குகேட்டு முக
மும் வாடி உருவமும் வேருநிறமாய் விட்டது மூத்துபோ
லக் கண்ணீரும் வெளிப்பட்டது அவன் நினைவிடவும்
வேருய்விட்டது இவைகளை யெல்லாம் றாஹேஅபசா
பார்த்து தியால் மலர்வாடியதுபோல எனுன் முகம் வாடி
னதென்று கேட்க அதற்கு தாசுல்முலுக்கு நானந்தலாச்
சாரில் சிக்கி என்சிறிய தகப்பனுடைய குமாரத்தியினல்
பாக்குவெட்டியி லகப்பட்டாற்போல் பதை பதைத்து நா
னிங்கு வருத்தமடையவும் அவளங்கு என்பேரில்வைத்த
ஆசையினல் விலங்கோடு சிறைச்சாலையில் மனவருத்த
மாகவும் தன் வரலாற்றையெல்லா மவளுக்குச்சொல்ல
அதை றாஹேஅபசாசேட்டு அதிசயக்கமாய் உங்களிர
ண்டுபேரி னிஷ்டத்தின்மேல் ஆயிரமாயிரமங்களமென்
று வாழ்த்திப் பின்பு நானிந்தத் தேவுடைய சிறையை
விட்டு மீள்வேனுகில் உன்னுடைய மனதின் காமயுண்ணி
ற்குத் தேர்நலென்னு மருந்தா லாற்றிவிடுவேனென்று
சொல்ல அதை யரசன் கேட்டு இப்போதுன்னைத் திருப்
பயாராலுமுடியாது இச்சிறைச்சாலையைவிட்டு இப்போ
வெளிப்பட்டு எப்புறஞ்செல்ல நாடுவாயோ அப்புறமாக
அப்பகைவனுடைய பயத்தை மனதில் வைக்கவேண்
டாம் அப்படி யிருந்தால் நீக்கிவிடு அவனையோர் மல்லை
யிலெவ்விதஞ் செய்கிறேன் இன்ன மவனுடையமலைபோ
ன்ற உருக்களை யெல்லாப் பஞ்சுபஞ்சாய்ப்பறக்க விடுகிறே

ன் ஆனாலென்னிடத்திலோராயுதமில்லையென்றோத அதை
ராக்ஷஅபசாக் கேட்டு அந்த தேவனுடைய ஆயுதவீட்
டைக்காட்ட தாசுல்மூலுக்கு சந்தோஷமாக அதனுட்
சென்று அதிக கூனைபொருந்திய மல்லாயுதமொன்றெ
டுத்து கையிற் பிடித்துக்கொண்டு பின்பவளிடமாய்வந்து
தன்கையிலிருந்த விலங்கின்மேல்வைத்தவுடனேவிலங்கு
துண்டுதுண்டாய் நொருக்கிகீழே விழுந்துவிட்டது பின்
பிரண்டு பேருமாக பிரதசிப்மனுடைய பாதத்தை நொ
க்கிச் சிலதூரஞ்செல்லுகையில் பின்னாலிரு[illegible]பாலி
ருந்து கோட்டைப்பிடி யிடிப்பதுபோல ஆங்[illegible]தாடு
சத்தமிட்டுக் கொண்டு யந்தத்தேவுவருவதை றாகே அப
சாகண்டு நடுநடுங்கி நாவரண்டு அரசன் மகனோடு நம்ப
கைவன் வருகிறா னதிக எச்சரிக்கையா யிருவென்று சொல்
லத்தாசுல்மூலுக்கு தன் அக்கினி மறைந்து வைத்திருந்த
குல்லாவைக்கழற்றி அவள் தலையிலிட்டுவிட்டு தானந்த
தேவுடைய புரமாகத்திரும்பி அதமுன்பின் வந்துநின்று
இடிசத்தம் போல ஓ கொடியதேவே நீ எச்சரிக்கையாயிரு
உன்பாதத்தை முன் தூக்கி வைக்கவேண்டாம் என் சொல
லைக்கேளாமல் மீறினால் ஒரடி யடிப்பேனென்னில் நீவச
மாய் விடும்படி என்று சொல்ல அதைத்தேவு கேட்டு
இடி போலச்சத்தமிட்டு பெரியவாயைத் திறந்து வாச்சி
போன்ற பற்களெல்லாந் தெரியத்தக்கதாக வெளியேகட்டி
ஆ ஆ இதென்ன புதுமையின் பேச்சாயிருக்கிறதென்று
அக்கின்மேல்விரலை வைத்து பெருமலைக் கொப்பான
யானையுடன் சிற்றெறும் பெதிப்பதுபோலும் பேரண்ட
பக்ஷியுடன் ஊர்க்குருவி யெதிர்ப்பது போலும் இம்மனி
தனம்மோ டெதிர்ப்பதென்பது எனக்குவெட்கமா யிருக்
கின்றதே சயின்பேலெப்படி யென்கையை யெறிவேன்
என்வலிய கரத்தால் உரமாக உன்னையோரடியடிப்பேனா
கில் கொக்காபுமலையின் முகமுந் திரும்பிவிடுமே ஒரு பிடி
மண்ணால்படையுண்ட மனிதனை எப்படியடிப்பேனென்று
பலவாறுகச் சொல்லி ஆனாலும்நல்லது என்வல்லதுவை
யெனக்களித்துவிட்டு நீ வந்த பாதையை நோக்கிபோ
அதேனென்று லென்னுயிரைவிளக்கின் மேல் வீழ்ந்து
அந்தப் பூச்சி யுயிரைமாய்த்துக் கொள்வது போலாய்

னேயின்ன மவள்மேல் கொண்ட ஆசையினுல் அடிக்கடி தி[illegible]டுக் கொண்டேயிருக்கின்றது விட்டுவிடென அதை தாசுல்முலுக்கு கேட்டு ஓ கொடுமை பூண்ட பாவத்தானே அறிவில்லாதவனே கொஞ்சமு மனஞ்சலியாமல் ஹாஹோ அப்சா உன்னுடைய காமங் கூடெனருயே ஆனுல் நான் நாயகனுக்கு மிகவும் பயப்படுகிறேனலலவா இல்லாவிட் டால் நீயிப்போது சொல்லிய நாக்கை நான் யெகிறிப் பார்[illegible]டித்து விடுவேனென்று சொல்ல அதைத் தேவு[illegible]நலத்திற்குப்புறமாக இவனிப்படி யோதிஞ னேயென்று இரண்டுகண்ணுஞ் சிவப்புற உதடுகள் துடிக்க மனதினுள் கோபத்திமூண்டு நாறுமணங்கின் கல் லொன்றெடுத்தவன் மேலேறிந்தானப்போது தாசுல்மு லுக்கு கனியின்மகந்துவத்தாலெகிறி காற்றைபோல் மே லே பறந்து போய் தன்கையி லிருக்குந்தடியால தேவுனு டைய பிடரிமேலோரடியடித்தான் அவ்வடியினுல் தேவு டைய உடலெல்லாம் நடுக்கமெடுத்து கொண்டது பின்பு அக்கோபத்தோடே தேவைப்பார்த்து ஓ முதேவியே நீ விலகிவிடு இப்போ துன்னை இம்முறை பொருத்துக்கொ ண்டேன் இன்னமொரடி யடிப்பேனுகில் இரண்டுபிளவாகி போவாயென்று சொல்லவே அதைத்தேவுகேட்டு அதிக கோபங்கொண்டு மிருந்தவல்லமையோடு சண்டை ஆரம் பிக்க அத்தேவுகூட்டம் தேவுகளொன்ருய் சேர்ந்து நா லுமுகமும் வளைந்து பூவை வண்டு மோய்ப்பது போல மோய்த்துக் கொண்டதுகள.

விருத்தம்-இ-ம் புன்னுகவராளி.

அப்பொழுதாசான் மைந்தன ஆக்கிரமாயெழுந்துசீறி
இப்பொழுதுதான்னேடுற்ற இருங்கணக்கூட்டமெல்லாம்
செப்பிடப்பெயரில்லாமற் சிரசுகளுருளச் செய்வேன்
ஒப்பிடனேடிப்போங்கள் உயிரோடுபிழைப்பீரென்ருன்.

தரு-இ-ம் புன்னுகவராளி.

தனனுதனதனனுதனன தனனுதனதனனு

கண்கள்நெருப்புப்பறக்க மன்னன்மான்
கண்டன்கண்டமாகவுடல் துண்டமாய்விழ
யண்டுகிடுகிடென்ன விரித்த

வானமுமசைவுறத் தானைநீங்கிட
குருதிநீர்போலோடிய கொற்றவனும்
கூறுகிறுய்வீழ்ந்திடத் தாறுமாறாக
பொருந்தினன்தேவுகளுடன் அதுகள்
பொடிப்பொடியாகிட அடியுடனே
அடித்தான்வீரமன்னன் தடியால்
ஆயிரந்தேவையு மூபாயுடன்
நொடித்தான்நொடிக்குள்ளாக வெற்றிபெற்று
நின்றானரசன்மகன் குன்றுமலைதனனு

வசனம்.

இவ்விதமாக அரசன் குமாரன் ஆட்டின் கூட்டத்துள் புலிபாய்வதுபோல அந்த மைதானத்தில் தேவுகளுடன் தன் வல்லமையைக்காட்டி யதுகளுடனே போர்த்தொழில் செய்து மலையைச் சிற்றுளி பிளப்பதுபோலக் கண்டமிரண்டாகத் துண்டுதுண்டாகமண்டைகள்செண்டு போல்பறக்க மலைகள் சாய்வதுபோல் கீழே சாய இரத்த மாறாக ஓடத் தலைகளுருள உடல் புரள சண்டமாருதம் போலும் கரத்தில் வாளிளங்க முகந்துலங்க வெட்டி வெட்டிப் பிணக்காடாக்கி எல்லாரையு மோடவைகத வருகையில் தாசுல்முலுக்கு மூர்ச்சையாய்ப் பூமியின்மேல்விழ அதை றாஹேற அப்சா கண்டு ஓடோடியும்வந்து அவன் தலையைத் தூக்கித் தன்றுடைமேல் வைத்துக்கொண்டு மார்போடணைத்து தன் வஸ்திரத்தால் வீசி அவர் மூர்ச்சை தெளியும்படி செய்து தன் தலையிலிருந்த குல்லாவை கழட்டி யவனெதிரில் வைத்து உன் வல்லமையின்பேரில் ஆயிரமாயிரம் கொறுபானி நானுகிறம் கொறுபானி நானுகிவிடுவேனென்று சொல்லி திருஷ்டிகழித்துப்பின் இருவருமாக வெழுந்து பிரதௌசின் பாதையை நோக்கி நடந்து இருவரும் பட்டணத்தி னருகிற்சேர்ந்தார்கள்

அப்போது றாஹேற அப்சா தாசுல்முலுக்கை றாஹேற அபசாவென்று அவனுடைய பெயருள்ளதோட்டத்துள் ளிருத்தி வைத்துவிட்டுத் தனியாகத்தன் தாய்தகப்பனைக் காணப்போனான். அப்போதவர்களின் வரவைக்கண்டு மாண்ட உயிர்வந்ததுபோலக் கட்டியணைத்துக் கண்ணை

ழுத்த யிட்டுச் சரசை மோர்ந்து எல்லாச் சங்கதிகளையுங் கேட்டிட ஆதியோடந்தமாகச் சொல்லிவந்தனன். ஆனா ல் இவன் பகாவலியினுடைய ஆசைக்காரனென்று சொல் லவில்லை இவையெல்லாமுற்பாஷாகேட்டு அதிக சந்தோ ஷத்தோடவ்விடம் விட்டெழுந்து சோலையினுட்சென்று தாசுல் முலுக்கைக்கண்டு மிகுந்த அன்பாசாரஞ்செய்து அவன்செய்த நன்றியைப் புகழ்ந்து அவரிருக்க ஓரிடத் தைச் சிங்காரித்து நல்லவிரிப்புகள் விரித்து அவ்விடத் லவனைவைத்துப் பணிவிடை வேலைசெய்ய சிலபரிகளை யுங் கொடுத்துவிட்டு அவ்விடத்தைவிட்டுத் தன் சிம்மா தனத்திற்கு திரும்பி வந்து விட்டான்.

பதினேழாவதுகதை.

முச்பாஷா பீரோஷாவிற்கு

மகள் வந்த சங்கதியைக்குறித்துக் கடிதமெழுதினதும்

அவளைக்காணத்தாயுடன் பகாவலியும் சகலரும்வந்தவிபரம்

வசனம்.

முச்பாஷா பீரோஷாவிற்குத் தன்குமாரத்தியாகிய ருஹேற அப்சாவந்த சங்கதியைக் குறித்துக்கடிதமொன் றெழுதித் தூதன் கையிற் கொடுத்து அதை வாசித்துப் பார்க்கையில் அதனுடைய விபரமெல்லாம் நன்றாய்த் தெரியலாயிற்று உடனே அரசன் தன் மனைவியாகிய சத் தானைக் கூப்பிட்டு இச்செய்தியைத் தெரிவித்து நீ போய் உன் கண்ணால் பார்த்துவா வென்று விடை மீந்தனன் இதைப் பகாவலியறிந்து என் தாயே நானும் உன் கூட என்னுடன் பிறந்தாகியவளைக் காணவருகிறேன் என்று சொல்ல அதைக்கேட்டதும் கேட்டி தனதுலவனுள்ளிருக்கிற காமநோயிருக்கிற காமநோயெல்லாம் மாறிவிடுமென்றெ ண்ணி இன்னம் இவளும் இருக்குமிடத்தை விட்டு வேறி டத்திற்குப்போவதனால் அங்குள்ளன வளைப்பார்ப்பதி னால் துக்கந்து யரமுமாறிவிடும் ஆகையால் கூட அழை த்துக்கொண்டுபோகநாடி காலிலிட்டிருந்த விலங்கைக் கழ ட்டியெறிந்துவிட்டு தன்கூட அழைத்துக் கொண்டு முச் பாஷாவினுடைய பிறகே சென்றும் பட்டணத்திற்குச்

செல்லும்பாதையை நோக்கி இருவருமாக வருகிற சங்கதியை அரசன் கேட்டுத் தன்மனைவியோடு பகளையுஞ் சேர்ந்து நீங்களிருவருமெதிர் சென்றழைத்து வாருங்களென்று கட்டளையிட அதையவர்கள் கேட்டு அதிக சந்தோஷத்தோடு எதிர்கொண்டு இருவருமாகக் கலந்து கட்டியணைத்துப் பிரியஞ்செய்து அக்காள் தங்கச்சியுஞ் சந்தோஷமடைய பின்னர் றாகேஅப்சா சிறியதாயாருடைய பாதத்தில் வீழ்ந்து முத்தியிட அவளை வாரியெடுத்து மார்போடணைத்து கண்ணை முத்தியிட்டு பின்பு பகாவலியைக் கண்டு சந்தோஷித்தாள் நங்களில் அக்காள தங்கச்சி யிருவருமாக அனேகவிதமான சேதிகளையெல்லாம் பெசிக்கொண்டு யிருக்கையில் அத்தருணத்தில் றாகே அப்சா புன்சிரிப்போடு பகாவலியின் காதோடு வாயை வைத்து நீ வியாதி கொண்டிருக்கிறாயே அவ்வியாதியை தீர்க்கும் வைத்தியன் வந்திருக்கிறான் மெத்தவுங் க்ஷேமமாயினது இப்போது நீ ஆசையுடன், அம்மருந்தை குடிப்பாயாகில் உன்வியாதி நீங்கி சுகமடைவாயென்று சொல்ல அதைபகாவலி கேட்டுத் தன்றாபருகி லிருக்கிற பயத்தைக்கொண்டு அவ்வேளையில யாதொன்றும் பேசாமல் கேட்க வல்லமையற்றவளாய் சந்தோஷமும் துக்கமும் சும்மாயிருந்து விட்டாள் பின்பெல்லாருமாக உடு வந்து சேர்ந்தார்கள் உடனே மூச்பாஷாகாதூண பகாவலியுடன் சந்தித்து அதிக கிருபை யதனோடு அநேக விதமாகிய சேதிகளைப் பேசிக்கொண்டு வருகையி லிடையில றாகே அப்சா போனதும் மூண்டுவந்ததும் ஆதியோடந்தமாகச் சொல்ல அதனால சொல்லுதற்கரிய மிகுந்த சந்தோஷப்பட்டு அன்றிராப் பொழுது முழுதும் அங்கிருந்து பொழுது விடிந்த வுடனே தன்னகரம் போகக்காதூன் பிரயாணப்பட்டாள் அப்போது றாகே அப்சா வந்து சிறியதாயாரினடி பணிந்து மிகுந்த தாக்ஷிணையுடனே அம்மா நான் சிலநாள் வரைக்கும் என்னிடத்தில் பகாவலியை வைத்துக் கொண்டு இங்கிருப்பதினாலவளுடைய மனதிலும் லிருக்கும் கலக்கமெல்லாந் துலக்கி மனதைக் கண்ணாடியைப்போலச்செய்து அனுப்பிவைக்க நாடுகிறேனென்ற சொல்லானதைக் காதூன்கேட்டு நல்ல

தென்று ஒரு வாரமட்டு மிங்கிருக்க வினை தந்தேனென் றோதி பகாவலி விட்டிவிட்டுத் தான்மாத்திரம் புறப்பட்டு பரசேஹிரம் போய்ச்சேர்ந்தாள்.

பின்பு றாகே அப்சா பகாவலியைத் தனியாயோரிடத்திற் கழைத்துப்போ யுட்காரவைத்து ஆசையதிகரிக்கத்தக்க வசனங்களைப்பேசத்தொடங்கி கடைசியில்தாசுல்முலுக்கினுடைய ஆசையினக்கினிக் கொழுந்து புட்டும்படியெடுத்துச் சுட்டுக்காட்ட அதையெதிர்மொழியால் பகாவலிகேட்டு வெட்கத்தின் விரதத்தைக்கொண்டு அதிக கூசி தலையினால் சரீரமெல்லாம் ஜலபஜலமாக வேர்த்துப் பின்பு போகத்தினால்கண்கள் சிவப்புறமுகத்தைக் காட்டி ஆ ஆ தமக்கையானே இக்கிரிப்பான வார்த்தை எனக்கு நன்று யிருக்கவில்லை இப்படிப்பட்ட குத்து கலையான பேச்சு உனக்குச் சரியாகவில்லை இது உன்னுடைய நடத்தை இப்மறைவாகிய விடக்கில ால் காண்பிக்கிறயே எனக்கிதனால் தெரியவருகிறது இந்தஒப்பனை உனக்கே தகுதியா யிருக்கிறது தான்திருடி அசலானை நம்பாளென்பதுபோல் நீ என்னை நினைக்கிறாய் அடிக்கடி நீ அப்படிப்பட்ட பேச்சை பேசாதே நீ இப்பேச்சுகளை இனிமேல் பேசுவாயானால் சுலயுமானபிபேரின் ஆணையாக நானிப்போதே என் வீட்டிற்குப்போய் விடுவேனென்று ணப்போது மிங்கு வாரேன் நல்லது கத்தத்தினாற்செய்த கூண்டினுள் ளிருக்கும் விளக்கின்மேல் அந்தப் பூச்சிக்கென்னவேலை சிப்பிலிருக்கு முத்திற்கும் சிட்டுக் குருவிக்கும் சம்பந்தமென்ன மனதின் நிம்மேல் கம்ம மொழிய மற்றொன்றில்லையென்று சொல்ல அதை றாகே அப்சா கேட்டு இவள் எவ்விதத்திலும் நமது கையிலகப்படுகிறதில்லையென்றெண்ணிப் பின்னும் என் தமக்கையாளே நானுமக்கு இதற்காக யாதொன்றுஞ் சொல்லவில்லை நீ யொருவனை மோகித்திருக்கிறு யென்றுங்கூடவில்லை ஒன்றுமறியாதகன்னி அவளைப்பிடித்ததாம் ஆறுமாதத்து ஜன்னி என் சிரசைப்போல அலட்டவாலாகும வேலையை உன்னால் குறிக்கலாகாது ஒருவேளைப் படியாயிருந்தபோதிலும் நீ பானுசுக்குள்ள விளக்கா யிருக்கிறாய் எந்த

அந்தப் பூச்சியாவது தானாவந்து எரிந்துபோனாலதனா லுனக்கென்ன இன்னம் ஆயிரம் தாமரை மலர் குளத்தில் மூழ்கினால் சந்திரனுக்கென்னகஷ்டம் அப்படிப்போல உனக்கென்ன வென்று நானாவித மொழிகளினால் அவள் கோபத்தை யடக்கிவிட்டுச் சந்தோஷப்படுத்தி நல்லது நாமிருவருமிச்சோலையின் அழகைப் பார்த்துச் சந்தோ ஷமடைவோம் எழுந்திருவென்று இருவரும் கைகோர்த் துக் கொண்டு அன்னங்கள் நடப்பது போலச்சிரிப்புடன் சோலையைச் சுற்றி வேடிக்கைப் பார்த்து வருந்தருணத் தில் பகாவலியினுடையகாவல் காமவரகதாபத்தால் வருத் தப்பட்டு வியாகூலத்தோடும் சப்தமென்றபோது வந்து காதில்விழுந்தது அதைக்கேட்டவுடனே மகாமையலா கிச்சகிக்கமுடியாமல் கடைசியிலென்னனபோதிலுமாகட் டுமென்று றூஹேற அப்சாவைப் பார்த்து இதுயாருடைய வருத்தமாயே ஒலியோ அவனை எவ்வேட்டைக்காரன் பிடித்துச் சிறையிலடைத்தானோ அதற்காக அவன் ஒலி த்தழுகிறானென்று சொல்ல அதைக்கேட்டு றூஹேற அப் சா நீ அங்குவா அவ்வேடிக்கையைக் காண்பிக்கிறேன் நல்லவிதமாக அவனுடையவாய்ப் பிறப்பையும் விசாரிக்க லாம் வாவென்று சொல்லிக்கொண்டுபோய் தாசுல்மூலுக் கெதிரில் நன்றாய்த் தெரியும்படி நிறுத்தினாள்.

பகாவலி நிஜரூபமாக எதிரில்வந்து நிற்பதைத் தா சுல் மூலுக்கு கண்ணாரக்கண்டு மனந்தடுமாறி அறிவெனு ங்கயிற்றைக்கை நழுவவிட்டுதன் வெட்கத்தையும் விட்டுத் தன்னறிவுங் கெட்டு பொறுக்க முடியாமல் காமத்தியா னது கொழுந்து விட்டுப் பறக்க விளக்கில் அந்தப் பூச்சி விழுவதுபோலவே தொன்றுந் தேற்றாமல் மாண்டவுயிர் வந்த பாவனைப்போல் ஓ[illegible]ம்[illegible]து அவளைக் கட் டிப்பிடித்துக் கொள்ள அப்போது பகாவலி[illegible]ன்னுணை மென்னும் போர்வையை நீக்கிவிட்டுத் தன்னுடையகை யை வா[illegible]திலிடுக்க டியுமாயணைத்துப் தனபி டித்துக்கொண்டு தாங்கள் பிரிந்து போயிருந்த விசனக் கடலைத்தி[illegible]ந்து அழுது பிரிந்திருந்த நாள் முதலாகப் பட்ட பாடுகளின் கணக்கின்[illegible]டைமை விழுத்துச் சவிஸ் தாரமெல்லாம் பேசுவதை றூகே அப்சா பார்த்தருளுவள்

கிக்குலுங்காத ஹகாஹ வென்நகைத்து ஓ ஆக்காளே இதுவரைக்கும் துன்யாவினுடைய கழுத்தி லுன்கை யைங்கோர்த்துக் கொண்டு கட்டிப்பிடித்து முத்துதிர்வது போல கண்ணீர் விட்டுக்கதறியழ வேண்டிய காரணமென்ன ஓ விஸ்தார கள்ளியே விறகொடிக்கப் போக கற்றுழை முள்ளுக்கொத்தோடே தைத்தது என்பது போல் என் சிறிய தகப்பனுடைய பேரை முழுக்கடித்தானே யென்று சொல்ல அதைப் பகாவலிகேட்டு உடர்பிரந்தாகிய றாஹே அப்சாவே நீ என்மனதினுடைய புண்ணியத்திற்கு முதலாம் கொண்டு வந்து போட்டாயபதை இகழ்ச்சி யென்னும் நசத்தால் கீறி யெடுக்காதே இன்னம் தெரிசனையி னுடைய பாணகத்தைக் குடிப்பாட்டினுய் அதற்குதிலர்த விஷத்தைக் குடிப்பாட்டாதே என்று என்னுடைய மன்றறான தெல்லா முனக்குத் தெரிந்து விட்டது நீ இப்போ தென்னை யென்னசெய்ய நாடுவாயோ அப்படியேசெய் நீ உன்மனதின்படி நடப்பிக்க இஷ்டமுள்ளவளா யிருக்கிறு யென்று மிகுந்தாட்சிமையோடு சொல்லினள்.

பின்பு பகாவலியும் தாசுல்மூலுக்கும் இரதியும்மன் மதனைப்போலச் சிரித்து விளையாடிக் காமக்கணைகளைப் பூட்டி நயனத்தோடு நயனமூறமுகத்தோடு முகத்தை வைத்து கட்டியணைத்து கொங்கையைப் பிசைந்து காம லீலைகள் செய்து ஜலமொழுக தீராத ஆசையெல்லாம் மனதினுள்ளிருந்த காமவிகாரத்தை தீர்ந்துக்கொண்டு சுகியெல்லாம் பெற்று காமதாகத்தை தணித்துப் பானசும்பருகி மகிழ்வுற்றிருக்கும் போதில் பகாவலி தன்தேசத்திற்குப் போகும் நாள் சம்பவித்து அப்போது தாசுல் முலுக்கு பொறுக்க முடியாமல் ஜலத்தின் மச்சத்தை வெப்பமாகிய பூமிமேலிடில் எப்படி துடி துடித்துப்பதைக்குமோ அப்படி போலாயினன் அதனைப்பகாவலிகண்டு தானும் தன் வெட்கத்தைவிட்டு தாசுல் முலுக்கைப் போலாகிட நாட்டங்கொண்டதை றாகே அப்சா கண்டு ஓ தமக்கையே நீ இவ்வேலை செய்யவேண்டாம் நீ வீணாக உலகத்தின்படி தூரமான பேரெடுத்துக் கொள்ளுவாய் இன்னம் கொஞ்ச நாள்வரைக்கும் நீ பொறுத்திரு அல்

லா நாடுவானாகில் சிலநாளையிலுங்க ளிருவரையுங் கூட்டுறவு செய்வான் நானும் நீராட்டப்பட்டவனைக்கொண்டு வந்து சேர்க்கிறேன் இருவரும் இரவும்பகலு மாசையின் பாணக்கத்தைக் குடிக்கும்படி செய்கிறேன் உங்களைப் பிரதலினால் கொஞ்ச மிருக்கின்றது சேர்தலினால் நெருங்கியிருக்கின்றது என்மொழியைக் கொஞ்சம வைத்திரு தாய்தகப்ப னுத்திரவின்பேரில் நட அல்லாகுத்த ஆலா என்னாட்டத்தை நிறைவேற்று வானென்று பலபலவித புத்திமதி சொல்ல அவைகளை யெல்லாம் கேட்டு அதிக வருத்தத்துடனே குலிஸ்தானே ஹிறடித்தன் தாய்தகப்பனிடமாகச் சஞ்சலத்துடனே போய்ச்சேர்ந்தாள்.

### பதினெட்டாவது கதை.

றாஹேற அப்சா தன்தாயாருக்கு
தாசல்முலுக்கு பகாவலியினுடைய
சங்கதியைச் சொன்னது அதை ஜமீலாகேட்டு
காதுாளிடத்திற் போயிருவரையும் சேர்க்க போதித்தவிபரம்

### வசனம்.

பகாவலி றாஹேற அப்சாவினிடத்தில் விடைபெற்றுகொண்டு தந்நரண்மனை போய்ச்சேர்ந்த பின்பு தன் தாயாருக்கு றாஹேற அப்சா பகாவலி தாசுல்முலுக்கின் பேரில் ஆசைகொண்டு இருவரும் ஒருமனதாய் வெளியா போயிருக்கிற விதங்களெல்லாம் ஆதியோடந்தமாகத் தெரிவித்தனன் அவைகளை யெல்லாங்கேட்டு சிலநேரம் வரைக்கும் தலைமேல் கையைவைத்து குனிந்திருந்து விசனங்கொண்டு ஆலோசித்துப்பின் தலையெடுத்து மனிதனுக்கும் பரியினுடைய ஒத்துதலாகிறது வெகு கடினமாயிருக்கின்றது ஆனாலுமவனுன்னை தேவுடைய சிறையைவிட்டு மீட்டிருக்கிறான் ஆனதினாலெனக்கு தகுமானதாயிருக்கிறது நானுமவனின் துக்கக்கடலைவிட்டு கரையேறும்படி மீள்கவேண்டும் இன்னமவன் நாடிய நாட்டத்தையும் நிறைவேற்றி யவன் கோரியவிடத்தே சேர்க்கவேண்டுமென்பது அப்போதுடனே தன்னகரை விட்டு நீங்கிப்போகயோசித்து தட்சணம் நல்ல அழகான சித்

திரமெழுதப்பட்டவனொருவல்லவனையழைத் அரசகுமா
ரன் வடிவைப்போல எழுதவைத்து அதைகையிலெடுத்
துக்கொண்டு சிரகெனுஞ்சோலையிலிருக்கும் காதூனிடத்
திற்குப்போய் நேர்ந்தது கண்டு இருவருமுடலுயிர்போல்
அதிக சந்தோஷத்தோடு கூடிக்கலந்து பேசி சில நாள்
கழித்து வருகையில் ஒரு நாள் காதூனும் ஜமீலாவுமாக
அங்கிங்கின் மொருகளைச் சந்தோஷத்தோடு பேசிக்கொ
ண்டிருக்கையில் பேச்சின் கூடவேதர நினைத்துவந்த
கருத்தின் பேச்சை யொருபாவனையாகப் பேசத் தொடித்
தனள் ஓ என் நமக்கையாளே ஒரு சோலையில் மதுரம்
பொருந்திய செவ்வர்னமான கந்தமலர்த் தருவினோர்
கிளையிலிருக்க அம்மலரின்மேல் பஞ்சவர்ன கிளிவந்து
உட்காராவிடில் அம்மலரிருந்தென்ன இல்லாவிடில் பல
னென்ன இரண்டுமொன்றே யல்லது ஒருவனிடத்தில்
மாணிக்க மிருக்கின்றது அதை கோர்த்தணியாமல் பே
ழையிலிட்டிருக்கிறது. இருந்தென்ன இல்லாவிடிலென்ன
அப்பாவனைப்போல் நீ இதுவரைக்கும் வாலிபப்பெண்
ணாகிய பகாவலியை ஏனொருவருக்குங் கொடாமல் வைத்
திருக்கிறாய் பாக்கியிருந்தால் கையிலும் மாமாஞல்தோப்
பிலுமல்லவா யிருக்கவேண்டும் ஆதலாலவளை யவளுக்
கேற்ற நிலவின்வடிவால் சுருபனுக்கீந்து இருவரையும்
உட்காரவைத்து செந்தாமரை மொக்கு மலராவது போல
இருவர் முகமும் மலரச் சரசவிளையாட்டில் இரவும்பகலு
மும் யிருக்கும்படி செய்யாமலப்படியவள் தனியாக இறக்
கமா யிருக்கும்படி வைத்திருப்பதெனக் கெவ்வளவும்
பொருத்தமில்லை என்றுசொல்ல அதைக்காதூன் கேட்டு
ஓ ஜமீலாவே அவள் ஒரு மனிதன்பேரி லிச்சை கொண்
டவளா யிருக்கிற சேதியையுங் கேட்டிருப்பாய் அவள்
தலைமேலே பழுவாகவே யிருக்கின்றது அவள் நமது
குலத்திலுள்ள ஆணை இச்சிக்கிறவளாக அவள் வேறு
குலந்தானமே லிச்சைகொண்டு இராப்பகலுமதேவிசனத்
தில் மூழ்கியிருக்கிறாள் அதனால் நான் அந்தவிசன
மடைந்து கைநேசமாய் பெரியோர்களிஷ்டத்தையு மெப்
படி விடுகிறது நமது தலைமுறை வழியையு மெப்படிக்
கெடுக்கிறது யாதொருசேர்தலுந் தங்கள் குலத்திற்குள்

ளாகவே யாகிரது ஒருகுலபெண் வேறொருகுலத்திற் சேருகிறதில்லை அப்படியா ரிதுவரையில் சேர்ந்திருக்கி றார்கள் பரியின்குலத்திற் மனிதன் குலத்திற்கு மென்ன முறமை அப்படி நான் சேத்துக் கொடுத்தேனென இப் படி நானுவித மொழிகளைச் சொல்லிக்காட்ட அதை ஜமீ லாகேட்டு நீ இதுவரைக்குஞ்சொல்லியதெல்லாம் நிஜமே அவர்களுக்கும நமக்கும் வேறாகவே யிருக்கின்றது ஆனா ல் நீ மானிடகுலத்திலே சாகவொண்ணாதே யவர்களி னன்னடக்கையைக்கொண்டு உனக்கு தெரிந்திருக்குமாகி லிப்படிப்பட்ட நாட்டத்தை ஒருபோதும் உன்னுவிலெடுத் துக் கொண்டு வரமாட்டாய் ஓ அறிவில்லாத மனிதர் குலமும் அவர்களின்வேலையும் நல்ல நடப்பும் உதவி ஒத்தாமையும் அடக்கத்தனமும் பொருமையும் கிருபை யும் அன்பும ஆசாரமும் ஒரு குலத்திலு மொருவரிடத் திலு மில்லை அவர்களின் பெருமை தனத்திற்கு கட்டுதிட் டமில்லை அவர்கள் நலத்தின்கட்டளை யுண்ணப்பட்டவர் கள் ஒரு துளியி லுண்டானவர்கள் அவர்களின் பெரு மையை நாயகனேசொல்லி யிருக்கிறு னிப்படிப்பட்ட நடத்தையையுடைய மநிர்குலமான நமக்கும் நூறுமடங்கு அதிக உயர்ந்துள்ளதென்று நானுவித சொற்களினு லவ ளின் மனதி னுள்ளிருந்த மனிதர் குழல்வைத்திருந்த பகையி நெருப்பை யவித்தனள் அதை ஜமீலாகேட்டு ஓ தமக்கையாளே அப்பொல்லாத கெடுதலையுள்ளவன் பேச் சை என்னுடன் பேசாதே இன்னமவனுக்கென் மகளைக் கொடுத்து அவனை மருமகனுவுஞ் செய்யப்போகிறுனு வென அப்பேச்சுடனே ஆருவென்பவள்தான் கொண்டு வந்திருந்த தாசுல்முலுக்கின் வடிவின் சித்திரத்தை எடுத் து ஜமீலா காதூன் கரத்திலீந்து உன் தமக்கை அந்து சித்திரமானது ஷற்கிஸநானெனும் பட்டணத்தை யா ளுகிற தாசுல்முலுக்கினுடைய வடிவினதாம் ஆகையால் இதனையுற்று நோக்கு இதுவரையில் இவனுக்கொப்பாக ஒருவரையும் கண்டறியோம் இந்தமிவ்வுலகத்தி லிவ்வித மான உருவினை யுள்ளவன் உண்டாகிற அரிது இன்ன மிவ்வடிவான சந்திரவதனவொளிவை இவ்விதமாகக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை ஆகையால் இப்புஷ்பத்

தையும் மரத்தடியில் சேர்த்துவிட்டு கிளியைக் கூண்டி லிட்ட பாவனையாகச் செய்வது மிகவும் நன்றென்றோத அதற்கவள் அவளின் மொழியின் பேருல் அதிக ஸஞ் சேதத்தோடு சம்மதியாய் ஓ தமக்கையாளே நானவனை யெங்கே கண்டு தேடுவேனென்று அதற்கு உடனே ஆனால் ஒனறுக்கும் விசனமடைய வேண்டாம் நானவனை யழைத்து விவாகப் பிள்ளையாகச் சிங்காரித்து நல்ல சகு ண நானிங்கு இன்ன வாரத்திற் கொண்டு வருகிறேனெ னச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு ஒரு நொடிபொழு திற்குள் தானிருக்கும் தீவிற்கும் வந்து சேர்ந்து இந்த சங்கதிகளை யெல்லாம் தாசுலமுலுக்குக் கறிக்கையிட்டு இவ்வேலையான் முடித்துக் கொடுக்கிறேன் நீ யாதொன் றுக்கு மஞ்சாதேயென்று மனவுறுதியாகச் சொல்லினுள

---

பத்தொன்பதாவது கதை.

தாசுல்முலுக்கிற்கும் பகாவலிக்கும்

விவாகம்முடிந்த விபரம்.

19-வது விவாகப் படலம்

வசனம்.

அப்போது காதுனே உசேனே ஆரு வென்பவனை யழைத்து இச்சேதிகளைப் பேசிவிட்டு பின்பு அச்சித்தி ரத்தை பீராவுஷாவெனுமரசனிடத்திற் கொண்டுபோய் காண்பித்து அவ்வாசனுடனுங் கலந்து பேசிக்கொண்டு பின்பு சித்திரத்தை ஆடன் அபுரியின கையிற்கொடுத்து இதனைப் பகாவலியினிடத்திற்குப் போய் காண்பித்து ஓ அரசன் குமாரத்தியே இப்படிப்பட்ட வல்லமையான அழகினையுடைய புருஷனெங்குமிவ்வுலகில் காணேன் நீ எம்மனிதன்மேலாசைகொண்டு அவன்மேல் கவலையில் சிக்கி வெறிகொண் டிருக்கிருயோ இன்னும் நீ ஒளி வினை யுடைய அங்கமுள்ளவலைவனே மனதால் படையுண்ட மூடவன்மேலாசைகொண்டு அவள் பின்பற்றநாடி யிருக் கிருயோ அந்த ஷாக்ஸ்கான் அரசனின் உருவசித்திர மது உனக்கவன்மேல் இஷ்டமிருந்தால் இருவருக்கும்

விவாகமுடித்து விடுகிறேமென்று நீயேசொல்வதுபோல் அவனுக்குச்சொல்லென்று போதித் தனுப்பினள் அது போலவே யவளைப்போதனைக்குட்பட்டு அச்சித்திரத்தை வாங்கிக்கொண்டு பகாவலியினிடஞ்சென் றவள்முன் போதித்தவாறு சகலமொழிகளையுஞ்சொல்லி ஓ நாயகியே நானும் இதுவரையில் இப்படிப் பட்ட ரூபமுள்ளவனைப் பறயன் குலத்திலுங் கண்டதில்லை யெனப்புகழ்ந்து அச் சித்திரத்தைக் கரத்திலீய அதை பகாவலிவாங்கி யதன் வடிவின் அடையாளங்களை யுற்றுநோக்கி யாதோர் சந் தேகமுமின்றி இக்கீத தாசில்மூலுக்கின் வடிவமென்றெ ண்ணி இவ்வேலைகளையெல்லாம் றாஹே அப்சாவினு டைய தந்திரத்தின்படி தன்வார்த்தை பாட்டை நிறை வேற்றி முடித்தாலென்றெண்ணி புன்சிரிப்போடு லமன் றாப்பரி நோக்கி யென்றலையின் சத்தியமாக இக்து என் மனதினுடைய மலரை வாட்வைதானே அம்மனிதனு டைய வடிவினடையாளச் சித்திரமொன்றேதிட அதனை யவன்கேட்டதிகசந்தோஷத்தோடு குதித்து குதித்து ஓ நாயகியே சந்தேகமின்றி மெய்யாக இது அவனுடைய வடிவின் சித்திரமென்றோதி இப்போது நீ நகையோடு மென்மேலா அதிக சந்தோஷஞ்செய்து உன்னுடைய நாட்டத்தை நாயன்முடிய நிறைவேற்றி விட்டானென்று சொல்லி அவ்விடம்விட்டுவராஜன்சந்நிதானத்திற்குவந்து அடிபணிந்து கைகூப்பிச்சென்று ஓ அரசனே தங்கள் குமாரத்தி தாய்தகப்பனுடைய இஷ்டத்தின் பேரிலும் சந்தோஷமான மனமொத்தவளா யிருக்கிறாள் இன்னம் தாய் தகப்பனுடைய சந்தோஷத்தின் கூடச்சேர்ந்து சந்தோஷிப்பவள் இன்னம் நீங்களேபார்த்து ஒருதே விற்கு மனவியாக்கினலு மதைமன்னவனென் றொப் பப்பட்டவளல்லது கறுநிறமாகிய சைக்கிபங்கள் தடுவீர் களாகில் அதைச்சந்திர கலிபகனன் றெண்ணப் பட்ட ணத்திற்கு நன்னடப்பினை யுள்ளவனென்று சொல்ல யத னைப்பீரோசாகேட்டு இம்மொழியால் அகமகிழ்வடைந்து விவாக முடிப்பதற்காகத் தன்மந்திரி பிரதானிகளையழைத் து இரமென்னும் பட்டண வீதிவீதிகள்தோறும் கடை வீதிகள்தோறும் மாடங்கடோறும் கோட்டை முழுதும்

விளக்கி நகமுஞ் சாந்தல் மெழுதி வீதிகளெங்கும் சண்ப கப்பு குங்குமப்பூ மல்லிகைமுல்லை இருவாட்சி இம்பலர் களினால் தோரணங்கள் கட்டுப் பிரவரசர்கள் மணகோல த்திற்குவரும்படி ஓலைகளெழுதும் வீடுவாசற்படிகள் தோறும் பேரிகை முழக்கஞ்செய்யுமென்று பலவாறோதிட அதுபோலவே மந்திரிகள் மணப்பேரிகை நகரமுழுது மபக்க வைத்தனர்.

அப்போது நகர்முழுதுஞ் சிங்காரித்து வீதிகள் தோறும் வீரிப்புகள் விரித்துவருபவர்களுக் கெல்லாம் கைகள் மணக்கும்படி பலவிதசோறுகறிகளாக்கிப்போட்டு அவரவர்களுக்குச் செய்யத்தகுந்த மரியாதைகளையும் தானே நின்றுச்செய்து பரிகளும் தேவுகளும் நாட்டியப் பெண்கள் நடனஞ்செய்யவும் பேரிகைதிண்டிமல்லாரிபூரி தவில்முரசம் எக்காளமோடு மேளவாதியங்க ளொளிக்கும்படி ஆரம்பித்தனள் இதுபோல மூஷ்பாஷாவென்னுமரசன் தாசுல்முலுக்கினுடையமணதிற்காக மந்திரிதந்திரிமார்களை யழைத்து நீங்களெல்லோரும் விதவிதமாகிரமுத்துகளினாலிழைத்த ஆடையாபரணங்களை யணிந்து கொள்ளுங்கள் அதல்லாமல் நம்முடைய சேலைகளையும் அதற்கு அதிகாரர்களையுஞ் சிங்காரித்துக்கொள்ளும்படி கட்டளை செய்யுங்கள் நகர்முழுதும் அலங்காரஞ்செய்யும் பறையறைவியுங்கள் மணத்திற்காக வருபவர்களுக்குச் சோறுகறி தெரியப்படுத்துங்களென்று மாடகூடங்களைப் புதுக்குங்களென்றும் பலவாறு கட்டளைகளையோதிட அந்தப்படி நகர்முழுதும் சிறப்பித்து எங்கினும் ஆட்டமும் பாட்டமும் வேடிக்கையும் யிருக்கும்படிச்செய்து அனேக மகிழ்ச்சிகளையடைந்து மஞ்சள் நீரால் விளையாடி வீதிக்குவீதி பொன்னூஞ்சல்களிட்டு அதின் மேலுட்கார்ந்து எதிரெதிர்முகமாக விளையாடிச் சிலநாள் கழித்துப் பீரோஷாவின் பட்டணத்திற்குப் போகவேண்டியப் பொன் கம்பத்தினிற் பனிநீரெடுத்து முத்து வெள்ளிகள் பச்சை மரகதநாற்காலின்மேல் தாசுல்முலுக்கை யுட்காரவைத்து சம்பங்கி யெண்ணெயிட்டுத் தலைமுழுக்காட்டி அனேக விலைகள் பொருந்திய ஆடைகள் தரித்து இடையில்ப்பிரகாசம் வெண்முத்து மாலைகட்டி, அதன்மேல் மல்லிகை

முதலியவைகளுக்கு பாஜிபந்துகட்டி நெற்றியில் மூன்றும் பிறைசொருகி பட்டிகட்டி சிரசில் மாமணிபாகை தரித்து அதன்மேல் மல்லிகைமுதலிய மலரின்மாலைசூட்டி மேகவாகனத்தின்மே லுட்காரவைத்து முன்னணியாகப் பொன்வெள்ளிதடியின் படையும் இருபுறமும்வெண்சாமரைவீசவும் வேசிகள் ஆடவும் பாடவும் அரசர்களெல்லாம் நகமுகமுஞ் சூழ்ந்து வரும்படிமிகுந்த ஆடம்பரத்துடனே இரமெனும் பட்டணம்போக எழுந்து நடந்தார்கள் இப்பால் வருவது பகாவலியைச்சிங்காரித்த விபரம்

ஜம்பை-இ-ம்-பைரவி.

தங்கக்குடந்தானெடுத்துத் தண்ணீரதைநிரப்பி
மங்கையர்கள்மணவாடை மகிழ்வுடனேகலந்து
மூத்துமணிநாதன் பதித்த பீட மதைபோட்டு
சித்ரவடிவானபெண்கள் சீருடனேயமைத்து
சந்திரவடிவான திருசிறந்தபகாவலியை
சுந்திரப்பெண்களழைத்துவந்து சிருடனேயிருத்தி
சப்பங்கியெண்ணையும் தலைமுழுகச்செய்து
செம்பொன்மணியாளவளை சிங்காரித்தாரென்று
தலைவாரிசிப்பிட்டுத் தரளமணிகோர்த்து
விலையோதமாமுடியார் மேனகைகள்தரித்தார்
அன்றுதித்தபிறைபோன்ற அழகுதிருநுதற்கு
வென்றனுதகட்டியது விளங்கிடவேதரித்தார்
வேலமனத்தான்பழித்த விருதனக்குமாதர்
நிலவையைத்தானெடுத்து நிலைபெறவேயணிந்தார்
திருக்கழுத்திலிடுங் கண்டசரமுழுதும்பலதும்
பெருகுமுத்துமாலையோடு பிலத்த நகையணிவார்
கொங்கைதனைமறைத்திடவே கொண்டுவந்துரவிக்கை
மங்கையர்களிட்டார்கள் மதனுங்கண்டுமயங்க
பதந்தனக்குச்சலங்கையொடு பலநகைகளணிந்த
விதப்பெறவேதானணிந்தார் மெல்லியர்தமக்கு
சொல்லமுடியாதந்த சுருபமதைமறைக்க
நல்லநல்ல ஆடைகளும் நலமுடனேயணிந்தார்
இவ்விதமாய்ப்பகாவலியை யெல்லவருங்கூடி
நல்விழியாளிலங்கி நிலவையலங்கரித்தார்

வசனம்.

இவ்விதமாக பகாவலியைச் சிங்காரித்துத் தாதிப் பெண்களெல்லாம் சுற்றிலுஞ்சூழ வானளவும் மணவா டை வீசக்கண்டவர்கள் மயங்கமிகுந்த ஆடம்பரத்தோடி ருக்குஞ் சமயத்தில் தாசுல்மூலுக்கை மணக்கோலத்தோடு கொண்டுவருவதைப் பிரோஷா வென்னுமரசன்கேட்டு அவரையழைத்துவர எதிர்போகும்படி சிலரையனுப்பி யவர்கள் பட்டணத்திற்குள் வந்திட அவர்களுக்கும் மரி யாதைசெய்து அழைத்துவந்து நல்லவிலையுயர்ந்த விரிப் புகள் விரித்திருக்கும் மண்டபத்தினுள் கொண்டுவந்து பெரியோர் சிறியோர் முதலிய சகலருக்கும் அவரவர்களுக் குத் தக்க மரியாதைகள் செய்து உட்காரவைத்த பின்பு சதுரில் ஆட்டபாட்டங்கள் சூமுரு அதிரும்படி செய்வித் தனன்.

அப்போது ஜமீலாகாதூன் எதிரோடிவந்து தன் சம்மந்திமார்களுக்கெல்லாம் மருங்குசெய்து தன் தமக் கையாகிய உசேனி கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு போய் அநேக விநோத மகிழ்ச்சிகளெல்லாம் மூன்று சாமம் வரைக்குஞ்செய்து பின் நாலாஞ்சாமத்தில் வேதி யர் வேதமோதவும் கவிவாணர் பாடவும் சகல அரசர்கள் வாழ்த்தவும் தலைமேல் பூமாரிபொழியவும் மங்களம் பா டம்பெண்கள் முறையிடவும் வாத்தியங்கள் முழங்கவும் நல்லமுகூர்த்த லக்கணப்படி தாசுல் மூலுக்கு மங்கிலியந் தரித்தன அப்போது வந்த சகலமானபேருக்கும் சக்கரை வழங்கி தாம்பூலங்கொடுத்துப் பரிமளம் பூசி பானகங் குடிப்பாட்டி பின்பு சடங்குகளெல்லா முடிப்பதற்காகப் பெண்ணிடத்தில் பிள்ளையைக்கொண்டுபோ யருகிலுட்கார வைத்து என்னென்னசடங்குகள் செய்யவேண்டுமோ அச் சடங்குகளை யெல்லாமுடித்து ஆலாத்திகளுஞ் சுற்றி யிருவருக்கும் பாலமுதங் குடிப்பாட்டிப்போக வீட்டினுள் இருவரையுந் தள்ளிவிட்டு சகலமானபேரும் தங்கள் தங் களிடம் போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

அகவல்-இ-ம்-சண்டா

மணவுரையுள்ளே மங்கைபாகாவலி
கணவனைக்காண காமத்தீமூட்ட

சந்திரன்போலவள் தான்வரக்கண்டு
சுந்திரமிருந்த தாசுல்மூலுக்கவன்
கண்டுமெய்சோர்ந்து காசினிமீதில்
வண்டுபோல்மயங்கி மன்னன்வீழ்ந்து
நெடுநேரமட்டும் நித்திரைசெய்து
கடிமலர்மார்பன் கண்ணைவிழித்து
காமகூட்டைக் கண்டுகளித்து
தாமதித்திடவன் றன்னாலாகாமல்
கும்பஸ்தனமேல் கொண்டனன்மூத்தி
செம்பொற்கிரியைச் செங்கையார்பிடித்து
விதிப்படிலீலைகள் விருப்பறச்செய்து
மதஜலமொழுக மன்னவன்புணர
நாடினன் மதகரி மனுவுகல்போலக்
கூடிடசரசங் கொண்டனனன்பு.

வசனம்.

இவ்விதயாக தாசுல்மூலுக்கு மதன சாஸ்திரப்படி லீலைகள் முழுதுஞ் செய்திட மன்மதபாணப்பட்டுத்தேன் மாங்கனியுண்டு முகத்தோடுமுகமும் மாரோடுமாரு நெஞ்சுமாகக்கட்டியணைத்து உதட்டைக்கடித்து மதுரத்தைக் குடித்து மதனலீலைபடித்து பேரிடியிடித்துப் பற்குறி நகக்குறிவைத்து உருண்டு புரண்டு எழுந்து விழுந்து ஆனந்தமடையும்போது விடியற்காலமாய் சேவல்கள் நகமுகன்கூவினது அப்போது தாசுல்மூலுக்கெழுந்து ஸ்நானஞ்செய்யப் போயினன் பின்பு றாகேஅப்சா பகாவலி என்ன செய்கிறார்களோ காணவேணுமென்று அவ்வீட்டிற்குள் வந்து பார்க்கையில் பகாவலி இரவெல்லாம் மோகச் சண்டைசெய்து அதனால் களைப்புற்று பலகோலமாக உதட்டிப் பற்குறியும் கன்னத்தில் நகக்குறியும் பந்துபோன்றமுலைமேல் நகக்குறியுங் கண்ணிலிட்ட அஞ்சனங்கலைந்தும் தலை மயிர்விழ்ந்தும் மணிமாலைக ளறுந்தும் சிறியும் சேலைகளவிழ்ந்தும் இப்படி நானாவிதமாகிய பங்கத்தோடு படுத்து நித்திரை செய்வதைக்கண்டு இவளுக்குச் சகிக்கமுடியாமல் தட்டியெழுப்பி பன்னகையோடு ஓதமக் கையே றூன்னலென்னை நீ அந்தத்தேவுடைய காமவலையினுட்சிக்கி வேசிகளைப்போல பள்ளிப் படித்தாயென்று

நீசொல்லினுயே அது இப்போது உன்னுடைய நடப் பினுல் நன்ருயெனக்கு தெரியவந்தது இன்றிரவில் நீ உருளப் புணர்ந்தலின் சாஸ்திரத்தை நன்ருய் எழுத்தாக வும் மாறுதலாகவும் சவிஸ்தாரமாகவும் எங்கெங்கிடுவ தும் எங்கெங்கு தொடுவதும் படுப்பதும் எடுப்பதும் குடி ப்பதும் அடிப்பதும் முதலான சகல ராஜவினேதத்தை யும் நன்ருய்த் தெரியப்படுத்தினுய தெரியாவைகளையு மறிந்துக்கொண்டாய் உன்வேளையைவிட்டு ஒழிந்துக் கொண்டாயெனச் சொல்ல அதனைப்பகாவலி கேட்டுபுன் சிரிப்போடு ஓதமக்கையே நீபேசும்போது வாயில் நீரோ டும் பேசுகிறதினுல் நீயுமப்படியாக நாடுகிறதாய்த் தெரி யவருகிறது அப்படி நீயாகிறது எனக்குமதிக சந்தோஷ மாயிருக்கிறது மெத்தவும் நலமாகவு மிருக்கிறது அப்படி யாகி லதனுலவனுடைய வல்லமையும் ஆடலும் கூடலும் தேடலும் மற்றநானுவித லீலைகள் முழுதுமறிவாய் இன் னும் நகைப்பும் கெலிப்புமா யிருப்பாயென்று சொல்ல அதை எல்லாங் கேட்டுக்கொண்டு முடிவில் றுகேஅப்சா நன்ருய் தகப்பனுடன் விடை பெற்றுக்கொண்டு வந்த சேனைகளுடன் தன்நகர மடைந்தார்கள் பின்பு தாசுல் முலுக்கும் பகாவலியுமாகக்கூடிக்கலந்து சுகம்பெற்றிருந் தனர்கள்.

## இருபதாவது கதை.

தாசுல்முலுக்கிற்நம் பகாவலியும்

பிரூசாஷா ஜமீலாகாதூன் இவர்களிடத்தில் விடைபெற் றுக்கொண்டு ஷர்சில்கான் பட்டணமடைந்த விபரம்.

ஒருநாள் தாசுல்முலுக்கும் பகாவலியுமொன்ருக இரு வர் மனமு மொத்துப் பேசிக்கொண்டு பீரூஷா ஜமீலா காதூன் அவர்களிடத்திற்கு வந்து மிருந்த வணக்கத்து டனே எங்கள் தேசம் போகவேணுமென்கிற நாட்ட முண்டாயின தென்ருேத அதனை யவ்விருவருங்கேட்டு அதிக மகிழ்ச்சி யடைந்து யதிகநன்றென்ருேதி அவர்க ளிருவருக்கும் பனிவிடை வேலைகள் செய்ய அடிமையா கப் பத்துலக்ஷந் தேவர்களும் எட்டுலக்ஷம் படியாகிய பரி களும் வழிச்செலவிற்காகப் பதினைந்துகோடி திரவியமும்

முத்துமாணிக்கமு விலையுயர்ந்த பச்சைகளுத் முதலிய ஆடைகளும் நல்லவடிவுடைய சிலகன்னிகைகளும் சீதனங்கொடுத்த ஆடையாபரண முதலிய நீதிவகைகளைச் சொல்லமுடியாதள வுள்ளியோர்களுக் கொடுத்து பொன் வெள்ளியாற்செய்து முத்துகள் பதித்தசிவிகையின் மேலிருவரையு மேற்றி வழிகூட்டி யனுப்பி வைத்தனன் அப்போதிருவரும் காடுமலைவனம் வனாந்திரமுதலிய விடங்களும் புலி கரடி யானை சிங்கங்கள் நடமாடும் வனமும் குளிர்ந்த நிழலும் செழிப்பாய் நீரேகின்ற நதிகளும்மலர் வாடைவீசும் சோலைகளும் மதுக்கனிகளையுடைய தோப்புகளையுங் கடந்து தன்னகரம் வந்துசேர்ந்தான்.

அப்போது தில்பரிமகுமூதா இவர்களிருவரும் தாசுல்மூலுக்கின்வரவைக்கண்டு இறந்தவுடலுக்கு உயிர்வந்தது போலவும் வுலர்ந்தபயிர் மழைபெய்ததுபோலவும் எழுந்தெதிரே யோடிவந்து பார்க்கும்போது இவ்வளவு ஆடம்பரத்தோடு சேனை திரளுடனே இடையில்சந்திரன் வடிவைப் போல பகாவலி நிற்கிற வடிவைக்கண்டு இருவருந் திகைத்து தங்கள் நிலமாறி மலர்போன்றமுகங்கள் வாடிநிறங்குலைந்து சித்திரம்போல் நிற்பதை பகாவலி கண்டு ஓ ஓ இதற்குள்ளே கலக்கங்கள் வந்து நேரிட்டதென் றெண்ணி எதிர்சென்றுபோயிருவரையுங் கட்டி மாரோடணைத்துக் கழுத்தோடு கழுத்தைச் சேர்த்து ஓ என்னுயிருக்குயிரான தமக்கைமாரே நீங்களொன்று மஞ்சவேண்டாம் கலக்கமுங் கொள்ளவேண்டாம் நானுங்களுடைய மகிகூவியோடு சேர்ந்து மகிழ்வுசெய்வேன் நாமெல்லா முயிருமுடலும்போலு மணமலர்போலுங் கூடிக்கலந்து கலிகள் தீர்ந்து பாலமுதம்போல ஒருவர்மொழியைத் தட்டாமல் கலந்து வாழ்ந்திருப்போமென்று தைரிய மொழிகளோதி அப்போது அவர்களைத் தாசுல்மூலுக்குகண்டு வாட்டம் நீங்கத்தக்க உபசார வார்த்தைகளையும் புகட்டி முகமலரச் செய்து மூவருமாகக் கலந்துமகிழ்வடைந்து சுகித்திருந்தனர்கள்.

## இருபத்தோராவது கதை

### பகாவலி தேவேந்திரனிடஞ் சென்றது.

### கொலுமுன் நடனஞ்செய்ததும் அதனால் தாசுல்முலகிற்கு கலக்கம்நேரிட்டதும் சொல்லியவிபரம்.

---

### 12-வது பகாவலி சாபமடைவது.

வசனம்.

சிலஹிந்திய புத்தகங்களிற் சொல்லியிருப்பது பூமிக்கும் வானத்திற்கு மிடையில் அந்தரமாக அமரா நகரமென்றொரு பட்டண மூண்டு அப்பட்டணத்தை தேவேந்திர னென்னுமரசன் அரசாண்டு வருகிறான் அவனுக்கிரவும்பகலு முன்பனையானது ஆட்டம் பாட்டு முதலிய வேடிக்கையே ஊணாயிருந்தது இன்னம் வானகரத்தின் கிழாகக்கன்னிவாளும் பரிகளும் தேவுகளும் ஜின்களும் அவனெப்படிச் சொல்லுவானோ அப்படி யடிபணிந்து ஏவலாட்களாகி நடுநடுங்கிநிற்பார்கள் இன்னமவன் சந்நிதானத்திர னெல்லாம் நடன சங்கீதவீணை வாத்தியங்களாகின்றதை வேடிக்கை பார்ப்பார்கள் அப்படி நடந்து வருகிற நாளையிலொருநாள் அந்தத் தேவேந்திரன் சபையோர்களைப் பார்த்து ஏனோசில நாளாக இங்கு நடிப்பதற்காக பகாவலி வருகிறதில்லை அதென்னவிதமோ இங்கு வரவேண்டாமென்று யார் நிறுத்தி விட்டார்களென்றுவினவ அதில் ஒருபரியானது எழுந்து நின்று கைகட்டி வாய்புதைத்து ஒடுங்கி ஓராசனே பகாவலி ஒருமனிதன்பேரிலிச்சைகொண்டவளாய் வெறிபிடித்து என்னேரமவனுடன் படுப்பதும் சீலையை யெடுப்பதும் உதட்டைக்கடிப்பதும் காமபாணக் குடிப்பதாகவு மிரவும்பகலுங் காமக்கடலுள் மூழ்கிச் சகல இஷ்டங்களையும் மறந்து அவனைவிட்டு நீங்காமலிருக்கிறாள் அவளுயிரானது அவனைக் கொண்டிருந்து பிழைத்திருக்கிறாளென்றுசொல்ல அதை அரசன் கேட்டவுடனே அவனுக்குக் கோபமென்னும் நெருப்பானது மூன்று கண்கள் சிவந்துமீசைகள் துடிப்புறக்கடுஞ் சொல்லாக அவனைப்போதேயிங்கு கொண்டு

வாருங்களென்று கட்டளையிட பரிகள்பயந்து உடனே கட்டிலொன்றெடுத்துக் கொண்டு இந்திரலோகத்தைவிட் டிழிந்து தாசுல் முலுக்கினருகிற் படுத்துக் கொண்டிருக் கும் பகாவலியைத்தட்டி எழுப்பிதேவேந்திராதி ராஜனு டைய சங்கதிகளைச்சொல்ல அதைப் பகாவலிகேட்டு கிடு கலங்கி யதிகவிசனத்துடனே கட்டிலின்மேலேரிக்கொண் டுபரிகள் தூக்கிச்செல்ல அமரர் நகரெனும் பட்டணம் போய்ச்சேர்ந்தாள்.

விருத்தம்-இ-ம்-ரா தாமக்கிரியை.

பதிறுலா நிலவுபோன்ற பகாவலிகலக்கமாகி
மதியொன் றுமங்குந்தோணு மயக்கபோடெ மூந்துகுன்றி
விதிப்படி நடக்குண்டாகும் வினைதனைவெல்லலாமோ
கதியிதுதருணமென்று டுகவேவந்திட்டாளே.

தரு-இ-ம்-ரா தாமக்கிரியை.

இந்திரன்சபைக்குவந்தாளேபகாவலி
இந்திரன்சபைக்குவந்தாளே.

இந்திரன் சபைக்குவந்தாள் சுந்தரமிகுந்தமாது
அந்தரத்தோர்கள்மெய்க்கவிந்தையாய் நடனஞ்செய்ய இ
கொத்துசரப்பளியு முத்துமாலையுமின்ன
நத்துபுலாக்கணிந்து சித்திரவடிவானமாது இந்
மின்னுமின்னலைப்போல கன்னமுகிலங்க
வர்ணநகையணிந்து அன்னநடைப்போல இந்
கொங்கைக்குடைகுலுங்கச் செங்கைவளையல்மின்ன
தங்கச்சிலங்கையுடன் மங்கைநடனஞ்செய்ய இந்
மயிலின்வடிவைப்போலக் குயில்மொழியாளக்கன்னி
ஒயிலாய்நடைநடந்து நயல்விழிபோன்றமாது இந்

வசனம்.

இவ்விதமான அலங்கிர்தத்துடன் அரசன் சந்நி தானத்திற்கு முன் நடுநடுங்கஉடலொடுங்கி மிகுந்த மாக்ஷி மையுடனே விண்ணப்பஞ்செய்து கைக்கட்டி ஒடுங்கிநிற்க அப்போதரசன் அதிக கோபத்தோடவளைப்பார்த்து கடு மொழிகளோதி தியிலிடுங்கள் இவள் மனிதருடன் சேர் ந்தவளாகையால் இந்த சபைக்குத்தகுந்தவளல்ல ஆகை

யாவிவள் வொத்திருப் பாளாகில் அப்போதித்த சபைக் குத்தகுந்தவ ளாவாளென்றோதிட உடனே பரிகளானது சித்திரவடிவான பகாவலிதைப் பிடுத்துக் கொண்டு போய் தீக்குண்டத்தி லெறிந்து விட்டார்கள் அதனாலவள் வெந் துநீறாய் விட்டாள் பின் ஒரு வேதகன்னி செம்பில் ஜலங் கொண்டு வந்து ஒரு மந்திரத்தையோதி யவள்மேல் தெ ளிக்கவும உடனே பகாவலி முன்வடியோ உயிர் பெற்றெ ழுந்தாள் பின்பு அந்த ராசன் சபையில் வந்து நின்று நடனஞ் செய்ய ஆரம்பித்து முதல் சபையில் சகலபேர் களையும் அவர்கள் மனசையும பார்வையும் நினைவையும் பறித்துக் கொண்டாள் பின்பு நடனஞ் செய்வதி லெல் லோரும் தன்னை மறந்து சித்திரப்போலாய் வெறியர் போல ஆ ஆ ஆ ஆவென்று வாய்விட்டுசத்த மிட்டார் கள் நகமுகமு மிப்படிப் பட்ட நடனம் நாம் கண்டறியோ மென்கிற சத்த முண்டாகும்படி தன்னுடைய இராக முத விவைகளைக்காண்பித்து சகலரையும் வெறியர் போலாக்கி விட்டு இராஜனிடத்தில் விடை பெற்றுக் கொண்டு கட் டில் மேலுட்கார்ந்து தன் சோலையில வந்திறங்கிப் பின்பு பநிநீர் நிரம்பிய குளத்தில் மூழ்கி யுடலைச் சுத்திசெய்து கொண்டு அரசன் குமாரனருகில் வழக்கப்படி வந்து படு த்துக் கொண்டாள் பின்பு சூரியனுதய மானவுடன் வழக் கப்படி யெழுந்து ஸ்நானஞ் செய்து ஆடையாபரணங் களை தரித்து தன்னைச் சிங்காரித்துக் கொண்டாள் பின்பு சகல சனங்களும் தங்கள் தங்கள் வேலையில் நிலைபாடாய் விட்டனர் பின்பதேயடி இராக்காலங்கள் தோறும் தேவே ந்திரன் சந்நிதானத்திற்குப் போய் முதல் தீயில் வெந் தெழுந்து சபை முன்னடித்து சகலரும் மயங்கும்படிமூன் றுஞ்சாம இரவு வரைக்கும் நடித்து விடை பெற்றுக் கொண்டு தன்னரான்மனை வந்துசேர்ந்து பனிநீர் தடாக த்தில் முழுகித் தன்கணவனருகில்வந்து வழக்கப்படி மற ந்து நித்திரை செய்தெழுவாள் இவ்விதமாகப்பகாவலி தினந் தினம் இராக் காலம் போவது தாசுல் முலுக்கிற் குத் தெரியாது இப்படி நடந்து வருகையிலோர் ரிரவில் பகாவலி தேவேந்திரன் சந்நிதானத்திற்குப் போயிருக் கும் வேளையில் தாசுல்முலுக்கு முழித்தித தன்னருகில் படுத்திருந்த பகாவலியைக் காணமல் எவ்விடம் போயிரு

க்கிருளோ முழுதுந் தேடிப் பார்க்கையில் எங்குங் காணுமல் கலகத்தோடு தன்பஞ்சணை மெத்தையின்மேல் வந்தவனின் களவைப்பிடிக்கவேண்டு மென்னும் நாட்டத்தோடுமுழித்து வழிபார்த்து கொண்டிருந்தாப்போலவே நித்திரை போய்விட்டான் அப்போது பகாவலி தான் வரும் வழக்கப்படி வந்து முழுகி அரசன் குமாரன் கண் விழித்துப் பார்க்கையில் தன்னருகில் பகாவலி படுத்திருக்கக்கண்டு அதிசயப்பட்டு அதன் உண்மையை யறியவேண்டுதற்காக மற்றுநாளிறவில் தனக்கு நித்ரை செய்பவனைப்போல் மஞ்சத்திலிருவரும் படுத்திருக்கும் வேளையில் பாதியிறவாயினது அப்போது பகாவலியை யழைத்து கொண்டு போவதற்காகப்பரிகள் கட்டிலைக் கொண்டு வந்திரக்கிறதை பகாவலி கண்டு அங்குபோவதற்காகத்தனைச் சிங்காரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து இது தான் தருணமென்றெண்ணி யவளுக்குத் தெரியாமலெழுந்துக் கட்டிலின் காலைப்பிடித்துக் கொண்டிருக்கையில் பகாவலியும் வந்து அக்கட்டிலின்மே லுட்காரவும் பரிகள் தூக்கப் பறந்துபோகையில் இவனும் காலைப்பிடித்துக் கொண்டே போகையில் பூமிக்குத் தெரியாமல் மறைந்து கொண்டே போயிற்று அதன் பின்பவளை தேவேந்திரன் சந்நிதானத்திற் கருகில்விடவும் அவளிழிந்து ஒரு புறமாயொதுங்கி நிற்கையி லிவனுமோரிடத்தில் மறைவா யொளித்துக்கொண்டு நாயகனுடைய வல்லமையை நாடி அங்கு நின்று நகமுகமும் சுற்றிப் பார்க்கையில் எங்கணும்பரிகள் கூட்டம் கூட்டமாய் யிருக்கக்கண்டு ஆச்சரியமாயிருக்கும்போது அங்கு விதவிதமாகிய வாத்தியங்களும் மிருகங்களும் தன் வயதிலுங் காணுததும் கேளாததுமாக நடந்துக் கொண்டிருக்கக்கண்டு தன்னுடைய சித்தமானது ப்ரமித்துச் சொல்லவும் வெல்லவும் முடியாமல் நின்றுக்கொண்டிருக்கும் வேளையில் பகாவலியை எடுத்து தீயிலெறிந்து விட்டார்கள் அவள் வெந்து சாம்பலாய் விட்டாள்.

தரு இ-ம் புன்னாகவராளி.

அக்கினியிற்போடக்கண்டு ஆவியிழந்தானே மன்னன்
இக்குநிலையொன் றுங்காணுதிடுக்கங்கொண்டானந்தவேளை

ஆசையின் கடலமுதே அன்னநடையாளேயென்று
பேசவாயில்லாமல்வாடி புலம்பினான்மனங்கலங்கி

வசனம்.

இவ்விதமாக அரசன் குமாரன் மெய்மறந்து தறி போலாய்விட்டனன் பின்பு தன்னிலைதெரியாம லிரண்டு கைகளை யெடுத்து சிரசின்மேல் வைத்துத் தலையையழுத்திக் கையைப்பிசைந்து வயிற்றை நெருக்கி கைசேதமென்று வெறியன் புலம்புவதுபோலத் தனக்குட்டானே பெருமூச்சுவிட்டு இவ்வேளையில் நாம் அந்தப் பூச்சியாய் விடுவேனாகில் அத்தீயின்கூட விழுந்து வெந்தசாம்பலாயவளுடனே சேர்ந்துவிட வல்லமையில்லையே இன்னம் நம்முறையாருங்கேட்பாரு மில்லையே நாமுறையிட்டு ஒருவரையு மறிந்திலனே யென்று பல விசனமடைந்துகுன்றிநிற்கையில் ஒரு கன்னி மந்திரமோதி திருநீற்றைக் கொண்டுவந்து அந்த வெந்நீரின்மேல் தெளிக்கவுடனே யவள் முன்வடிவைப்போல அலகோடு உயிர்பெற்றெழுந்து மகாராசனுடைய சந்நிதானத்திற்கு வந்துநின்றிட அதை அரசன் குமாரன் கண்டு பின்றொடர்ந்துவந்தான் அப்போது களரிபெரிதா யிருந்தபடியாலிவனை யொருவரு மின்னாரென்று மின்னூரானென்றும் காணவில்லை இவனுமவர்களை யின்னாரின்னா ரென்றறியான் அதனாலங்கோரிடத்தில் நின்றுக்கொண்டிருக்கையில் ஆட்டந்துவக்கமாயினது அப்போது பகாவலியினுடைய மத்தளக்காரன் கிழவனா யிருந்தபடியால் மத்தளமடிக்க வல்லமையில்லாமல் மெதுவாக அவனெப்படி யடிப்பானோ அதுபோலவே குந்தி குந்தி நடனஞ்செய்து முகத்தைச்சுருக்கி யவன்புறமாகப் பார்த்தாடி வருகையில் அதைத் தாசுல்முலுக்குகண்டு மனந்தாளாமல் கிழவனாகிய மத்தளக்காரனிடத்தி லடித்து நான் ஈதப்பதில் மிகுந்த சகலவல்லமை யுள்ளவனென்னிடமாக இருதைசெய்துக் கொடுத்தால் நானவள் நடிப்பதற்குத் தகுந்தாப்போலடிப்பேனென்றுக் கேட்க அதற்குக் கிழவன் சம்மதித்து அவன் கையில் கொடுக்க அவன் மத்தளமடிக்க ஆரம்பித்தான் தாசுல்முலுக்கும் மத்தள மடிப்பதி லதிகவல்லமை யுடை

யவனுகையால் பகாவலி நடிப்பதற்குச் சரியாக அடித்திட அவ்வடியினலும் அவ்வாட்டத்தினலும் சகலபேருங் கண்டு பிரமித்துச் சுவர்முதலிய மரங்களெல்லாம் ஆஹா ஆஹாவெனவும் ஒரே சத்தமாய்விட்டது அவ்வேளையில் தேவேந்திர ராசனும் மெய்மறந்து சந்தோஷக்கடலில் மூழ்கி அவ்வாட்டத்தின் மகிழ்ச்சியால் றன்கழுத்திலிருந்த கோடிபொன் விலைபெற்ற இரத்னபதக்கத்தை மத்தள மடிப்பவன் கையிற் கொடுத்துவிட்டுப் பின்னுமதிக நடனஞ் செய்திட அதை ராஜன் கண்டு சந்தோஷமாய்ப் போக விடையளிக்க விடைபெற்றுக் கொண்டு எவ்விதம் போகிருளே அவ்விதமாகவே தன் சோலைவந்து சேர்ந் தனள்.

பின் பகாவலி தான் வழக்கப்படி பனிநீர்குளத்தில் மூழுகப்போயினளப்போது அரசன்குமாரன் வழக்கப் படி மஞ்சத்திற் போய்ப் படுத்துக்கொண்டனன் பின்னு மவனும்போய்ப் படுத்துக்கொண்டிட அவன் அதேகியா பகமாய்ப் பொழுதுவிடிந்தவுடனே யெழுந்து புன்னகை யாக நகைத்தனன் அப்போதவள் நீ யெப்போதும்சிரிக் கவழக்கமில்லாத சிரிப்புஎன்னத்திற்காகச் சிரித்தாயென்று பகாவலிகேட்க அதற்கரசகுமாரன் இன்றிரவில் நான் அதிசயமான கினவொன்றுகண்டேன் அதனலெனக்கு அடிக்கடி புன்னகை வருகிறதென்று சொல்ல அதற்கவள் நாயகனுதவி செய்யவேணும் நீ கண்டகினவை நான் கேட்கும்படி சொல்லென்று கேட்க அதற்கரசகுமாரன் பாதியிரவிற் றுப்பின் னெங்குசெல்கின்ருய் எனக்குத்தெரி விக்கிறது மில்லை யென்று சொல்ல அதைப்பாகவலி கேட்டு நம்முடைய மருமமெல்லா மிவனுக்குத் தெரிய லாயினதே அல்லது நம்முடன்கூட அங்குவந்திருந்தா ளே வென்று அச்சங்கொண்டு திடுக்கிட்டு வெகுநேரம் கலங்கி நின்று ஆனலுங்கூறவில்லை இவன் பூர்வோத்திர மெல்லாம எவ்விதத்திலாவது அறிய வேண்டுமென்று பின்னும் நீ இதற்குமேலென்னகண்டாய் சொல்லென்று கேட்க அதற்கரசகுமாரன் இன்றிரவில் உன் கூடநானும் பரிகள் நீயேறிப் போவதற்காக கொண்டுவந்த கட்டிலின் காலைப் பிடித்துக்கொண்டு நீஉட்கார்ந்துக்கொண்டு போ

ளுயே அப்போது கூடவே வந்தேனென்று சொல்ல அந்த பக வலிகேட்டு உனக்கு என்மேல் சத்தியமாக நீ உமது கண்ணினுல் பார்த்தவைகளை யெல்லாம் சொல்ல வேண்டுமென்று கேட்க அதைக்கேட்டரசன் குமாரன் சிறிது சொல்லி நிறுத்த அதற்கவ ளாணையிட்டுக் கேட்க இப்படியே ஆதியோடந்தமாக சொல்லித் தன்விரிப்பின் தலையணியை நீக்கி அதன்கீழேவைத்திருந்த பதக்கத்தை யெடுத்துக் காட்டிட அதனைக்கண்டு பகாவலி மார்மேலடித்துக்கொண்டு மூர்ச்சையாய் விழுந்தனள்.

பின்பு தெளிந்தெழுந்து ஓ என் பிராண நாதனேயுன்னுயிருக்குப் பகவானுகிவிட்ட யே மன்னவனே மகாபுருஷாவென்று கலங்கிஉனக்காகவேண்டி நானென்னுடைய தாயதகப்பனாட்டத்தி லெவ்வளவு வருத்தங்களை யடைந்தேன இன்னம் அக்கம்பக்கத்தா ரென்னை நகைக்கும்படி எவ்வளவு நிந்தனையான இழிவின் பேரெடுத்தேன் இன்னமுனக்காக நித்தியகாலம் தீயில்வெந்து போவதையுமொப்புக்கொண்டேன் இப்படி எல்லாமெனக்கு எத்தனை எத்தனையோ கட்டுக்கண் வந்து நேரிட்டது அதுகளெல்லாம் பார்த்துக்கொண்டு உன்னைநான் கைவிடவில்லைஇன்னுட்டத்தைவிட்டு முகந்திருப்பவில்லையே ஆகையாலிவைகளை நீயேயோசித்துப் பாரென்று சொல்லப் பின்னும் உன் கண்ணுல் இவ்வேடிக்கையெல்லாம் முடிவானது அதைச் சொல்லும்படியான நாட்டம் யாதொன்றுமில்லை ஆனல் அக்கூடாத்திற்கு நீ வாராதிருந்ததே நன்னுயிருந்தது நானுன்னைவிட்டுப் பிரிந்துபோய் வருகிறவரைக்கும் நீவருத்தமெடுத்திருப்பதே நலமாயிருந்தது அதனுலெனக்கு என்னகதி நேரிடுமோ இப்போது நான் கைசேதப்பட்டவளா யிருக்கிறேன் இப்பொ துன்னை நான் கொண்டு போகாவிடில் முடிகிறதுமில்லை கொண்டுபோனு லெதுவரைக்கு பொளுத்து வைப்பேன் நல்ல முதலானது இக்கட்டளையெப்படி யிருக்கிறதோ அப்படித்தான் முடியும் இன்றிரவு முன்னுடைய பாக்கியத்தை சோதிப்பதற்காக என்கூடக் கொண்டுபோகிறேன் அங்கு உன்னுலெனக்கு என்ன நேரிடுகின்றதோ யதையுமனுபவிப்பேன் ஆனல் நான்முன்னிட்ட கட்டளைப்படி முடியுமல்லது வேறில்லை

யென்றெண்ணி வழக்கப்படி யங்கு கொண்டுபோய் இராசன் முன்னின்று பணிந்து கைகட்டி வாய்புதைத்து இன்று நான் மத்தளமடிப்பதில் தேர்ந்தவனொருவனையழைத்து வந்திருக்கிறேன் தங்களுத்தரவானால் இங்கு வந்தடிக்கும்படி செய்கிறேனென்று மனுவுசெய்ய அதனை ராசாகேட்டு அதிக சந்தோஷமடைந்து அழைத்து வரும்படி விடைகொடுத்தனன் அதுபோலவே அவனை யழைத்திட இவள் நடிக்கவும் அவன் மத்தளமடிக்கவும் அதனால் சகலபேர்களும் திகைத்து வெறியர்போல மருளானார்கள் இராசாவும் மெய்மறந்து அதிக சந்தோஷமடைந்து அந்த சபையிலுள்ள சகலருங்கேட்கும்படி பகாவலியைப் பார்த்து யிப்போதுனக்கென்ன வேண்டுதலாயிருக்கின்றதோ அதனைக் கேள் தருகிறேனென்று சொல்ல அப்போது பகாவலி மிகுந்த கட்டிமையுடனே மகாராசாவினுடைய வாழ்வைக்கொண்டு அடியாளுக்கு யாதோர் வஸ்துவுக்குங் குறையாமலிருக்கின்றது இதனால் இந்த மத்தளக்காரனொருவனைத்தவிர எனக்கோர் குறையுமில்லை இவனுடைய உடைமன்னிக்க வேண்டுமென்று சொல்ல அதனைத் தேவேந்திரன் கேட்டு அதிக கோபத்தோடு இராஜ குமாரனைப்பார்த்து கண்டிப்பான மொழியாக நீயோ மானிடர் வடிவானவனை நீயவளை யிச்சிக்கவுமவளுன்னை யிச்சிக்கவுமாயினது அதிக நல்லது அவளுடைய ருசியை நீ கண்டவன் உன் ருசியை அவள் கண்டவள் அதனால் ஒருவர்க்கொருவர் விருப்பங்கொண்டீர்கள் நீயாதொரு வருத்தமுமில்லாமல்பரிகுலத்தானை யிங்கிருந்து கொண்டுபோகமாட்டாய் இன்ன முன்னுடைய விலாப்பக்கம் கூடேறும்படி கட்டியணைத்து படுக்கமாட்டாயென்று சொல்லி பின்பு பகாவலியின் புறமாகத்திரும்பி அடிபெண்ணே நானென்ன செய்வேன் நானுன்னை யாதொன்றும் செய்வதில்லையென்று வாக்களித்து விட்டேன் இப்போதுனக்கு பனிரண்டு வருஷம் வரையிலிடைமுதல் கால்வரைக்கும் கல்லாகப்போகக்கடவதென்று சாபங் கொடுத்துவிட்டனன் அந்த சாபப்படியே முடிந்துவிட்டது அதைக்கண்டு தாகுல் மலுக்கு புலம்பலானான்.

விருத்தம்-இ-ம்-புன்னாகவராளி.

விதிப்படிசாபத்தாலே விளைந்ததுபகாவலிக்கு
மதியொன்றுமநிலையில்லாமல் மன்னவன்மயங்கியேங்கி
சதிவந்துசேர்ந்ததென்று சஞ்சலமிகுதியாகி
கதிகளைநினைத்துகுன்றி கதறியேபுலம்பினானே

தரு-இ-ம்-செஞ்சுருட்டி.

ஆதியேயிறையவனே சோதிநாயகனே
அமைத்தாயேபுவியில் என்னை
மேதினியிலடியவன் மெலிவாலொடுங்கியே
வினையுளாகினனே
வானமாலாவதற்கு மணமில்லாபர்போல
மணிலாகினேனே வானில்
மின்னுமதியொளி நீங்கியவாறுபோல
மிடியனாகினேனே
கனியில்லாச்சோலைபோல் காட்டினிலவைப்போல்
காணமற்போகினேனே தான்
அநியாயப்பாவியாகி அழுதுடலய்பிட
ஆவிகுன்றினேனே
தலைவிதிதப்பிடாது சஞ்சலம்போய்விடாது
தரணியிலுளளவர்க்கு வாரி
அலைகடல்கடந்தாலும் மப்புவியாண்டாலும்
அமைவிலைநீங்கிடாது
இறைவாயெனக்கொன்றும் வராமல்கார்த்திட
என்னைமீட்டுநி நான்
முறையிடுமுறைதன்னை முழுதுநீசந்திடு
முடியில்லாப்பொருளே

இருபத்திரண்டாவதுகதை.

தாசல்முலுக்கு சரிந்தீவு அடைந்ததும்
அங்கு பகாவலியைக் கண்டதும் இன்னம்
சித்திராவதி ராசன்குமாரத்தி தாசல்முலுக்கின்பேரில்
ஆசைகொண்ட விபரம்.

வசனம்.

தேவேந்திரனுடைய சாபத்திலே பகாவலி கல்லாய்
சமைந்து அங்கில்லாமல் மறைந்துவிட்டாள் அப்போ

தரசன் குமாரர் அவளைக்காணமல் இரசத்தை போலள
மனந் தடுமாற்றங் கண்டு கலங்கி விழுந்து புரண்டழுது
கொண்டிருக்கையி லிவனையோர் பரியெடுத்து மேலெறி
ந்திட தாசுல்மூலுக்கு ஒருகாட்டில் போய்விழுந்துமூன்று
நாள்வரைக்கு மூர்ச்சையாக கண்திறக்கா மலிருந்து நாலா
நாள் கண்திறந்து பார்க்கையில் தன்னருகிலிருக்கு மனை
வியை காணமல் மட்கள் நெருங்கி யிருக்கக்கண்டு திடுக்
கிட்டெழுந்துசிரமேற்கரத்தை வைத்து அங்குள்ள தருக்
கள் தோறுஞ்சென்று பகாவலியினுடைய சங்கதியை
விசாரித்துகேட்டனன் இவ்விதமா வனமுழுதுந்திரிந்து
வருகையி லொருநாள் மரகதத்தா லிழைத்திருக்குங் குள
மொன்று கண்ணிற்குத் தோற்றலாயினது அங்கடந்து
பார்க்கையில் விதவிதமான கனிகளுள்ள விருக்ஷங்களும்
குளிர்ந்த நிழலுமாகப்பொன்வெள்ளியினாற்செய்த ஏணி
ஒன்றிருக்கக்கண்டு அரசன் குமாரனுஞ் சிலநேரமிருந்து
இளைப்பாற வேணுமென்று அங்கு படுத்திருக்கையில்
அப்படியே பகாவலியின் கியாபகத்தோடே நித்திரை
போய்விட்டான் அவ்வேளையில் சிலபரிகூட்டங் கடந்து
இக்குளத்தில் தலைமுழுகி விளையாடிவிட்டு கரையேறித்
தங்கள் தலையிரோமங்களை யுலர்த்திக்கொண்டு நிற்கையில்
அதிலோர் கன்னியின் பார்வைபடுத்து நித்திரைசெய்யு
மரசன் குமாரன்மேல் விழுந்தது அதோ படுத்திருப்ப
வன் பகாவலியினுடைய மத்தளக்காரனென்று சொல்லி
னது அச்சொல்லைக்கேட்டவன் கண்ணைத்திறந்து அப்
பரிகளைப்பார்த்து பகாவலியிருக்குமிடத்தின் சங்கதியுங்
களுக்கு யாதாயினுந் தெரியுமாவென்று வினவினன் அக்
கன்னிகள் அவனதிக விசனத்தோடு கேட்டதைக்கேட்டு
அதிகமனமிரங்கி நீயவளைக் கண்ணுற் கண்டதில்லை ஆனா
ல் நாங்களுங்கண்ணாற்காணவில்லை பகாவலியிடையிலிரு
ந்த காலபட்டுங் கல்லாய்ச்சமைத்து சங்கத்தீவிலொரு
கோயிலிருக்கின்றது அக்கோயிலி லுள்ளிருக்கிறான் அக்
கோயில் பகலெல்லா மிரவெல்லாம் பொழுது விடியுந்
தனிலுந் திறக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறோமென்
றோத அதை தாசுல்மூலுக்கு கேட்டு அந்தத்தீவு எந்த
புற மிருக்கிறதென்றுகேட்க அதற்கவர்கள் நீபோகும்

வழியிலடையும் வருத்தங்களொருபுறமிருந்தபோதிலும் உன்வயதளவு நடந்தபோதிலுமங்குசேரமாட்டா யென்றோத அதைக்கேட்டு தாசல்முலுக்கு ஆசையற்றவனாக ஒடுங்கி வாழ்வினம்பிக்கை யற்றவனாய் முட்டிமோத ஆரம்பித்துக் கல்மேற்றலை யுடைத்துகொள்ள மோதுகையில் அதனைக் கன்னிகள் கண்டு வீணாயுயிரையிழந்து விடுகிறானென்று மனமிரங்கி யெல்லாருமொன்றாய்க்கூடியாலோசித்து அங்கிவனைக் கொண்டு போய் விடுவோம் இவன் விதியிலுள்ளதை யனுபவித்துக்கொள்ளென்று ஒருநொடிக்குள்ளாக அங்கொருவண்டுபறந்து போய்ச் சேர்ந்து விட்டதுகள்.

பின் அரசகுமாரன் ஒருவிநாடிக்குள் தன் விசனத்தை விட்டு நீக்கி நோக்கையில் ஒரு அழகாகிய பட்டணந்தெரியலானது அப்பட்டணத்தின் சுற்றிலு மூன்புறத்திலும் உன்னதமாகிய கனிகளும் பூக்களும் நெருங்கியசோலைகளும் மாடகூடங்களும ஆண் பெண்கள் நல்லவடிவினையுள்ளவர்களுமாகக் கண்டு அதிகசந்தோஷமுமகிழ்வுமடைந்து சுற்றிவந்து கடைவீதியின் புறமாகப் போகையில் அங்கோரெளிய பிராமணனைக்கண்டு அவனைக்கண்டு அவனோடு சந்தித்து இப்பட்டணத்தின் பேரென்ன அரசபேரென்ன உன் பேரென்ன நீயென்ன தொழிலோனெனவினவ அதற்கு அவன் இந்நகர்தங்கள் தீவு இப்பட்டணத் தரசன்பேர் சித்திரவதனென்றும் நான் கோவிலின் பூசாரியென்று சொல்ல பின்னுமவனை இங்கு எத்தனை கோவிலுண்டு அதில் பிரஸ்தாபமான கோயிலெத்தனை மறைவான கோயிலெத்தனை யுண்டென்றுவினவ அதற்கவன் சிலநாளாயிங்கு கடற்கரையோரமாக ஒரு கோயிலுண்டு அக்கோயில் பகலெல்லா மூடப்பட்டு இறவெல்லாந் திறந்திருக்கிறதென்று சொல்ல அதனை யரசகுமாரன்கேட்டு அதிகமகிழ்வடைந்து கடற்கரை யோரமாகப் போய் அக்கோயிற்கண்டு அதன்வாசற்படியின்மே லுட்கார்ந்துக் கொண்டிருக்கையில் பொழுது மறைந்து கருங்குயிலானது அப்போதுதானாக அப்பூட்டுத் திறந்துக்கொண்டது அப்போ தரசகுமாரன் அதனுள்ளடைந்து பார்க்கையில் பகாவலி பேர்பாதி கல்லாய்

சமைந்து சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டிருக்கக்கண்டு விசனமடைந்தவன் அரசகுமாரன் வாயைக்கண்டு எவ்விதமா யிதனுள் வந்தாயென்று கேட்க அதற்கவன் ஆதியோடந்தமாகச் சகல சேதிகளையுஞ்சொல்லி இரவெல்லாயிரண்டுபேரும் பேசிக்கொண் டிருக்கையில் விடியற் காலமாய்விட்டது அப்போது பகாவலி நீபொழுதுதிக்குந்தனிலு மிங்கிருப்பாயாகில் நீயுமென்னைப்போலாய்விடுவாய் இக்கிராமத் போய்விடென்றுசொல்லிதன் காதிலிருந்த முத்தொன்றைக் கழட்டி யவன்கையிலீந்து விலைவிற்று சிலநாள் வரைக்குஞ் சீவித்திருமென்றோதி யனுப்பினன் அதையரசன் குமாரன் வாங்கிக்கொண்டு பட்டணத்திற்குள் வந்து எத்தனையோ ஆயிரம் ரூபாய்க்குவிக்கிரயஞ்செய்து ஒருவனைக்கொண்டு பண்டுபலாதிகளைச் சேகரஞ்செய்து கொஞ்சம் ஆள்களையும் வைத்து யிப்படிசிலநாள்வரைக்குப்பகல் முழுதும் பட்டணத்துள்ளும் இரவுமுழுதும் பகாவலியினிடத்திற்சென்று பேசிக்கொண்டு வருவதாயுமிருந்தனன் இப்படி நடத்திவருங் காலத்தில் அப்பட்டணத்தாரனேகர் இஷ்டர்களாயினர்கள் அப்போதொரு அரசகுமாரன் தன் இஷ்டக்காரர்களையழைத்துக்கொண்டு நகர்சுற்றிவருகையில் தலையுமேலுந் திறந்தாப்போலப் பிச்சைக்காரர்களுடையேயுடுத்திக்கொண்டு ஒருகூட்டமாக வருவதைக்கண்டு அரசகுமாரன் தன்சினேகிதனைநோக்கி யிவர்களுடைய பிச்சைக்காரருடைமைகளாகவும் வடிவுகளைப்பார்த்தால் அரசகுமாரர்களுடைய வடிவைப்போலு மிருக்கின்றது ஆனால் தன்பருமம் நாயனறிவான் ஆதிலுமிவர்களிப்படியிருப்பதென்னவென்று கேட்க அதற்கவன் இவர்களெல்லாம காமபாணம் பட்டு அதனால் மோகக்கடலில்மூழ்கி ஆசையென்னுந் தீயில் வெந்து ஆகையினாலிவர்கள் இதிலரசகுமாரர்கள் சிலமந்திரி குமாரர்கள் சிலர் இவர்களெல்லாம் இப்பட்டணத்தரசன் குமாரத்தியின்மேல் இச்சைக்கொண்டு வெறியர்போல தங்கள் வாழ்வையிழந்து திரிகின்றார்கள் அதெனெனில்.

அகவல்-இம்-கண்டா.

மதிபோல்வதனமும் வளர்பிறைநுதலும்
கதிர்வாள்கண்ணும் கண்டவர்மயங்க

குடம்போற்றிரண்ட கும்பன்தனமு
தடப்போலுயர்ந்த தளதளப்புள்ளதாம்
கண்டவர்மயங்கக் கதிர்வடிமேனியாள்
பெண்டுகள்தன்னில் பேரழகுள்ளவள்
ஆசையைக்கொடுக்கும் அழகுள்ளவல்லி
தோகத்தொழிலில் மூழ்கியமங்கை

வசனம்.

அப்பெண்ணின் வடிவைப்போல் உலகிலெங்கணு
மில்லை அப்பெண் மானோதேனோ மயிலோகுயிலோ மதி
யோ உடுவோ எதுவென்று சொல்லுவோம் இன்னம்
அந்தராஜகன்னி எப்படிப்பட்டவளெனில் இசுலாமான
வர்களை வீணுக்க் கொலை செய்யப்பட்டவர்கள் இன்னமவ
ளிடத்தி லிரண்டுபேரை வைத்திருக்கிறாள் அப்பெண்க
ளிரண்டுபேரில் ஒருத்தியெபயா நாமலாவென்றுங் கூட்டுக்
கள்ளி மற்றொருத்தியின் சகலாவென்றும் சொல்லுவார்
கள் இவர்களிருவரும் சூதுவாது எடுத்துசுத்து இவைக
ளில் தேர்ந்த வல்லவளாயிருக்கிறதுந்தவிர அவர்களைத்
தன்கைக்கீழிருத்தி தனக்கு புத்திமதிகள் சொல்லும்படி
நியமித்து மூவரு மனமொத்து நடந்து வருகிறார்கள்
விவாகத்தில் தங்கள் தங்களிஷ்டப்படி யுண்டு தாங்கள்
யாரை யினப்பிப்பார்களோ அல்லது பரியாசஞ் செய்வார்
களோ அதுதவிர வேறொருவர் சொல்லை யேற்றுக் கொள்
ளுகிறதில்லை இனமிதுவரைக்கும் அவர்களின் கண்ணி
ற்கு நிறப்பமானவன் யாரும் அகப்படவில்லை இன்னு
னென்றும் சம்மதிப்படவில்லை யென்றுசொல்ல அதனை
அரசகுமாரன்கேட்டு சும்மாயிருந்தான் ஒருநாளரசகுமா
ரன்கன்னியைநாடி அவளின் மாடத்தின் புறமாகப்போ
கையில் அங்கு சிலர் கூட்டமாகச் சேர்ந்து வெறியர்புலம்
புவதுபோல தனக்குள்ளே தாங்களேவாயில்வந்த தெல
லாமவளின்மேல் கொண்ட காமவிரகதாபத்தால் பேசிக்
கொண் டிருக்கிறார்களங்கிவனும் போய்ச்சேர்ந்தனன்
அப்போதக்கன்னி சாளரத்தன் வழியாக இவர்கள் புலம்
புவதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கையி லங்குதாச
ல்முலுக்கு நிற்கிறதைக் கண்டு மின்னலினுல் கண்ணொளி

லயங்கி விடுவதுபோல மயங்கி மூர்ச்சையாய் விழுந்தனன்.

தரு-இ-ம்-தோடி.

பாங்கிமாரே நானென்னசெய்வேன்
தோழிமாரே நானென்னசெய்வேன்

பஞ்சணைமெத்தையின்பேரில் படுத்தாலும்நித்திரையும்
கொஞ்சமும்பிடிக்கவில்லை கொற்றவன்மேல்கையினல்-பா
நெஞ்சிலிடிமாறவில்லை நெரிப்புயெரிவதுபோல்
மிஞ்சிமிஞ்சிப்போகுதாசை மன்னவனைக்காணவென்று-பா
இருக்கவிருக்கமோகம் எழும்புமேமென்மேலாக
பொருக்கமுடியவில்லை பூவையரேயினெனக்குப்-பா
உலையின்மெழுகுபோல் உருகுதேமேனியது
தலைவிதியோவெனக்குச் சஞ்சலம்பெருகுதடி-பாங்
என்னைப்பிரிந்திடாமல் இருந்திடமன்னவனை
முன்னைக்கொண்டுவந்துவிடும் மன்னவனைச்சேரவின்று

வசனம்.

இவ்விதமாக மாணிக்கவல்லி விரகதாபத்தால் புலம்ப அப்போது நர்மலாவென்னுங் கூட்டுக்கள்ளியும் சப்லாவென்னும் வட்டநொள்ளி யிவர்களிருவரும் ஓடோடியும்வந்து எடுத்து மார்போடணைத்து முகத்தின்மேல் பனிநீர்தெளித்து அத்தரை முகமவைத்து மூர்ச்சையைத்தெளியவைத்து ஓமயிலே குயிலே நீயிப்போது மிப்படியாகாமல் இன்றிவ்விதமான காரணமென்ன வென்று கேட்க அதற்கொன்றும் மருமத்தைச் சொல்லாமல் வாயைமூடிக்கொண்டிருந்திட அப்போது நர்மலாவென் பவளைச் சாளரத்தின் வழியாக வீதியை எட்டிப்பார்க்கையில் அங்கு பூரணச்சந்திரனைப்போல அரசகுமாரன் நிற்கக்கண்டு இக்கன்னிகை யிவ்வித மூர்ச்சையானது இவனைக்கண்டு இரசித்து மயங்கினளென்றெண்ணி உடனே அந்த ராசகன்னியைப்பார்த்து நீபட்ட பாட்டால் எங்களை வெறியர்போலாக்கிவிட்டாய் நீபொறுக்குதலில்லாமல் அரிய ஆத்திரப்பட்டாய் உனக்கித்தனை பதைபதைப்பேன் நீ என்னத்திற்காகத்தடுமாறுகிறாய் உனக்கெவன்

சம்மதியாகவே யிருக்கிறான் நீயொன்றுக்கும் அஞ்சாதே
நீ நீலவர்ணக்குதிரைக்காரனைக் கண்டு உன்வடிவை இப்
படி மாறுதலாக்கிக்கொண்டாய் இப்படிவுமவனுன்னை விட்
டுப்போகான் இன்னமவனைவிலக்க ஒருவராலும்முடியாது
ஒருநொடிக்குள்ளே இவனை மாயவலைக்குள் சிக்கிவைக்கி
றேன் நீபார் அவனிப்புறமப்புறம் அசையவல்லமையற்
றவனாய் ஓரடிமுன்னே வைக்காதிருக்கும்படி செய்கிறே
னென்றுசொல்லி ஒரு சூதுக்கள்ளியையேவி அவனுடை
யசங்கதியை யுண்மைப்படுத்துவதற்காகவே அவள் மினு
க்கிக்கொண்டு அன்னம்போலொய்யார நடைநடந்து வரு
கிறது அரசன் குமாரனுடைய குதிரையின் கடிவாளத்தை
ப்பிடித்துக்கொண்டு திருட்டுக்கள்ளி மிரண்மோமொழி
யாக ஓ இராஜனே நீ இப்படிப் பட்டணத்தின் சதியை
யறியாய் இதுகொலைசெய்யு நகரமென்றும் இங்கு தாம்
ஆகையால் வந்தோர்களைத் தூக்கிவிடுவதென்றும் இப்பட்
டணத்தின் அரசன்குமாரன் தன் கூந்தலின் ஒவ்வொரு
ரோமத்தினாலறிவாளிகளை மயக்கிச் சுருக்கிடப்பட்டவள்
இன்னமவன்கண்பார்வையினால் காமர்களை மயக்கிக் காம
வியாதி மேலிடச்செய்து மண்மேல் விழுத்தாட்டப்பட்ட
வள் அவளால் இவ்வுலகமே மயங்கிப்போயிருக்கின்றதே
அப்படிப்பட்ட வல்லமையுடையவளென்று அறியாமல்
நீ இங்குமங்குமாக எவ்வல்லமையைக்கொண்டு திரிகிறாய்
இன்னமரசனுடைய மாடத்தின் புறமும் பார்க்கிறாய்
ஆகையால் நீ நெருப்புத்துண்டுபோலிருக்கிறாய் தீபம்
போன்ற வடிவினையுடைய பெண்களின்மனதை யுருக்
கப்பட்ட கொல்லனாயிருக்கிறாய் இன்னம் கற்போன்ற
மனதை நீர்போலாக்கப்பட்ட வல்லவனாயிருக்கிறாய்ஆனா
லுங்குறைவில்லை நீ எங்கிருந்து வந்தாய் நீ எங்கிருக்கப்
பட்டவன் இன்னமுன்னுடைய வமிசமும் இன்னமுன்
னுடையவரலாறும் இருப்பிடத்தையும் சொல்லென்று
கேட்டிட அவைகளையெல்லாம் தாசுல்முலுக்கு கேட்டு
இவள் யாரோ அனுப்பிய தூதர்களென்று அவள்மொழி
யினால்தெரிந்துகொண்டு ஓ வானின்மின்னே பெண்ணே
கண்ணே மயிலே மாஞ்சோலைவாழுங்குயிலே நீயேன் வீச
கிறாய் என்முன் பேசுகிறாய் என்மனதுள்ளே மறைந்தி

ருக்கும் காமத்தீயை ஏன் கொளுத்துகிருய் இன்னம் புண்ணியருக்கிறவன் மனதிற்கு நீ மூலமிடு என்னுடைய நகரின்பெயர் தேசமுழுதும் சூரியனொளிவைப்போல விளங்குகின்றது என்பெயர் உலகினரசர்களுக்கெல்லாம் சிரசின் மகுடமுடியாயிருப்பேன் நானே யாத்திரை செய்பவன் இன்னம் கியானப்பேதலிப்புள்ளவன் என்பேரில் இந்த நாட்டம் செய்யவேண்டாமென்று சொல்லி விடைன்ரூ தினன் அதை யவள்கேட்டு இவன்பெயர் தாசுல்மூலுக்கென்றும் இவனுடைய பட்டணத்தின்பேர் ஷாகிஸ்தானென்று மறிந்துக்கொண்டு திரும்பிவந்து சித்திராவதி யரசன் குமாரத்திக்கு இச்சேதியை யெல்லாம் தெரியப்படுத்தினள்.

அன்றுமுதலாக அரசகுமாரன் தினகாலம் விதவிதமாகிய ஆடைகளணிந்து சிங்கரித்துக்கொண்டு அவ்வீதியின்புறமாகப் போக்குவரத்துமாகவிருந்தான் அவ்வரசன குமாரத்தி இவன்மேல் கொண்ட ஆசையினல் நாளுக்கு நாள் பதினைந்துநாளிற்கு மேற்பட்ட நிலவுகுறைவது போல கரைதலா யுடல்மெலிந்து மனம்வாடி யரைவற்று நிற்கச் சிலநாள்கழிந்தது பின்பு மறைவாயிருந்த சங்கதி வெளியாயினது அப்பொழுது தாய்தகப்பனிச்சேதியை யறிந்து மகள் நாளுக்குநாள் குறைந்துகொண்டு வருவதினுல் அதிக விசனமடைந்து அவ்வரசன் குமாரனிடத்திற்குப் போய் பெண்ணை விவாக முடித்துக் கொள்வதற்காக அவனுக்குப் போதிக்கும்படியாக சொற்களையெல்லாம் கற்பித்துக் கற்பில் கல்லைக் கரையச்செய்யும் வல்லவனொருவனை யரசன் குமாரனிடத்திற்கனுப்பினான் அத்தூதன் அரசகுமாரனிடத்திற்கு விரைந்தோடி வந்துசித்திராவதி தேசத்தரசன் சேதியும் அவன் குமாரத்தியின் சங்கதியும் மணம்புரியும் சங்கதியும் ஆதியோடந்தமாகச் சொல்ல அதை அரசகுமாரன்கேட்டு அத்தூதனோடு நீ யரசனுக்கு என்னுடைய விண்ணப்பத்தைச் சொல்லி நான் என்னுடைய நகரைவிட்டுமகுடமுடியிழந்து சினேகிதர்களையும் பிரிந்து அனேக வருத்தங்களையடைந்து யாத்திரைசெய்து நகர்திரிந்து வருபவனுக்கு இவ்விதஞ் சொப்ப நாடுவதெப்படி நீர்மேல் சித்திரமெழுதியதுபோ

லும் காற்றைப்பிடித்து கரத்திலடைத்து வைப்பதுபோலும் என்று அரசனுக்கு சொல்லுமென்றுசொல்ல அதை அத்தாதன்கேட்டு ஓடோடியும் அரசனிடம் வந்து அரசகுமாரன் சொல்லியதைச் சொல்லி மணம் வேண்டாமென்றுமறுத்தானென்றுரைத்த அதை அரசன் கேட்டு விசனமடைந்து மந்திரியை யழைத்து இச்சேதியைத் தெரிவித்திட அதை மந்திரிகேட்டிதென்ன. ஆச்சரியமாயிருக்கின்றது அரசர்களொன்றை நாடினால் அதைமுடிப்பது மந்திரிகள்பேரில் கடனாகையால் தங்களுக்குமுன்பாகவே அவனை எவ்விதத்திலாவது மோசஞ்செய்து மடக்கியொடுக்கித் தாங்கள் நினைத்த கோரிக்கையை முடித்துவிடுகிறேனென்றுரைத்திட அதற்கரசன் எவ்விதமென மந்திரியவனை காளவாண்டவனென்கிறவனே ஒப்பிக்கொள்ளும்படிசெய்து உன் நாட்டத்தை நிறைவேற்றி விடுகிறேனென்றுரைத்தனன் அதை யரசன்கேட்டு அதிக மகிழ்வடைந்தனன்.

தாசன்முழுக்கிற்குக் கையில் காசில்லாதபடியினாலே பகாவலியினிடத்திற்குப் போகவேணுமென்று நாட்டங்கொண்டபோது இதற்குமுன் துடைக்குள் வைத்திருக்கும் மாணிக்கமிருக்கிறதென்று கியாபகம் வந்துடனே ஒருவனை யழைத்து தன்னுடைய கீறச்சொல்லி அம்மாணிக்கத்தை வெளிப்படுத்தி அம்மாணிக்கத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அப்புண்ணிற்கு மருந்திட்டு மாணிக்கத்தை விற்பனைசெய்வதற்காக ஒரு வியாபாரியினிடத்திலீய்ந்திட அதையவன் வாங்கிப் பார்த்து ஆச்சரியப்பட்டு இச்சேதியை மந்திரிக்குத்தெரிவித்தனன் அதை மந்திரிகேட்டு அவனைப் பிடித்துவரும்படி சேவகர்களையனுப்பிப்பிடித்துவரச் சொல்லிப் பார்க்கையிலிவன் இராஜனுடைய மனிதனாயிருக்கக்கண்டு கோறிக்கை முடிவானதென்றெண்ணிச் சிறையிலடைத்துவிட்டான் பின்பரசனோடு வளர்த்த ராஜாளி யோடிப்போனதைத் தேடிப்பிடிக்குமுன் தானகப்பட்டபாவனைபோல நாம் நினைத்த அரசகுமாரன் தானாகவே வந்து வலையிற்சிக்கிக்கொண்டான் இப்போதெனக்குத் தெரியவருகிறது ஆகையால் நாம் சொன்னபடியே அவன் கேட்பானென்றுரைத்தனன்.

## இருபத்துமூன்றுவது கதை.

### சித்திராவதி இராசன் குமாரத்தியைத் தாசுல்முலுக்கு விவாகம் முடித்தது.

### இன்னம் பகாவலியிருந்த கோயிலைப்பிடித்த விபரம்

வசனம்

சித்திராவதி இராசன் மகளை தாசுல்முலுக்கு மணமுடித்துக்கொள்வதற்காகவேண்டி யவனைச்சிறைச்சாலையிலடைத்து அவனுக்கு அதிக வருத்தங்களைக் கொடுத்தான் அதனுல் தாசுல்முலுக்குச் சிறைச்சாலையைவிட்டு வெளியே வராமல் அதிக வருத்தமடைந்து வெளியேவரமுடியாததலாலும் பகாவலியைக்காணுததலாலும் மனந்தடுமாறித் தன்னறிவு நிலையில்லாமல் அதிகவிசனத்தால் அழுதழுது பொறுக்க முடியாமல் பூமியின்மேல்விழுந்து சுவரில் தலையை மோதிக்கொண்டு முட்டிமோதிப் புலம்பியழுகத் தொடங்கினுன்.

தரு-இ-ம்-சங்கராபரணம்

வினையுள்ளாகினேனே இறைவனேவினையுள்ளாகினே
னே-வினையுள்ளாகினேன் விதிப்படியின்றுநன்
தனியேசிறைக்குள்ளாகிச் சலித்து அழுதுமாள வினை
தலைவிதியொருநாளும் தப்பாதுலகோர்க்கு
அலைகடற்பிறந்தாலும் அன்றுவிதிதப்பாது வினை
வருத்தத்திற்குள்ளானேன் வலிகளொடுங்கிப்பாவி
தந்திரமுறுப்படி சதிமோசத்தலின்று-வினை
அரசுநிலையுமற்று அளவற்றவனுமற்ற
பரதேசிபோலின்று பாரவருத்தமாக-வினை
வாழ்வும்நிலைநில்லாது வறுமையும்நில்லாது
தாழ்வுநிலையாதிப்போ தனித்தேனானதுநொந்து வினை

வசனம்.

இவ்விதமாகச் சுறைக்குள்ளிருந்து நானுவிதமாகத் தனக்குள் தானே கலங்கிப் புலம்புவதை சிறைச்சாலையின் அதிகாரங்கண்டு ஓடோடியும் அரசனிடம் வந்து அறுப்புண்ட சேவல்போல அச்சிறையிலகப்பட்டவன் இரவும்

பகலுமழுது பண்ணிற்புரண்டு உருண்டு அழுவதைப் பார்க்கில் இன்னும் சிலநாளவனே சிறையுள் வைக்கில் வீணுயுயிரைமாய்த்து விடுவானெனத் தோன்றுகின்ற தென்று சொல்ல வதனை இராசன் கேட்டு ஒன்றுஞ்சொல்லவில்லை பின்பரசன் தன்குமாரத்தியாகிய வல்லியையழைத்து நீயங்கு அரசன் குமாரனிடத்திற் சென்று உன்பாயாவலிமை யவன்மேல்வீசி யுன்மேலிச்சிக்கும்படி செய்துக்கொள்ளென்றுரைக்க அதை யவள்கேட்டு அதிகமகிழ்வடைந்த காண்பேரர்களாகிய நர்மலாச்சலாவெனு மிருவரையுங் கூடவழைத்துக்கொண்டு இம்மூவருமாக அன்னம்போல் நடந்து அரசகுமாரனிருக்குஞ் சிறைச்சாலையுள்வந்தார்கள்.

அகவல்-இ-ம்-தோடி.

மின்போலிங்கு மெல்லியாளன்று
தன்மேல்மோகம் தானவள்கொள்ள
தாதிமாரோடு தடங்கலில்லாமல்
போதுபோய்பூவையாள் போசனங்கொண்டு
மயில்போல்மினுக்க மயல்வலைகொண்டு
குயில்மொழிபோலக் குலுக்கிநடந்து
அரசனிருக்கும் அவ்விடமாக
வரிசையாய்மாது மகிழ்வுடன்வந்தாள்.

வசனம்.

அப்போதரசன் குமாரன் அம்மூவரிலொரு வரையும் ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை அவர்கள் கொண்டுவந்த வஸ்துக்களில் ஒருவஸ்துவின் பேரிலும் பார்வை வைக்கவுமில்லை மாணிக்கவல்லி யிதனைக்கண்டு நாம் கொண்டுவந்த வஸ்துக்களின்பேரிலும் நமதுபேரிலும் கொஞ்சமாவது கணணேறிட்டும் பார்க்கவில்லையென்று துக்கக்கடலில் மூழ்கி யொன்றும்பேச வல்லமையற்றவளாய் அரசன் குமாரனெதிரில் விழுந்து அறுப்புண்டசேவல் துடிப்பதுபோலப் புரண்டுருண்டு பதைத்துக்கிடப்பதை யரசன்குமாரன் கண்டுமிகவும் பாம்பு எலியை மூச்சாலிழுத்துக்கொள்வதுபோல வெழுந்து அவளையெடுத்துத் தன் மடியின்மேல் வைத்து முகத்தோடு முகஞ்சேர்த்து அதிக

பிரியஞ்செய்தென்ன அதேதெனெனில் இவ்விதஞ் செய்யா
விடில் ராமிச சிறைச்சாலையைவிட்டுவெளிப்பட முடியா
தென்று யோசித்து அவளை மணமுடித்துக்கொள்ள சம்
மதியானான் பின்பவைகளையெல்லாம் லாசபலாவெனு
மிருவருங்கண்டு அதிக சந்தோஷமடைந்து அரசனி
டம் வந்து இச்சேதியெல்லாந் தெரிவித்தார்கள் அப்
போது மாணிக்கவல்லி நானினைத்துப்போன புஷ்பமகப்
பட்டது மடிநிறையக் கட்டிக்கொண்டு வந்தோமென்றெ
ண்ணி அவளுந்தன் மனைவந்து சேர்ந்தனள் அப்போ
தரசன் சிறையிலடைத்துவைத்த தாசுல் முலுக்கை வெளி
யே கொண்டுவந்து சம்பங்கியெண்ணெயிட்டு தலைமுழுக்
காட்டி நல்லவஸ்திரங்களணிவித்து மாலையுஞ் சிங்காரித்
திருவருக்கும் நல்லமுகூர்த்த வேளையில் மங்கிலியந்தரி
த்துச்செய்யத்தக்க சடங்குகளையெல்லா முடித்து இருவ
ரையும் மணவறையினுள்ளனுப்பினார்கள் அப்போது நர்
மலாவும் சமலாவும்சிங்காரித்துக்கொண்டு அங்குவந்து
அரசன்குமாரன்முன் அனேக பரியாசமான வார்த்தைகள்
பேசிட அதனைச்செவிகொள்ளாமல் எப்புறமுமேறிட்டுப்
பார்க்காமல் தலைகுனிந்தவனாகி இருந்தான் பின்பு பாதி
யிராவானவுடனே தாசுல்முலுக்கு எழுந்து இரவும்பகலும்
காணாததால் பகாவலியை நாடி யவளிருக்கும் கோயிலுட்
சென்றான் அங்கு கோவிலில் அருமரசன்குமாரனவன்
அன்றையதினம் வராததால் பகாவலி வெறி பிடித்தவர்
கள்போலப் புலம்பிக் கலங்கித் தலையைமுட்டி மோதிக்
கொண்டு அதிகதுபரத்தோடிருந்தனள் அப்போ தாசுல்
முலுக்கு வரக்கண்டு அதிக சந்தோஷமாயிருந்தனள்பின்
பவன் கையினால் பின்பவன் நகங்களில் ஐவண்ணமிட்டி
ருக்கக்கண்டு அதிக கோபமாகி இரண்டு கண்களும் நெரு
ப்புப்போலச் சிவப்புற்று அதிக வருத்தத்தோடு ஹா ஹா
ஓ ஓ அரசன் குமாரனே நீயென்ன வேலைசெய்தாய் நீ
யென்னாசையுற்றவனாய் பேரையுமழித்தாய் நீயோர்னமேற்
றிக்கொண்டு வந்தாயென்று தலைமேலடித்துக்கொண்டு
இப்படி புலம்பத்தொடுத்தாள்.

பகாவலிசொல்-கொச்சகம்-இ-ம்-தோடி.

மன்னவனேஎன்றாலே மதிமயங்கிவையகத்தில்
கன்னியரெல்லாம்நகைக்க காசினியிற்போனேன்
இன்னபடிசெய்வாயென் றெண்ணியிருப்பானாகில்
உன்னுடனேசேரமனம் ஒருபோதும்வைத்திடேன்.

புலம்பல்-தரு-இ-ம்-சங்கராபரணம்.

என்னவேலைசெய்தாய்மன்னவனே  என்னைவிட்டு
எங்கிருந்தாய்இத்தனைநாள்மட்டும்  என்பிராணநாதா
உன்னைநினைத்துவுருகிக்கருகினேன்  என்பிராணநாதா
ஒருநொடியும்நான்மறந்திருந்திலனே  என்பிராணநாதா
வெக்குளமுருகுமேவண்ணகாலம்நெருப்பில்  என்பிராண
மாயவலைக்குளசிக்கினாயோ நீ  என்பிராணநாதா
அடித்தாரெந்தன்அன்னைதந்தையரும்  என்பிராணநாதா
அதையும்பொறுத்தேனுனக்காகவன்றுநான்  என்பிராண
பிடித்தார்களவைபடைத்தார்சிறையினில்என்பிராணநாதா
பின்னும்முன்னும்வருத்தமாகினேனே  என்பிராணநாதா
ஆலைவாயின்கரும்புபோலானேன்  என்பிராணநாதா
ஆசைகொண்டபாசத்தாலுன்மேல்  என்பிராணநாதா
சோலைவாயின்குயிலாயிருந்தேனே  என்பிராணநாதா
கோருதலினாலாறுதல்செய்தேன்  என்பிராணநாதா
எல்லாவிதமுங்கண்டுமறந்தாயே  என்பிராணநாதா
உன்னைப்போலமனிதருலகிலுண்டோரி  என்பிராணநாதா
பொல்லாவிதியாகினேனுனால்  என்பிராணநாதா
போரும்போருமாசைமன்னவனே  என்பிராணநாதா

வசனம்.

இப்படி நானாவிதமாகப் பகாவலி ஏசவும் பேசவும் அழவும் விழவும் அவளொன்று சொல்லவும் அதற்கு இவனொன்று சொல்லவும் இப்படிப்பட்ட பலவிதமான மகிழ்வும் துக்கமும் சேர்ந்துபலமொழிகளைப்பேசுகையில் அப்போதரசகுமாரன் மாணிக்கவல்லியி னிடத்திலகப் பட்டதும் சிலசீமையிலகப்பட்டதும் மணம்வேண்டாமென்றதும் அதனால் தான் அதிகவருத்தமடைந்ததும் கடைசியில் உன்னைமணப்புரிய ஒப்பினதால் சிறைமீண் டதும் ஆதியோ டந்தமாகச்சொல்லி வந்தனன் அதற்

குள் விடியர்காலமு மருகில் நெருங்கிற்று அப்போது தா
சுல் மூலுக்கு அவ்விடம்விட்டு நீங்கி வீடு வந்து சேர்ந்து
மாணிக்கவல்லியின் பஞ்சணையிற் படுத்து நித்திறை போ
யினன் அதுபோலவே இரவில் பகாவலியிடத்திற்குப்
போயிருப்பதும் பகலில் மாணிக்கவல்லியிடத்திலிருந்து
பகல்முழுதையும் கதையினாலும் விளையாட்டினாலும் காலங்
கழுத்து வந்தனன் இப்படி வருவதால் மாணிக்கவல்லி
அதிகவிசனமாய் தன்மனதுக்குள்தானே ஓ நாயகனே
இதென்ன புதுமையா யிருக்கின்றது நானவன் பேரில்
மோகித்து அநேக தந்திரம் செய்து என் வலையுள்ளகப்
படுத்தியும் கிஞ்சிற்றுவது என்பேரிலாசை வையாமலும்
எனகனர் மந்திரியை யவிக்காமலும் அவன்மனம் கல்லா
யிருக்கிறதே இருவருமொரே வீட்டிலிருந்தும் சுகம் பெ
றாமலிருப்பது பெரிய ஆச்சரியமாயிருக்கிறதே என்று
புலம்பினள் இப்படி சிலகாலங் கழிந்திட ஒருநாள் மா
ணிக்கவல்லி தன் தகப்பனிடத்திற்குப் போய் அடிபணி
ந்து யதிக காட்சிமையோடு இந்தச் சேதிகளை யெல்லாம்
ஆதியோடந்தமாகிச் சொல்லினள் அதையரசன் நல்லத
வன் பகல்முழுது முன்னிட மிருந்து இராமுழுதும் வெ
ளியே போய் விடுகிறானல்லவா நல்லது இரவில் அவ
னெங்கு சென்று என்னவேலை செய்கிறானோ அதை யறிய
வேண்டுமென்று அவனுக்குத் தெரியாமல் சிலரையழை
த்து அங்கே காவல் வைத்து நீங்கள் இரவில் தாசுல்மு
லுக்கு வருவானாகி லவனுக்குத் தெரியாமல் ஒளித்து பின்
தொடர்ந்து அவனெங்கு போகிறான் என்னவேலைசெய்
கிறானென்று கண்டறிந்து வாருங்களென்று கட்டளையிட
அதுபோலவே சேவகர் பதுங்கியிருப்பதை அரசன் குமா
ரனறியாமல் வழக்கப்படி எழுந்து திரைகளாயுடைய
கடற்கரையோர மிருக்குங் கோயிலுட்சென்று அங்கிருக்
கும் பகாவலியுடன் விடியர்காலமட்டும் பேசியிருந்து வந்
ததைக்கண்டு அச்சேதியை அரசனிடம் வந்து தெரிவித்
தார்களதையரசன கேட்டுப் பொழுது விடிந்தவுடனே
சேவகாளை விட்டு அடியோடே அக்கோயிலைப் பிடுங்கிக்
கடலிலெறிந்து விடுங்களென்று கட்டளை யிட்டானது
போலவே சேவர்கள் அன்றையப் பொழுதே கோயிலை

பிடித்துச் சமுத்திரத்தி லெறிந்து மட்டமாக்கி விட்டார்கள் பின்பு தாசுல்முலுக்கு வழக்கப்படியே கடற்கரையோரம் போய்ப் பார்க்கையில் அக்கோயிலிருந்த விடமே அடையாளந் தெரியாமற்போயிற்று அதனால் தாசுல்முலுக்கு வெறியனைப்போல பூமியில் விழுந்து புரண்டழுதுக்கொண்டு இக்கவியைப்பாடினான்.

தாசுல்முலுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

தேன்மொழியாளைக்காண தினந்தோறும்வருவதேபோல்
வான்மீனனைடபோரமன்னன் வந்தங்கேபார்க்கும்போது
கோன்மூடிக்கோயில்காணக் குறிப்பொன்றுந்தோன்றாதா
லே, தான்மிகப்புலம்பியிங்குதரைதனிலுருண்டிட்டானே.

புலப்பல்-தரு-இ-ம்-தோடி.

அரசுதனையிழந்து அவதிக்குள்ளானேனே இறையே
கரிபரிசேனையைவிட்டுக்கால்வழிநடக்கலானேன் இறையே
புலம்பிப்புலம்பிநின்றுபுரண்டிங்கழுகலானேன் இறையே
கலங்கிக்கலங்கியிங்குகதறியழுகலானேனே இறையே
கண்டுமொழியாளையின்றுகாணமற்போனேனே இறையே
பெண்டுளன்னமாயின்றுபுலம்பியழுகிறாளோ இறையே

வசனம்.

இவ்விதமாகப் புலம்பி புலம்பிக்கொண்டிருக்கையில் அழுதழுது அசையுற்றவனாய் இதுவரைக்குக் நப்பிழுபுதும் ஒரு பிரயோசனமுமில்லையென்று தன்மனதுள் பொறுமையென்னுஞ் சவலையெடுத்துச்சுமத்திக்கொண்டு கைசேதபோடு மாணிக்கவல்லியினுடைய மாடத்துக்குட் சென்று படுத்திருக்கையில் அப்போதவள் தாசுல்முலுக்கு மதுராபானமொழிகளைப்புகட்டி தன்பேரில் மோகிக்கும்படிச்செய்து சிப்பி மழைத்துளியை நிறைப்பிக்கொள்வதுபோல அவனோடு போகித்துத் தன் வயிற்றை நிறைப்பிக்கொண்டு ஆசையின்ப செல்வம் பெற்றுக் கொண்டனள்.

இருபத்துநாலாவதுகதை

செக்கான் வீட்டில் பகாவலி பிறந்ததும்

சித்திராவதி பட்டணத்தரசன் குமாரத்தியாகிய மாணிக்க வல்லி தாசுல்மூலுக்குடன் சேர்ந்துஷாக்கிஸ்தான் பட்டணம்சேர்ந்தவிபரம் தாசுல்மூலுக்கு பிறந்தவிபரம்.

(வ ம்) அரசன் கடற்கறை யோரமிருந்த கோயிலை அடியோடே பிடுங்கி யெறிந்து விடுமென்றபடியே வேலைகாரர்கள் பிடுங்கி யெடுத்தெறிந்துவிட்டு வெறுந்தரையாக்கிவிட்டிட அப்பூமியிலோ வாணியன்வெள்ளுவிரைத்திட அவ்வெள்ளுச்செடிகள் களாகளாவென்று பசுமை நிறமாக முளைத்திருப்பதையாசகுமாரன் கண்டு பகாவலியினுடைய விசனத்தினாலே அவளைக்காணுதவனுப் பிரமைபிடிகொண்டு அங்குசென்று தன் வியாகூலத்தை யாற்றிவருகையில் அச்செடிகள் பூவிப்பூத்தது ஆனதினால் தாசுல்மூலுக்கு தினகால மிருவேளையு மங்குசென்று அவள் மேல் கொண்ட ஆசையினால் ஒருகவியைப்பாடி எப்போதவள் முகத்தைக் காண்போமென்கிற மோகத்துடனேஎண்ணங் கொண்டவனாயிருந்தான்.

அதன்பின்பு நாளுக்குநாள் காய்கள்முற்றி அறுக்கும் பக்குவமாகிய வாணியன் அதுகளை யறுத்துவந்து உலரப்போட்டு அதையாடி எண்ணெயெடுத்தனன் ஆனால் வாணியருடைய வழக்கமானது தின்னத்தக்கவஸ்துவில் எண்ணெயெடுத்தால் புண்ணாக்கை முன்னமவர்கள் தின்பது வழக்கமாதலால் அவ்வழக்கப்படியே செக்கான் மனைவி அவ்வெள்ளின் புண்ணாக்கைத்தின்னவும் நாயகன் கட்டளையின்படி அவள் கெற்பவதியாய் 9-மாதம் நிறைந்து பத்தாமாத மொருபெண்ணை மகாசுந்தரமாகப் பெற்றாள் அச்செக்கான்வீட்டிலெப்போதும்தீபமேயில்லை அப்படிப்பட்ட வீட்டிற்கு இப்பெண்ணே ஒருதீபமாய் விட்டபின்பு இச்சேதி நகர்முழுதும் வாணியன் வீட்டில் ஒரு பெண்பிறந்து 4 நாளாயிற்று அவளின் முகத்தினை ழைக்கண்டால பதினாலும் பக்கத்து நிலவே வெட்கிப் போகும இன்னமவளுக்கு 14-வருஷமாகுமேயானால் சூரியனும் வெட்கிப்போவான் தேவகன்னிகைகளும் சரியாக

மாட்டாள் அவளழகுக்கு மற்றொருவருமீடாகமாட்டார்களென்று தேசங்களெங்கும் பிரசங்கமாயிருக்க இச்சேதி தாசுல்முலுக்கினுடைய காதில் விழவும் அப்போதரசகுமாரன் இவ்வடிவான பெண்பிறந்தது அந்த எண்ணையினுடைய குணமாயிருக்குமென்றெண்ணி உடனே செக்கானையும் அப்பெண்ணையும் தன்னிடங் கொண்டுவரும்படி தூதனையனுப்பிட அதுபோலவே வாணியன் தன்மகளை அரசகுமாரனப்பெண்ணின் வடிவையுற்றுநோக்கிட தாசுல்முலுக்கின் கண்ணிற்குத் தன்னுடைய காமக்கூடாகிய பகாவலியின் வடிவைபோலத் தோற்றலாயினது அதனாலதிக சந்தோஷமடைந்து பகாவலி மறுபிறப்பாகப் பிறந்தாளென்றெண்ணினான்.

பின்பு செக்கானிடத்தில் அதிக நீதியளித்து நீயிந்தப் பெண்ணைப்பத்திரமாக வளர்க்கவென்று உத்திரவு கொடுத்தனுப்பினான் அன்றுமுதலாக நிலவுவளர்வதுபோல வளர்ந்து ஒன்பதுவயது நிறைபாடாயினது அப்போதுவாணியன் பாத்தியஸ்தர் முகத்திலுமிருந்து வந்தப் பெண்ணைகேட்கத் தலைபட்டார்கள் அதைக்கேட்டு வாணியன் நமக்கு அரசகுமாரனிப் பெண்ணைப் பத்திரமாக வளர்க்கவென்று கட்டளையிட்டிருக்கிறானே நாமொப்பில் நம்முயிருக்கே யூனம்வந்து நேரிடுமென்றெண்ணி வந்து கேட்போர்க்கெல்லாம் இப்பெண் ருதுவானபின் இவள் யாரை நாடுவாளோ அவனுக்கு மணஞ்செய்து கொடுப்பேனென்று சொல்லிவிட்டான் அப்படி நடந்து வருங்காலத்தில் அப்பெண்ணிற்கும் பத்துவருஷமும் நிறைந்து ருதுவாயினாள் அப்போதாசுல்முலுக்கு அப்பெண்ணை தனக்கு விவாகஞ்செய்துகொடுக்கும்படி வாணியனிடத்திற்கு ஆளொன்றனுப்பினான் அதை செக்கான் கேட்டுத் துடிதுடித்து பதைபதைத்து இராஜன் மருமகனுக்கு நாம்பெண்ணைக் கொடுத்து நமதுமருமகனாக்கிக்கொள்ள எளியவனாகிய நமக்கு என்ன வல்லமையுண்டென்று தனக்குள்தானே யோசித்தரசன் தன் குமாரத்தியை அவளுக்கு அடியாளாக வாயினதேயென்று பெருமூச்சுவிட்டனன் அதை யவன்குமாரத்திக் கேட்டு ஓ என் தந்தையே நான் பரியின் குலத்தாள் என்பெயர்

பகாவலி நீ யொன்றுக்கும் அஞ்ச வேண்டாம் என் மொழி மெய்யென்றே உறுதிக்கொள் மரகதத்திலிருக்குந் தாழம்பூ வெளியே வாராவிடில் அதின் மணந்தெரியாது சிப்பியின் வயிற்றிலிருக்கும் முத்து அரசர்களின்கிரீடத்தில் தரிக்காவிடில் பிரகாசந் தோன்றுகிறதில்லை ஆகையால் நீ வந்த ஆளுடன் இன்னுஞ்சில நாளரசன் குமாரனை மணம்பொருக்கச் சொல்லுமென்று சொல்லியனுப்பென்றுரைத அதைவாணியன் கேட்டுச் சும்மாயிருந்தான் அப்போதுவந்த தூதன் இச்சேதியை யெல்லாம் தாசுல்முலுக்குடன் சொல்ல அதையவன் கேட்டு அதிக சந்தோஷமடைந்து அத்தூதனுக்கனேக வெகு மதிகள் கொடுத்தனுப்பினன்.

பின்பு பகாவலியினுடைய சாபநாளுந் தொலைந்துவிட்டது அப்போது நகமுகமிருந்து கணக்கில்லாத பரிகளும் வந்ததுகள் பின்புசமன்ருப்பரி நல்லவஸ்திரங்கள் நகைகளையெடுத்துக் கொண்டனேகம் பரிகளுடன் முத்துமாணிக்கம் பதித்த சிம்மாதனமொன்று எடுத்துக்கொண்டு அவ்வாணியன் வீட்டிற்குவந்து இறங்கினார்கள் அதைப் பகாவலிகண்டு மதிக சந்தோஷமடைந்து ஆடை ஆபர மெல்லாந் தரித்துக்கொண்டு தனக்குந் தகப்பனாகிய வாணியனை வீட்டின் புறமாக அழைத்துக்கொண்டு போய் முன்னால் புதைத்து வைத்திருந்த ஒருபுதையலைக்காண்பித்து இதிலிருக்குந்திரவியத்தை யுன்வயது பரியந்தம் புசித்துச் சுகமடைந்திருவென்று சொல்லிவிட்டு பின்பந்தச் சிம்மாதனத்தின்மேலேறி உட்கார்த்து பரிகளை தூக்கச் சொல்லித் தாசுல்முலுக்கு மாணிக்கவல்லி நர்பலாசபலா இவர்கள் உட்கார்ந்திருக்கு மிடத்திற்கு கொண்டுபோங்களென்று விடை கொடுத்தாள் அதுபோலவே பரிகள்தூக்கிப் பறந்துக்கொண்டு அவ்விடத்தில் இறக்கினார்கள் அப்போது பகாவலி எல்லாக் கன்னிகைகளையும் நிறுத்திவிட்டுத் தான் ஒருத்தியே தனியாக அம்மாடத்தினுட்சென்று மின்னல் மின்னினாற்போலிருக்கும் மாணிக்கவல்லியினுடைய இரண்டு கைகளையும் பிடித்துச்சகபூக்தோடே கட்டியணைத்துமுத்தியிட அத்தனை மாணிக்கவல்லிகண்டு இதென்ன மிருந்தாப்போலிருந்து இப்படியாயினதேயென்று

திகிலடைந்து ஒரு புரமாயொதிங்கி யிருந்தானப்போது
பகாவலி தாசுல் முலுக்குடன் தன்வரவின் சேதிகளையெல்
லாம் ஆதியோடந்தமாகச் சொல்லிப் பின்பு மாணிக்கவல்
லியின் புறமாகத்திருப்பி உனக்கிவ்வரசன் குமாரன்மே
லாசை யிருக்குமாயின் எழுந்திருவென்று சொல்ல அத
னை மாணிக்கவல்லி கேட்டு எனக்கிவ்வரசகுமாரன் உட
லுக்குயிரின் பாவனை போலிருக்கிறேனென்று சொல்ல
யதனை பகாவலி கேட்டு தன் கூட வந்த பரிகளைப்பார்த்து
நீங்களெல்லாரும் தெரியும்படி வெளிப்படுங்களென்று
சைகைசெய்திடப் பரிகளெல்லாம் நாலங்குலமிடமில்லா
மல் எங்கெங்கணும் எகபிரளயமாய் நிறைந்துவிட்டார்
கள் அதனால் நகர் முழுதுமிச்சேதி பிரசங்கமாய்நகர் முழு
துங் கலக்கமாய்விட்டது இதனை ராசனறிந்து அதிக கல
க்கத்தோடும் தன்னரண்மனையைவிட்டுத் தன் குமாரத்தி
யினுடைய மாளிகையின் பின்புறமாக ஓடிவருவதைத்
தாசுல்முலுக்குகண்டு எதிராகச் சிலதூரம் வந்து சந்தி
த்தழைத்துக்கொண்டுபோய் தன்னிருப்பிடத்தில் உட்கார
வைத்துச் சகலசங்கதியும் ஆதியோடந்தமாகப் பகாவலி
யின் சேதியெல்லாம்தெரிவித்தான் அதை யரசன் கேட்டு
கலக்கந்தெளிந்து அதிக சந்தோஷியாய்த் தன்மகள்
மாணிக்கவல்லியின் கரத்தைப் பிடித்துப் பகாவலியின்
கரத்திலீய்ந்து எனக்கு இவள் அருமையாகிய தவத்தினால்
பிறந்திருக்கிற குமாரத்தி இவளொருத்தியேதவிர வே
றொரு பெண்ணில்லை உனக்கிவளை அடிமைப்பெண்ணா
கப் பணிவிடைவேலைசெய்யத் தந்திருக்கிறேனாகையால்
அதிகப்பிரியத்தோடு வைத்திருக்க வேண்டுமென்று ஓதி
விடையீந்துபோயினான் பின்பு தாசுல்முலுக்கு சிம்மா
தனத்தின்மேலேறி வுட்கார்ந்தான் அப்போது வலது
புறமாகப் பகாவலியும் மாணிக்கவல்லியும் முன்பின்னாக
நர்யலாசபலாவுமாக உட்கார்ந்தவுடனே அக்கன்னிகளந்
தச் சிம்மாதனத்தை யெடுத்துப்பறந்து ஒரு நொடிக்குள்
தாசுல்முலுக்கினுடைய சோலையிற்சென்று அரண்மனை
யின் முன்பில சிம்மாதனத்தை யிறக்கிவிட்டது அச்சேதி
யை முன்னால்தான் பட்டணத்திற் காசனுக்குப் போயிரு
ந்தகையினால் முலுக்கினுடைய மந்திரி குமாரனாகிய யா

ரிருபஹிருவென்று கேட்டு தாசுல்முலுக்கைக்காண காணிக்கையெடுத்துக்கொண்டு அதிக சந்தோஷத்துடன் எதிரோடிவந்து தன்தலைமுறைபெயரும் தன் பெயரும் சொல்லி வைக்க அதைக்கேட்டுத் தாசுல்முலுக் கதிகக் களிப்படைந்து அவனுக்கு அனேக வெகுமதிகளைக் கொடுத்துவிட்டுப் பின்பு அரண்மனைக்குட் புகுதவும் மகுமூதாவும் தின்பாரியுங் கண்டு அதிகமகிழ்வடைந்து பின்பு இந்நான்கு பெண்களும் தாசுல்முலுக்கும் பாலும்பழமும் போலக்கூடிக்கலந்து மகிழ்வுற்றிருந்தார்கள்.

### இருபத்தைந்தாவதுகதை.

### தாசுல்முலுக்கு தன்தகப்பனுக்கு

இன்னம் பிரூஷாமுச்பாஷா இவர்களைகாண்பதற்காக கடிதமெழுதியதும் இன்னம் மந்திரியின் குமாரனாகிய பகிறாமே அப்சாவின்பேரில் இச்சைகொண்ட விபரம்.

### வசனம்.

ஒருநாள் தாசுல்முலுக்கும் பிரூஷாவிற்கும் முச்பாஷாவிற்கும் சைனுல்முலுக்கும் தன்சுகக்ஷேமசங்கதிகளும் தன்வரவின் சங்கதிகளும் ஆதியோடந்தமாக ஒரு கடிதமெழுதி யனுப்பினான் அதனையவர்கள் வாங்கிவாசித்திட அதன் பயன்களெல்லாந் தெரியாமல் அதிக மகிழ்வுற்றனர்கள் பின்பு புரோஜிஷாவும் தானேஜமீலாவுமாக புறப்பட்டார்கள் இன்னம் முச்பாஷாவும் உடனே ஆரூவும் கூட றாகேஅப்சாவுமாக இவர்களும் புறப்பட்டார்கள் இன்னும்சையினுல்முலுக்கும் தனமனைவியோடும் அளவற்ற சேனையோடும் புறப்பட்டனன் இப்படி இவர்களெல்லாம் ஒவ்வொரு கூட்டமாக மிகுந்த சந்தோஷத்துடன் வழிநடந்து நிகரேனும் பட்டணம்வந்து சேர்ந்தார்களப்பட்டணத்தில் ஊசிநாட்ட இடமில்லாமல் நெருங்கி எங்கணும் மனுப்பிரளயமாய்விட்டதப்போது தாசுல் முலுக்கு வந்தவர்களுக்கெல்லா மதிக மரியாதை செய்து நகர்முழுதும் சிங்காரித்து மூன்று நாள்வரை நல்ல ருசிகரமாகிய விதவிதமான போசனங்கள் சமைத்து

விருந்தளித்து ஆட்டம் பாட்டமாக அனேகவேடிக்கைகள் செய்து இன்பம்பிறக்கச் செய்தனன் நாலா தாள் வந்தவர்களெல்லாம் விடைபெற்றுங்கொண்டு தங்கள் தங்கள் பட்டணம்போய்ச்சேர்ந்தார்கள் அப்போது பகாவலி றூகே அப்சாவைச் சில நாள்வரைக்கும் தன்னிடத்திலிருக்கும் படிக்கேட்டு நிறுத்திக்கொண்டனள். அப்போது பகாவலி றூகே அப்சாவுக்காகப் படுக்க யிருக்க ஒருமெத்தையை யொழித்துக்கொடுத்துப் பின்பிருவருமாகப் பாதியிரவுவரைக்கும் கூடிக்கலந்து விளையாடிருந்து பின்பு பகாவலி தன்னிடத்திற்கும் றூகே போய் வழக்கப்படி படுத்து நித்திரைசெய்தார்கள். இப்படி நிகழுங்காலத்தில் ஓரிரவில் றூகு அமலாதரை செய்யும்போது அவள் கூந்தல் வீழ்ந்து அக்கூந்தல் ரோமத்திட்டிருக்கும் மத்தியிலொன்று வெளியாகி இலகிக்கொண்டிருக்கிறது அன்றிரவில் நிலவின் காந்தியின் பிரகாசத்தினால் நித்திரை வாராமல் மந்திரியின் குமாரனாகிய பயிலையென்பவன் அச்சோலையைச் சுற்றிவருகையில் அங்கோர் மாடத்தின் சாளரத்தின் வழியாகத் தீ எரிவதுபோல எரிவதைக்கண்டு இவ்விடத்தில் நாகமானது தன் மாணிக்கத்தை கக்கி வைத்துவிட்டு இறை தின்னப் போயிருக்கின்றதோ வென்றெண்ணியுற்றுநோக்கி இது கூந்தலின் மயிரிலிருக்கின்ற பூதமென்று தெரிந்துகொண்டு பின்பு இப்பகாவலிபடுத்து நித்திரைசெய்யு மாடமோவென்று பலபல விகாரங்கொண்டு இரவெல்லா மிதேயெண்ணமா யிருக்கையில் பொழுது விடிந்தது அப்போதவன்மகன் ரூப்படியினிடத்திற்கு வந்து இன்னமெத்தையில் யார்படுத்து நித்திரை செய்கிறதென்று சொல்லினள் அதைக்கேட்டவுடனே பயிரூமிற்குக் காமந்தலைக் கேரிட்டது அதனாலவன் அதைத் தேடுதற்கு இச்சையாயினன் அப்போது மற்றுநாளிரவானது தன் வழக்கப்படியே றூகே அப்சா தன மாடத்துட் சென்று பஞ்சணைமெத்தையின்மேல் படுத்து நித்திரை செய்துக் கொண்டிருந்தனள் அப்போது பயிரூம் காமபாணத்தையவன் மேல் பிரயோகிக்க வேணுமென்றெண்ணி பித்தங்கொண்டவனாய்ப் புறப்பட்டு அச்சோலையிலிருக்கும் மாடமாளிகையினுட் சென்று பார்க்கையில்

ரூகே அப்சா பஞ்சணை மெத்தையின்மேல் மல்லாந்து ஒய்யார நித்திரை போவதைகண்டு அப்போது மறியாத வனுதலால் தீபத்தில் அந்தப்பூச்சிவிழுந் துயிரை மடித்துக்கொள்வது போல இதன் நிதானமென்று தெரியாமல் தேனில் வண்டு விழுவதுபோலப் பொறுக்கமுடியாமல் தட்டியெழுப்பித் தழுவிமனங்கொள்ளாமலே நித்திரையிலிருக்கும் ரூகே அப்சாவின் முகத்தோடு முகத்தை வைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

அப்போதவள் முழித்துக்கொண்டுபார்க்கையில் பயிமுயாகயிருக்கக்கண்டு அவனுசையென்னுஞ் சிலை இவளின்மோகமென்னுங் குடுப்பத்தை துண்டிதுண்டாயொடித்துவிட்டது அப்படியிருந்து மிவளவல்லவளாகையால் ஆசையையடக்கி மருமம்விடாமல் ஆசையற்றவளைப்போல தன் முகத்தை சுருச்கி கடுஞ்சினமாக அவள் பயப்படும் படியான கடுஞ்சொற்களைச் சொல்லி முகத்தைத் திருப்பி உதயல் வுதறினுல் அதனுலவள் காபராபட்டு சன்னல்வழியாக கீழேவிழுந்து எழுந்துயழுதுக் கொண்டே தன்னகரமடைந்தான். பின்பு ரூகே அப்சாபொழுது விடிந்தவுடனே பகாவலியினிடம் வந்து நானென் தேசம்போக வேண்டுமென்ருேத அதைபகாவலி கேட்டு நீ இன்னம் சிலநாள்வரைக்கும் இங்கிருவென்று நானுவிதமாகிய போதனைகள் போதிக்க அதை மனங்கொள்ளவில்லை ஏனெனில் இராத்திரி நடந்த சங்கதி தெரியுமாயின் நம்மை யிகழ்ச்சிசெய்வாள் அதுவுந்தவிர இவள் சிலநாளிருக்கில் அவன் நம்மிடம் வருவான் மறைவாயிருக்கின்ற மருமம் வெளிச்சமாய்விடில் நம்மை தாண்டித் தாண்டிப் பேசுவாளென்றெண்ணி சம்மதிக்காமல் விடைபெற்றுக்கொண்டு அன்றே தன்தேசம்போய்ச் சேர்ந்தனன் பின்பவள் அவன்மேல்கொண்ட காமயிச்சையினுல் பகலில் அன்ன முண்ணுள் நீருமருநாள் கிளியுடனும் பேசாள் ஒருவனுடனுஞ்சேராள் ஆடாள்பாடாள் ஒன்றையும் தேடாள இரவில்பஞ்சணைமெத்தையில் படுக்காள் வீணைவாசிக்காள் எந்நேரமு மவன்மேல் கருத்தாகவே சிலவேளை சிரங்குனிந்து எண்ணமிடுவாள் இப்படியே

றூகே அப்சா பகலிரவைக் கழித்து மோகத்துள் மூழ்கி புலம்பிக்கொண்டிருந்தாள்.

### இருபத்தாறுவது கதை

### பயிருப்பிரதௌசெலுஞ் சோலையடைந்து றூகேஅப்சாவை தரிசனஞ்செய்த விபரம்.

சனம்பயிருப்ரூகே அப்சாவின் பேரிற்கொண்ட காமத்தினுல் சட்டை யுரிவதுபோலச் சரீரமெல்லாமுருகி வற்றி கண்களுள்ளாகும்படி யெலிந்துபோன சமன்ரூப்பரிக்குத் தவிர மற்றொருவருக்குமிச்சங்கதி தெரியாது அப்போது பயிருமுடைய உடல் சருகியிருப்பதை சமன்ரூப்பரிகண்டு ஓ அறிவில்லானே நீ இப்போதுகொண்டிருக்கிற கருத்தை கத்தியிலகபட்டு எப்படித் துண்டுத்துப்போகின்றதோ அப்படி உன் மனதினுள்ளிருக்கும் நாட்டத்தை சீக்கிறமாக வெளியே யெடுத்தெறிந்துவிடு அதனுலுனக்கு அதிகசுகங்கிடைக்கும் கிட்டாதாயின் வெட்டனமற என்பதுபோல நீ யவள்மேலென்னவெனில் முன்று லவதாரங் கொண்டமானிடன் ஆசையாலிவ்வித படைப்பார்க்கெப்படி இனமாகும் நீ தாசுல்முலுக்சைப் போல் நாமென்று எண்ணங் கொள்ளவேண்டாம் எனெனில் அவனும் அவன்மேலிச்சை கொண்டாளதனுலிருவரின் கோரிக்கையு முடிவானது நீ அப்படிபோலென்றெண்ணுமலவ்வாசை நீக்கிவிடென்று பலபலவாருகப் புத்திமதி சொல்வதைக்கேட்டு சும்மாவிருப்பானேயல்லது யாதொன்று மிவ்விதமென்றுவிடைகொடான் அதைச் சமன்றூப்பரிகண்டு இவள் மனதில் அவள் மேற்கொண்ட காமபாணம்விட்டு புண்ணயிருக்கின்றது அப்பாணத்தை பிடுங்கவும் அப்புண்ணையாற்றல் மினுல்முடிக்க வல்லமையற்றவனுக யிருக்கிறுனென்றெண்ணி யவன் முகத்தை நோக்கி ஓ காமநோய் கொண்டவனே நீ கொண்ட காமநோயைத்தீர்க்கவும் உன்னுட்டத்தை நிறைவேற்றவு முதவிச்செய்ய வென்னுல் முடியாது அனலுன்னைப்பிற தௌசென்னுஞ்சோலைவரைக்கும் கொண்டு போய்ச்சேர்க்க வென்னுல் முடியுமே யல்லது மற்றொன்றுமாகாது அங்கடைந்தபின் நடப்பதுடன் அதிஷ்டப்

படியாமென்று சொல்ல அதைப்பயிரும்கேட்டுஞ் சந்தோஷமும் சம்மதியுமாயினன்.

அப்போது சமன்ரூப்பரி யவனுக்குப் பெண்ணுடைகளுடுத்தி நகைமுதலானகளை யணிந்து சிங்காரித்திட அவனுமக் கன்களுடைய அடியாள்களி லொருத்திபோலாயினன் அப்போது சமன் ரூப்பரியவள் கையைப் பிடித்துப் பிறிதவுமொனுஞ் சோலையின் புறமாகப்பறந்து அங்கிதன்னிஷ்டாளாகிய பன்பஷாவெனு மொருதமக்கை யிருந்தாள் அவளந்நேரமும் குஹே அவளுடைய வீட்டிற்குப்போய்ச்சேர்ந்தாள் அப்போதவள் வாவைக் கண்டு அதிக மகிழ்ச்சியாக கட்டுதிட்டமில்லாத பிரியஞ் செய்து சிலபேச்சிகளும்பேசி பின்பு ஓ தமக்கையாளே யிவர்யாரென்றுகேட்க அதற்கு சமன்ரூப்பரி யிவளென் சினேகிவளுக்கு இவ்விடத்தின் விநோதங்களைப் பார்க்க மிகவுமிச்சித்தாள அதற்காக உன்னிடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன் ஆனதா லிவ்விடத்தின் வேடிக்கைகளை யிவள்பார்க்கும்படி நகமுகமுங் கொண்டுபோய் காண்பிக்க வேணுமென்று சொல்ல அப்போது சமன்ரூப்பரி அவளிடத்தில் விடை பெற்றுக்கொண்டு டகாவலியினிடம் வந்துசேர்ந்தனன்

பின்புபனஷா பயிருமைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு விதவிதமாகிய போசனமளித்துவெகுபிரியமாக வைத்துக்கொண்டிருப்பதுந் தவிர பகலில் நாளுக்கொவ்வோர் சோலைக்கழைத்துக்கொண்டுபோயங்கு இவ்வேடிககைகளைக்காட்டி சூரியனஸ்தமிக்கு நேரமாகில் தன்வீட்டிற்கொண்டுவந்து சேர்த்துவிட்டுப் பின்பு தன் வழக்கப்படி ரூகே அப்சாவும் சிங்காரிப்பதற்காகத் தகுந்தவைகளை எடுத்துக்கொண்டு அங்கடைந்து வருவாள் இப்படியே சிலகாலம் கழித்துவருகையில் ஒருநாள் பயிரும்பனஷாயிருக்கு மறைக்குட்சென்று பார்க்கையில் அவளில்லாமல் வெறுமனையாய் இருக்கக்கண்டு அவ்வனத்தை சோதிக்கையிலனேக வஸ்துக்களிருந்தது அதிலே கண்ணடி இருந்தி அதையெடுத்து அதின்பின்புறமாக இக்கவியை யெழுதினன்.

தரு-இ-ம்-சருட்டி.

முகங்காட்டுங்கண்ணாடி மேல்காட்டுங்கண்ணாடி
அகங்காட்டுங்கண்ணாடி ஆள்காட்டமாட்டாயா
ஆசைக்கண்ணாடியே நீ அழகின்கண்ணாடியே நீ
ஓசைமயில் நான்காண உருக்கமாட்டாய்கண்ணாடி
முகம்பார்க்குந்தேனேஎன் முத்துமணியாளேஉன்
அகம்பார்க்கஇன்றெனக்கு ஆள்காட்டாய்கண்ணாடி
மோகமதைதந்தெனக்கு முழுதுமோசஞ்செய்துவந்த
தாகமதைநீக்கின்று தயவானகண்ணாடி

வசனம்

இவ்விதமாக வெழுதி அதை முன்னிருந்தவிடத்தில் வைத்துவிட்டானபின்பு தன்வழக்கப்படி பனபஷாருகே அப்சாவைச் சிங்காரிக்கத் தகுந்த சாமான்களையெல்லா மெடுத்துக்கொண்டுபோய் அவளைச் சிங்காரிக்கச்சீப்பிட்டு அஞ்சனமிட்டுச் கலவேலையுமுடிவானவுடனே அந்தக் கண்ணாடியை ருகே அப்சா கையிற்கொடுத்தனள் அதை யவள் வாங்கும்போது அக்கண்ணாடியின் பின்பக்கமாக அவள் பார்வை விழுந்தது அப்போது அவளைக்கண்டு வாசித்துப் பார்க்கையில் தன்னை இச்சித்தவன் எழுதிய மறுமொழியென்கிறதாகத் தனக்குள்ளேதானே தெரிந்து க்கொண்டு இது அவனைத்தவிர வேறொருவருடைய வேலையல்ல ஆதை மனதில் தெரிந்துக்கொள்ள வேணு மென்று அவள் புறமாகத் திரும்பி ஓ பெண்ணே ஒரு வரிடமாக எப்போதும் நீங்காமல் எவ்வஸ்திருக்கிறது இன்னமவ்விரு விக்கினத்தின் கூடவிருப்பது எவ்வஸ் துச்சொல்லென்றுகேட்க அதைகேட்டவள் ஆலோசித் துஒன்றும்பிரியாமல் கைகட்டி யெழுந்து அடியாள்இதற் குப்பிரதி நாளைய னம்சொல்லுகிறேனென்று விடை பெற்றுக்கொண்டு தன் வீடடைந்து அதிகவிசனத்தோடு கலக்கமுமாக ரொம்பவும் வாட்டமா யிருப்பதை பயிரும் கண்டு அருகில்வந்து ஓயென்தனைக்கையே இன்று அதி கவிசனமாயிருக்கிறாயென்று கேட்க அதற்கவளின்றி என்னை நோக்கி ருகே அபசா ஒருவார்த்தை கேட்டனள் அதனாலிப்படி யிருக்கிறேனென்று சொல்ல அதற்குப்பகி

ரும் அதென்னவார்த்தை கேட்க அதற்கவளெப்போ
தும் நீங்காமலெவ்வஸ்திருக்கிறது இன்னமொவ்வொரு
விசனத்தின் கூடவிருப்பது சொல்லென்ரு ளென்றுசொ
ல்ல அதையவர்கள்கேட்டு சொல்லுகிறேனென்று ஆசை
கொண்டவன் முகத்தில் சைப் பெறுபவனுடைய கையில்
அடிபட்டிருக்கின்றது அவளுக்கெப்போதும் செவ்வடி
வாயிருக்கின்றது அது எப்போதும் சந்தோஷமல்லாமல்
கீழூண்டுக்கொண் டிருக்கிறது இன்னம் யார்பேரில் இச்
சைகொண்டிருக்கிறார்களோ அவர்களைத்தன் மனதிலுயி
ரென்றெண்ணுகிறது அதெப்படியெனில் மகனுவை
யார்பேரி லுண்மையாயிருந்ததென்று கேட்கஅதற்கவன்
வயிலிக்கென்று தானிச்சித்தவள் பேரில் சொன்னுவென்
றுசொல்ல அதைப் பன்பாஷாகேட்டு கங்குல் நீங்கிப்
போங்சூர்சூரியன் வந்துதித்தவுடனே றாகே அப்சாயி
னிடத்தில வந்து இச்சேதியைச்சொல்ல அதை றாகே
அப்சா யாவற்றையுங் கேட்டு பயிரும் இங்குவந்திருப்
பது நிச்சயமென் றறிந்துக் கொண்டாள பின்பு அவளை
நோக்கி உனக்கிந்த விஸ்ரத்தைச் சொன்னது யாரென்று
கேட்க அதற்கவள் நான் இராத்திரி வந்திருக்கும்போது
என்கிபாபகத்தில் வந்ததென்று சொல்ல அதனையவள்
மெய்க்கொள்ளாமல் ஏடித்துக்கேட்க அதற்குப் பன்பா
ஷா அதிக வெட்கமுற்று ஒரு நாளென்னிடத்திற்கு வச
னருப்பாரி தன்கூட ஒரு பெண்ணை யழைத்துக்கொண்டு
வந்த என்னிடம்விடடு இவன் என்னுடைய இஷ்டமுள்
ளவ ரிவனுக்கு இவ்வீடத்தின் வேடிக்கையைப்பார்க்க
நாட்டமிருப்பதால் இவனை யழைத்துக் கொண்டுபோய்
காண்பியென்று சொல்லிவிட்டு போயினள் அவளெனக்கு
இதன் கருத்தை வெளிப்படுத்தினுளென்று சொல்ல
அதை றாகேஅப்சாகேட்டு நீயேனிங்கு உன்கூடஅழை
த்துக்கொண்டு வருகிறதில்லே ஆனுல் நாளையதினமவளை
உன்கூட அழைத்துக்கொண்டுவா நானவளைப் பார்க்க
வேணுமென்றனன் அப்படியே நல்லதென்று மறுநாள்
சாயங்காலமவளைச் சிங்காரித்து ஆடையாபரணங்களணி
ந்து மணவாடைகள் பூசிக்கூட அழைத்துக் கொண்டு
வரவும் அவளை றாகேஅப்சாகண்டு இவள் ஷிருயென்று

மனதிலறிந்துக்கொண்டு அவள் புறம் திரும்பியவளைத் திருஷ்டித்து பாராமல் பாராமுக மிருப்பதையவன்கண்டு இவள் நம்மை இன்னுனென் றறியவில்லை இன்னம் கண்ணாடியின் பின்புறத்தையும் பார்க்கவில்லை இன்னமவள் நம்முடன் சந்திக்க வில்லை ஆனால் நம்முடைய அதிஷ்ட பாக்கியம் குறைவென்றுமெண்ணின் அப்போது பண் பாஷா அவர்களுக்குத் தலைவாரிமுடித்துச் சிங்காரித்து விட றாகேஅப்சா கண்ணாடியைக் கேட்டனன் அப் போதுவஹீறும் சீக்கிரமாக வெழுந்துக் கண்ணாடியை எடுத்து முதுகின்புறமாகத் திருப்பிக்கொடுக்க அதையவள் கண்டு கிலுகிலுவென்று உடல் குலுங்க நகைத்து ஓபண் பாஷாவே உன்தமக்கை சுத்தம் குடியாயிருக்கிறாள் இது முன்புறமென்றும் பின்புறமென்றும் இப்புறமாகச் சிங்கா ரப்பெண்களுக்குக் கொடுப்பதென்றும் தெரியவில்லை ஆனாலுங் குறைவில்லை இன்றிரவில் இவளை இங்குவிட் டுப்பபா நானிவளுடன் சிரிப்பு விளையாட்டின் பேச்சுகள் பேச வேண்டுமென்று சொல்ல அதனைக்கேட்டவள் மிகவும் நன்றென்று அவளுக்குச் செய்யவேண்டிய பணி விடை வேலைகளெல்லாஞ் செய்து முடித்துவிட்டு அவளை அந்த விட்டுவிட்டு தவள்மனைவந்து சேர்ந்தனள் பயிருமுப்போ மாளிகையினுள் ளிருந்தனள் பின்பு றாகே அப்சா தன்குலத்தாருடைய சபையைவிட்டு நீங்கியவளும் வீட்டினுள்சென்று பார்க்கும்போது தனியாகப் பயிருமிருக்கக்கண்டு சிநேகிதனைப்போல பேசத்தொடங்கி ஓ பெண்ணே உன்பெயரென்ன வென்றுகேட்க அதற்கவள் என்பெயரோ மறந்துவிட்டது நினைவிலிருப்பது உன் பெயரொழிய மற்றொன்று ஞியாபகமில்லை யென்று சொல்லினாள்.

பின்பவள் நீஇங்கு என்னகாரியமாக வந்தாயென்று கேட்க அதற்கவன் அந்தப்பூச்சி வருகிறவிதமாவது விளக்கின்கருக்காக ஆனலதைக் கேட்க வேண்டியதென்று சொல்ல அப்போது றாகேஅப்சா பஹீறும்சொல்லும் மதுரமான சொற்களைக்கேட்டு உங்களுக்குள்ளே சந்தோஷித்து வெளிப்புறத்தில் கடினகோபமுமாக முகத்தைச்சுருக்கி விழியால்மிரட்டி மோசஞ்செய்கின்ற இஷ்ட

மூள்ளாளே உன்வார்த்தையினாலெனக்கு நன்றாகத் தெரியவருகின்றது நீபெண்ணல்ல ஆணாயிருக்கிறாய் நீ இவ்வேடமெடுத்துக்கொண்டு வந்தாய் என்பேரில்கீர்த்தியை முழுகவைத்தாய் இப்போ மோசவேலைக்காக உனக்கு எப்படிப்பட்ட தண்டனை கொடுப்பேனெனில் உன்வயதளவும் நினைவிருக்க வேணுமென்று உருட்டிமிரட்டி யச்சமுறும்படி சொல்லியதைக் கேட்டு முன்னால் நாமிவ்விடத்தி லடிபட்டிருக்கிறோமே இப்போது அப்படியே செய்வானென்றதாக நினைவுவந்து கிடுகலங்கி மெய்மரந்து நானும்போ டிருப்பதி லொருபலனுமில்லை உன்கையாலடிபட்டுப் போவதே பலனென்றோதிக்கொண்டே பூமியில்விழுந்து பயிரும் மூர்ச்சையாயினன்.

அகவல்-இ-ம்-தோடி.

வண்டுபோற்சுழன்று மந்திரிமைந்தன்
வண்டுபோற்றரைமேற் பயிராமன்விழவும்
கண்டுமேல்வாடிக் கலக்கமேலிட்டு
பெண்டுகள் நாயகி பிரியமேற்கொண்டு
காமங்கொண்டோனைக் காக்கிலாகா
பூமியில்பொல்லாது புண்ணியமலவே
என்று நினைத்து இளங்கொடிமங்கை
அன்றுபலவாறாய்ந்து வெழுந்தாள்.

வசனம்.

அதை நாகே அப்சா கண்டு நாமிவன்பேரில் பிரியம் வைத்திருப்பது தெரியாமல் நாமிரட்டின மொழியின்மே லச்சங்கொண்டவனாய்ப் பயந்து மூர்ச்சையாயினன் இதனாலிவனுக்குச் சேதம்வரில் நம்முடையபெயரை அவியாயக்காரர்களின் கணக்கிலெழுதப்படவேண்டுமென்றெண்ணி யெழுந்தோடிவந்து அவன் தலையை யெடுத்துத் தன் துடை மேல் தூக்கிவைத்துக்கொண்டு அவன் மூர்ச்சைதெளியும் வரைக்கும் தன் கன்னத்தை யவன் முகருப்படியாகவைத்து அவனைத் தெருவில் கொண்டுவர அப்போது பகிரும் மூர்ச்சை தெளிதலாய்க் கண்ணைத் திறந்துபார்க்கையில் தன்தலைகள் துடைமேலி

ருக்கக்கண்டு அளவற்ற மகிழ்வுள்ளவளாய் நமதுகருத்து
முடிவாயினதென்று முன்பின் நடந்த சங்கதிகளெல்லாம்
மறந்து எழுந்திருந்து கட்டியணைத்து முகத்தோடே முக
த்தைவைத்து உதட்டைக்கடித்து முலையைப்பிசைந்து
விழியை முத்தமிட்டு மார்மேலுந் தோள்மேலும் உதட்
டின்மேலும் நகக்குறி பற்குறி முதலியவைத்து அல்குலை
விரலாற்சுற்றி மதனலீலைபடித்து மதுரத்தைக்குடித்து
மதபானமெய்து காம நீர்ப்பெய்து உருண்டு புரண்டு
மணிகள்நெரியவும் துடைகள் விரியவும் மதங்கள் மனங்
கொண்டளவு ஊடற்செய்து போகவாரியில் மூழ்கிச் சுக
மடைந்தார்கள்.

பின்பு அன்றுமுதலாக றூகேஅப்ஸாவிற்கு அவனை
விட்டு ஒரு விநாடிவரைக்குங்கூடப் பிரிந்திருக்கக் கூடாத
வளாய் அவனைப்பகைவர்களின் கைச்சியிலவனை மகேந்
திர சாலவித்தையினால் பஞ்சவர்ணக் கிளியாக்கிப் பகல்
முழுதும் ஒரு கூண்டிலடைத்துத் தன்னெதிரில் தொங்
கிக்கொண்டிருக்கவும் செய்து இரவாகில் அக்கூண்டை
விட்டுக் கிளியைவெளியிலெடுத்து முன்வடிவாக்கி இரவு
முழுது மிருவரும் போகித்து மன்மதச்சண்டை புரிந்
துக்கொண்டிருந்தார்கள் இப்படி ஒருவருக்கும் இம்மரு
மந் தெரியவொட்டாமல் சில நாட் கழிந்தது இப்பேச்சு
மறைவாகவேயிருந்தது அறையிலாடும் சூலம் பலத்தோடு
மென்றதுபோல உள்ளடங்கியிராமல் வெளியானது இச்
சேதியின்காற்று மூண்டு அக்கொடிய தீயின் விசனமான
உடனே ஆருயரைக்கு மெற்றினது அப்போது தவளி
தை சோதிக்க வேண்டுமென்று ஒரு நாள் சூரியனுதிக்கு
முன்னமாக அதிகக் காலையிலெழுந்து றூகே அப்சாவி
ருக்கும் படுக்கைவிடுவந்து சேர்ந்து அவனைப் பார்க்கும்
போது அவளின் தலைகூந்தல் விரித்திருக்கவும் உட
தட்டில் பற்குறியும் ரவிக்கைவிட்டு முலைகள் பிதுங்கியிரு
க்கவும் சேலை விலகியிருக்கவும் இன்னமிப்படி பற்பல
அவகோலமாகப் படுத்திருக்கக்கண்டு இவளெவனுடைய
மாய வலையிலுள் சிக்கியிருக்கிறார்கள் அதனுலிவளிக்கே

லங்களா யிருக்கிறாளென்றெண்ணித் தனக்குள்தானே தெரிந்துக்கொண்டு அதிக கோபத்தோடு தூரமா யிருந்தோடிவந்து பாறியிரண்டு மூன்றடி முதுகின்மேலடித்து அடிபாதகிதோதகி சூதுக்கள்ளி நீ எங்கள்பேரைப் போக்கடித்தாய் கைசேதப்படுத்தினாய் என்ன கொடிய வேலைசெய்தாய் நீயெவன்மேல் மோகித்திருக்கிறாய் நீ வேற்று மனிதன்மேல் மோகித்திருக்கிறாய் இன்னமுன் தந்தையினால் தானத்திற்கு ஊன முண்டாக்கினாய் நீ இருங்கிரகோலங்களினாலெனக்கு அதிகசந்தேகந்தோன்றி யிருக்கின்றது இதை நீ ஒளித்தாலொருபோதுந் தீராது கையில்கள்ளிருக்க நெய்யில் கைவிடவேண்டாம் நடந்த சங்கதியை ஒளிக்காமலென்னுடன்சொல் இல்லாவிடி லுன்னை உயிரோடே வைக்கேன் தலையை யறுத்துவிடுவேன் இனி பிழைத்திருப்பாயென றெண்ணாதேயென்று மிரட்டுருக் கேட்பதை றூகேஅப்சா கேட்டு திடுக்கிட்டு உடலமெல்லாங் கிடுகிடுவென் நடுக்கமுற்று ஓ என்றாயே உன்தலையாணை என் தந்தையின்பர்காத்தாணையாகநானி துவரைக்கும் ஒரு ஆண்பிள்ளைகளைக் கண்டறியேன் அவர்களை நேரிட்டுக் கண்ணாலும் பார்த்தறியேன் ஒரு ஆடவர் முன்னும் நின்றறியேன் அப்படிப்பட்டவள் மேல் நீ இன்று வீணாகப் படுதூறுபேசுகிறாய் ஒரு குற்றமுமில்லாதவர்களுக்கு நீயே குற்றப்படுத்துகிறாய் இன்னம் நீ சொல்வார் பேச்சைக்கேட்டு மெய்யென்றெண்ணி என்னைப் பங்கப் படுத்த நினைத்தாயென்று விதவிதமாகிய இல்லாதும் பொய்யாணைகளையிட அதையவள்கொஞ்சமும் மெய்கொள்ளவில்லை பின்பவள் அக்கள்ளனைப் பிடிக்கும்படி ஆயிரந்தூதர்களையேவி வானம் பூமிவரைக்கும் சகலவிடங்களும் தேடும்படிக் கட்டளையிட்டனள் ஆனால் வெளிக்கள்ளனாகில் அகப்படுவான் உட்கள்ளன் அகப்படுவானா ஒருபோதும் அகப்படமாட்டான் ஆனால்அவள் செய்துவைத்திருந்த மர்மம் அவளுக்குத்தெரியாது அதனால் ரூகேஅப்சாவி னருகிலிருந்து பணிவிடை வேலை செய்யுங் கன்னிகளை யழைத்து மூர்பாஷாவினுடைய தண்டனையின் அச்சப்படுபவர்களுக்குச் சொல்லிப் பயமுண்டாக்கி உங்களுக்கு அச்சேதியாவது தெரியுமா

வென்றுகேட்க அப்போதவ்விடத்திலிருந்த யாவரும் எங்களுக்கு யாதொன்றும் தெரியாதென்று சொல்லினார்கள் அதிலொருத்தி றூகேஅப்சாவினுடைய அருகிற் சேர்ந்தவள் நான் யாதொன்றுமறியேன் ஆனாலவளிடத்தில் ஒரு பறவையா யிருக்கின்றது அதையொரு கூண்டிலடைத்து தன்னெதிரில் வைத்துக்கொண்டு கண்ணிமைப்பொழுதும் எதிர்விட்டு நீங்காமலிருக்கும்படி வைத்துக்கொண்டிருக்கிறாள் அதிலொன்றுதவிர மற்றவைகள்தெரியாதென்று சொன்னாள் அதைக்கேட்டு உடனே றூகேஅப்சாவிருக்கும்படியான மாடத்தினுட்சென்று அவளெதிரில் கட்டிலைவைத்துப் பார்த்துக்கொண்டிருந்த பறவைக்கூட்டை யழித்துக்கையிற் பிடித்துக் கொள்ள அப்போது றூகேஅப்சா அதைக்கண்டு இடியொலிகேட்ட மயில்போல முகம்வாடி நிற்கையில் அவள் அதைக்கொண்டுபோக நாடித்திரும்பினாள் அப்போது றூகேஅப்சாவிற்கு உயிரானது பதைபதைத்துடித்து இப்பாவிக் கூட்டைக் கொண்டு போகிறாளே இனியவளை உயிரோடுவைப்பதில்லையென்று நம்பிக்கை யற்றவளாய் விசைநதுக்கொண்டு கலக்கமுகமாகி யாதொன்றும்பேசாமல் ஊமையைப்போலிருந்து தனக்குள்தானே புலம்பினாள்.

ரூகேஅப்சா புலம்பல்-தரு-இ-ம்-பைரவி.

இன்றுகிளிதலைப்பிடித்து ஐயோ
என்றற்றாயார்கொண்டுபோனாளே ஐயோ
என்றுகாண்பேன் மன்னவனை ஐயோ
என்னசெயவேனோ துசெய்வேன் ஐயோ
பாவியானேன் மன்னவனுக்கு ஐயோ
பதறுதேரென்னங்கமெல்லாம் ஐயோ
ஆவிதுடிதுடிக்குதின்று ஐயோ
ஆதியேநீ கார்க்கவேணும் ஐயோ

வம். இவ்விதமாக இங்குயிவள் புலம்பிக்கொண்டிருக்கப் பின்பு அக்கூட்டை முச்பாஷாவினுடைய எதிரில் கொண்டுவந்து வைத்தனள் அதையரசன் கூட்டினிலிருந்த பறவையை வெளியாக்கிய னுடம்பெல்லாந் தடவிப் பார்த்து வருகையில் கடசிதன் கழுத்தில் கட்டியிருந்த

குளிசமொன்று அகப்பட்டது அதனை யவிழ்த்தவுடனே அக்கிளி மாநிடவடிவாய் பயிருமெதிர் நின்றன்னதைக் கண்டு அங்கிருந்த சபையார்களெல்லாம் ஆச்சரியமாய் விட்டார்கள் அரசனுமதிக கோபத்தை யுடையவனாய் ஓ செடுதலையுள்ளவனே கொடிய குலத்தானே இவ்விடம் மாநிடக்குலத்தா ரொருவரும் வாராததல்லவென் றறியா ரோ இவ்விடத்தி லுன்னைக் கொண்டுவந்து விட்டவர் யார் நீ எவ்விதமாய் வந்தாய் நான் கேட்பவர்களுக்கும் துஷ்டர்களுக்கும் அதிக தண்டனைகளைக்கொடுத்து சிரசாக்கினை செய்பவரென்று கொஞ்சமும் யோசிக்காமலிவ்வளவு அலங்காரங் கொண்டாரென் றுருட்டிமிரட்டிப் பலவாறாகச் சொல்ல அதை பயிரும் கேட்டு ஓ ராசனே தீபத்திளிவைக் கண்டு அந்தப் பூச்சென்று நாமிதில் விழுந்தால் வெந்து போவோமென்கிற அச்சமிருந்தால் அதில் விழுமா அப்படிப்போல் காமியைக்கண்டு காம னஞ்சுவானு துணிந்தவனுக்குச் சமுந்திர முழங்காலளவென்பதுபோல் புத்திவான் இதுக் கஞ்சுவானாவென்று துணிந்த மனத்தோடுசெய்து அதை முச்பாஷாக்கேட்டு அதிக கடுஞ்சினமடைந்து தன்னருகி லிருப்பவர்களை நோக்கி யூருக்கு வெளிப்புறத்தில் அக்கினி யுண்டாக்கி அதிலிவனைவிட்டு எச்சரித்து சாம்பலாக்கிவிடுங்களென்று கட்டளை யிட்டான்.

அப்போது பகாவலியும் தாசுல் முலுக்குமாக ஷிம்மெனுஞ் சோலைபோவதற்காகவந்து ஓரிடத்தில் தங்கியிருக்கையில் அப்போ பகாவலியும் நாமிவ்விடத்திக்கு வந்தோம் இப்படி பிறதவ்செனுஞ்சோலைக்குட்சென்றுறாகே அப்சாவைப் பார்த்து போவோமென் றிருவரும் பேசிக்கொண்டு அச்சோலையின் புறமாகத் திரும்பி நெருங்கிவருகையில் அங்கோரிடத்தில் மலைபோல் உயரமாக விறகுகளைக்குவித்து அதற்கு நாலுபுறமு மக்கினியைமூட்டிவிட்டு அநேக ஜனங்களாகக் கூடி யிருப்பதையிருவருங்கண்டு இதென்ன புதுமையாகவிருக்கின்றது அங்கே நிப்படிப்பட்ட திரளான ஜனங்கள் கூடியிருக்கிறார் களாதைநாமும்போய் கண்டறிவோமென்று அங்குவந்து அவ்விடமிருப்பவர்களை யீதென்ன கூட்டமென்று ஆச்ச

ரியமானகாரியமென்று வினவ [illegible]ங்கிருப்பார்கள் இன்று ரூகேஅப்சாவின்மேலிச்சை கொண்டவனை யரசன் பிடித்து தீயிலிடும்படி கட்டளை செய்தனன் அதற்காக அவனைக் கொண்டுவந்து தீயிலிட்டோமென்று சொல்வதைக் கேட்டவுடனே தாசுல்மூலுக்கு தானேறிவந்த வாகனத்தை விட்டுக் கீழேயிறங்கி அங்குவந்து பார்க்கையில் பயிரும் உட்கார்ந் திருக்கக்கண்டு மனங்கலங்கி ஓ கூட்டங்களே நீங்கள் வாழூர்களும் வீணைச்சேதமடைவார்களென்று ஒலிமேலொலியொலிக்கச்சகலருமதைக் கேட்டு இதென்ன புதுமையென்று கலக்கப்பட்டார்கள் பின்பு அந்தத்திணை யவித்திபுருகிமை வெளியிலெடுத்து அரசன் குமாரன் வசமாகச் சேர்த்துவிட்டு அச்சோலையினுட் சென்று தாசுல்மூலுக்கு பகிருமிருவரையும் ஓரிடத்திலிருந்து வைத்துவிட்டுப் பகாவலி தனியாக மூச்பாஷா வுடனே ஆருவதிவர்களிடஞ் சென்றவர்களுக்கு வந்தனஞ் அவர்கள் பகாவலி தன்வரவைக்கண்டு கண்குளிர்ந்தவர்களாய் மிகுந்த மகிழ்ச்சியோடு அவளைக்கட்டியணைத்து மாரோடு சேர்ந்து நீங்கள்சுகமாயென்றுகேட்க அதற்கு பகாவலி உங்கள் கிருபையினால் நாங்கள் சேமம் ஆனாலெனக்குத் தங்களைக்காண அதிக இச்சையா யிருந்தது அதனாலிங்கு வந்தேனே தவிர மற்றவையாய் வரவில்லையென்று சிலபேச்சுகள் பேசிமுடிவானபின்பு பகாவலி நான் வருகிறபாதையில் ஒரு புதுமை கண்டேனது என்னவெனில் என்மாமனுடைய மந்திரி குமாரனை தீயிலிடநாடிக்கொண்டிருந்ததாக ளத்தருணத்தில் நானங்கு வந்தே நில்லாவிடில் இந்நேரம்வெந்து சாம்பலாய்போனவன் உலகின் வாழ்க்கையைவிட்டுப் பிரிந்து போவான் ஆனதா லாகுமான வேலையாய்முடித்து விட்டது அதைக்குறித்து விட்டது அதைக்குறித்து விசனப்படுவதில் யாதொரு பலனுமில்லை ஆகையினால் தாங்களவன்பேரில் வைத்திருக்குங் கோபத்தை பொருத்து கிருபைசெய்து அவனுயிரை மன்னித்து ரூகே அப்சாவை யவனுக்கே மணமுடித்துவிட வேண்டியது அதேனெனில் அவன் அறிவிலும்தெளிவிலும் நிறைந்த புண்ணியன் அவனுக்கு ரூகேஅப்சாவிவாகஞ்செய்து கொடுப்பதிலென்ன

நஷ்டம்நமக்கும் மாநிடகுலமதிகபெரிது அப்படியவர்கள் சிறியகுலமுள்ளவராயிருந்தால் நீங்களென்னையேன் தாசுலுக்கு விவாகஞ் செய்து கொடுத்தீர்களென்று சொல்ல அதை யரசன் கேட்டு தலை கவிழ்ந்தவனுய்ச் சம்மதிப்பட்டனன்.

பின்பு பகாவலி ரூகேஅப்சாவிருக்கும் மாடத்திற்கு வந்துபார்க்கையிலவள் அப்போது வேறுமுகம்பட்டுப் பலகோலமாக அழுதுக்கொண்டுபடுத்திருப்பதைக்கண்டு புன்சிரிப்போடு அடி மாயக்களளிவினோதக்கள்ளி நீயே நிக்கோலமாய் படுத்திருக்கிறாய் எழுந்து நீசிங்காரித்துக் கொள் உன்னுடைய காமனைகொண்டுவந்திருக்கிறேனென்றுக்கு மஞ்சாதே உன்வீட்டைவிட்டு வெளியில்வா அதிக சந்தோஷத்துடனிருவென்று பலபல விதமாகச் சொல்லக்கேட்டு ரூகேஅப்சா தன்துயரங்களை எல்லாம் நீக்கி அதிகமகிழ்வோடெழுந்து உட்கார்ந்தாள் அப்போதுபகாவலி ரூகேஅப்சாவினுடைய கழுத்தைக்கட்டியணைத்து இரண்டுபேருமாக இரவெல்லாம் பேசிக் கொண்டேயிருந்து அவ்விரவுபகாவலி அங்குபோக்கினுள் பொழுதுவிடிந்தவுடனே ரூகே அப்சாவைத் தாய்தகப்பனுகிமூர்பாஷாவுடனே ஆருயிரவர்களிடத்திற்குக் கொண்டுபோய் அவள்குற்றத்தைப் பொருக்கவைத்தனள்.

பின்பு தாசுல்முலுக்கு பகிருமுதலாகிய பேர்களுடன் இறவென்னும் சோலைவந்து சேர்ந்தார்கள் இன்னம் தாய்தகப்பனுடன் சகல சங்கதிகளும் சொல்லிப் பின்பு தாசுல்முலுக்கை மனம்புரிய எவ்விதமாகக் கொண்டுபோனீர்களோ அவ்விதமாய்ப் பகிருவை சிங்காரித்து அலங்கிர்தத்தோடு மணக்கோலஞ்செய்துக் கொண்டுபோய்சேருமென்றபடியே அவ்வூரடங்கலும் சிங்காரித்து சகலபேருக்கும் நானாவிதமாகிய விருந்தளித்துப் பின்புபகிருவிற்கு முத்துமணிகள் பதித்த ஆடைகளணிந்து முத்துமாலையிட்டு அந்தஆடம்பரத்தோடு பிறதௌசென்னும் பட்டணங்கொண்டுபோய்ச்சேர்ந்தார்கள் இன்னமவ்விடத்தின் வேலைவினோதங்களை என்னென்றுசொல்லுவேன் இன்னம்ரூகே அப்சாவை சிங்காரித்ததை என்னவென்று

சொல்வேன் கயிதத்திலும்கல்லினாலு மெழுத முடியாது மாப்பிள்ளையும் மற்றபெயர்களையுமழைத்துவா முச்பாஷாவினுடையவலுத்த தூதர்கள் முன்னணியாகவந்துயழைத்துக்கொண்டுபோய் அங்குசிங்காரித்து விரிப்புகள்விரித்துச் சகலசனங்களும் கூடியசபையில் கொண்டு போய் விட்டார்கள் இத்தன்மையாகவே பெண்ணை பெண்கள் சென்றழைத்துக் கொண்டு வந்திரங்கினார்கள் பின்புபாதியிரவரைக்கும் வேடிக்கைகள் ஆட்டப்பாட்டமும் பாணவேடிக்கைகள் மத்தாப்பு தீவட்டிகள் நானாவிதவேடிக்கையுடனே தங்கள் வழக்கபடி சகலருங்கூடி ரூகே அப்சாவிற்கும் மங்கிலியந்தரித்தார்கள் பின்புசர்க்கரைவழங்கி மகிழ்வுற்றுப்பெண்ணும் பிள்ளையும் போக வீட்டிற்குள்ளனுப்பினார்க ளப்போது பகாவலிபகீரு மென்கூடவேயிருந்து இவ்வேலைகளையெல்லாம் முடித்துபானகங்குடிப் பாட்டிச் சந்தோஷபடித்தினாள் பின்பு முச்பாஷாவும் உடனே ஆருவுவேண்டுமான மணிமுத்துகளும் மெத்தை கட்டில்களும் வேண்டுமான பணங்காசும் அடிமை படியாளுங் கொடுத்துச் சீதனத்துடன்பெண்ணையும் பிள்ளையையுமனுப்ப சகலபேருமாகக்கூடி பிறகுபகாவலி தாசுல்முலுக்கு பகீரும் ரூகேஅப்சா இவர்கள் கூடி நிகாரெனும் பட்டணம் வந்து சேர்ந்து பின்பு பகிருமுடைய தாய்தகப்பனையழைத்து இந்தச் சங்கதிகளை யெல்லாஞ் சொல்லிக் கடைசியில்சிங்காரிப்புடனே இருவரையுங்காட்ட அப்போது மகளையும் மருமகனையும் பார்த்து மெத்தசந்தோஷமாகிப் பின்பு தன் அரசனைக்கூட்டி வந்து மந்திரியானவர்கள் சகலபேரும் விருந்திடுவதற்காகப் பெரியோர்சிறியோர் உத்தியோகஸ்தா முதலிய பேர்களையழைத்து சிலநாள்வரை ஆட்டம்பாட்டமோ டதிகவேடிக்கைசெய்து விருந்தளித்து அதிகவெகுமதிகொடுத்து இன்பத்துடன் விருந்தாளிகளெல்லாம் அவாளவாளிடம் போய்சேர்ந்தாள் பின்புபகாவலி ஹறகமாலாவையழைத்தென்னுடைய மாடகூடமுதலிய சோலையை இவ்விடம்கொண்டுவந்து சேர்ந்து விட்டது பின்பதை தன் வீட்டினருகாக வைத்துறப்பாடு செய்து அதனைப் பகி

[library stamp]

ருமிற்கும் ரூகே அப்சாவிற்குக் குடியிருக்கக் கொடுத்து விட்டுப் பின்பு சகலபேருமாக சுகத்தோடு வாழ்ந்திருந் தார்கள்.

குலோபகாவலி கிலா யென்னும்

புஷ்பலீலாவதி கதை முற்றிற்று.

---

புவனேஸ்வரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.


## புத்தக விளம்பரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| வந்தேமாதரம்கதர் தணிபாட்டு | 0 | 1 |
| சீமை தணிக்கும் சுதர் தணிக்கும் சண்டை ஐ பான்தணி சமாதானம் | 0 | 1 |
| திரௌபதை வஸ்திரபாணம் | 0 | 4 |
| கிருஷ்ண லீலை | 0 | 4 |
| மகாத்மா காந்தி சுதேசாகம் | 0 | 4 |
| பழனியாண்டவர்காவடிச்சிந்து | 0 | 4 |
| பார்வரி சகுந்தலா | 0 | 4 |
| கஜேந்திர மோட்சம் டிராமா | 0 | 4 |
| பார்வரி லங்காதகனம் | 0 | 3 |
| பார்வரி கஜேந்திரமோட்ச டிராமா | 0 | 3 |
| பாரீஸ் மதிவல்லப மோகனு | 0 | 3 |
| பாரீஸ் சகுந்தலா | 0 | 3 |
| பாரீஸ் பிரகலாதன் | 0 | 3 |
| பாரீஸ் குலோபகாவலி | 0 | 3 |
| ஷை இரண்டாம்பாகம் | 0 | 3 |
| பகவத்கீதை வசனம் ராபர் பயி | 0 | 8 |
| ஷை கவிலோ பயிண்டு | 0 | 10 |
| ஷை வசனம் பெரியது | 1 | 8 |
| ஷை கிரந்த சுலோகம் தமிழ் அர் | 1 | 0 |
| விகடமோகனு | 0 | 8 |
| ஞானஜீவவாதக் கட்டளை | 0 | 8 |
| மங்கைமோகனன் | 0 | 8 |
| ஞானசுந்தரன் | 0 | 12 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| அல்லிபாதிவ்ஷா சரித்திரம் | 0 | 4 |
| புல் புல் யான் | 0 | 3 |
| தசாவதாரம் டிராமா | 0 | 8 |
| சாவித்திரி சத்தியவான் | 0 | 4 |
| பாரீஸ் கந்தனுர் | 0 | 6 |
| சம்பூரண ராமாயணம் டிராமா | 2 | 8 |
| ஞானசவுந்திரி | [illegible] | [illegible] |
| நல்லதங்காள் | 0 | [illegible] |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | [illegible] |
| பார்வரி அல்லிஅர்ச்சுன சரித்திர | 0 | 3 |
| ஷை இரண்டாம்பாகம் | 0 | 3 |
| கோவிலன் சர்னகி சரித்திரம் | 0 | 3 |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | 3 |
| சதி அனுசயா | 0 | 3 |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | 3 |
| குசலவசரித்திரம் | 0 | 3 |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | 3 |
| சற்குண சாவித்திரி | 0 | 3 |
| பர்மாடாப்புஎன்னும்நொண்டிசிந் | 0 | 1 |
| சங்கீதபாகவித்தியாபோதனி | 0 | 12 |
| சிதம்பரசுவாமிகள் இயற்றிய உப தேசவண்மை | 0 | 12 |
| தேவிபக்திரசக்கீர்த்தனங்கள் | 0 | 6 |
| முருகன் பாமன் பக்திரசக்கீர்த் | 0 | 5 |
| சரவணபவன் பக்திரசகீர்த்தனம் | 0 | 5 |
| கோபாலசாலா | 0 | 6 |

த. துரைசாமி முதலியார்.

நெ. 23, பாளையப்பன் தெரு, தங்கசாலை போஸ்டு, சென்னை.

[illegible] துரைசாமி முதலியார்,
நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட் பில்டிங் போஸ்டு, சென்னை.

## [illegible] வளரும் தைலம்.



அநேக திவ்விய மூலிகைகளால் செய்து எண்ணெயில் கலந்துள்ள சிறந்த வஸ்து பிரதிதினமும் காலையில் மயிர்களுக்குப் பூசிவந்தால் கூந்தலானது 8-தினத்தில் ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும் கண் எரிச்சல் நீங்கும், பேன்கள் சேராது, சுண்டுகள் உண்டாகாது, மயிர்கள் உதிராது, வழுக்கையான இடங்களிலும், மயிர் முளைக்கும், உண்மையாய் கூந்தலை வளர்க்கப் பிரிய முள்ளவர்கள் ஒரு புட்டி வாங்கி உபயோகித்தால் அப்போது உண்மை தெரியும்.

ஒரு புட்டியின் விலை ரூபா 1 0 0

## ரோமசங்காரிபவுடர்.



எந்த சமயத்தில் ரோமங்களை அகற்ற வேண்டுமென்று நினைக்கின்றோமோ அப்பொழுதே 'சிறைப்போன்' சிறைக்கும் கத்தி இவை இரண்டினுடைய உதவியுமில்லாமல் உடனே ரோமங்களை நீக்கிவிடும் ரோமங்கள் இருக்கவேண்டாமென்று நாம் விரும்புகின்ற இடத்தில் இந்தப்பவுடரைக்கொஞ்சமெடுத்து தண்ணீர்விட்டு குழைத்து கொஞ்சம் கனமாகத்தடவி [illegible] பொறுத்து ஓலையினாலாவது கார்டினாலாவது வழிக்க ரோமங்களியாவும் நீங்கிவிடும்.

இதன் விலை பட்டி 1-க்கு அணா 0 8 0

## பொன்னாங்கண்ணித் ஸ்நானத்தைலம்.



இத்தைலத்தைக்கொண்டு வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கண் கைகால் எரிச்சல் தேகக்கொதிப்பு மேககாங்கை மூளையின் வரட்சி உள்ளங்கை உள்ளங்கால் எரிவந்தம் கண்புகைச்சல் கண்ணை மூடித்திறந்தால் அனலாய் இருத்தல் பீனிசம் [illegible] நீர்வடிதல் இரத்தம் வடிதல், கண்ணோய், கண்சிகப்பு, பீளைசார்தல், கண் இமை அரிப்பு, காதிரைச்சல் தலைநோய், இருவிருப்பு இன்னும்கண்டத்திற்கு மேற்பட்ட எல்லாவியாதிகளையும்கண்டித்தி மூளையைப் பலப்படுத்தும் கண்கள் குளிர்ந்து பிரகாசிக்கும் மூளையின் அனலை அச்சரியப்படும்படி குறைஞ்செய்து உஷ்ணத்தினால் சரீரம் எப்போதும் கதகதவென்றிருப்பதைமாற்றி தேகத்தைக் குளிரப்பண்ணும் மூத்திரச்சூடு மூத்திர எரிச்சல் முதலியவைகளை மாற்றும் இதன் விலை மிகவும் சொற்பம்.

இதன் விலை 4 அவுன்ஸ் டப்பி 1-க்கு ரூபா 1 0 0

## முகப்பருக்களுக்கு மருந்து.

அழகிய முகங்களைக்கெடுத்து விகார ரூபத்தைக்கொடுக்கும் பருக்கள் தழும்புக்கள் அதிக வெயிலில் திரிவதால் உண்டாகும் கறுப்பு நிறம் முதலியவைகளைப் போக்கி முகத்திற்கு நல்ல அழகையும்காந்தியையும் கொடுக்கும்.

புட்டி 1-க்கு அணா 0 8 0

சென்னை-600 008